# அழகப்பா பல்கலைக்கழகம்


தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் கற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்


## எம்.ஏ [தமிழ்]

## 319 13



# இலக்கணம்-1 - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்

முதற் பருவம்

எம்.ஏ [தமிழ்]

# அழகப்பா பல்கலைக்கழகம்




(தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் கற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)
காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## எம்.ஏ [தமிழ்]

## முதற் பருவம்

## 319 13

# இலக்கணம்-1 - தொல்காப்பியம்
# எழுத்ததிகாரம் இளம்பூரணம்

**Author: Srinivasan Banumathi,** Freelance Author

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: 7361, Ravindra Mansion, Ram Nagar, New Delhi 110 055
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

Work Order No. AU/DDE/DE1-238/Preparation and Printing of Course Materials/2018 Dated 30.08.2018 Copies - 500

# தாள்-31913

# இலக்கணம் - 1 - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்

## பாடத்திட்டம்

**மொழி மற்றும் இலக்கண அமைப்பை பற்றி மாணவர்களுக்கு கூறுதல்**

**கூறு 1:** நூல் மரபு – மாத்திரை, எண்

**கூறு 2:** நூல் மரபு – வடிவு,மயக்கம்

**கூறு 3:** மொழி மரபு – சார்பு எழுத்துக்கள் – ஆயுதத்தின் இயல்பு – அளபடை – எழுத்துக்கள் தொடர்ந்து மொழியாதல்

**கூறு 4:** எழுத்துகளின் இயக்கம் - போலி – மொழி முதல் எழுத்துக்கள் – மொழி இறுதி எழுத்துக்கள்

**கூறு 5:** பிறப்பியல் – உயிர் எழுத்துக்கள் பிறக்குமாறு – மெய் எழுத்துக்கள் பிறக்குமாறு – சார்பு எழுத்துக்கள் பிறக்குமாறு

**கூறு 6:** புணரியல் - மொழிகளின் முதலும் ஈறும் - புணர்தலின் இயல்பு – உருபுப் புணர்ச்சி – சாரியைப் புணர்ச்சி

**கூறு 7:** எழுத்துச் சாரியை – உயிர் எழுத்தின் புணர்ச்சி இயல்புகள் – உடம்படு மெய் – புணர்ச்சியின் பொருள் வேறுபடும் இடம்

**கூறு 8:** தொகை மரபு – உயிரீறு – மெய்யீறு – உயர்திணைப் பெயர்கள் பற்றிய புணர்ச்சி

**கூறு 9:** உருபியல் – உயிரீறுகள் – மெய்யீறுகள்

**கூறு 10:** உருபியல் – முற்றுகர – குற்றுகர – ஈறுகள் – புறநடை

**கூறு 11:** உயிர் மயங்கியல் – அகர, ஆகார, இகர,ஈகர, உகர, ஊகார ஈறுகள்

**கூறு 12:** உயிர் மயங்கியல் – எகர, ஏகார, ஐகர, ஒகார, ஔகார ஈறுகள்

**கூறு 13:** புள்ளி மயங்கியல்

**கூறு 14:** குற்றியலுகரப் புணரியல்

# பொருளடக்கம்

கூறு 1: நூல் மரபு – மாத்திரை, எண் 1
கூறு 2: நூல் மரபு – வடிவு, மயக்கம் 7
கூறு 3: மொழி மரபு 14
கூறு 4: எழுத்துகளின் இயக்கம் 20
கூறு 5: பிறப்பியல் 34
கூறு 6: புணரியல் 41
கூறு 7: எழுத்துச் சாரியை 57
கூறு 8: தொகை மரபு 61
கூறு 9: உருபியல் – உயிரீறுகள் – மெய்யீறுகள் 77
கூறு 10: உருபியல் – முற்றுகர – குற்றுகர – ஈறுகள் – புறநடை 85
கூறு 11: உயிர் மயங்கியல் 89
கூறு 12: உயிர் மயங்கியல் 115
கூறு 13: புள்ளி மயங்கியல் 124
கூறு 14: குற்றியலுகரப் புணரியல் 164
கூறு 14: குற்றியலுகரப் புணரியல் 164
வினா வங்கி 240
மாதிரி வினாத்தாள்-I 246
மாதிரி வினாத்தாள்-II 248
மாதிரி வினாத்தாள்-III 250

# கூறு - 1 நூல் மரபு - மாத்திரை - எண்

## நூன்மரபு

குறிப்புகள்

இவ்வோத்து என் நுதலிற்றோ வெனின், அதுவும் அதன்பெயர் உரைப்பவே அடங்கும். இவ்வதிகாரத்தாற் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தினை1ஓராற்றால் தொகுத்து உணர்த்துதலின், நூன்மரபு என்னும் பெயர்த்து. இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை (நின்ற) எழுத்திற்கன்றித் தனிநின்ற எழுத்திற்கென உணர்க.

### 1. எழுத்துக்களின் வகை

1. **எழுத்தெனப் படுப**
   **அகரமுதல் னகர இறுவாய்**
   **முப்ப/தென்ப**
   **சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.**

இத் தலைச்சூத்திரம் என்நுதலிற்றோ வெனின்[2] எழுத்துக்களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

எழுத்து எனப்படுப - எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, அகரம் முதல் னகர இறுவாய் முப்ப/து என்ப - அகரமாகிய முதலை யுடையனவும் னகரமாகிய இறுவாயினையுடையனவுமாகிய முப்பதென்று சொல்லுப (ஆசிரியர்) சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடை - சார்ந்து வருதலாகிய இலக்கணத்தினையுடைய மூன்றும் அல்லாவிடத்து.

மூன்றும் ஆனவிடத்து முப்பத்து மூன்று என்று சொல்லுப என்றவாறு.

**எ - டு:** அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ-ஔ க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன் என வரும்.

எனப்படுப என்ற சிறப்பான், அளபெடையும் உயிர்மெய்யும் வரி வடிவும் சிறப்பில்லா எழுத்தாகக் கொள்ளப்பட்டன. அ-ஆ என்பன பெயர் முறை அம்முறைத் தொகை முப்பது அவற்றுள், அகரம் தானும் இயங்கித் தனிமெய்களை இயக்குதற் சிறப்பான், முன்வைக்கப்பட்டது. னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது.

தொகை (யென்பது) தொகையுள் தொகையும், தொகையுள் வகையும் தொகையுள் விரியும், வகையுள் தொகையும், வகையுள் வகையும், வகையுள்விரியும், விரியுள் தொகையும், விரியுள் வகையும், விரியுள் விரியும் என ஒன்பது வகைப்படும்.

எழுத்தென்பது தொகையுள்தொகை, முப்பதென்பது அதன் வகை, முப்பத்துமூன்றென்பது அதன் விரி. முப்பதென்பது வகையுள்தொகை. அளபெடை தலைப்பெய்து நாற்பதென்பது அதன் விரி. முப்பத்துமூன்றென்பது

விரியுள்தொகை, நாற்பதென்பது அதன் வகை. உயிர்மெய் தலைப்பெய்து இருநூற்றைம்பத்தாறென்பது அதன் விரி. செய்யுளின்பம் நோக்கி வகரம் நீக்கிப் பகரம் இடப்பட்டது. அகரமுதல் னகரவிறுவாய் என்ன, இருபெயரொட்டாகுபெயரான் முப்பதன் மேல்நின்றன.

**குறிப்புகள்**

1. இப் பெற்றி யறியாத உரையாசிரியர் முதலியோர் இவ்வதிகாரத்தாற் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தை ஓராற்றால் தொகுத்துணர்த்துதலின் நூன்மரபாயிற்றென்பாரும், இவ்வோத்துட் கூறப்படும் விதிகள் - மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகலின் நூன்மரபென்னும் பெயராயிற்றென்பாருமாயினார். இவ்வதிகாரத்துட் கூறும் எழுத்திலக்கணத்தினைத் தொகுத்துணர்த்துதலாற் பெற்ற பெயராயின் அதிகார மரபெனப்படுவதன்றி நூன்மரபெனப்படாமையானும், இவ்வோத்துட் கூறப்படுவன செய்கையோத்திற்கும் பொருளதிகாரத்துள் செய்யுளியல் ஒன்றற்குமே கருவியாவதன்றி மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகாமையானும் அவருரை போலியுரையாதலறிக என்பது - தொல். சூத்திரவிருத்தி.

2. ‘இனி உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் இச்சூத்திரம் பெயரும் முறையும் தொகையு முணர்த்திற்றென்றும், அ-ஆ முதலியனவே பெயரென்றும், அம்முறையே முறையென்றும், முப்ப∴தெனத் தொகை விதிக்கப்பட்டதென்றும் உரைத்தாராலெனின் அற்றன்று. அ∴தாசிரியர் கருத்தாயின், அ-ஆ-இ-ஈ என முழுதும் எடுத்தோதி முறைக்கு ஏதுவும் கூறுவர். அவ்வாறு கூறாது அகரமுதல் னகர இறுவாயென அனுவதித்தே யொழிந்தமையானும், எழுத்தென்ப தொருபொருள் அதற்கு அ-ஆ முதலியன பெயரென்றல் பொருந்தாமையானும், அ-ஆ முதலியன அ-ஆ முதலியவற்றிற்குப் பெயராதல் கூற வேண்டாமையானும், வேண்டுமெனிற் சொற்களும் பொருளையுணர்த்தாது அவை தம்மையே உணர்த்தும்வழி அவற்றிற்கவை பெயராதல் கூறாமை குன்றக்கூறலாம் ஆகலானும், முறையும் தொகையும் செய்கை முதலியவற்றிற்குக் கருவியன்மையின் அவற்றை விதித்தலாற் பயனின்மையானும் அவருரை போலியுரை என அறிக என்பதும் அகர முதலியவற்றிற்குப் பொதுப்பெயர் கூறுதல் நுதலிற்று என்பதும்.’ - தொல் சூத்திரவிருத்தி.

## சார்பெழுத்துக்கள்

**2. அவைதாம்,**
**குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.**

இ/து, மேல் சார்ந்துவரும் என்னப்பட்ட மூன்றற்கும் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

அவைதாம் - மேற் சார்ந்துவரும் எனப்பட்டவை தாம், குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பால் புள்ளியும் -குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் என்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும் என இவை எழுத்து ஓர் அன்ன - (அவை) மேற்சொல்லப்பட்ட முப்பது எழுத்தோடு ஒரு தன்மைய.

அப்பெயர், பெயர், அம்முறை, முறை. ‘எழுத்தோரன்ன’ என

வேண்டா கூறியவதனால், முன் ‘எனப்படுப’ என்ற சிறப்பு, அம்மூன்றற்கும் கொள்ளக் கிடந்தமையின், அது விலக்குதல் பெறுதுமென்பது. குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கன. சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங் கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகின விடத்தும், அவை1 உயிர் ஆகற்பாலன. அவற்றைப் புணர்ச்சிவேற்றுமையும் பொருள்வேற்றுமையும் நோக்கி வேறெழுத்தென்று வேண்டினாரென உணர்க.

குறிப்புகள்

(பாடம்) 1. பெயர்

## 2. மாத்திரை

## ஒரு மாத்திரையுடைய குற்றுயிர்

3. **அவற்றுள்**
**அ இ உ**
**எ ஒ வென்னும் அப்பால் ஐந்தும்**
**ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.**

இ/து, மேற்கூறப்பட்டனவற்றிற்கு அளபும் குறியும் உணர்த்துதல் நுதலிற்று.

அவற்றுள் - மேற்கூறப்பட்ட எழுத்தினுள், அ - இ - உ - எ - ஒ என்னும் அப்பால் ஐந்தும் - அ-இ-உ-எ-ஒ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஐந்தும், ஓர் அளபு இசைக்கும் (ஒரோவொன்று) ஓர் அளபாக இசைக்கும், குற்றெழுத்து என்ப - (அவைதாம்) குற்றெழுத்தென்னும் குறிய என்று சொல்லுவர் (புலவர்).

இவர் காரணம்பற்றியன்றிக் குறியிடார். ஆகலின், இது தன் குறுமையான் இக்குறி பெற்றது. இக் குறியை ஆண்டவாறு மேல்வந்த வழிக் கண்டுகொள்க.

## இரண்டு மாத்திரையுடைய நெட்டுயிர்

4. **ஆ ஈ ஊ ஏ ஐ**
**ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்**
**ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.**

இதுவும் அது.

ஆ- ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - ஔ என்னும் அப்பால் ஏழும் - ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - ஔ என்று சொல்லப்படுகின்ற அக் கூற்று ஏழும், ஈர் அளபு இசைக்கும் - (ஒரோவொன்று) இரண்டு மாத்திரையாக ஒலிக்கும், நெட்டெழுத்து என்ப - (அவைதாம்) நெட்டெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர் (புலவர்).

ஐகார ஔகாரங்களுக்கு இனம் இல்லையெனினும், மாத்திரையொப்புமையான் அவை நெட்டெழுத்து எனப்பட்டன.

## ஓரெழுத்தே மூன்று மாத்திரையாகாமை

5. **மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே.**

குறிப்புகள்

இ/து, உயிரளபெடை யெழுத்திற்கு மாத்திரை கூறுதல் நுதலிற்று.

மூ அளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்று - மூன்று மாத்திரையாக ஒலித்தல் இயல்பாகிய ஓர் எழுத்திற்கு இல்லை. (விகாரமாகிய இரண்டு கூடியதற்கு உண்டு.)

## மாத்திரை நீளுமாறு

**6. நீட்டம் வேண்டின் அவ்வள புடைய**
**கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்.**

இஃது, உயிரளபெடை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நீட்டம் வேண்டின் - நீண்ட மாத்திரையையுடைய அளபெடை எழுத்துப்பெற வேண்டின், அ அளபு உடைய கூட்டி எழூஉதல் - மேற்கூறிய இரண்டளபுடைய நெடிலையும் ஓர் அளபுடைய குறிலையும் (பிளவுபடாமற்) கூட்டி யெழூஉக, என்மனார் புலவர் - என்று சொல்லுவர் புலவர்.

## மாத்திரைக்கு அளபு

**7. கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.**

இ/து, அம் மாத்திரையிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

கண்ணிமை நொடி என அவ் மாத்திரை-கண்ணிமையும் நொடியுமாகிய அவை மாத்திரைக்கு அளபு, நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறு-(இது) நுண்ணிதாக நூலிலக்கணத்தினை உணர்ந்த ஆசிரியர் கண்ட நெறி.

இமையென்றது, இமைத்தற்றொழிலை, நொடியென்றது, நொடியிற்பிறந்த ஓசையை.தன் குறிப்பு இன்றி நிகழ்தலின், இமை முன் கூறப்பட்டது நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல்,நெறித்தளத்தல், [1]தேங்க முகந்தளத்தல், சார்த்தியளத்தல், எண்ணியளத்தல் என ஏழுவகைய என்னும் அளவினுள், இது சார்த்தியளத்தல். ‘நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறு’ என்றதனான் நாலுழக்குக் கொண்டது நாழியென்றாற்போல,அவ்வளவைக்கு அளவை பெறாமை அறிக.[2]

1. நச். தெறித்தளத்தலென்ப.

2. "முடிந்தது காட்டலென்னும் உத்தி. ஆணை கூறலுமாம் நொடியிற் கண்ணிமை சிறப்புடைத்து உள்ளத்தான் நினைத்து நிகழாமையின்."

## 3.எண்

## பன்னீருயிர்

**8. ஔகார இறுவாய்ப்**
**பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப.**

இ/து, மேற்கூறிய குறிலையும் நெடிலையும் தொகுத்து வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.[1]

ஒளகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் - ஒளகாரமாகிய இறுதியையுடைய பன்னிரண்டு எழுத்தினையும், உயிர் என மொழிப- உயிரென்னும் குறியினையுடைய என்று சொல்லுவர்.

1."ஆட்சியும் காரணமும் நோக்கியதோர் குறி மெய் பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிரென வேறோர் எழுத்தின்றாம் பிறவெனின், மெய்யினிற்கும் உயிரும் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க. என்னை? 'அகர முதல' (குறள் 1) என்புழி அகரந் தனியுயிருமாய்க் ககரவொற்று முதலியவற்றிற்கு உயிருமாய் வேறுநிற்றலின். அவ்வகரம் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைத்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுகட்டதாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையுடைத்தென்று கோடும்- இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையையும் பல்லுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல, அது அ என்ற வழியும் ஊர என விளியற்ற வழியும் 'அகர முதல' என்ற வழியும் மூவினங்களில் ஏறின வழியும் ஓசை வேறுபட்டவாற்றான் உணர்க" (நச்சி)

குறிப்புகள்

## பதினெண் மெய்

**9. னகார இறுவாய்ப்**
**பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப.**

இ/து, மேற்கூறிய உயிரல்லா எழுத்திற்கும் ஓர் குறியிடுதல் நுதலிற்று[1]

னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும் - னகரமாகிய இறுதியையுடைய பதினெட்டு எழுத்தினையும், மெய் என மொழிப - மெய்யென்னும் குறியினையுடைய என்று சொல்லுவர்.

1. இதுவும் ஆட்சியும் காரணமும் நோக்கிய குறி. என்னை? பன்னீருயிர்க்குந்தான் இடம் கொடுத்து அவற்றான் இயக்குந் தன்மையான் உடம்பாய் நிற்றலின். (நச்சி).

## உயிர்மெய்க்கு அளபு

**10. மெய்யோ டியையினும் உயிரியல் திரியா.**

இ/து, உயிர்மெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

மெய்யோடு இயையினும் - (உயிர்மெய்யாவன) மெய்களோடு உயிர் இயையப் பிறந்த நிலைமையவாயினும், உயிரியல் திரியா (அவ்வுயிர்மெய்கள் அவ்வியைபின் கண்ணே வேறு ஓர் எழுத்தாய் நின்றமையின், மெய்யோடு இயைபின்றி நின்ற)உயிர்களது இயல்பில் திரியா.

உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை, 'மெய்யோ டியையினும்' என உயிர்மேல் வைத்துக் கூறியது, அவ்வுயிரின் மாத்திரையே இதற்கு மாத்திரையாகக் கூறுகின்றமை நோக்கிப் போலும், இயலென்றது பெரும்பான்மை மாத்திரையினை சிறுபான்மை குறியும் எண்ணும் கொள்க. க எனவும் கா எனவும் அவ்வாறு நின்றமை அறிக.

## தனிமெய்க்கு அளபு

**11. மெய்யின் அளபே அரையென மொழிப.**

இ/து, தனிமெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

குறிப்புகள்

மெய்யின் அளபு - மெய்யது மாத்திரையினை, அரை என மொழிப ( ஒரோவொன்று) அரை மாத்திரையுடையவென்று சொல்லுவர்.

காக்கை, கோங்கு எனக் கண்டுகொள்க. ஈண்டு வேற்றுமை நயமின்றி ஒற்றுமைநயம் கருதப்பட்டது.

## சார்பெழுத்துக்கு அளபு

**12. அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.**

இ/து, சார்பிற்றோற்றத்து எழுத்து மூன்றற்கும் அளபு கூறுதல் நுதலிற்று.

அ இயல்நிலையும் மேற்கூறிய அரை மாத்திரையாகிய அவ்வியல்பின்கண்ணே நிற்கும், ஏனைமூன்று - ஒழித்த சார்பிற் றோற்றத்து மூன்றும்.

**எ - டு:** கேண்மியா, நாகு, எஃகு எனக் கண்டு கொள்க.

## மகரக் குறுக்கம்

**13. அரையளபு குறுகல் மகரம் உடைத்தே**

இசையிடன் அருகுந் தெரியுங் காலை.

இ/து, மெய்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

அரை அளபு குறுகல் மகரம் உடைத்து - அரையளபாகிய எல்லையிற் குறுகிக் கான்மாத்திரையாதலை மகர மெய் உடைத்து (அஃது யாண்டோவெனின்) இசையிடன் அருகும். வேறு ஓர் எழுத்தினது ஒலியின்கண் அது சிறுபான்மையாகி வரும், தெரியுங்காலை - ஆராயுங்காலத்து.

**எ - டு:** போன்ம், வரும் வண்ணக்கன் என வரும், கான் மாத்திரை யென்பது உரையிற்கோடல்.

# கூறு - 2 நூல் மரபு - வடிவு - மயக்கம

## வடிவு

குறிப்புகள்

### மகரத்தின் வடிவம்

**14. உட்பெறு புள்ளி உருவாகும்மே.**

இ/து, பகரத்தின் மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

உள்பெறு புள்ளி உருவு ஆகும் - புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம்.(அ∴தின்மை பகரத்திற்கு வடிவாம்.)

**எ - டு:** ம, ப எனக் கண்டுகொள்க, கப்பி, கப்பி (கம்மி) என வரும்.

### மெய்யெழுத்தின் இயல்பு

**15. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.**

இ/து, உயிர்மெய்யோடு தனிமெய்யிடை வடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

மெய்யின் இயற்கை தனிமெய்யினது இயல்பு, புள்ளியொடு நிலையல் - புள்ளியோடு நிற்றல், (உயிர் மெய்யினது இயல்பு புள்ளியின்றி நிற்றல்.)

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனக் கண்டு கொள்க.

### எகர ஒகரங்களின் இயல்பு

**16. எகர ஒகரத் தியற்கையும் அற்றே.**

இ/து, எகர ஒகரங்கட்கு ஏகார ஓகாரங்களோடு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

எகர ஒகரத்து இயற்கையும் அற்று - எகர ஒகரங்களது இயல்பும் அவ்வாறு புள்ளிபெறும் இயல்பிற்று. (ஏகார ஓகாரங்களது இயல்பு அப்புள்ளி பெறா இயல்பிற்று.)

### உயிர் மெய்யெழுத்தின் இயல்பு

**17. புள்ளி யில்லா எல்லா மெய்யும் உருவுரு**
**வாகி அகரமோ டுயிர்த்தலும் ஏனை**
**உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும் ஆயீ**
**ரியல உயிர்த்த லாறே.**

இ/து, உயிரும் மெய்யும் கூடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

எல்லா மெய்யும் புள்ளி இல்லா - எல்லா மெய்களும் புள்ளி இல்லையாம்படியாக, உருவு உருவு ஆகி - தத்தம் முன்னை வடிவே பின்னும் வடிவாக, அகரமோடு உயிர்த்தலும் - அகரத்தோடு கூடி ஒலித்தலும், ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும் - ஒழிந்த

உயிர்களோடு வடிவு வேறுபட்டு ஒலித்தலுமாகிய அ ஈர் இயல - அவ்விரண்டு இயல்பினையுடைய, உயிர்த்தல் ஆறு, அவை ஒலிக்கு முறைமை.

"தன்னின முடித்தல்" என்பதனான், அளபெடை உயிரோடும் சார்பிற்றோற்றத்து உயிரோடும் கூடும் உயிர்மெய்யும் கொள்க.

குறிப்புகள்

**எ - டு**: உருவு உருவாகி உயிர்த்தல் க ங எனக் கண்டு கொள்க. உருவு திரிந்து உயிர்த்தல் கா ஙா எனக் கண்டு கொள்க.

ஈண்டு உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க்கூட்டத்தினை, எல்லா மெய்யுமென்று மெய்மேல் வைத்துக் கூறியது, அது முன் கூறிக் கூறப்படுதல் நோக்கிப் போலும். உயிர்மெய் யென்பதனை, ஒற்றுமை கொள்வுழி உம்மைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யெனவும், வேற்றுமை கொள்வுழி உம்மைத் தொகை யெனவும் கொள்க. 'இல்லாத' என்பது 'இல்லா' என நின்றது, உருவு திரிந்து உயிர்த்தல் மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்குபெற்று உயிர்த்தலும். கோடுபெறுவன கோடு பெற்று உயிர்த்தலும், புள்ளிபெறுவன புள்ளி பெற்று உயிர்த்தலும், புள்ளியும் கோடும் உடன்பெறுவன புள்ளியும் கோடும் உடன்பெற்று உயிர்த்தலும் எனக் கொள்க.

## உயிர்மெய் ஒலிக்குமாறு

**18. மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே.**

இ/து, உயிர்மெய்யுள் உயிரும்மெய்யும் நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உயிர் - உயிர், மெய்யின் வழியது - மெய்களின் பின்னவாம், தோன்றும் நிலை - உயிர்கள் தோன்றும் நிலைமைக் கண்.

'தோன்றுநிலை' என்றதனான். உயிர்மெய்களைப் பிரிக்குமிடத்தும் கூட்டுமிடத்தும் அவ்வாறே முன்னும் பின்னும் ஆதலைக் கொள்க. மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெறநிற்குமென்றமையால், அக்கூட்டம் பாலும் நீரும்போல உடன்கலந்ததன்றி, விரல்நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறுநின்று கலந்தன வல்ல என்பது பெறுதும், ஈண்டு வேற்றுமைநயம் கருதப்பட்டது.

## வல்லினமெய்

**19. வல்லெழுத் தென்ப க ச ட த ப ற.**

இ/து, தனிமெய்களுள் சிலவற்றிற்கு வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

வல்லெழுத்து என்ப - வல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், க ச ட த ப ற - க ச ட த ப ற என்னும் தனிமெய்களை.

வல்லென்று இசைத்தலானும், வல் என்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்து எனப்பட்டது. மொழிக்கு முதலாமெழுத்து நான்கு உளவாகலானும், அவற்றால் வழக்குப்பயிற்சி பெரிதாகலானும் ( வல்லினம் ) முன்கூறப்பட்டது.

குறிப்புகள்

## மெல்லினமெய்

**20. மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன**

இதுவும் அது.

மெல்லெழுத்து என்ப - மெல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ங ஞ ண ந ம ன - ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்களை.

மெல்லென்று இசைத்தலானும், மெல் என்ற மூக்கின் வளியாற் பிறத்தலானும், மெல்லெழுத்து எனப்பட்டன. மொழிக்கு முதலாமெழுத்து மூன்று உளவாகலானும் அவற்றுள் வழக்குப் பயிற்சியானும் (மெல்லினம்) முதலாமெழுத்துச் சிறு பான்மை வழக்கினவாய் இரண்டாகிய இடையினத்தின்முன் வைக்கப்பட்டது. வன்மை மென்மை கூறலின், எழுத்து அருவன்றி உருவாதல் பெறப்பட்டது. உயிருக்கும் குறுமை நெடுமை கூறலின், உருவென்பது பெறுதும்.

## இடையினமெய்

**21. இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள.**

இதுவும் அது.

இடையெழுத்து என்ப - இடையெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ய ர ல வ ழ ள - ய ர ல வ ழ ள என்னும் தனிமெய்களை.

இடைநிகரவாகி ஒலித்தலானும். இடைநிகர்த்தாய மிடற்றுவளியாற் பிறத்தலானும் இடையெழுத்து எனப்பட்டது.

## 5. மயக்கம்

## மெய் மயங்குமாறு

**22. அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்**
**மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை.**

இ/து, தனிமெய்ம் மயக்கத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

அ மூ ஆறும் - மேற்சொல்லப்பட்ட (மூவாறு) பதினெட்டு மெய்யும், வழங்கு இயல் மருங்கின் - தம்மை மொழிப்படுத்தி வழங்குதல் உளதாமிடத்து, மெய் மயக்கு - மெய்ம் மயக்கம் என்றும், உடன்நிலை - உடனிலை மயக்கம் என்றும் இருவகைய, தெரியும் காலை - (அவை மயங்கு முறைமை) ஆராயும் காலத்து.

உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூன்றனையும் உறழ்ச்சிவகையான் உறழ ஒன்பது உளவாமன்றே, அவற்றுள் தனிமெய்யோடு தனி மெய்ம் மயக்கம் ஒன்றே கூறிய தென்னெனின, மற்றவற்றிற்கு வரையறை யின்மையின் வரையறையுடைய தனிமெய்ம் மயக்கமே கூறியொழிந்தார் என உணர்க. மெய் என்றதனால், தனிமெய்யோடு உயிர்மெய்ம் மயக்கமன்றி, தனிமெய்யோடு தனி மெய்ம்மயக்கமாதல் கொள்க.

## தனிமெய் பிற மெய்யுடன் மயங்குமாறு

**23. டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
கசப வென்னு மூவெழுத் துரிய.**

குறிப்புகள்

இ/து, மெய்ம்மயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

ட ற ல ள என்னும் புள்ளி முன்னர் - ட ற ல ள என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர், க ச ப என்னும் மூ எழுத்து உரிய - க ச ப என்று சொல்லப்படும் மூன்றெழுத்தும் மயங்குதற்கு உரிய.

**எ - டு**: கட்க, கற்க, செல்க, கொள்க எனவும் கட்சிறார், கற்சிறார், செல்சிறார், கொள்சிறார் எனவும் கட்ப, கற்ப, செல்ப. கொள்ப எனவும் வரும்.

மேல் தெரியுங்காலை, என்றதனான், இம் மெய்ம்மயக்கம் கூறுகின்ற சூத்திர மெல்லாம் பலபடியால் மயக்கம் கொள்ளச் சொல் நோக்கு உடையவெனினும், வழக்கினோடு பொருந்த ஒன்றனோடு ஒன்றன்றி மயங்காதென்பது கொள்க. மெய்ம்மயக்கம் ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவாகலின், மேற் கூறும் புணர் மொழிச் செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று.

**24. அவற்றுள்
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.**

**இதுவும் அது.**

அவற்றுள் - மேற்கூறிய நான்கனுள்ளும், லளஃகான் முன்னர் - லகார ளகாரங்களின் முன்னர், யவவும் தோன்றும் க ச பக்களேயன்றி யகர வகரங்களும் தோன்றி மயங்கும்.

**எ - டு**: [1]கொல்யானை, வெள்யானை, கோல்வளை, வெள்வளை என வரும்.

1. இவற்றுட் கொல்யானை என வினைத்தொகையும் வெள்யானை எனப் பண்புத்தொகையும் நிலைமொழி வருமொழி செய்வதற்கு இயையாமையின், 'மருவின் பாத்திய' என்று கூறுவராதலின், இவ்வாசிரியர் இவற்றை ஒரு மொழியாகக் கொள்வரென்று உணர்க. இக் கருத்தானே மேலும் வினைத்தொகையும் பண்புத் தொகையும் ஒரு மொழியாகக் கொண்டு உதாரணம் காட்டுதும், அன்றி இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து வினைத்தொகைக் கண்ணும் பண்புத்தொகைக்கண்ணும் அன்றி ஒரு மொழிக்கண்ணே மயங்குவனவும் உளவாதலின், அவற்றைக் கண்டு இலக்கணம் கூறினார். அவை பின்னர் இறந்தனவென்று ஒழித்து உதாரண மில்லனவற்றிற்கு உதாரணங் காட்டாமற் போதலே நன்றென்று கூறலும் ஒன்று. (நச்.)

**25. ஙஞண நமன வெனும் புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே.**

**இதுவும் அது.**

ங ஞ ண ந ம ன எனும் புள்ளி முன்னர் - ங ஞ ண ந ம ன என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர், தத்தம் மிசைகள் ஒத்தன-(நெடுங்கணக்கினுள்) தத்தமக்கு மேல் நிற்கும் எழுத்தாகிய

க ச ட த ப றக்கள் பொருந்தின, நிலை - மயங்கி நிற்றற்கண்.

எ - டு: தெங்கு, மஞ்சு, மண்டு, பந்து, கம்பு, கன்று என வரும்.

**26. அவற்றுள்**
**ணன/கான் முன்னர்க்**
**க ச ஞ ப ம ய வ வ் வேழு முரிய.**

குறிப்புகள்

இதுவும் அது.

அவற்றுள் - மேற்கூறப்பட்ட மெல்லெழுத்து ஆறனுள், ணன.்.கான் முன்னர். ணகார னகாரங்களின் முன்னர், க ச ஞ ப ம ய வ ஏழும் உரிய (டறக்களே யன்றி) க ச ஞ ப ம ய வ என்று சொல்லப்படும் ஏழும் மயங்குதற்கு உரிய.

**எ - டு:** வெண்கலம், புன்கண், வெண்சாந்து, புன்செய், வெண்ஞாண், பொன்ஞாண், வெண்பலி, பொன்பெரிது, வெண்மாலை, பொன்மாலை,மண்யாது, பொன்யாது, மண்வலிது, பொன்வலிது என வரும்.

**27. ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர்**
**ய/கான் நிற்றல் மெய்பெற் றன்றே.**

**இதுவும் அது.**

ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர் - ஞ ந ம வ என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர், ய.்.கான் நிற்றல் மெய்பெற்றன்று-யகரம் மயங்கி நிற்றல் பொருண்மை பெற்றது.

**எ - டு:** உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது என வரும்.

28. **ம/கான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்.**

இதுவும் அது.

ம/கான் புள்ளிமுன்- மகரமாகிய புள்ளி முன்னர், வஉம் தோன்றும் -(பகர யகரங்களேயன்றி), வகரமும் தோன்றி மயங்கும்.

**எ - டு: நிலம் வலிது என வரும்.**

**29. ய ழ ர என்னும் புள்ளி முன்னர்**
**முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.**

**இதுவும் அது.**

ய ழ ர என்னும் புள்ளி முன்னர்- யழர என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர், முதல் ஆகு எழுத்து ஙகரமொடு தோன்றும்- மொழிக்கு முதல் ஆம் என்னப்பட்ட ஒன்பது மெய்யும்(முதலாக) ஙகரத்தோடு தோன்றி மயங்கும்.

**எ - டு**: வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது எனவரும் வேய்ஙனம், வேர்ஙனம், வீழ்ஙனம் எனவும் ஒட்டுக. வேய்யாது என்புழி, உடனிலையாதலான் யகரம் ஒழித்து ஒட்டுக.

## தனிமெய் தன் மெய்யோடு மயங்குமாறு

**30. மெய்ந்நிலை சுட்டின் எல்லா வெழுத்தும்**
**தம்முன் தாம்வரூஉம் ர ழ அலங்கடையே.**

குறிப்புகள்

இ/து, நிறுத்த முறையானே உடனிலை மயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

மெய்ந்நிலை சுட்டின் - பொருள் நிலைமைக் கருத்தின்கண், எல்லா எழுத்தும் தம்முன் தாம் வரும்- எல்லா மெய்யெழுத்தும் தம்முன்னே தாம் வந்து மயங்கும், ர ழ அலங்கடை -ரகார ழகாரங்கள் அல்லாத இடத்து.

எ - டு: காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, மண்ணை, தத்தை, வெந்நோய், அப்பை, அம்மி, வெய்யர், எல்லி, எவ்வி,கொள்ளி,கொற்றி, கன்னி என வரும். ‘மெய்ந்நிலை சுட்டின்’ என்றதனால், ‘தம்முன் தாம் வரும்’ என்றது மெய்ம்முன்னர் மெய்யென்னும் மாத்திரையன்றி உடனிலைமெய் மேலதாம் என்பது கொள்க. ‘எல்லாம்’ என்றது மேல் ய ழ ர என்ற அதிகாரம் மாற்றி வந்து நின்றது.

## எழுத்துக்களின் பிற மரபுகள் சுட்டெழுத்துக்கள்

**31. அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு.**

அ இ உ அம் மூன்றும் சுட்டு-(குற்றெழுத்து என்னப்பட்ட) அ இ உ என்னும் அம்மூன்றும் சுட்டு என்னும் குறியவாம்.

**எ - டு:** அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என வரும்.

## வினா வெழுத்துக்கள்

**32. ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா.**

ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா ( மேல் நெட்டெழுத்து என்னப்பட்ட) ஆஏஓ என்னும் அம்மூன்றும் வினா என்னும் குறியவாம்.

**எ - டு**: உண்கா, உண்கே, உண்கோ சாத்தா எனவரும்.

‘தன்னின முடித்தல்’ என்பதனால் எகாரமும் யகர ஆகாரமும் வினாப் பெறுமெனக் கொள்க. இக்குறிகளையும் முன் குறிலென்றும் நெடிலென்றும் கூறியவழியே கூறுகவெனின், இவை சொல் நிலைமையிற் பெறும் குறியாகலின் ஆண்டு வையாது மொழி மரபினைச் சார வைத்தார் என்க. இக்குறி மொழி நிலைமைக்கேல் எழுத்தின் மேல் வைத்துக்கூறியது என்னையெனின், இவ்வதிகாரத்துப் பெயர் வினையல்லனவற்றிக்குக் கருவி செய்யாமையின் என்க.

## இசை நூன் முறையில் எழுத்தொலிகள்

**33. அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையோடு சிவணிய1**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்.**

இ/து, எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையின் நீண்டு நிற்கும் இடம் இது வென்பது உணர்த்துதல் நுதலிற்று.

அளபு இறந்து உயிர்த்தலும்- ( உயிரெழுத்துக்களெல்லாம்) தமக்குச் சொன்ன அளவினைக்கடந்து ஒலித்தலையும், ஒற்று இசை நீடலும்- ஒற்றெழுத்துக்கள் தம் மொலிமுன் கூறிய அளபின்

நீடலையும் இசையோடு சிவணிய நரம்பின் மறைய-(இந்நூலுட் கூறும் விளியின் கண்ணேயன்றிக்) குரல் முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசை நூற்கண்ணும், உள என மொழிப என்மனார்புலவர்- உள எனச் சொல்லுவர் அவ்விசை நூலாசிரியர் என்று சொல்லுவர் புலவர்.

குறிப்புகள்

ஒற்றிசை நீடலும் என்றனர், அளபிறந்துயிர்த்த லென்றது அதிகாரத்தால் நின்ற உயிர்மேற் சேறலின் உளவென்றது அந்நீட்டிப்பு ஒரு தலையன்றென்பது விளக்கிற்று. இசை நூலாசிரியரும் முதனூலாசிரியர் தாமேயெனினும், 'மொழிப', என வேறொருவர் போலக்கூறியது. அதுவும் வேறு ஒரு நூலாகச் செய்யப்படும் நிலைமை நோக்கிப் போலும் 'மறையும் என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது, அகரம் செய்யுள் விகாரம்.

முதலாவது நூன் மரபு முற்றிற்று.

1. சிவணிய என்பது தொழிற் பெயர். இசையோடு சிவணிய எனவே செய்யுளாதல் பெற்றாம்.நரம்பு என்றது ஆகுபெயராய் யாழினை உணர்த்திற்று.மறை என்றது நூலை. மொழிப என்றும் என்மனார் புலவர் என்றும் இருகாற் கூறியவதனால் இங்ஙனம் பொருள் கூறலே ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று.என்னை?செய்யுளியலுட் கூறிய 'மாத்திரையளவும்' என்னும் சூத்திரத்தில் 'மேற்கிளந்தன்ன' (செய்-2) என்னும் மாட்டேற்றிற்கு இவ்வோத்தினுள் வேறோர் சூத்திரம் இன்மையின் இவ்விலக்கணம் கூறாக்காற் செய்யுட்குப் பாவென்னும் உறுப்பு நிகழாது. அவை உரைச்செய்யுட் போல நிற்றலின் இவ்விலக்கணம் கூறவே வேண்டுமென்று உணர்க.

# கூறு - 3 மொழி மரபு

## மொழி மரபு

குறிப்புகள்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், 1மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது. இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற்கு அன்றி மொழியிடை(நின்ற) எழுத்திற்கு எனவுணர்க.

(மொழிக்கண் நின்ற எழுத்தின் இலக்கணம் உணர்த்துவது)

### 1.சார்பெழுத்துக்கள் மொழிகளிற் பயிலுமாறு

### குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும்

**34. குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
**யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**
**ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே.**

இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், சார்பின் தோற்றத்து எழுத்துக்களிற் குற்றியலிகரத்தில் ஒரு மொழிக் குற்றியலிகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

குற்றியலிகரம் - ஒருமொழிக் குற்றியலிகரம், உரையசைக் கிளவிக்கு - உரையசைச் சொல்லாகிய மியா என் முதற்கு, ஆ வயின் வரூஉம் - (சினையாக ) அச்சொல் தன்னிடத்து வருகின்ற, யா என் சினைமிசை - யா என் சினைமிசை, மகரம் ஊர்ந்து நிற்றல் - வேண்டும் - மகர ஒற்றினை ஊர்ந்து நிற்றலை வேண்டும் ( ஆசிரியன்.)

**எ - டு**: கேண்மியா எனவரும். மியா என்னும் சொல் இடம். மகரம் பற்றுக்கோடு. யா என்னும் சினையும் மகரம் போலக் குறுகுதற்கு ஒரு சார்பு.

1. ''குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்'' என்பது முதல் ''உருவினும் இசையினும்'' என்னும் சூத்திரம் காறும், அவை தாம், என்பதன் ஒழிபு, ''குன்றிசை'' ''ஐ ஔ'' இரண்டும் ''நீட்டம் என்பதன் ஒழிபு'' ''நெட்டெழுத் தேழே'' என்பது ''அவற்றுள் 'அ இ உ எ''' ''ஆ ஈ ஊ ஏ'' என்பனவற்றின் ஒழிபு. மொழியாக்கம் அதிகாரப்பட்டமையின் ஓரெழுத்தொருமொழி என்பதும் உடன் கூறினார். ''மெய்யின் இயக்கம்'' என்பது ''னகர இறுவாய்'' என்பதன் ஒழிபு. ''தம்மியல் கிளப்பின்'' என்பது முதல் ''மகரத் தொடர்மொழி'' என்னும் சூத்திரம் காறும் மயக்கச் சூத்திர ஒழிபு என விதந்து நூன் மரபின் ஒழிபே மொழிமரபு என்றது தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

### குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும்

**35. புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**
**உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.**

இ/து, குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும் வருமென்று உணர்த்துதல் நுதலிற்று.

புணர் இயல் நிலை இடையும்- இரு மொழி தம்மிற் புணர்தல் இயன்ற நிலைமைக்கண்ணும், குறுகல் உரித்து- அவ் விகரம் குறுகுதலுடைத்து, உணரக் கூறின்-(ஆண்டை இடத்தினையும் பற்றுக்கோட்டினையும் ஈண்டு) உணரக் கூறப் புகின், முன்னர் தோன்றும்-(அது வேண்டுவதில்லை) குற்றியலுகரப்புணரியலுள் (அவ்விடனும் பற்றுக்கோடும்) தோன்றும்.

குறிப்புகள்

'புணரிய நிலை யிடையும்' என மொழிமாற்றி உரைக்க முன்னர்த் தோன்றுமாறு:

"யகரம் வரும்வழி யிகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது"

(குற்றியலுகரப் புணரியல்-(5))

உகரம் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

**எ - டு:** நாகியாது, வரகியாது, தெள்கியாது, எ∴கியாது, கொக்கியாது, குரங்கியாது என வரும்.

## தனிமொழிக் குற்றியலுகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும்

**36. நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழியீற்றும்**
**குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே.**

இ/து, ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

நெட்டெழுத்து இம்பரும்- நெட்டெழுத்தினது பின்னும், தொடர்மொழி ஈற்றும்-தொடர் மொழியது இறுதியினும், குற்றியலுகரம் வல்லாறுஊர்ந்து (நிற்றல் வேண்டும்)- குற்றிய லுகரம் வல்லெழுத்து ஆறினையும் ஊர்ந்து (நிற்றலை வேண்டும் ஆசிரியன்.)

"தந்து புணர்ந்துரைத்தல்"(மரபு-110) என்னும் தந்திரவுத்தியான், முன்னின்ற 'நிற்றல் வேண்டும்' என்பது ஈண்டும் புணர்க்கப்பட்டது.

**எ - டு**: நாகு, வரகு என வரும்.

நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீறும் இடம், வல்லெழுத்துப் பற்றுக்கோடு. இவ்வாறு இடமும் பற்றுக்கோடும் கூறவே மொழிக்கு ஈறாதலும் கூறியவாறாயிற்று.

## புணர்மொழிக் குற்றியலுகரம் தன் மாத்திரையில் குறுகல்

**37. இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே**
**கடப்பா டறிந்த புணரிய லான.**

இ/து, குற்றியலுகரம் புணர்மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இடைப்படினும் குறுகும் இடன் உண்டு- அவ் வுகரம் புணர்மொழி இடைப்படினும் குறுகும் இடமுண்டு, (அதன் இடமும் பற்றுக்கோடும் யாண்டோ பெறுவதெனின்) கடப்பாடு அறிந்த புணரியலான- அதன் புணர்ச்சி முறைமை அறியும் குற்றியலுகரப் புணரியலின் கண்ணே.

'இடைப்படினும் குறுகும்' என மொழி மாற்றி உரைக்க. அக்குற்றியலுகரப் புணரியலுள்

"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்

தொல்லை யியற்கை நிலையலு முரித்தே"
(குற்றியலுகரப் புணரியல்-4)

என்பதனுள் வல்லொற்றுத்தொடர் மொழியீற்று வல்லெழுத்து வருவழியும் இடம். அவ்வல்லொற்றுத் தொடர்மொழியீற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

குறிப்புகள்

**எ - டு**: செக்குக்கணை, சுக்குக்கோடு என வரும்.

'இடன்' என்றதனான், இக்குறுக்கும் சிறுபான்மை என்றுணர்க.

## ஆய்தம் தனி மொழியுள் வருமாறு

**38. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.**

இ/து, ஒரு மொழி ஆய்தம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

ஆய்தப் புள்ளி- ஆய்தமாகிய புள்ளி, குறியதன் முன்னர்- குற்றெழுத்தின் முன்னர், உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்து- உயிரொடு புணர்ந்த வல்லெழுத்து ஆறன் மேலது.

**எ - டு**: எ/கு, க/சு என வரும்.

குறியதன் முன்னரும் வல்லெழுத்து மிசையும் இடம், இ/து உயிரன்மையின், இதற்குப் பற்றுக்கோடு என்பதில்லை. க/றீது என்பதனை மெய்பிறிதாகிய புணர்ச்சி (புணரியல்-7) என்ப வாகலின், 'புள்ளி' என்றதனான் ஆய்தத்தை மெய்ப்பார் படுத்துக்கொள்க. ஈண்டுப் பெரும்பான்மையும் உயிரென்றது, மேல் 'ஆய்தத் தொடர் மொழி' (குற்றியலுகரப் புணரியல் -1) என்றோதலின் குற்றியலுகரத்தினை வெ∴ காமை முதலிய பிற உயிர்வரவு சிறுபான்மையெனக் கொள்க.

## ஆய்தம் புணர் மொழியுள்ளும் வருமாறு

**39. ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்.**

இ/து, அவ்வாய்தம் புணர் மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

ஈறு இயல் மருங்கினும்- நிலைமொழியீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்கும் இடத்தினும், இசைமை தோன்றும்- ஆய்த ஒலி தோன்றும்.

**எ - டு**: க/றீது, மு/டீது என வரும். ஈண்டும் இடங்கள் அவை.

## ஆய்தத்தின் இயல்பு

**40. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**
**மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தினியலா**
**ஆய்தம் அறுகாக் காலை யான.**

இ/து, அவ்வொருமொழி ஆய்தத்திற்கு ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உருவினும்- ஒரு பொருளினது உருவத்தின் கண்ணும், இசையினும்- ஓசையின் கண்ணும், அருகித் தோன்றும்- சிறுபான்மையாய்த் தோன்றும், குறிப்பு மொழியெல்லாம்- குறிப்பு மொழிகளெல்லாம்,1 எழுத்தின் இயலா-ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டும் எழுத்துப்போல நடவா. (அ/து எக்காலத்துமோவெனின், அன்று) ஆய்தம் அ∴காக் காலையான- அவ்வாய்தம் தன் அரைமாத்திரை அளபாய்ச் சுருங்கி நில்லாது

(அவ்வுருவம் இசையது மிகுதியும் உணர்த்துதற்கு ) நீண்டகாலத்து அந்நீட்சிக்கு.

**எ - டு**: 'க/றென்றது' என்பது உருவு, 'சு/றென்றது' என்பது இசை.

1. நிறத்தின்கண்ணும் ஓசையின்கண்ணும் சிறுபான்மை ஆய்தந் தோன்றும் பொருள் குறித்தலையுடைய சொல்லும் அவையொழிந்த எல்லா மொழிகளும். (நச்.)

குறிப்புகள்

## 2.அளபெடை

### அளபெடையின் நிலை

**41. குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்**
**நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற்றெழுத்தே.**

இ/து, 'நீட்டம் வேண்டின்' (நூன்மரபு:6) என்பதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

குன்று இசை மொழிவயின் நின்று இசை நிறைக்கும்-( அளபெடை யோசையாகச் சொல்லாதொழியில்) குன்றுவதான ஓசையையுடைய அவ்வளபெடை எழுத்தானாய மொழிக்கண்ணே நின்று அவ்வோசையை நிறைக்கும், (அவை யாவையெனின்,) நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்து- நெட்டெழுத்துக்களின் பின்னாக (அவற்றிற்குப் பிறப்பானும் புணர்ச்சியானும் ஓசையானும்) இனமொத்த குற்றெழுத்துக்கள்.

**எ - டு**: ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ என வரும்.

ஈண்டு மொழியென்றது, அவ்வளபெடை எழுத்து ஒரு பொருள் உணர்த்தி ஓரெழுத் தொருமொழியாய் நிற்கும் நிலைமையினை. இவையும் மொழிமேற் காணப்படுதலிற் சார்பிற்றோற்றத்து எழுத்து எனப்படுமா லெனின், பெரும்பான்மையும் அம்மொழிதானே அவ்வெழுத்தாய் வருதலானும், அம்மொழி நிலைமை ஒழிய வேறெழுத்தாகவும் சொல்லப்படுதலானும், அவ்வாறு ஆகாதென்பது.

சிறுபான்மையும் அம்மொழிதானே எழுத்தாய் வாராதெனக் கொள்க.

**எ - டு:** எருதுகாலுறாஅது என்றாற் போல்வன.

### ஐகார ஔகார அளபெடை

**42. ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கு இகர**
**உகரம் இசைநிறை வாகும்.**

இ/து, மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

ஐ ஔ என்னும் ஆ ஈர் எழுத்திற்கு- (ஒத்த குற்றெழுத்து இல்லா) ஐ ஔ என்று சொல்லப்படும் அவ்விரண்டெழுத்திற்குமுன், இகரம் உகரம் இசை நிறைவு ஆகும் -(ஈகாரம் ஊகாரங்கட்கு ஒத்த குற்றெழுத்தாகிய ) இகர உகரங்கள் (அக்குன்றிசை மொழிக்கண் நின்று) ஓசையை நிறைப்பனவாகும்.

**எ - டு:** ஐஇ, ஔஉ என வரும்.

ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்திற்கு உகரமும் என நிரனிறையாகக் கொள்க.

இத்துணையும் நூன்மரபின் ஒழிபு.

## 3.எழுத்துக்கள் தொடர்ந்து மொழியாதல்

### ஓரெழுத்தொருமொழி

**43. நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி.**

குறிப்புகள்

இ/து, எழுத்தினால் மொழியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நெட்டெழுத்து ஏழும் - நெட்டெழுத்தாகிய ஏழும் ஓர் எழுத்து ஒரு மொழி- ஓர் எழுத்தானாகும் ஒரு மொழியாம்.

**எ - டு:** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என வரும்.1

இதுவும் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது. ஔகாரத்தில் உயிர் மெய்யினையே கொள்க. 'ஏழும்' என்பதன் உம்மை2 விகாரத்தால் தொக்கது.

1. எடுத்துக்காட்டு : ஆ, ஈ, ஊ, ஏ,ஐ, ஓ என வரும். ஔகாரம் உயிர்மெய்க்கண்ணல்லது வராது. ஊ என்பது தசை. இ/து உயிர்க்கும் உயிர்மெய்க்கும் விதி, கா, தீ பூ சே தை கோ கௌ என வரும். இவை தம்மையுணர நின்ற வழி எழுத்தாம். இடை நின்று பொருளுணர்த்தியவழிச் சொல்லாம். நெட்டெழுத்தேறிய மெய் நெட்டெழுத்தாயும் குற்றெழுத்தேறிய மெய் குற்றெழுத்தாயும் நிற்றலேயன்றி மெய்க்கு நெடுமையும் குறுமையும் இன்மை உணர்க.

**2.** உம்மை முற்றுப் பொருள்பட நின்றது.

### குற்றெழுத்தின் இயல்பு

**44. குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே.**

இ∴து, குற்றெழுத்துக்கள் ஓரெழுத்தொருமொழி ஆகாவென்பதும் அவற்றுள் ஒரு மொழியாவன உளவென்பதும் உணர்த்துதல் நுதலிற்று.

குற்றெழுத்து ஐந்தும் - குற்றெழுத்தாகிய ஐந்தும், மொழி நிறைபு இல- ஓரெழுத்தாய் நின்று ஒரு மொழியாய் நிறைதல் இல.

அவற்றுட் சில நிறைக்கும்.

ஒகரம் ஒழிந்த நான்கும் சுட்டாயும் வினாவாயும் மொழிநிறைக்குமன்றோ வெனின், அவை இடைச்சொல்லாதலின், அவற்றிற்குக் கருவி செய்யார் என்க. இதுவும் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது, ஐந்தும் என்பதன் உம்மை1 ஈண்டு எச்சப்பட நின்றது.

**எ - டு:** து, நொ என வரும்.

1. முற்றுப்பொருள்பட நின்ற உம்மை எச்சப்பொருள்பட நின்றது.

### மொழியின் பெயர் முறை தொகை

**45. ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்**
**தொருமொழி இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி**
**உளப்படமூன்றேமொழிநிலை தோன்றிய நெறியே.**

இ/து, எழுத்தினான் ஆகும் மொழிகளின் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

ஓர் எழுத்து ஒரு மொழி - ஓரெழுத்தான் ஆகும் ஒருமொழி, ஈர் எழுத்து ஒருமொழி - இரண்டெழுத்தான் ஆகும் ஒருமொழி - இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி - இரண்டிறந்து பலவற்றான் இசைக்கும் தொடர்மொழி, உளப்பட மூன்று உட்பட்ட மொழிகளின் நிலைமை மூன்றாம், தோன்றிய நெறி - அவை தோன்றிய வழக்கு நெறிக்கண்.

**எ - டு**: ஆ, மணி, வரகு, கொற்றன் எனவரும்.

1. குரவு, அரவு, மூவெழுத்தொருமொழி · கணவிரி, நாலெழுத்தொருமொழி, அகத்தியனார், ஐயெழுத்தொருமொழி, திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொருமொழி, பெரும்பற்றப்புலியூர் ஏழெழுத்தொருமொழி, ஓரெழுத்தொருமொழியும் தொடர்மொழியும் என்னாது ஈரெழுத்தொருமொழியும் ஓதினார், சில பல என்னும் தமிழ் வழக்கு நோக்கி.

**குறிப்புகள்**

# கூறு - 4 எழுத்துக்களின் இயக்கம்



குறிப்புகள்

## மொழி மரபு

## 4. எழுத்துக்களின் இயக்கம்

### தனிமெய் இயக்கம்

46. **மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.**

இ/து, தனி மெய்களைச் சொல்லும் முறைநிலை இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

மெய்யின் இயக்கம் - தனி மெய்களினது இயக்கம், அகரமொடு சிவணும் - அகரத்தோடு பொருந்தும்.1

**எ - டு**: 'ட ற ல ள வென்னும் புள்ளி' (நூன்மரபு 23) என வரும். இ∴து, மொழியிடை (நின்ற) எழுத்துக்கள் அன்மையின் நூன் மரபின் வைக்க வெனில், தன்னை உணர்த்தாது வேறு பொருள் உணர்த்தும் சொல் நிலைபோல 'டறலள' வென்றது உயிர்மெய்யை உணர்த்தாது தனிமெய்யை உணர்த்தலானும் ஒற்றினை உயிர்மெய்போலச் சொல்லுகின்ற வழுவமைதியிலக்கணத்தானும் மொழிமரபின்கண்ணதாயிற்றென உணர்க.

1. இங்ஙனம் மெய்க்கண் அகரங் கலந்து நிற்குமாறு கூறினாற் போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரங் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறாராயினார், அந்நிலைமை தமக்கே புலப்படுதலாலும் பிறர்க்கு இவ்வாறு என உணர்த்துதல் அரிதாகலானுமென்று உணர்க. இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகரமுதல' என்னும் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம் ˙ அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம் என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும் கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே'எனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க.

### உயிர்மெய் என்னும் பெயர்

47. **தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்**
**மெய்ந்நிலை மயக்கம் மான மில்லை.**

இ/து, மெய்ம்மயக்கத்திற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

எல்லா எழுத்தும் தம் இயல் கிளப்பின் - எல்லா மெய்யெழுத்தும் மொழியிடையின்றித் தம் வடிவின் இயல்பைச் சொல்லுமிடத்து, மெய்ம்மயக்கநிலை மானம் இல்லை - மெய்ம்மயக்க நிலையின் மயங்கிவருதல் குற்றம் இல்லை.

**எ - டு**: 'வல்லெழுத் தியையின் டகார மாகும்' (புள்ளி மயங்

-7) என வரும்.

இதனை அம் மெய்ம்மயக்கத்து வைக்கவெனின். இது வழுவமைதி நோக்கி மொழிமரபின் கண்ணதாயிற்று.

குறிப்புகள்

## ஈரொற்றுடனிலை

**48. யரழ என்னும் மூன்றுமுன் னொற்றக்1**
**கசதப ஙஞநம ஈரொற் றாகும்.**

இ/து, ஈர் ஒற்று உடனிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

ய ர ழ என்னும் மூன்று - ய ர ழ என்று சொல்லப்படுகின்ற மூன்றனுள் ஒன்று, முன் ஒற்ற - (குறிற்கீழும் நெடிற் கீழும்) முன்னே ஒற்றாய் நிற்ப (அவற்றின் பின்னே), க ச த ப ங ஞ ந ம ஈர் ஒற்றாகும், க ச த ப க்களிலொன்றாதல் ங ஞ ந மக்களிலொன்றாதல் ஒற்றாய்வர அவை ஈரொற்றுடனிலையாம்.

**எ - டு**: வேய்க்குறை, வேய்ங்குறை. வேர்க்குறை, வேர்ங்குறை, வீழ்க்குறை, வீழ்ங்குறை, சிறை, தலை, புறம் என ஒட்டுகஇவ்விதி மேல் ஈற்றகத்து உணர்ந்துகொள்ளப்படுமாலெனின் இது 'ஈர்க்கு, பீர்க்கு' என ஒரு மொழியுள்ளும் வருதலானும், இரண்டு மெய்க்கண்ணும் வருதல் விகாரமாதலானும் ஈண்டுக் கூறப்பட்டது. அஃதேல் இதனை நூன்மரபினகத்து மெய்ம்மயக்கத்துக்கண் கூறுக வெனின், ஆண்டு வேற்றுமை நயம் கொண்ட தாகலின் ஈரொற்று உடனிலையாதல் நோக்கி ஒற்றுமைநயம்பற்றி ஈண்டுக் கூறப்பட்டது.

(பாடம் - நச்) 1. மூன்றும் ஒற்றக்.

## குறிற்கீழ் ஒற்றாகா மெய்கள்

**49. அவற்றுள்,**
**ரகார ழகாரங் குற்றொற் றாகா1**

இ/து, ரகார ழகாரங்கட்கு எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

அவற்றுள் - மேற் கூறப்பட்ட மூன்றனுள்ளும், ரகாரம் ழகாரம் குற்று ஒற்று ஆகா - ரகாரமும் ழகாரமும் குறிற் கீழ் ஒற்றாகா.

அவை நெடிற்கீழ் ஒற்றாம்' குறிற்கீழ் உயிர்மெய்யாம்.

**எ - டு**: தார், தாழ் என நெடிற்கீழ் ஒற்றாய் நின்றன, கரு, மழு எனக் குறிற்கீழ் உயிர்மெய்யாய் நின்றன.

இவ்வாறு விலக்கினமையின் : யகரம் பொய் எனவும் நோய் எனவும் இரண்டிடத்தும் ஒற்றாயிற்று, குற்றொற்று என்பது குறிதாகிய ஒற்று எனப் பண்புத்தொகை. குறிற்கீழ் நிற்றலான், குறியது எனப்பட்டது. ஈண்டுக் குறில் நெடில் என்கின்றது மொழிமுதல் எழுத்தினை என உணர்க. இது மேல் வரையறை இல எனப்பட்ட உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு ஓர் வரையறை கண்டு கூறினவாறு.

1. ஈண்டுக் குற்று என்றது, தனிக் குறிலை.

## தொடர்மொழி இயல்பு

**50. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்**
**தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல.**

குறிப்புகள்

குறுமையும் நெடுமையும் அளவின் கோடலின் - உயிரெழுத்திற்குக் குறுமையும் நெடுமையும் அளவிற் கொள்ளப்படுதலில், தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல - தொடர் மொழிக்கீழ் நின்ற ரகார ழகாரங்களெல்லாம் நெடிற் கீழ் நின்ற ரகார ழகாரங்களின் இயல்பையுடைய (என்று கொள்ளப்படும்.)

**எ - டு**: அகர், புகர், அகழ், புகழ் எனக் கொள்க.

'புலவர்' என்றாற்போல இரண்டு மாத்திரையை இறந்ததன் பின்னும் வருமாலெனின், அவையும் 'தன்னின முடித்தல்' என்பதனால் நெடிற்கீழ் ஒற்று எனப்படும். எல்லாம் என்றதனான் ரகார ழகாரங் களேயன்றி பிற ஒற்றுக்களும் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும். இதனானே, விரல் தீது என்புழி லகரம் 'நெடிற்கீழ் ஒற்று' என்று கெடுக்கப்படும்.

## செய்யுளில் ஈரொற்றிலக்கணம்

**51. செய்யுள் இறுதிப் போலும்[1] மொழிவயின்**
**னகார மகாரம் ஈரொற் றாகும்.**

இ/து, செய்யுட்கண் ஈரொற்று உடனிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

செய்யுள் இறுதி போலும் மொழிவயின் - செய்யுள் இறுதிக்கண் 'போலும்' என்னும் மொழிக்கண் னகாரம் மகாரம் ஈர் ஒற்று ஆகும் - னகாரமும் மகாரமும் வந்து ஈரொற்று உடனிலையாய் நிற்கும்.

**எ - டு**: 'எம்மோடு தம்மைப் பொரூஉங்காற் பொன்னொடு, கூவிளம் பூத்தது போன்ம்' என வரும்.

1. போலும் என்னும் சொல், உயிர்போலுங் கேளிர் என இடையில் நிற்பின் பெயரெச்சமும், மீகானும் போலும் - மீகானும் போன்ம் என இறுதியில் நிற்பின் வினைமுற்றும் ஆகும் (பாவாணர்)

## மகரங் குறுகுமிடம்

**52. னகாரை முன்னர் மகாரம் குறுகும்.**

இ/து, 'அரையளபு குறுகல் மகர முடைத்து' ஐநூன்மரபு 13ஸ என்பதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

னகாரை முன்னர் மகாரம் குறுகும் - (மேற்கூறப்பட்ட) னகாரத்து முன்வந்த மகாரம் மாத்திரை குறுகி நிற்கும்.

## மொழிக்கண்ணும் மாத்திரை வேறுபடாமை

**53. மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினும்**
**எழுத்தியல் திரியா என்மனார் புலவர்.**

இ/து, எழுத்துக்கட்கு மொழிக்கண் மாத்திரை காரணமாகப் பிறப்பதோர் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

மொழிப்படுத்து இசைப்பினும் - மொழிக்கண் படுத்துச் சொல்லினும், தெரிந்து வேறு இசைப்பினும் - தெரிந்து கொண்டு வேறே சொல்லினும், எழுத்து இயல் திரியா என்மனார் புலவர் - உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்கள் (பெருக்கம் சுருக்கம் உடையனபோன்று இசைப்பினும்)

தத்தம் மாத்திரை இயல்பில் திரியா என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு**: அஃகல் அ எனவும், ஆல் ஆ எனவும், கடல் க எனவும், கால் கா எனவும் கண்டுகொள்க.

வேறு என்றதனான், எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக்கண்ணும் எழுத்தியல் திரியா வென்பது கொள்க.

**குறிப்புகள்**

## 5. போலி

### போலி எழுத்துக்கள்

**54. அகர இகரம் ஐகாரம் ஆகும்1**

இ/து, போலி எழுத்து ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அகரம் இகரம் - அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல, ஐகாரமாகும் - ஐகாரம்போல ஆகும்.

**எ - டு**: ஐயர், அஇயர்2 என வரும். அது கொள்ளற்க.

1. அகர முதலிய மூன்று சூத்திரங்களும் சந்தியக்கரம் விதிப்பனவாகக் கொண்டு 'ஆகுமென்றதனை ஆகாதென விலக்கப்படுமென்பாரை, பன்னீருயிரு மொழிமுதலாகும்,' என்புழியும், ஆகுமென்பதனாற் பன்னீருயிரு மொழிமுதலாகாவென விலக்கப்படும் போலுமெனக் கூறி மறுக்க என்பது, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

2. வயிரம் - வைரம் என எடுத்துக் காட்டலும் ஒன்று.

### போலி எழுத்துக்கள்

**55. அகரம் உகரம் ஔகாரம் ஆகும்.**

இதுவும் அது.

அகரம் உகரம் -அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல, ஔகாரம் ஆகும் - ஔகாரம்போல ஆகும்.

**எ - டு**: ஔவை, அஉவை1 எனக் கண்டுகொள்க. அது கொள்ளற்க.

1. கவுதாரி - கௌதாரி.

### போலி எழுத்துக்கள்

**56. அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்**
**ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.**

இதுவும் அது.

அகரத்து இம்பர் யகரப் புள்ளியும் அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும், ஐ என் நெடுஞ்சினை- ஐ எனப்பட்ட நெட்டெழுத்தான், மெய்பெறத் தோன்றும் - அவை வடிவுபெறத் தோன்றும்.

**எ - டு**: ஐவனம், அய்வனம்1 என வரும்.

'மெய்பெறத் தோன்றும்' என்றதனான், அகரத்தின் பின்னர் உகரமேயன்றி வகரப்புள்ளியும் ஔகாரம்போல வருமெனக் கொள்க என்றவாறு. ஔவை அவ்வை எனக் கண்டுகொள்க.

1. அய்வனம், அய்யர் என்றாற்போல்வன, செய்யுளில் எதுகை நோக்கி வரும் திரிபு வடிவங்களாகும்.

## ஐ ஔ குறுகுதல்

**57. ஓரள பாகும் இடனுமா ருண்டே**
**தேருங் காலை மொழிவயி னான.**

குறிப்புகள்

இ/து, என் நுதலிற்றோ வெனின், உயிர்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

தேருங்காலை மொழிவயின் ஓர் அளபு ஆகும் இடனும் உண்டு - ஐகாரம் ஆராயுங்காலத்து மொழிக்கண் ஓர் அளபாய் நிற்கும் இடமும் உண்டு.

**எ - டு**: இடையன், மடையன் என வரும்.

தேருங்காலை என்றதனான் முதற்கண் சுருங்காதென்பது கொள்க இடன் என்றதனான் இக் குறுக்கம் சிறுபான்மை யென்பது கொள்க.

## போலியில் மற்றொருவகை.

**58. இகர யகரம் இறுதி விரவும்.**[1]

இதுவும் ஓர் போலியெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இறுதி இகர யகரம் விரவும் - இகரவீற்று மொழிக்கண் யகரமும் (அதுபோல ) இகரமும் விரவிவரும்.

**எ - டு**: நாய் நாஇ2 எனக் கண்டுகொள்க (விரவும் என்றதனால்) அவை யிரண்டும் கொள்க என்றவாறு.

1. இம்பர் உம்பர் என்றாற் போல்வன காலவகை இடவகைகளான் மயங்குமாதலின், இவற்றின் முதற்கண் நிற்பது யாதோ இறுதிக்கண் நிற்பது யாதோ என்னும் ஐயம் நீக்குதற்கு மாட்டேற்றாக இச் சூத்திரங் கூறினார் என்பது. தொல்காப்பியச் சூத்திர விருத்தி.

2. நாயி என்பது பண்டைய வழக்காயிருந்திருக்கலாம். (பாவாணர்)

## 6. மொழிமுதல் எழுத்துக்கள்

## மொழிமுதலாகும் உயிர்கள்

**59. பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்.**

இ/து உயிரெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும் - பன்னிரண்டு உயிரெழுத்தும் மொழிக்கு முதலாம்.

**எ - டு**: அடை, ஆடை, இடை, ஈயம், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஓளி, ஔவியம் என வரும்.

## தனிமெய் மொழிமுத லாகாமை

**60. உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா.**

இ/து, ஐஉயிர்ஸ மெய்யெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா - உயிரோடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா˙ உயிரோடுகூடிய மெய்கள் மொழிக்கு முதலாம்.

ஈண்டு உயிர்மெய் யென்பது வேற்றுமை நயம் கருதி யென வுணர்க. ஈண்டு ஒற்றுமை கருதில்,

‘கதந பமவெனு மாவைந் தெழுத்தும்

எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே'(மொழிமரபு - 28)

எனச் சூத்திரம் சுருங்க ஓதுவதன்றி, இதனாற் சொல்லப்பட்ட அறுபது உயிர்மெய்யினை எடுத்தோத வேண்டில் சூத்திரம் பரக்க வருமென்பது.

குறிப்புகள்

## பன்னீருயிருடன் மொழிமுதலாதல்

**61. கதந பமஎனும் ஆவைந் தெழுத்தும்**
**எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே.**

இ/து, மேல் முதலாம் என்னப்பட்ட உயிர்மெய்கட்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

க த ந ப ம எனும் அ ஐந்து எழுத்தும்-க த ந ப ம என்று சொல்லப்பட்ட ஐந்து தனிமெய்யெழுத்தும் எல்லா உயிரொடும் முதல் செல்லும் - பன்னிரண்டு உயிரொடும் மொழிக்கு முதலாதற்குச் செல்லும்.

**எ - டு**: கலை, காளி, கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல், கைதல், கொண்டல், கோடை, கௌவை, எனவும் ' தந்தை, தாடி, திற்றி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேவர், தையல், தொண்டை, தோடு, தௌவை எனவும் ' நடம், நாரை, நிலம், நீர், நுழை, நூல், நெய்தல், நேயம், நைகை, நொய்யன, நோக்கம், நௌவி, எனவும் ' படை, பாடி, பிடி, பீடம், புகழ், பூமி, பெடை, பேடி, பைதல், பொன், போதகம், பௌவம், எனவும் ' மடம், மாலை, மிடறு, மீனம், முகம், மூதூர், மெலிந்தது, மேனி, மையல், மொழி, மோதகம், மௌவல் எனவும் வரும்.

'முதற்கு' என்பதன் நான்காம் உருபு விகாரத்தாற் றொக்கது.

## சகரமெய் ஒன்பதுயிருடன் மொழிமுதலாதல்

**62. சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**
**அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே.1**

இதுவும் அது.

சகரக் கிளவியும் அவற்று ஓர் அற்று - சகரமாகிய எழுத்தும் மேற்சொல்லப்பட்டவைபோல எல்லா உயிரோடும் மொழிக்கு முதலாம் அ ஐ ஔ எனும் மூன்று அலங்கடை - அ ஐ ஔ என்னும் மூன்றும் அல்லாவிடத்து.

**எ - டு**: சாலை, சிலை, சீறுக, சுரும்பு, சூழ்க, செய்கை, சேவடி, சொறிக, சோறு என வரும்.

சகடம் எனவும், சையம் எனவும் விலக்கினவும் வருமாலெனின் அவற்றுள் ஆரியச்சிதை வல்லாதன 'கடிசொல் லில்லை' என்பதனாற் கொள்க.

1. சகரம் மொழிமுதல் வாராதென்று கூறுவது தமிழுக்குச் சற்றும் பொருந்தாது. 'அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே' என்னும் நூற்பா அடிக்கு அவை ஔ என்னும் ஒன்றலங்கடையே என்ற பாடவேறுபாடும் உள்ளது. சக்கட்டி, சக்கை, சகடு, சகதி, சங்கு, சட்டென, சட்டம், சட்டகம், சட்டி, சட்டை, சடசட, சடை, சடைவு, சண்டி, சண்டு, சண்டை, சணல், சதுப்பு, சப்பட்டை, சப்பென்று, சப்பாணி, சப்பு, சப்பை, சம்பு, சம்மட்டி, சமட்டு, சமம், சமழ், சமை, சரடு, சரள், சரி, சருகு, சருச்சரை, சரேல் என, சல்லடை, சல்லரி, சல்லி, சலசல, சலங்கை,

குறிப்புகள்

சலி, சவ்வு, சவம், சவர், சவை, சளி, சளக்கென சழக்கு, சள்ளென, சள்ளை, சளை, சற்று, சறுக்கு, சன்னம், முதலிய நூற்றுக்கு மேற்பட்ட தனித்தமிழ்ச் சொற்கள் அடிப்படையானவும் தொன்று தொட்டனவும் இன்றியமையாதனவும் வேரூன்றினவும் சேரி வழக்கினவுமாயிருக்க, அவற்றைப் பிற்காலத்தனவென்று கொள்ளுவது பெருந்தவறாகும். சக்கை, சட்டி, சண்டு, சண்டை, சதை, சப்பு, சவி, சற்று, சறுக்கு முதலிய சொற்கள் எத்துணை எளிமையும் இயல்புமானவை என்பது சொல்லாமலே விளங்கும். சண்டு, சருகு முதலிய சில சொற்கள் பண்டு சகர முதலனவாயிருந்திருத்தல் கூடுமெனினும், சக்கு, சடார், சடேர், சரட்டு, சலசல, சரேல், சவ்வு, சளக்கு, சளார், சள் முதலிய ஒலிக்குறிப்புச் சொற்களும் அவற்றினடிப் பிறந்தனவும் துவக்கந்தொட்டுச் சகர முதலனவாயே இருந்திருத்தல் வேண்டும். சாப்பிடு என்னும் உலக வழக்கெளிமைச்சொல் சப்பு என்னும் மூலத்தினின்றே தோன்றியதாகும். சப்பு ை இடு ஸ்ரீ சப்பிடு - சாப்பிடு. சுவை என்னும் சொல்லும் சவை என்பதன் திரிபாகவே தோன்றுகின்றது. செத்தான் என்னும் இறந்தகால வினைமுற்று பண்டைக் காலத்தில் சத்தான் என்றே இருந்திருத்தல் வேண்டும். ஒ. நோ : காண்-கண்டான், நோ - நொந்தான். நெடின் முதலான வினைப்பகுதி இறந்தகாலமுற்றில் முதல் குறுகும்போது இனக்குறிலாய்க் குறுகுவதே மரபு' தெலுங்கிலும் சச்சினாடு (செத்தான்) சச்சிப்போயினாடு (செத்துப்போனான் ) என்றே சொல்வர். மேலும் 'முழுமுதல் அரணமும் வருபகை பேணார் ஆரெயிலும்' அமைத்துக்கொண்ட தொல்காப்பியர் காலத் தமிழர் சட்டி செய்யத்தெரியாதிருந்தனர் என்பது பெருநகைக் கிடமானதாகும். சட்டி என்பது சமையலுக்கு இன்றியமையாததும் எளிநிலையானதும் மறுபெயரற்றுமான கலவகை.

'சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளிசகடு சட்டை சவளி - சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி ஈரிடத்தும்
வந்தனவாற் சம்முதலும் வை'

என்பது நன்னூல் மயிலைநாதருரை மேற்கோள். (பாவாணர்)

## வகரமெய் எட்டுயிருடன் மொழிமுதலாதல்

**63. உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்**
**வ என் எழுத்தொடு வருத லில்லை.**

இதுவும் அது

உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர் - உ ஊ ஒ ஓ என்று சொல்லப்படுகின்ற நான்கு உயிரும், வ என் எழுத்தோடு வருதல் இல்லை-வ என்னும் மெய்யெழுத்தோடு மொழி முதலில் வருதலில்லை.

பிற உயிர்கள் வரும்.

**எ - டு**: வளை, வாளி, விளரி, வீடு, வெள்ளி, வேர், வையம், வௌவு எனவரும்.

## ஞகரமெய் மூன்றுயிருடன் மொழிமுதலாதல்.

**64. ஆ எ**
**ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய.**

இதுவும் அது.

ஆ எ ஒ என்னும் மூ உயிர் ஞகாரத்து உரிய-ஆ எ ஒ என்று சொல்லப்படும் மூவுயிர்கள் ஞகார ஒற்றோடு முதலாதற்கு உரிய பிற உரியவல்ல.

**எ - டு**: ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று எனவரும்.

**எ - டு**: ஞுழியிற்று என்றாற்போல்வன விலக்கினவும் வருமாலெனின், அவை1அழிவழக்கென்று மறுக்க.

1. (பாடம்) இழிவழக்கு.

## யகரம் ஆகாரத்துடனே மொழிமுதலாதல்

**65. ஆவோ டல்லது யகர முதலாது.**

இதுவும் அது.

ஆவோடு அல்லது யகரம் முதலாது-ஆகாரத்தோடு அல்லது யகர முதலாகாது.

**எ - டு**: யான் என வரும்.

யவனர் என்றாற்போல்வன விலக்கினவும் வருமாலெனின், அவை ஆரியச் சிதைவென்று மறுக்க.

## எல்லா எழுத்தும் முதலாம் இடம்

**66. முதலா ஏன தம்பெயர் முதலும்.**

இ∴து, மொழிக்கு முதலாகாதனவும் ஒரோவழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

முதலா ஏன - மொழிக்கு முதலாகாத ஒழிந்த மெய்களும், தம் பெயர் முதலும்-(அவ்வெழுத்துக்கள்) தம் பெயர் கூறுதற்கு முதலாம்.

முதலாயின மெய் கதநபமக்களும், வகரமும், சகரமும், ஞகரமும், யகரமும் என இவை. முதலாகாத மெய் ஙகரமும், டகரமும், ணகரமும், ரகரமும், லகரமும், ழகரமும், ளகரமும், றகரமும், னகரமும் என இவை.

**எ - டு**: அவை தம் பெயர்க்கு முதலாமாறு-
ஙக்களைந்தார், டப்பெரிது, ணந்நன்று என்றாற்போல ஒட்டிக்கொள்க.

இனி 'ஏன' என்றதனான், முதலாம் என்னப்பட்ட ஒன்பது உயிர்மெய்யும் பன்னிரண்டு உயிரும் தம்பெயர் கூறும்வழியும் மொழிக்கு முதலாம் எனக்கொள்க.

கக்களைந்தார், தப்பெரிது, அக்குறிது, ஆவலிது என்றாற் போல ஒட்டிக்கொள்க.

## குற்றியலுகரம் மொழிமுதலாமாறு

**67. குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கின்**
**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.1**

இ∴து, குற்றியலுகரம் மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

குறிப்புகள்

குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின் - குற்றியலுகரம் முறைப் பெயரிடத்து, ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் - ஒற்றாய்நின்ற நகரத்தின் மேலாய நகரத்தோடு மொழிக்கு முதலாம்.

குறிப்புகள்

**எ - டு**: நுந்தை என வரும்.

இவ்வாறு முதலாக்கம் கூறவே, மொழிமுதல் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் கூறியவாறாயிற்று. இடம் நுந்தை என்னும் முறைப்பெயர். பற்றுக்கோடு நகரமிசை நகரம்.

1 நுந்தை உகரங் குறுகி மொழிமுதற்கண்
வந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும் சந்திக்
குயிர்முதலா வந்தணையு மெய்ப்புணர்ச்சி யின்றி
மயலணையு மென்றதனை மாற்று’.

இவற்றை விரிந்துரைத்து விதியும் விலக்கும் அறிந்துகொள்க என்பது நன்னூல் மயிலைநாதருரை மேற்கோள்.

1 காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல நுந்தை என்று இதழ்குவித்து முற்றக் கூறியவிடத்தும், இதழ்குவியாமற் குறையக் கூறியவிடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க. நுந்தாய் என்பதோ எனின். அ∴து இதழ்குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று இயலென்றதனான் இடமும் பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபாடின்றென்று கொள்க. இதனானே மொழிக்கு முதலாம் எழுத்துத் தொண்ணூற்று நான்கென்றுணர்க.

காது, கட்டு முதலியவை முற்றுகரமாயின் ஏவல் வினையும், குற்றுகரமாயின் தொழிற்பெயருமாகும்.
(பாவாணர்)

## மொழிமுதற் குற்றியலுகரத்தின் இயல்பு

**68. முற்றிய லுகரமொடு‘ பொருள்வேறு படாஅது**
**அப்பெயர் மருங்கின் நிலையிய லான.**

இ∴து, மேலதற்கு ஓர் புறனடை.

முற்றியலுகரமொடு பொருள் வேறுபடாது-(அம்முதற்கட் குற்றியலுகரம் ஆண்டு இதழ்குவித்துக் கூறும் வழி) முற்றுகரத்தோடு பிற உகரம்போலப் பொருள் வேறுபடாது ` (யாண்டெனின்) அப்பெயர் மருங்கின் நிலை இயலான - அம்முறைப்பெயரிடத்துத் தான் நிற்றற்கண்.

**எ - டு**: நாகு எனவும் நகு எனவும் குறுகியும் குறுகாதும் நின்ற உகரங்கள்போல, நுந்தை என்று குறுக்கமாய வழியும், இதழ் குவித்துக்கூறக் குறுகாதவழியும், பொருள் வேறுபடாது இதழ்குவிதல்’ என்பதனால், பொருள் என்றதனை இடனும் பற்றுக்கோடும் ஆக்கி,பிற உகரங்கள்போல ஈண்டை உகரங்கள் இடனும் பற்றுக்கோடும் வேறுபடா என்பது கொள்க.

## 7. மொழியிறுதி எழுத்துக்கள்

## மொழியீறாகும் உயிர்கள்

**69. உயிர் ஔ எஞ்சிய இறுதி யாகும்.**

இ∴து, உயிர்மொழிக்குஈறாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உயிர் ஔ எஞ்சிய இறுதி ஆகும்-உயிரெழுத்துக்களுள் ஔகாரம் ஒழிந்தவை மொழிக்கு ஈறாம் ஔகாரந்தான் ஈறாகாது.

இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது.

**எ - டு**: ஆஅ, ஆ, ஈஇ, ஈ, ஊஉ, ஊ, ஏஎ, ஏ, ஐஇ, ஐ, ஓஒ, ஓ என உயிர் ஈறாயின இவற்றுட் குற்றெழுத்தைந்தும் அளபெடை வகையான் ஈறாயின.

உயிர்மெய்களும் மேல் வரையறை கூறாதனவாகிய அகர ஆகார இகர ஈகார ஐகாரங்களோடு இயைந்தன ஈண்டே கொள்க.

**எ - டு**: விள, பலா, கிளி, குரி, பனை என வரும்.

குறிப்புகள்

## ஔ ஈறாகும் இடம்

**70. கவவோ டியையின் ஔவு மாகும்.**

இஃது, ஈறாகா தென்ற ஔகாரம் இன்னுழி ஆம் என்கின்றது.

க வ ஒடு இயையின்-ககர வகரமாகிய மெய்களோடு பொருந்தின், ஔவும் ஆகும்- முன் ஈறாகா தென்ற ஔகாரமும் ஈறாம்.

**எ - டு**: கௌ, வௌ, என வரும்.1

1. எனவே ஒழிந்த உயிரெல்லாம் தாமே நின்றும் பதினெட்டு மெய்களோடுங் கூடிநின்றும் ஈறுதல் பெற்றாம். இதனானே ஔகாரம் ஏனை மெய்க்கண் வாராதென விலக்குதலும் பெற்றாம். உயிர் நுகரத்தோடு கூடி மொழிக்கு ஈறாமென்பது இதனால் எய்திற்றேனும் அது மொழிக்கு ஈறாகாமை தந்துபுணர்ந் துரைத்தலான் உணர்க. 2இது வரையறை கூறிற்று

2. தந்து புணர்ந்துரைத்தல் உள்பொருளல்லதனை உள போலத் தந்து கூட உணர்த்தல். இங்கு,உயிர்ஙகரத்தோடு கூடி மொழிக்கு ஈறாவதுபோலக் கூறியது தந்து புணர்ந்துரைத்தல். (பாவாணர்)

## எகர வுயிர் மெய்யோ டீறாகாமை

**71. எ என வருமுயிர் மெய்யீறாகாது.**

இஃது, எகரம் தானே நின்றவழியின்றி மெய்யோடு கூடி ஈறாகாதென வரையறை கூறுதல் நுதலிற்று.

எ என வரும் உயிர் - எ என்று சொல்ல வரும் உயிர், மெய் ஈறு ஆகாது - தானே ஈறாவதன்றி மெய்யோடு இயைந்து ஈறாகாது.

## ஒகரம் நகர மெய்யொன்றுடன் ஈறாதல்

**72. ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே.**

இதுவும் வரையறை.

ஒவ்வும் அற்று - ஒகரமும் தானே நின்று ஈறாவதன்றி மெய்யோடு இயைந்து ஈறாகாது. ந அலங்கடை நகர மெய்யோடல்லாத விடத்து.[1]

1. (நச் எடுத்துக்காட்டு) நொ கொற்றா 'நொ அலையனின் னாட்டை நீ' என வரும்.

## ஏ, ஓ, ஞகரமெய்யொன்றுடன் ஈறாகாமை

**73. ஏ, ஓ, எனுமுயிர் ஞகாரத் தில்லை.**

இதுவும் வரையறை.

குறிப்புகள்

ஏ ஓ எனும் உயிர் ஞகாரத்து இல்லை - ஏ ஓ என்று சொல்லப்படும் உயிர் (தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் ஈறாவதன்றி) ஞகாரத்தோடு ஈறாவதில்லை.

தாமேயாதல் முன்னே காட்டப்பட்டன. பிறமெய்களோடு ஈறாவனவற்றுள் வழக்கிறந்தனவொழிய இறவாதன வந்தவழிக் கண்டு கொள்க.[1]

1. உரிஞ, உரிஞா, உரிஞி, உரிஞீ, உரிஞு, உரிஞூ, இவை எச்சமும் வினைப்பெயரும் பற்றி வரும். 'அஞ்ஞை, மஞ்ஞை இவை பெயர் ஏனை ஐந்தும் விலக்கப்பட்டன' உரிஞோ என்பது 'கடிசொல்லில்லை' என்பதனாற் கொள்க.

## உ ஊ நகர வகரங்களுடன் ஈறாகாமை

**74. உ, ஊகாரம் நவவொடு நவிலா.**

இதுவும் வரையறை.

உ, ஊகாரம் நவ ஒடு நவிலா - உ ஊகாரங்கள் (தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் பயில்வதன்றி) நகர வகரங்களோடு பயிலா.

தாமே ஈறாதல் மேலே காட்டப்பட்டன. பிற மெய்களோடு ஈறாமவற்றுள், வழக்கிறந்தனவல்லாதன வந்தவழிக் கண்டு கொள்க. 'நவிலா' என்றதனாற் சிறுபான்மை நொவ்வும் கவ்வும் என (உகரம்) வகாரத்தோடு ஈறாதல் கொள்க. இன்னும் இதனானே சிறுபான்மை நகரத்தோடு வரவு உண்டேனும் கொள்க.[1]

1. நகரம் பொருந் என வினைப் பெயராகியும் நா நீ நே எனப் பெயராகியும் நை நொ நோ என வியங்கோளாகியும் வரும். பொருநை என்றுங் காட்டுப. வகரம் உவவே எனவே வியங்கோளாயும் உவா செவ்வி வீ வை எனப் பெயராயும் வரும். ஒருவ ஒருவா ஒருவி ஒருவீ ஒளவை என்றுங் காட்டுப. ஈண்டு விலக்காத ஏனை யுயிர்களோடு வந்த நகர வகரங்கள் அக்காலத்து வழங்கினவென்று கோடும், இவ்விதியால் இனி நவிலா என்றதனானே வகரவுகரம் கதவு துரவு குவவு நுணர்வு நுகர்வு நொவ்வு கவ்வு எனப் பயின்று வருதலுங் கொள்க.

## சகர வுகரம் இருமொழிக்கு ஈறாதல்

**75. உச்ச காரம் இருமொழிக் குரித்தே. இதுவும் ஒரோவழி வரையறை.**

உச் சகாரம் இரு மொழிக்கு உரித்து - உகரத்தோடு கூடிய சகரம் இருமொழிக்கு அல்லாது (பலமொழிக்கு ஈறாகாது.)

**எ - டு**:உசு, முசு என வரும், பசுவென்பது ஆரியச் சிதைவு.

## பகர வுகரம் ஒருமொழிக்கே ஈறாதல்

**76. உப்ப காரம் ஒன்றென மொழிப**

இருவயி னிலையும் பொருட்டா கும்மே.

இதுவும் மொழிவரையறையும் மொழியது பொருள்பாடும் உணர்த்துதல் நுதலிற்று.

உப்பகாரம் ஒன்று என மொழிப - உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கு ஈறாம் என்று சொல்லுவர். இருவயின் நிலையும் பொருட்டு ஆகும் - அதுதான் தன்வினை பிறவினை என்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம்.

**எ - டு**: தபு என வரும், இது படுத்துச்சொல்ல, நீ சா எனத் தன்வினையாம் எடுத்துச்சொல்ல, நீ ஒன்றனைச் சாவி எனப் பிற வினையாம்.1

1. இதனால், ஆங்கிலத்திற் போலப் பண்டைத் தமிழிலும் அசையழுத்தம் (யஉஉநவெ) ஒரு சொல்லின் வகையையும் பொருளையும் வேறுபடுத்திற்றென்பதை அறியலாம். (பாவாணர்)

குறிப்புகள்

## ஈறாகா உயிர்மெய் இன்ன வகையில் ஆமெனல்

## 77. எஞ்சிய வெல்லாம் எஞ்சுதல் இலவே.

இ∴து, மொழிக்கு ஈறாகா உயிர்மெய்யும் ஓரோவழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இல - மொழிக்கு ஈறாகாது நின்ற உயிர்மெய்களெல்லாம் தம் பெயர் கூறும்வழி ஈறாதற்கு ஒழிபு இல.

எஞ்சிய உயிர்மெய்யாவன: ஔகாரம் ககார வகாரங்களை ஒழிந்த மெய்யோடு இயைந்த உயிர்மெய்யும், எகரம் எல்லா மெய்யோடும் இயைந்த உயிர்மெய்யும், ஒகரம் நகரம் ஒழிந்த மெய்யோடு இயைந்த உயிர்மெய்யும் ஏகார ஓகாரம் ஞகாரத்தோடு இயைந்த உயிர்மெய்யும் உ ஊகாரம் நகர வகரங்களோடு இயைந்த உயிர்மெய்யும் என இவை.

**எ - டு**: தம் பெயர்க்கு (ஈறு) ஆமாறு் ஙௌக் களைந்தார் எனவும், கெக்களைந்தார் எனவும், கொக் களைந்தார் எனவும், ஞேக்களைந்தார் எனவும், ஞோக்களைந்தார் எனவும்,நு□க் களைந்தார் எனவும், நூக் களைந்தார் எனவும், வுக் களைந்தார் எனவும், வூக் களைந்தார் எனவும் வரும் எல்லாம் என்றதனான், மொழிக்கு ஈறாய்நின்ற உயிர்மெய்களும் தம் பெயர் கூறும்வழியும் ஈறாய் என்று கொள்க. கக்களைந்தார், கா வலிது எனவும். அக் களைந்தார், ஆ வலிது எனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. தன்னை உணர நின்றவழி, மொழிகட்கு இது கருவியாக ஈற்றகத்து முடிபு ஒன்றின முடித்தலாற் கொள்க.

## மொழியீறாம் மெய்கள்

**78. ஞணநம னயரல வழள வென்னும்**
**அப்பதி னொன்றே புள்ளி யிறுதி.**

இ∴து, தனிமெய்களுள் மொழிக்கு ஈறாவன கூறுதல் நுதலிற்று.

ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் அப்பதினொன்றே - ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்று கூறப்பட்ட அப்பதினொன்றுமே, புள்ளி இறுதி - புள்ளிகளில் மொழிக்கு ஈறாவன.

**எ - டு**: உரிஞ், மண், பொருந்,திரும், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வேள் என வரும். னகாரத்தை ஈற்று வையாது, மகரத்தோடு வைத்தது அதன் 1மயக்க இயைபு நோக்கி என்றுணர்க.

1. வழக்குப் பயிற்சியும் மயக்க இயைபும் நோக்கி.

## நகரமெய் இருமொழிக்கு ஈறாதல்

**79. உச்ச கார மொடு நகாரஞ் சிவணும்.**

குறிப்புகள்

இதுவும் மொழிவரையறை.

உசகாரமொடு நகாரம் சிவணும் - உகரத்தோடு கூடிய சகாரத்தோடே நகாரம் பொருந்தி அஃது இரு மொழிக்கு ஈறாயவாறுபோலத் தானும் இருமொழிக்கு ஈறாம்.

**எ - டு**: பொருந், வெரிந் என வரும்.

## ஞகர மெய் ஒரு மொழிக்கே ஈறாதல்

**80. உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே**
**அப்பொருள் இரட்டா திவணை யான.**

இதுவும் மொழிவரையறை.

உபகாரமொடு ஞகாரையும் அற்று - உகரத்தோடு கூடிய பகரத்தோடு ஞகாரமும் அத்தன்மைத்தாய் ஒரு மொழிக்கு ஈறாம், இவணையான1 அப்பொருள் இரட்டாது - இவ்விடத்ததன்பொருள் அவ்வுப்பகரம் போல இரு பொருள் படாது.

**எ - டு**: உரிஞ் என வரும்.

1. இவணை யென்பதில் ஐகாரம் அசை.(நச்)

## வகரமெய் நான்மொழிக்கு ஈறாதல்

**81. வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.**

இதுவும் மொழிவரையறை.

வகரக் கிளவி1 நான்மொழி ஈற்றது - வகரமாகிய எழுத்து நான்குமொழி ஈற்றதாம்.

**எ - டு**: அவ், இவ், உவ், தெவ் என வரும்.

1. கிளவி ஆகுபெயர் எழுத்துக் கிளவியாதற்கு உரித்தாமாதலின் "மகரத் தொடர்மொழி... அஃறிணை மேன" என்று எகின், செகின், எயின், வயின், குயின், அழன், புழன், புலான், கடான், என வரும் ஒன்பதும் மயங்காதன எனக் கொள்ளின், பலியன், வலியன், வயான், கயான், அலவன், கலவன், கலுழன், மறையன், செகிலன் முதலாயின மயங்கப் பெறாவென மறுக்க" என்பது நன்னூல் மயிலை நாதருரை (நூ, 121). (பாவாணர்)

## அஃறிணைக்கண், னகரவீற்று மொழிகள் ஒன்பது.

**82. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**
**னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப**
**புகரறக் கிளந்த அஃறிணை மேன.**

இதுவும் ஒரோவழி மொழிவரையறை.

புகர் அறக் கிளந்த அஃறிணை மேன - குற்றம் அறச் சொல்லப்பட்ட அஃறிணையிடத்து, மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த - மகரவீற்றுத் தொடர்மொழியோடு மயங்காதென்று வரையறுக்கப்பட்ட, னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப - னகரவீற்றுத் தொடர்மொழி ஒன்பதென்று சொல்லுவர்.

**எ - டு**: நிலம், நிலன், பிலம், பிலன் என்றாற்போல்வன மயங்குவன.

இனி மயங்காதன உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் என வரும்.

இவற்றுள் திரிபுடையன களைக. ஒன்ப∴து என்னும் ஆய்தம் செய்யுள் விகாரம். அ∴றிணையென்றது ஈண்டு அ∴றிணைப் பெயரினை.

இரண்டாவது மொழிமரபு முற்றிற்று.

**குறிப்புகள்**

# கூறு - 5 பிறப்பியல

## 3. பிறப்பியல்

**குறிப்புகள்**

எழுத்துக்களின் பிறப்பிலக்கணம் உணர்த்துவது

இவ் வோத்து என்ன பெயர்த்தோவெனின், எழுத்துக்களது பிறப்பு உணர்த்தினமையின் பிறப்பியல் என்னும் பெயர்த்து.இதனை நூன்மரபின் பின்னே வைக்கவெனின் சார்பிற்றோற்றத் தெழுத்தும் தனிமெய்யும் மொழிமரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின், மொழிமரபின் பின்னதாயிற்று.

### 1. எழுத்துக்கள் பொதுவாகப் பிறக்குமாறு

**83. உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**
**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**அண்ணமும்1 உளப்பட எண்முறை நிலையான்**
**உறுப்புற் றமைய நெறிப்பட நாடி**
**எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்**
**பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல.**
**திறப்படத் தெரியுங் காட்சி யான.**

இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், எழுத்துக்களது பொதுப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

எல்லா எழுத்தும் நெறிப்பட நாடி சொல்லும் காலை-தமிழெழுத்துக்க ளெல்லாம் ஒருவன் முறைப்பட ஆராய்ந்து தம்மைச் சொல்லுங்காலத்து, உந்தி முதலா முந்துவளி தோன்றி-கொப்பூழ் அடியாக மேலே கிளர்கின்ற உதானன்2 என்னும் பெயரையுடைய வாயுத் தோன்றி, தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ - தலையின்கண்ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலைபெற்று. பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான் உறுப்பு உற்று அமைய - (தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்றனோடும்) பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எட்டாகிய முறைமையையுடைய இடங்களில் ஓர் உறுப்போடு ஓர் உறுப்புத்தம்மிற் பொருந்தி அமைதி பெற, பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல-பிறப்பினது ஆக்கம் வேறு வேறு புலப்பட்டு வழங்குதலுடைய, திறப்படத் தெரியும் காட்சியான - கூறுபாடுள்ளதாக ஆராயும் அறிவிடத்து.

இதழ்போறலான் வாய் இதழெனப்பட்டது. எல்லா எழுத்தும் என்னும் எழுவாய்க்குப் 'பிறப்பினாக்கம் வேறுவேறு இயல' என்பதனை ஒரு சொன்னீர்மைப்படுத்திப் பயனிலை யாக்குக.

1. எழுத்தைப் பிறப்பித்தற்கு இடமும் உறுப்பும் என இரண்டு வேண்டும். எழுத்தின் இனத் தன்மையைத் தோற்றும் நெஞ்சு தொண்டை முதலியவை இடம் தனித்தனி எழுத்தைத் தோற்றும் நா பல் முதலியவை உறுப்பு. மூக்கைத் தொல்காப்பியர் உறுப்பென்றார் நன்னூலார் இடமென்றார். இருவரும் தலையை ஓர் இடமாகக் கொண்டனர். இஃது உடல் நூலுக்கும் ஒலி நூலுக்கும் பொருந்துவதாய்த் தோன்றவில்லை.

(பாவாணர்)

2. உதானன் - ஒலிக்காற்று.

## எல்லா உயிர்களும் பொதுவாகப் பிறக்கும் வகை

குறிப்புகள்

**84. அவ்வழிப்**

**பன்னீ ருயிரும் தந்நிலை திரியா**

**மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.**

இஃது, உயிரெழுத்திற்குப் பொதுப்பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

அ வழி - அவ்விடத்து, பன்னீர் உயிரும் தம் நிலை திரியா-பன்னிரண்டு உயிரெழுத்தும் தத்தம் நிலையில்திரியாவாய், மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் - மிடற்றின்கட் பிறந்த வளியான் ஒலிக்கும்.

'தந்நிலை திரியா' என்றதனால், குற்றியலுகரம், குற்றியலிகரம் தந்நிலை திரியுமென்பது பெறப்பட்டது.

## அ, ஆ பிறக்குமாறு

85. **அவற்றுள்**

**அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்.**

இஃது, உயிரெழுத்துக்களுட்- சிலவற்றிற்குச் சிறப்புப் பிறவி உணர்த்துதல் நுதலிற்று.

அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட உயிர் பன்னிரண்டின்னுள், அ ஆ அஇரண்டு அங்காந்து இயலும் - அகர ஆகாரங் களாகிய அவ்விரண்டும் அங்காந்து சொல்ல அஃது இடமாகப்பிறக்கும்.1

1.முயற்சி உயிரக்கிழவன் கண்ணது.

## இகரம் முதலியன பிறக்குமாறு

**86. இ ஈ எ ஏ ஐயென இசைக்கும்**

**அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன**

**அவை தாம்**

**அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய.**

இதுவும் அது.

இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் அ பால் ஐந்தும்-இ ஈ எ ஏ ஐ என்று சொல்லப்படும் அக் கூற்று ஐந்தும், அவற்று ஓர் அன்ன - மேற்கூறிய அகர ஆகாரங்கள் போல அங்காந்து சொல்லப் பிறக்கும், அவைதாம் பல் அண் நாமுதல் விளிம்பு உறல் உடைய - அவைதாம் (அவ்வாறு சொல்லப் பிறக்குமிடத்துப்) பல்லினது அணிய இடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று உறுதலை யுடைய.

## உகரம் முதலிய பிறக்குமாறு

**87. உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்**

**அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்.**

இதுவும் அது.

உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும் அ பால் ஐந்தும் - உ ஊ ஒ ஓ ஔ எனச் சொல்ல இசைக்கும் அக் கூற்று ஐந்தும், இதழ் குவிந்து இயலும் - இதழ் குவித்துச் சொல்ல நடக்கும்.

## உயிர்க்கும் மெய்க்கும் ஒரு பொதுவிதி

**88. தத் தந் திரிபே சிறிய வென்ப.**

இ∴து, முன் கூறிய உயிர்க்கும் மேற்கூறும் மெய்க்கும் ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

குறிப்புகள்

தம்தம் திரிபு சிறிய என்ப - (எழுத்துக்கள் ஒரு தானத்துக் கூடிப் பிறக்கு மெனப்பட்டன் அவ்வாறு கூடிப்பிறப்பினும்) தத்தம் வேறுபாடுகளைச் சிறிய வேறுபாடுகளென்று சொல்லுவர்.

அவ் வேறுபாடு அறிந்துகொள்க.1

1.அவை எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் என்றவாற்றானும் தலைவளி2நெஞ்சுவளி, மிடற்றுவளி, மூக்குவளி என்றவாற்றானும் பிறவாற்றானும் வேறுபடுமாறு நுண்ணுணர்வுடையோர் கூறி உணர்க. ஐ விலங்கலுடையது3 வல்லினம் தலைவளி யுடையது. 4மெல்லினம் மூக்குவளி யுடையது. இடையினம் மிடற்றுவளி யுடையது, ஏனையவுங் கூறிக் கண்டு உணர்க. (நச்)

2. தலைவளி எழுத்திற்குப் பயன்படுவதாய்த் தெரியவில்லை.

3. விலங்கல் - நலிதலை அடுத்த படுத்தல் ஒலிகளைச் சேர்த்துக் கூறும் போது உள்ள ஓசை.

4. வல்லினம் நெஞ்சுவளி யுடையதென்பதே பொருத்தமானது. (பாவாணர்.)

### க, ங

**89. ககார ஙகாரம் முதல்நா அண்ணம்.**

இ∴து, மெய்களுட் சிலவற்றிற்குப் பிறவி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

ககாரம் ஙகாரம் நாமுதல் அண்ணம் (முதல்) - ககாரமும் ஙகாரமும், நாமுதலும் அண்ணமுதலும் உறப்பிறக்கும்.[1]

1.உயிர்மெய்யாகச் சூத்திரத்துக் கூறினும் தனிமெய்யாகக் கூறிக் காண்க. முதலை இரண்டிற்கும் கூட்டுக. (நச்)

## மெய்யெழுத்துக்கள் பிறக்குமாறு

### ச, ஞ

**90. சகார ஞகாரம் இடைநா அண்ணம்.**

இதுவும் அது.

சகாரம் ஞகாரம் நாஇடை அண்ணம் ( இடை) - சகாரமும் ஞகாரமும் நாவது இடையும் அண்ணத்தது இடையும் உறப் பிறக்கும்.

### ட, ண

**91. டகார ணகாரம் நுனிநா அண்ணம்.**

இதுவும் அது.

டகாரம் ணகாரம் நாநுனி அண்ணம் ( நுனி ) - டகாரமும் ணகாரமும் நாவது நுனியும் அண்ணத்தது நுனியும் உறப் பிறக்கும்.

## மேலனவற்றிற்கு ஓர் ஐயந் தீர்த்தது

### 92. அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின.

இஃது, மேலனவற்றிற்கு ஓர் புறனடை[1] உணர்த்துதல் நுதலிற்று.

அ ஆறு எழுத்தும் மூவகை பிறப்பின - மேற்கூறப் பட்ட ஆறு எழுத்தும் நிரனிரைவகையான் ( அறுவகைப் பிறப்பின அல்ல. ) மூவகைப் பிறப்பின.

1. ஐயம் அகற்றியது.(நச்)

குறிப்புகள்

## த,ந

**93. அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்**
**நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்**
**தாமினிது பிறக்குந் தகார நகாரம்.**

இதுவும் மெய்களிற் சிலவற்றிற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கின் - அண்ணத்தைப் பொருந்திய பல்லினது அணிய1 இடத்தின் கண்ணே, நாநுனி பரந்து மெய் உற ஒற்ற - நாவினது நுனி பரந்து வடிவை உறும்படி ஒற்ற, தாம் இனிது பிறக்கும் - தாம் இனிதாகப் பிறக்கும், தகாரம் நகாரம் - தகாரமும் நகாரமும்.

முன்னே 'உறுப்புற்றமைய' என்று வைத்துப் பின்னும் மெய்யுற2 என்றதனான். எல்லா எழுத்துக்களும் மெய்யுற்ற என்றதனான், எல்லா எழுத்துக்களும் மெய்யுற்றபோதே இனிது பிறப்பதென்பது கொள்க.

1. அடியாகிய இடத்தே. (நச்)

2. த ந என இவற்றின் வேறுபாடு உணர்க. முன்னர் உறுப்புற்று அமைய என்று கூறி ஈண்டு மெய்யுற ஒற்ற என்றார். சிறிது ஒற்றவும் வருடவும் பிறப்பன உளவாகலின். (நச்)

சிறிது ஒற்றப் பிறப்பன லகார னகாரங்கள் சிறிது வருடப் பிறப்பன ரகார ழகாரங்கள். ( பாவாணர் )

## ற, ன

### 94. அணரி நுனிநா அண்ணம் ஒற்ற

ற஁கான் ன஁கான் ஆயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

அணரி1 நுனிநா அண்ணம் ஒற்ற-அணர்ந்து நுனிநா அண்ணத்தைச் சென்று ஒற்ற, றஃகான் னஃகான் அ இரண்டும் பிறக்கும்-றகார னகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்.

இங்கு நின்றும் நெடுங்கணக்கு முறைமை விட்டும் நா 2அதிகாரம் பட்டது கண்டு கூறுகின்ற தெனவுணர்க.

1. அணரி-மேனோக்கிச் சென்று.

2. நாவினால் ஏற்பட்ட முறைமை. (பாவாணர்)

### ர, ழ

**95. நுனிநா அணரி அண்ணம் வருட**
**ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.**

குறிப்புகள்

இதுவும் அது.

நுனிநா அணரி அண்ணம் வருட - நுனிநா அணர்ந்து அண்ணத்தைத் தடவ, ரகார ழகாரம் அ இரண்டும் பிறக்கும்-ரகார ழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்.

### ல, ள

**96. நாவிளிம்பு வீங்கி யண்பல் முதலுற**
**ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.**

இதுவும் அது.

நா விளிம்பு வீங்கி பல் அண் முதல் உற - நாவினது விளிம்பு தடித்துப் பல்லினது அணிய இடத்தைப் பொருந்த, அ வயின் அண்ணம் ஒற்ற லகாரமும் வருட ளகாரமும் அ இரண்டும் பிறக்கும் - அவ்விடத்து (முதல்நா) அவ்வண்ணத்தை ஒற்ற லகாரமும் அதனைத் தடவ ளகாரமுமாக அவ்விரண்டும் பிறக்கும்.

### ப, ம

**97. இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்.**

இதுவும் அது.

இதழ் இயைந்து பிறக்கும் பகாரம் மகாரம் - கீழ் இதழும் மேல் இதழும் தம்மில் இயையப் பிறக்கும் பகாரமும் மகாரமும்.

### வ

**98. பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்.**

இதுவும் அது.

பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும் -மேற்பல்லும் கீழ் இதழும் தம்மில் இயைய வகாரம் பிறக்கும்.1

1.வ என வரும் இதற்கும் இதழ் இயைதலின் மகரத்தின் பின்னர் வைத்தார். (நச்)

### ய

**99. அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை1**
**கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.**

இதுவும் அது.

அண்ணம் சேர்ந்த மிடற்று எழு வளி இசை கண் உற்று அடைய யகாரம் பிறக்கும் - அண்ணத்தை நாச் சேர்ந்த விடத்து மிடற்றினின்றும் எழும் வளியானாய இசை அவ்வண்ணத்தை அணைந்து செறிய யகாரம் பிறக்கும்.

1. உந்தியிலெழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனாற்

பிறந்த ஓசை அண்ணத்தை அணைந்து உரலாணி2 இட்டாற் போலச் செறிய யகார வொற்றுப் பிறக்கும். (நச்)

2.உரலாணி உரற்குழி பள்ளமாகியாகி அடியில் துளை விழுந்த பின் அதை அடைக்கும்படி செறிக்கும் மரத்துண்டு. (பாவாணர்.)

குறிப்புகள்

## மெல்லின மெய்களுள் பிறப்புக்கு ஒரு சிறப்பு விதி

**100. மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கஞ்**
**சொல்லிய பள்ளி நிலையின வாயினும்**
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.

இ∴து, மெல்லெழுத்திற்கு ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம் சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்- மெல்லெழுத்துக்களாறும் தத்தம் பிறப்பினது ஆக்கம் மேற்சொல்லப்பட்ட இடத்தே நிலை பெற்றனவாயினும், மூக்கின் வளி இசை யாப்புற தோன்றும்-அவை மூக்கின்கண்ணுளதாகிய வளியது இசையான் யாப்புறத் தோன்றும்.

'யாப்புற' என்றதனான், இடையெழுத்திற்கு மிடற்றுவளியும் வல்லெழுத்திற்குத் தலைவளியும் கொள்க.

## 3. சார்பெழுத்துக்கள் பிறக்குமாறு

**101. சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்**
**தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்**
**தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி**
**ஒத்த காட்சியின் தம்மியல் பியலும்.**

இ∴து, சார்பிற்றோற்றத் தெழுத்திற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பு இல என தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்-சிலவற்றைச் சார்ந்துவரின் அல்லது தமக்குத் தாமே வரும் இயல்பு இலவென்று ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்ட ஒழிந்த மூன்றும், தம்தம் சார்பின் பிறப்போடு சிவணி ஒத்த காட்சியில் தம் இயல்பு இயலும்- தத்தமக்குச் சார்பாகிய எழுத்துக்களது பிறப்பிடத்தே பிறத்தலொடு பொருந்தி அவ்விடத்தே தமக்குரிய இயல்பில் நடக்கும்.

'ஒத்தகாட்சி' என்றதனான், ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பேயெனினும் தளை வளியாற் பிறத்தலின், உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்குமென்பது கொள்க. 'தம்மியல்பியலும்' என்றதனான், அளபெடையும் உயிர்மெய்யும் தமக்கு அடியாகிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாக வருமென்பது கொள்க.

## 4. எழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடை

**102. [1]எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து**
**சொல்லிய பள்ளி யெழுதரு வளியின்**
**பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்**
**தகத்தெழு வளியிசை யரில்தப நாடி**
**அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே.**

இ∴து, எல்லா எழுத்திற்கும் ஆவதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

குறிப்புகள்

எல்லா எழுத்தும் - எல்லா எழுத்துக்களும், வெளிப்பட கிளந்து சொல்லிய பள்ளி- வெளிப்பட விதந்து சொல்லப்பட்ட இடத்தின்கண்ணே, எழுதரு வளியின் - எழுகின்ற வளியானே, பிறப்பொடு விடுவழி - தாம் பிறக்குந் தொழிலுடையவாதலொடு தம்மைச் சொல்லும் இடத்து, உறழ்ச்சி வாரத்து அகத்து எழுவளி இசை - திரிதருங் கூற்றையுடைய உண்ணின்று எழும் வளியானாய இசையை, அரில் தப நாடி-பிணக்கமற ஆராய்ந்து, அளபின் கோடல் - மாத்திரை வரையறையாற் கோடல், அந்தணர் மறைத்து - பார்ப்பார் வேதத்துக் கண்ணது.

உறழ்ச்சி வாரம் என்றது, உந்திமுதலா எழும் வளி தலைகாறும் சென்று மீண்டும் நெஞ்சின்கண் நிலைபெறுதலை எனக்கொள்க. வளி என்னாது வளியிசை என்றது, அவ்வாறு நெஞ்சின்கண் நிலைபெறும் அளபும் வளி எனப்படுவது பின்னை நெஞ்சினின்றும் எழுவுழியெல்லாம் வளித்தன்மை திரிந்து எழுத்தாம் தன்மையதாம் என்பது விளக்கி நின்றது.

1.எல்லா எழுத்து முதலிய இரண்டு சூத்திரமும் எழுத்துக்கள் தம் பிறப்பிற்குப் புறனடை யுணர்த்திற்றென்று ஒரு சூத்திரமாகக் கொண்டார். (நச்.)

**103. அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்**
**மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே.**

இஃது, மேற்சூத்திரத்திற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

அஃதுஇவண் நுவலாது - ('அகத்தெழு வளியிசை அளபிற் கோடலாகிய') அதனை இந்நூலிடத்துச் சொல்லாது. எழுந்து புறத்து இசைக்கும்-(அகத்தினின்று) எழுந்து புறத்துப் போந்து இசைக்கும், மெய் தெரி வளி இசை அளபு - பொருண்மை தெரிகின்ற வளியானாய இசையது மாத்திரையினை, நுவன்றிசின் - யான் ஈண்டுக் கூறினேன்.

மற்று, இஃது ' அளபிற் கோட லந்தணர் மறைத்து' (பிறப்பியல்-20) எனவே பெறப்பட்டதன்றோவெனின், அந்தணர் மறைத்து' என்பது பிறன்கோட் கூறுதற்கும், பிறன்கோட் கூற்று நேர்ந்து உடம்படுதற்கும் ஒப்பக்கிடந்தமையின் அவ்வையம் தீர்தற்குக் கூறினாரென்பது. புறத்து இசைப்பதன் முன்னர், அகத்து இசைக்கும் வளியிசையை அம் மறைக்கண் ஓர் எழுத்திற்கு மூன்றுநிலை1உளதாகக் கூறும் (அதன் ஆசிரியன் ). அஃது ஆமாறு அறிந்து கொள்க. 'மெய்தெரி' என்றதனான், முற்கு முதலியன முயற்சியாற் பிறக்குமெனினும், பொருள் தெரியா நிலைமைய வாகலின் அவற்றிற்கு அளபு கூறாராயினாரென்பது பெறப்பட்டது. ' நுவன்றிசின்' என்பது ஈண்டு இறந்த காலத்தன்மைவினை.

## மூன்றாவது பிறப்பியல் முற்றிற்று.

1. நிலையும் வளியும் முயற்சியும் மூன்றும்
இயல நடப்பது எழுத்தெனப் படுமே.'(நச். மேற்கோள்.)

# கூறு - 6 புணரியல்

## புணரியல்

குறிப்புகள்

### 4. புணரியல்

ஜஎழுத்துக்களின் புணர்ச்சி யிலக்கணம் உணர்த்துவதுஸ

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மொழிகள், (மேற் செய்கை யோத்துக்களுள்) புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது. மேல் மொழி மரபிற் கூறிய மொழிகள் புணருமாறு உணர்த்தினமையின் மொழி மரபினோடு இயைபுடைத் தாயிற்று.

### 1. மொழிகளின் முதலும் ஈறும்

### மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்கள்

**104. மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்**
**இரண்டுதலை யிட்ட முதலா கிருப:்து**
**அறுநான் கீற்றொடு நெறிநின் றியலும்**
**எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்**
**மெய்யே யுயிரென் றாயீரியல.**

இத்தலைச்சூத்திரம் என்නுதலிற்றோ வெனின், மொழிமரபினுள் முதலும் ஈறும் கூறியவழி உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் என மூன்றாய் விரிந்து நின்றதனை உயிரும் மெய்யும் என இரண்டாகத் தொகுத்தலானும், அவ்வழி இருபத்திரண்டு எழுத்து மொழிக்கு முதல், இருபத்துநான்கு எழுத்து மொழிக்கு ஈறு எனக் கூறலின், முப்பத்து மூன்று எனப்பட்ட எழுத்து நாற்பத்தாறு ஆவனபோல விரிந்ததனை அவையெல்லாம் முப்பத்து மூன்றினுள்ளனவே எனத் தொகுத்தலானும் விரிந்தது தொகுத்தல் நுதலிற்று.

மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்-மூன்றனை முடிவிலே யிடப்பட்ட முப்பதாகிய எழுத்தினுள், இரண்டு தலையிட்ட முதல் ஆகு இருப:்து - அவ்விரண்டினை முடிவிலே யிடப்பட்ட மொழிக்கு முதலாய இருபதும்,அறுநான்கு ஈற்றொடு நெறி நின்று இயலும் - இருபத்துநான்கு ஈற்றொடு வழக்குநெறிக்கண் நின்று நடக்கும், எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்-மூவகைமொழிக்கும் ஈறும் முதலுமாவன, மெய் உயிர் என்று அ ஈர் இயல -மெய்யும் உயிருமாகிய அவ்விரண்டு இயல் பினையுடைய.

மரம், இலை, ஆல், விள என மெய்யும் உயிரும், முதலும் ஈறும் ஆயின.[1]

இருபத்திரண்டு எழுத்து முதலாவன பன்னிரண்டு உயிரும் ஒன்பது உயிர்மெய்யும் மொழிமுதற் குற்றியலுகரமும் என இவை, இருபத்து நான்கு எழுத்து ஈறாவன பன்னிரண்டு உயிரும் பதினொரு புள்ளியும் ஈற்றுக் குற்றியலுகரமும் என இவை ஈற்றொடு என்பது விகாரத்தாற்

றொக்கது. மெய் முதற் கூறியவதனால், நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழாதென்பது கொள்க.

குறிப்புகள்

1. **எ - டு:** மரம் என மெய்ம்முதலும் மெய் ஈறும், இலை என உயிர் முதலும் உயிர் ஈறும், ஆல் என உயிர் முதலும் மெய்யீறும் விள என மெய்ம்முதலும் உயிரீறுமாம். மொழியாக்கம் இயல்பும் விகாரமுமென இரண்டாம். உயிர் தாமே நின்று முதலும் ஈறுமாதல் இயல்பு - அவை மெய்யோடு கூடிநின்று அங்ஙனமாதல் விகாரம். (நச்)

## மொழியிறுதி மெய்கள் புள்ளிபெறுதல்

**105.** **அவற்றுள்**

**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்.**

இ∴து, மேற்கூறியவாற்றான் தனிமெய்யும் முதலாவான் சென்றதனை விலக்கலின் மாறியது விளக்கம் நுதலிற்று.

அவற்றுள்-மேல் மெய்யும் உயிரும் என்று கூறிய இரண்டினுள், ஈறு மெய்யெல்லாம் புள்ளியொடு நிலையல் - மொழிக்கு ஈறாய மெய்யெல்லாம் புள்ளி பெறுதலோடு நிற்கும் முதலாயவையெல்லாம் புள்ளியிழந்து நிற்கும்.

மரம் என வரும்.

மொழிமுதல் மெய் புள்ளியொடு நில்லா தென்னாது, ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல் என ஈற்றின்மேல் வைத்துக் கூறியவதனால் அவ்வீற்றின் மெய் உயிர் முதன்மொழி வந்த இடத்து அ∴து ஏற இடங்கொடுக்குமென்பது பெறப்பட்டது.

## குற்றுகரம் ஒற்றெழுத்தொத்தல்

**106. குற்றியலுகரமும் அற்றென மொழிப.**

[1]இ∴து, ஈற்றிற் குற்றியலுகரத்திற்கு ஓர் கருவி கூறுதல் நுதலிற்று.

குற்றியலுகரமும் அற்று என மொழிப - ஈற்றிற் குற்றியலுகரமும் (புள்ளி யீறுபோல உயிரேற இடம் கொடுக்கும்) அத்தன்மைத்து என்று சொல்லுவர்.

[2]இம் மாட்டேறு ஒருபுடைச்சேறல் எனவுணர்க.

1. இம் மாட்டேறு ஒருபடைச் சேறல் புள்ளி பெறாமையின், அங்ஙனம் உயிரேறுங்காற் குற்றுகரம் கெட்டுப்போகநின்ற ஒற்றின் மேல் உயிரேறிற்றென்று கொள்ளற்க. நாகரிதென்புழி முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டும் கூடிநின்றல்லது அப்பொருளுணர்த்த லாகாமையின், இ∴து உயிரோடுங் கூடி நிற்கும் என்றார். (நச்)

2. குற்றியலுகரமும் மெய்யீறுபோலப் புள்ளிபெறும் என்பதே போந்த பொருளாம். 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' என்று ஆசிரியர் மாட்டியவிடத்தும் எகர ஒகரம் புள்ளி பெறுமென்பதே கருத்தாதல் தெளிவாம். ஆதலால், இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் குற்றியலுகரம் புள்ளியீறுபோல உயிரேற இடம் கொடுக்குமென்று உரை கூறுவது மாட்டேற்றுக்கு முற்றிலும் பொருந்தாது.இதுவே பேராசிரியர்க்கும் சிவஞானமுனிவர்க்கும்

சங்க யாப்புடையார்க்கும் கருத்தாம். ‘தொல்லை வடிவின புள்ளி’ என்னும் நன்னூல் நூற்பாவுரையில் ‘ஆண்டு என்ற மிகையானே... குற்றுகர குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க’. என்று மயிலைநாதர் கூறுவதும் காண்க.(பாவாணர்)

குறிப்புகள்

## உயிர்மெய் யீறு உயிரீற்றது

**107. உயிர்மெய் யீறு உயிரீற் றியற்றே**

இ∴து, மேல் ‘மெய்யே யுயிரென் றுயீரியல’ (புணரியல் - 1) என்றதற்கு ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்று- உயிர்மெய் மொழியீற்றில் நின்றதுவும் உயிரீற்றின் இயல்பையுடைத்து-இடையில் நின்றதுவும் உயிரீற்றின் இயல்பையுடைத்து-இடையில் நின்றதுவும் உயிரின் இயல்பையுடைத்து.

ஈறும் இடையும் உயிருள் அடங்குமெனவே, முதல் மெய்யுள் அடங்கும் என்பதாயிற்று.

இதனால், விள முதலிய உயிர்மெய் ஈறெல்லாம் அகரவீறு முதலிய உயிரீற்றுள் அடங்கிப் புணர்ச்சிபெறுவன வாயின. வரகு என்புழி இடைநின்ற ரகர உயிர்மெய் அகரமாய் உயிர்த்தொடர் மொழி யெனப்பட்டது.

ஈண்டு உயிர்மெய் ஒற்றுமை நயத்தான் உயிர்மெய்யென வேறு ஓர் எழுத்தாவதன்றி, ஈறும் இடையும் உயிரென ஓரெழுத்தாயும் முதல் மெய்யென ஓரெழுத்தாயும் நின்றதாயிற்று.

இத்துணையும் ஒரு மொழி யிலக்கணங் கூறலின் மொழிமரபின் ஒழிபாயிற்று.

## புணர்ச்சிக்குரிய இருமொழிகளின் இயல்பு

**108. உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்**
**மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்று**
**இவ்வென அறியக் கிளக்குங் காலை**
**நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று**
**ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டே.**

இ∴து, மேற்கூறும் புணர்ச்சி மும்மொழிப் புணர்ச்சியாகாது, இரு மொழிப்புணர்ச்சி யாமென்பதூஉம், அவை எழுத்துவகையான் நான்காமென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

உயிர் இறு சொல் முன் உயிர் வரு வழியும் - உயிரீற்றுச் சொல்முன் உயிர்முதல்மொழி வரும் இடமும் உயிர் இறு சொல்முன் மெய் வரு வழியும்- உயிரீற்றுச் சொல்முன், மெய்ம் முதல் மொழிவரும் இடமும், மெய் இறு சொல்முன் உயிர்வரு வழியும்-மெய்யீற்றுச் சொல்முன் உயிர்முதல் மொழி வரும் இடமும், மெய் இறு சொல்முன் மெய் வரு வழியும்-மெய்யீற்றுச் சொல்முன் மெய்ம்முதல் மொழி

வரும் இடமும், இவ் என அறிய- (அப் புணர்ச்சிவகை) இவையென அறிய, கிளக்கும் காலை-ஆசிரியர் சொல்லுங்காலத்து, நிறுத்த சொல் குறித்து வரு கிளவி என்று அ ஈர் இயல-இவை நிறுத்த சொல்லும் அதன் பொருண்மையைக் குறித்துவரும் சொல்லுமாகிய அவ்விரண்டு இயல்பையுடைய, புணர்நிலைச் சுட்டு-புணரும் நிலைமைக்கண்.

குறிப்புகள்

**எ-டு** ஆஈ, ஆ வலிது, ஆல் இலை. ஆல் வீழ்ந்தது எனக் கண்டு கொள்க.

விளவினைக் குறைத்தான் என்பது அவ்வுருபு குறித்துவரு கிளவியை நிலைமொழியுள் அடக்கி இருமொழிப்புணர்ச்சியாய் நின்றவாறு அறிக.

## 2. புணர்தலின் இயல்பு

**109. அவற்றுள்**

**நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு**
**குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென**
**ஆங்கநா நான்கே மொழிபுணர் இயல்பே.**

இ∴து, மேற்கூறும் புணர்ச்சிவகையான் நான்கா மென்பதூஉம், அவை சொல்வகையான் நான்காமென்பதூஉம், புணர்வது சொல்லும், சொல்லுமேயன்றி, எழுத்தும் எழுத்துமென்பதூஉதறும் உணர்த்துதல் நுதலிற்று.

அவற்றுள்-நிலைமொழி வருமொழி யெனப்பட்டவற்றுள், நிறுத்த சொல்லின் ஈறு ஆகும் எழுத்தொடு குறித்து வரு கிளவி முதல் எழுத்து இயைய-நிறுத்த சொல்லினது ஈறாகின்ற எழுத்தினோடு அதனைக் குறித்து வருகின்ற சொல்லினது முதலெழுத்துப் பொருந்த, பெயரொடு பெயரை புணர்க்கும் காலும்-பெயர்ச் சொல்லொடு பெயர்ச் சொல்லைப் புணர்க்கும் காலத்தும், பெயரொடு தொழிலை புணர்க்கும் காலும்-பெயர்ச் சொல்லொடு வினைச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், தொழிலோடு பெயரை புணர்க்கும் காலும்-வினைச் சொல்லொடு பெயர்ச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், தொழிலொடு தொழிலை புணர்க்கும் காலும்-வினைச்சொல்லொடு வினைச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், திரிபு மூன்று இயல்பு ஒன்று என அ நான்கே மொழிபுணர் இயல்பு-திரியும் இடம் மூன்றும் இயல்பு ஒன்றும் ஆகிய அந் நான்கே மொழிகள் தம்மிற் புணரும் இயல்பு.

**எ - டு:** சாத்தன் கை, சாத்தன் உண்டான், வந்தான் சாத்தன், வந்தான் போயினான் எனக் கண்டுகொள்க.

இடையும் உரியும் பெயர் வினைகளை அடைந்தல்லது தாமாக நில்லாமையின், பெயர் வினைகட்கே புணர்ச்சி கூறப்பட்டது.

## புணர்ச்சியின் மூவுகைத் கிரிபுகள்

**110. அவைதாம்**
**மெய்பிறி தாதல் மிகுறல் குன்றலென்று**
**இவ்வென மொழிப திரியு மாறே.**

குறிப்புகள்

இஃது, மேற்கூறிய திரிபு மூன்றும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அவைதாம் - அத் திரிபுதான், மெய்ப்பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று இவ் என மொழிப திரியும் ஆறு- மெய்ப்பிறிதாதலும் மிகுதலும் குன்றலுமாகிய இவை எனச் சொல்லுவர் திரியும் நெறியினை, இம் மூன்றும் அல்லாதது இயல்பென்று கொள்க.

**எ - டு:** பொற்குடம், யானைக்கோடு, மரவேர் என வரும்.

குவளை மலர் என்பது இயல்பு.

இப் புணர்ச்சி நான்கும் ஒரு புணர்ச்சிக்கண்ணே நிகழ்வு பெறுமென்பது உரையிற்கொள்க. மேல் 'இடம' (புணரியல் - 6) என்றதனால், ஒரு புணர்ச்சிக்குத் திரிபு மூன்றனுள் ஒன்றாயினும் இரண்டாயினும் மூன்றாயினும் வரப்பெறும் எனக்கொள்க.

'மகத்தாற் கொண்டான்' என்பது அம்மிகுதி இரண்டு வந்தது. 'நீயிர் குறியிர்' என்பது அம்மிகுதி மூன்று வந்தது. பிறவும் அன்ன.

## அடைமொழிகளோடு புணர்தல்

**111. நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்**
**அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய.**

இஃது, "நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவி" (புணரியல்-5) என்பதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

"நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் - நிலைமொழியாக நிறுத்தின சொல்லும் அதனைக் குறித்து வரு சொல்லும் அடையொடு தான்றினும் புணர்நிலைக்கு உரிய - (தாமே வந்து புணர்வதன்றி) அவையிரண்டினும் ஓரோர் சொல்லடை வந்து ஒன்றித்தோன்றினும் புணர்நிலைக்கு உரிய.

**(எ-டு)** பதினாயிரத்தொன்று, ஆயிரத்தொருபஃது, பதினாயிரத்தொருபஃது எனவரும்.

ஈண்டு அடையென்றது உம்மைத் தொகையினையும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகையினையும1 என வுணர்க. அவை யல்லாத தொகைகளுள் வினைத்தொகையும். பண்புத்தொகையும் பிளந்து முடியாமையின் ஒருசொல் எனப்படும். அன்மொழித் தொகையும் தனக்கு வேறு ஓர் முடிபு இன்மையின். ஒருசொல் எனப்படும். இனி ஒழிந்த வேற்றுமைத்தொகையும் உவமைத் தொகையும் ' தன்னின முடித்தல் ' என்றதனான் ஈண்டு ஒருசொல் என்ப்படும்.

உண்டசாத்தன் வந்தான், உண்டுவந்தான் சாத்தன் என்பனவும் அவ்வாறே ஒருசொல் எனப்படும். பிறவும் அன்ன.

1. பன்னிரண்டுகண் என்னும்போது, பன்னிரண்டு என்பது பத்தும் இரண்டும் எனப் பொருள்படுவதால் உம்மைத் தொகை.

குறிப்புகள்

பதினாயிரத்தொன்று என்னும்போது, பதினாயிரம் என்பது பத்தாகிய ஆயிரம் எனப் பொருள்படுதலின் பண்புத்தொகையாம். ஆனால், இருபெயரொட்டுப் பண்புத் தொகையன்று. இருபெயரொட்டாயின் பத்து ஆயிரம் என்னும் சொற்கள் தனித்தனி நின்றும் ஒரு பொருளே யுணர்த்தல் வேண்டும். அங்ஙனம் உணர்த்தாமையும், பனைமரம் என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் இரு சொல்லும் தனித்தனி ஒரே பொருளை உணர்த்துவதையும் நோக்குக.

மரக்கிளை என்னும் வேற்றுமைத் தொகை மரமூகிளை என்றும், முத்துப்பல் என்னும் உவமைத்தொகை முத்தூ பல் என்றும் பிளந்து முடிதல் காண்க.

செந்தாமரை என்னும் பண்புத்தொகையும், கொல்களிறு என்னும் வினைத்தொகையும் திட்டமாக அல்லது தெளிவாக இரு சொல்லாய்ப் பிளந்து முடியாமையும் ஒரு சொற்றன்மைப்பட்டு நிற்றலும் காண்க.

அன்மொழித் தொகை என்றும் வெளிப்படாத சொல்லாய் ஏனைத்தொகைகளின் ஈற்றில் பிறத்தலானும் ஒரு சொற்றன்மைப்பட்டு நிற்றலானும் ஒரு சொல்லாம்.

உண்டசாத்தனாய் வந்தான். உண்டு வந்தவனாகிய சாத்தன் எனப்பொருள்படும்போது இவை ஒரு சொற்றன்மைப்படும் (பாவாணர்.)

## மரூஉ மொழிப் புணர்ச்சி

**112. மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்**
**உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.**

இஃது, இலக்கண வழக்கேயன்றி மரூஉக்களும் புணர்க்கப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

மருவின் தொகுதி மயங்கு இயல் மொழியும் - (இலக்கண வழக்கேயன்றி) மரூஉத்திரளாகிய தலைதடுமாறாக மயங்கின இயல்பையுடைய இலக்கணத்தொடு பொருந்தின மரூஉவழக்கும். உரியவை உள புணர் நிலைச் சுட்டு - உரியன உள புணரும் நிலைமைக்கண்.

**எ - டு:** மீகண், முன்றில் என வரும்.

'நிலை' என்றதனான் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கல்லா மரூஉவழக்கும். புணர்க்கப்படும் எனக்கொள்க.

## இருவகைப் புணர்ச்சி

**113. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்**
**வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்**
**எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்**
**ஒழுக்கல் வலிய புணருங் காலை.**

இஃது,நால்வகைப்புணர்ச்சியுள் மிக்கபுணர்ச்சி இத்தன்மைத்தென்பதூஉம், அந் நால்வகைப்புணர்ச்சியும் வேறோராற்றான் இருவகையாமென்பதூ உம் உணர்த்துதல் நுதலிற்று.

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் - வேற்றுமையது பொருண்மையினைக் குறித்த புணர் மொழியது நிலைமையும், வேற்றுமை

அல்வழி புணர்மொழி நிலையும் - வேற்றுமையல்லாத அல்வழியிடத்துப் புணர்மொழியது நிலைமையும், எழுத்து சாரியை அ இரு பண்பின் ஒழுக்கல் வலிய - (மிக்க புணர்ச்சிக்கண்) எழுத்து மிகுதலும் சாரியை மிகுதலுமாகிய அவ்விரண்டு இலக்கணத்தானும் நடாத்துதலைத் தமக்கு வலியாகவுடைய, புணரும்காலை - அவை புணருங்காலத்து.

**எ - டு:** விளங்கோடு, மகவின்கை, விளக்குறிது, பனையின்குறை எனக் கண்டுகொள்க.

'ஒழுக்கல் வலிய' என்றதனான், எழுத்தும் சாரியையும் உடன் பெறுதல் கொள்க.

அவற்றுக்கோடு, கலத்துக்குறை என வரும்.

அல்வழி முற்கூறாதது வேற்றுமையல்லாதது அல்வழியென வேண்டலின் என்பது முன்னே 'புணர்மொழி' என்று வைத்து, 'புணருங்காலை' என்றதனாற் புணர்ச்சிக்கண்ணே வேற்றுமை அல்வழி என இரண்டாவது, அல்லாக்கால், வேற்றுமையெனவே படுமென்பது கொள்க. ஈண்டு அல்வழி யென்றது பெரும்பான்மையும் எழுவாயினை.

## வேற்றுமை யுருபுகள்

**114. ஐஒடு குஇன் அதுகண் ணென்னும்**
**அவ்வா றென்ப வேற்றுமை யுருபே.**

இ∴து, மேல் வேற்றுமை யென்னப்பட்ட அவற்றது பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

ஐ ஒடு கு இன் அது கண் என்னும் - ஐ ஒடு கு இன் அது கண் என்று சொல்லப்படும், அஆறு என்ப வேற்றுமை உருபு - அவ்வாறும் என்று சொல்லுவர் வேற்றுமை யுருபுகளை.

இவ்வாறும் அல்லன வெல்லாம் அல்வழி எனப்படும். அவை எழுவாயும், விளியும், உவமத்தொகையும், உம்மைத்தொகையும், பண்புத் தொகையும், இருபெயரொட்டுப் பண்புத்தொகையும், முற்றும், இருவகை எச்சமும், இடையும், உரியும் என இவை.

## வலிமுதலுருபு புணருநிலை

**115. வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு**
**ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்.**

இ∴து, நான்காவதற்கும் ஏழாவதற்கும் உருபியலை நோக்கிற்றோர் கருவி உணர்த்துதல் நுதலிற்று.

வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு - வல்லெழுத்து முதலாகவுடைய வேற்றுமை யுருபிற்கு, ஒல்வழி ஒற்று இடை மிகுதல் வேண்டும் - பொருந்தின இடத்து வல்லொற்றாயினும் மெல்லொற்றாயினும் இடைக்கண் மிகுதல் வேண்டும்.

**எ - டு:** ஊர்க்கு, நீர்க்கு, ஊர்க்கண், நீர்க்கண் என வல்லெழுத்து மிக்கன. தங்கண், எங்கண் என மெல்லெழுத்து மிக்கன.'ஒல்வழி' என்றதனால், அரசர்கண், பார்ப்பார்கண் என ஒற்று மிகா தனவும் கொள்க. 'மெய்பிறிதாதல்' (புணரியல்-7) முதலாய நான்கு புணர்ச்சியும் உருபு புணர்ச்சிக்கண்ணும் எய்தலின், மெய் பிறிதாதலை

குறிப்புகள்

எடுத்தோதாது மிக்கதனை எடுத்தோதிய வதனான், மிக்க புணர்ச்சி யல்லனவும் ஈண்டே கொள்க. பொற்கு, பொற்கண், ஆங்கண், ஈங்கண், ஊங்கண், அவற்கு, இவற்கு, நுங்கண், கொற்றற்கு, சாத்தற்கு என வரும்.

குறிப்புகள்

அவன்கண், சாத்தன்கண் என்புழி இயல்பும் இதனானே கொள்க.

## அது உருபின் அகரம் கெடும்

**116. ஆறன் உருபின் அகரக் கிளவி**
**ஈறா ககரமுனைக் கெடுதல் வேண்டும்.**

இ∴து, ஆறாவதற்குத் தொகைமரபினை நோக்கியதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

ஆறன் உருபின் அகரக்கிளவி- ஆறாம் வேற்றுமையாகிய அது என்னும் சொல்லிடத்து அகரமாகிய எழுத்து, ஈறு ஆகு அகரமுனை கெடுதல் வேண்டும் - ஐநெடுமுதல் குறுகும்ஸ மொழியீற்று உளதாகின்ற அகரத்தின் முன்னர்த் தான் கெடுதல் வேண்டும்.

**எ - டு:** நமது, எமது, தனது, எனது, நினது என வரும்.

மேல் ஈறாகு அகரம் இதற்குத் தாராது, இவ்வுருபகரமே ஏறி முடிய அமைதலின், அது கேடாதல் வேண்டா எனின், நெடுமுதல் குறுகி விகாரப்பட்டு நின்ற மொழியாதலின் அதன்மேல் உருபகர மேறி முடியல் வேண்டா ராயினார் போலுமென்பது.[1]

1. இது நிலைமொழிக்கு ஓர் அகரம் பெறுமென விதியாது உருபு அகரம் ஏறிமுடியுமென விதித்தால் வரும் குற்றம் உண்டோ எனின் ? 'நினவ கூறுவ வெனவ கேண்மதி' (புறம் 35) என்றாற் போல ஆறாவதற்குரிய அகர உருபின் முன்னரும் ஓர் அகர எழுத்துப்பேறு நிலைமொழிக்கண் வருதலுளதாகக் கருதினாராதலின், ஆறனுருபிற்கும் நான்கன் உருபிற்கும் பொதுவாக நிலைமொழிக்கண் அகரப்பேறு விதித்து அது வென்னும் ஒருமையுருபு வந்தால் ஆண்டுப் பெற்று நின்ற அகரத்தின் முன்னர் அது வென்பதன்கண் அகரங்கெடுகவென்று ஈண்டுக் கூறினாராதலின், அதற்கும் குற்றம் உண்டென்று உணர்க. (நச்.)

## வேற்றுமை யுருபுகள் நிற்குமிடம்

**117. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.**

இ∴து, வேற்றுமையுருபு பெயர்க்கண் நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வேற்றுமை பெயர் வழிய புணர் நிலை-வேற்றுமை பெயர்களின் பின்னிடத்தன அவற்றோடு புணரும் நிலைமைக்கண்.

**எ - டு:** சாத்தனை, சாத்தனொடு என வரும்.

மேல் [1]'உருபுநிலை திரியாது ஈறுபெயர்க் காகும்' (வேற்றுமையியல்-8) என்கின்றாரன்றோ வெனின், பெயரொடு பெயர் முதலிய நால்வகைப் புணர்ச்சியையும் வேற்றுமை அல்வழியென இரண்டாக அடக்கலின், வினைவழியும் உருபு வருமென்பதுபட நின்றதாகலின் ஈண்டு இது கூறப்பட்டது.

1. "உருபுநிலை திரியா தீறுபெயர்க் காகும்" என்பதை யுள்ளிட்ட சூத்திரத்தையும் அதன் உரையையும் எடுத்துக்காட்டையும் இதனடியிற்

காண்க.

"கூறிய முறையி னுருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப."

(சொல்-வேற்றுமையியல்,8.)

குறிப்புகள்

இது, உருபேற்றலும் பெயரதிலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

மேல் அவைதாம் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்றோதிய முறையாற் கிடந்த வுருபு முறைமையிற் றிரியாதே, பெயரதிற்றுக்கண் வந்து நிற்றல் இயல்பு என்றவாறு.

**எ-டு:** சாத்தனை, சாத்தனோடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும், நிலைதிரியா தென்றது இவை இடைச் சொல்லாகலால் தம் ஈறு திரிதலென்னும் இலக்கணமுடைய கொல்லோவெனின்:-அவை யில வென்றற்குக் கூறினான் என்பது. அன்றியும் முன்னர் வேற்றுமை மயங்கியலுள் 'கு, ஐ, ஆவென வரூஉம் இறுதி அ ஒடு சிவணும்' என்ற செய்யுட்கண் திரிபு கூறுபவாகலானும் அது சொல்லினார்.

## பெயர்களின் பெயர், முறை, தொகை

**118. உயர்திணைப் பெயரே, அஃறிணைப்பெயரென்**
**றாயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே.**

இஃது, வேற்றுமையோடும் புணரும் பெயர்கட்குப் பெயரும், முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

உயர்திணைப்பெயரே அஃறிணைப்பெயர் என்று அ இரண்டு என்ப- உயர்திணைப்பெயரும் அஃறிணைப்பெயருமாகிய அவ்விரண்டுமென்று சொல்லுப, பெயர் நிலை சுட்டு- பெயராகிய நிலைமையது கருத்தினை.

**எ - டு:**ஆடூஉ, மகடூஉ என்பன உயர்திணைப்பெயர். ஒன்று பல என்பன அஃறிணைப்பெயர்.

மற்ற விரவுப்பெயர் கூறாராயது என்னை யெனின்,மற்றது சாத்தன் வந்தான் வந்தது ' எனப் புணர்ச்சிக்கண் பெரும்பான்மையும் ஒரு திணைப்பாற் படுதலின், அவ்விரண்டாக அடக்கிக் கூறினாரென்பது.

## 4. சாரியைப் புணர்ச்சி

## சாரியை வருமிடம்

**119. அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே.**

இஃது, சாரியை வரும் இடம் கூறுதல் நுதலிற்று.

அவற்றுவழி மருங்கின் சாரியை வரும்-அப் பெயர்களின் பின்னாகிய இடத்தின்கண்ணே சாரியை வரும்.

**எ - டு:** ஆடூஉவின் கை, மகடூஉவின் கை, பலவற்றுக் கோடு என வரும்.

## சாரியைகளின் பெயரும் முறையும் தொகையும்

குறிப்புகள்

**120. அவைதாம்**

**இன்னே வற்றே அத்தே அம்மே**
**ஒன்னே ஆனே அக்கே இக்கே**
**அன்னென் கிளவி உளப்படப் பிறவும்**
**அன்ன என்ப சாரியை மொழியே.**

இ∴து, சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

அவைதாம் - மேற்சாரியை யென்னப்பட்டவைதாம், இன்னே வற்றே அத்தே அம்மே ஒன்னே ஆனே அக்கே இக்கே அன் என் கிளவி உளப்பட பிறவும்- இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும் அக்கும் இக்கும் அன் என்னும் சொல்லுமாகிய அவ் வொன்பதும் உளப்படப் பிறவும், அன்ன என்ப சாரியை மொழி - அச் சாரியையாம் தன்மைய என்று சொல்லுவர் சாரியையாகிய மொழிகளை.

1 'பிறவும்' என்றதனால்,தம், நும், எம், கெழு, ஏ, ஐ, ஞான்று என்பனவுங் கொள்க. 'எடுத்த நறவின் குலையலங் காந்தள்' என்புழி 'அலம்' என்பதோர் சாரியையும் உண்டாலெனின், அதனை 'அலங்கு காந்தள் என்பதன் விகாரமென்ப. இன்சாரியை வழக்குப் பயிற்சியானும் நூலுட்பலகாலும் எடுத்தோதப்படலானும், வாளா ஓதிய வழி தானே சேறலானும் முன்வைக்கப் பட்டது. அன்சாரியையும் அது போலச் சிறப்புடைமையின் பின் வைக்கப்பட்டது. இடை நின்றவற்றியல்பும் அறிந்துகொள்க

1. பிறவாவன தம், நம், நும்,உம்,ஞான்று, கெழு, ஏ, ஐ என்பனவாம். இவற்றுள் ஞான்று ஒழிந்தன எடுத்து ஓதுவர் ஆசிரியர், ' எடுத்த நறவின் குலையலங் காந்தள்' (கலி.40) இது வினைத்தொகை சாரியை அன்று, இன்சாரியை வழக்குப் பயிற்சியும் பலகால் எடுத்தோதப் படுதலும் பொதுவகையான் ஓதியவழித்தானே சேறலுமாகிய சிறப்பு நோக்கி முன்வைத்தார். வற்றும் அத்தும் இன்போல முதல் திரியுமாக லானும், செய்கை ஒப்புமையானும் அதன்பின் வைத்தார். அம் ஈறுதிரியுமாதலின் திரிபுபற்றி அதன்பின் வைத்தார். ஒன் ஈறு திரியுமேனும் வழக்குப் பயிற்சியின்றி நான்காம் உருபின்கண் திரிதலின் அதன்பின் வைத்தார். ஆன் பொருட் புணர்ச்சிக்கும் உருபு புணர்ச்சிக்கும் வருமென்று அதன்பின் வைத்தார். அக்கு ஈறு திரியுமேனும் உருபு புணர்ச்சிக்கண் வாராமையின் அதன்பின் வைத்தார் இக்கு முதல் திரியுமேனும் சிறுபான்மைபற்றி அதன்பின் வைத்தார். அன் இன் போலச் சிறத்தலிற் பின் வைத்தார்.

ஆனுருபிற்கும் ஆன்சாரியைக்கும் இன்னுருபிற்கும் இன்சாரியைக்கும் வேற்றுமை யாதெனின்,அவை சாரியையான இடத்து யாதானும் ஓர் உருபேற்று முடியும் உருபாயின இடத்து வேறோர் உருபினை ஏலாவென்று உணர்க. இனி, மகத்துக்கை என்புழித் தகர ஒற்றுந் தகர வுகரமும் வருமென்று கோடுமெனின் இருளத்துக் கொண்டான் என்றால் அத்து எனவே வேண்டுதலின் ஆண்டும் அத்து நின்றே கெட்டதென்று கோடும். அக்கு இக்கு என்பனவும் பிரித்துக் கூட்டக் கிடைக்கும். தாழக்கோலென அக்குப் பெற்று நிற்றலானும் ஆடிக்கு என்புழிக் குகரம்

நான்கனுருபாகாமையானும் இவை சாரியையாமாறு உணர்க. (நச்.)

## சாரியைக்குப் புணர்ச்சி விதி

குறிப்புகள்

**121. அவற்றுள்**
**இன்னின் இகரம் ஆவின் இறுதி**
**முன்னர்க் கெடுதல் உரித்து மாகும்.**

இ∴து, அவற்றுள் - மேற்கூறப்பட்ட சாரியைகளுள், இன்னின் இகரம் ஆவின் இறுதி முன்னர், கெடுதலும் உரித்தாகும் - கெடாமையேயன்றிக் கெடுதலும் உரித்தாம்.

**எ - டு:** ஆனை, ஆவினை, ஆன்கோடு, ஆவின்கோடு1 என வரும்.

'முன்னர்' என்றதனான், 'மா' என்னும் சொல்லின் முன்னும் அவ்விரு விதியும் எய்தும். மானை, மாவினை, மான்கோடு, மாவின்கோடு என வரும்.

1. ஆன்கோடு......மாவின்கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழியுங் கொள்க.(நச்.)

## இன் சாரியை ஈறு திரியுமிடம்

**122. அளபாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை**
**ன∴கான் ற∴கான் ஆகிய நிலைத்தே.**

இ∴து, இன்இறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அளபாகும் மொழி முதல் -அளபுப் பெயராகும் மொழி முதற்கண், நிலைஇய உயிர்மிசை ன∴கான் - நிலைபெற்ற உயிருக்குமேலாய் நின்ற இன்சாரியையது னகாரம், ற∴கான் ஆகிய நிலைத்து - றகாரமாகிய நிலைமைத்து.

பதிற்றகல், பதிற்றுழக்கு என்புழி அவ்வாறு வருதல் அறிக.

'நிலைத்து' என்றதனால், பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க.

**எ - டு:** பதிற்றொன்று, பதிற்றேழு என வரும்.

## வற்று முதல் கெடுதல்

**123. வ∴கான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்**
**அ∴கான் நிற்றல் ஆகிய பண்பே.1**

இ∴து, வற்று முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

சுட்டு முதல் ஐமுன் - சுட்டெழுத்தினை முதலாக வுடைய ஐகார ஈற்றுச் சொல் முன்னர், வ∴கான் மெய் கெட அ∴கான் நிற்றல் ஆகிய பண்பு - வற்றுச்சாரியை தன் வகரமாகிய மெய்கெட அகரம் நிற்றலாகிய பண்பினையுடைய.1

அவையற்றை இவையற்றை உவையற்றை2 எனவும், அவையற்றுக்கோடு எனவும் வரும்.

'ஆகிய பண்பு' என்றதனால், சுட்டு முதலாகிய ஐ என் இறுதி ஐகாரத்தோடு நில்லாதவழி, வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாதுவற்றாயே நிற்றல் கொள்க. மற்றிது ' திரிந்ததன்றிரிபு பிறிது'

என்னும் நயத்தாற் கெடாதே நிற்குமாதலின், இது கூற வேண்டா எனின், சுட்டு முதல் ஐ ஈற்றுச் சொல்லின் ஐ முன் என ஓதாது. 'சுட்டு முதல் ஐம்முன்' என அச் சொல்முன் எல்லாம் கெடுவதுபோல ஓதினமையின், வேண்டிற்றென்பது.

குறிப்புகள்

1. ஆகிய பண்பு என்றதனானே எவனென்பது படுத்தலோசையாற் பெயராயவழி எவன் என நிறுத்தி வற்றும் உருபும் கொடுத்து வற்று மிசை யொற்றென்று னகரங்கொடுத்து அகரவுயிர் முன்னர் வற்றின் வகரம் கெடுமெனக் கெடுத்து எவற்றை, எவற்றொடு என முடிக்க. (நச்.)

2. வற்றுச் சாரியையை நன்னூலார் அற்றுச் சாரியை என்பர். (பாவாணர்.)

3. எவன் என்பது படுத்தலோசையாற் பெயராகும். எனவே, எடுத்த லோசையால் வினாவினைக் குறிப்பாகும் என்பதாம் (பாவாணர்.)

## னகர ஈற்றுச் சாரியை திரியுமிடம்

**124. ன.்.கான் ற.்.கான் நான்க னுருபிற்கு.**

இ.்.து, னகர ஈற்றுச் சாரியை நான்கற்கும் ஈறு திரிபு கூறுதல் நுதலிற்று.

நான்கன் உருபிற்கு ன.்.கான் ற.்.கான்-நான்காம் உருபிற்கு (னகார ஈற்றுச் சாரியையெல்லாம்) னகாரம் றகாரமாம்

**எ - டு:** விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு என வரும்.

## பொருட்புணர்ச்சியில் ஆன் ஈறு திரிதல்

**125. ஆனினகரமும் அதனோ ரற்றே**
**நாள்முன் வரூஉம் வல்முதற் றொழிற்கே.**

இ.்.து, ஆன்சாரியை பொருட்புணர்ச்சிக்கண் ஈறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நாள்முன் வரும் வல் முதல் தொழிற்கு ஆனின் அகரமும் - நாட்பெயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாக வுடைய வினைச்சொற்கண் வரும் ஆன்சாரியையின் அகரமும், அதன் ஓர் ஒற்று - அந் நான்கனுருபின்கண் வரும் ஆன்சாரியையோடு ஒரு தன்மைத்தாய் னகாரம் றகாரமாம்.

'தொழிற்கு' என்பதனைத் 'தொழிற்கண்' ஆனினகரம் என மயக்கமாகக் கொள்க.

**எ - டு:** பரணியாற் கொண்டான் என வரும்.

உம்மைய இரட்டுற மொழிதலானே எதிரது தழீஇய தாக்கி, அதனால் நாளல்லவற்றுமுன் வரும் வன்முதற்றொழிற்கண் இன்னின் னகரமும் றகாரமாய்த் திரிதல் கொள்க. பனியிற் கொண்டான் என வரும்.

தொழிற்கண் இன்னின் னகரம் திரியுமென, பெயர்க்கண் இன்னின் னகரம் திரிதலும் திரியாமையுமுடைய வென்பது ஞாபகத்தாற்1 கொள்ளப்படும். பறம்பிற் பாரி, வண்டின் கால் என வரும்.

1. ஞாபகம் - ஞாபகம் கூறல் என்னும் உத்தி. அ.்.தாவது நூற்பாவைச் சொற்சுருங்கவும் பொருள் விளங்கவும் செய்யாது அரிதும் பெரிதுமாகச் செய்து அதனால் வேறுபல பொருளுணர்த்தல்.

(பாவாணர்)

## அத்து முதல் கெடுதல்

**126. அத்தின் அகரம் அகரமுனை யில்லை.**

இ∴து, அத்து முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அத்தின் அகரம் அகரமுனை இல்லை - அத்துச் சாரியையின் அகரம் அகரவீற்றுச் சொல்முன்னர் இல்லையாகும்.

**எ - டு:** மகத்துக்கை என வரும்.

## இக்கு முதல் கெடுதல்

**127. இக்கின் இகரம் இகரமுனை யற்றே.**

இ∴து, இக்குச் சாரியை முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இக்கின் இகரம் இகரமுனை அற்று - இக்குச் சாரியையினது இகரம் இகர ஈற்றுச்சொல் முன்னர் மேற்கூறியவாறு போலக்கெடும்.

**எ - டு:** ஆடிக்குக் கொண்டான் என வரும்.

## இக்கு முதல் கெடுதல்

**128. ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்.**

இதுவும் அது.

(இ-ள்) ஐயின் முன்னரும் அ இயல் நிலையும் - (இக்கின் இகரம்) இகரவீற்றுச்சொல் முன்னன்றி - ஐகாரவீற்றுச்சொல் முன்னரும் மேற்கூறப்பட்ட கெடுதலியல்பிலே நிற்கும்.

**எ - டு:** சித்திரைக்குக் கொண்டான் என வரும்.

## அக்கு அகரம் நிற்க ஏனைய கெடுமாறு

**129. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி**
**அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே**
**குற்றிய லுகரம் முற்றத்தோன் றாது.**

இ∴து, அக்கீறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எ பெயர் முன்னரும் வல்லெழுத்து வரு வழி அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முற்றத் தோன்றாது - எவ்வகைப் பட்ட பெயர் முன்னும் வல்லெழுத்து வருமிடத்து அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முடியத் தோன்றாது, மெய்மிசையோடும் கெடும் - அதனாற் பற்றப்பட்ட வல்லெழுத்தாகிய மெய் தனக்கு மேல்நின்ற மெய்யோடும் கெடும்.

**எ - டு:** குன்றக் கூகை, மன்றப்பெண்ணை, ஈமக்குடம், அரசக்கன்னி, தமிழக்கூத்து என வரும்.

ஜ'முற்ற' என்றதனால் வன்கணமன்றி மற்றக் கணங்கட்கும் கொள்க.ஸ தமிழநூல், தமிழயாப்பு, தமிழவரையர் எனவரும்.1

.இன்னும் இதனானே தமக்கேற்ற இயைபு வல்லெழுத்துக் கொடுத்து முடித்துக்கொள்க. அன்றிக் கேடாதிய ககரவொற்று நிற்குமெனின், சகரந் தகரம், பகரம் வந்தவற்றிற்குக் ககரவொற்றாகாமை உணர்க.

குறிப்புகள்

## அம் ஈறு திரியுமிடம்

**130. அம்மின் இறுதி கசதக் காலைத்**
**ஏ தன்மெய் திரிந்து ஙஞந ஆகும்.**

குறிப்புகள்

இஃது, அம்மின் இறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அம்மின் இறுதி க ச த க் காலை - அம்மின் இறுதி யாகிய மகரவொற்று க ச த க் கள் வருமொழியாக வந்த காலத்து, தன் மெய் திரிந்து ங ஞ ந ஆகும் - தன் வடிவு திரிந்து ங ஞ ந க்களாம்.

**எ - டு:** புளியங்கோடு, புளியஞ்செதிள், புளியந்தோல் என வரும்.

தன்மெய் என்றதனால், அம்மின் இறுதி மகரமேயன்றி, தம் நம் நும் உம் என்பனவற்றின் இறுதி மகரமும் திரியுமென்பது கொள்க.[1]

எல்லார் தங்கையும், எல்லார் நங்கையும், எல்லீர் நுங்கையும் வானவரி வில்லுந் திங்களும் என வரும்.

1. முன்னும் பின்னும் சாரியைப் பேறு கூறுவார் சாரியை பெறாது விகாரப்படு மொழிகளை இச் சூத்திரத்தால் தோன்ற இடையே கூறியது இப்பொதுப்பெயர்களே. இங்ஙனம் தம், நம், நும் எனக் கூறிய சாரியை இடைச்சொல்லுமாயின என உய்த்துணர்தற்கென்க என்பது நன்னூல் விருத்தி. (சூ. 247)

## அம் ஈறு கெடுமிடம்

**131. மென்மையும் இடைமையும் வரூஉம் காலை**
**இன்மை வேண்டும் என்மனார் புலவர்.**

இதுவும் அது.

(இ-ள்) மென்மையும் இடைமையும் வரும்காலை-அம்மின் இறுதி மென்மையும் இடைமையும் வருமொழியாய் வருங்காலத்து இன்மை வேண்டும் என்மனார் புலவர் - இன்றி முடிதலை வேண்டும் என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு**: புளிய ஞெரி, நுனி, மூரி, யாழ், வட்டு என வரும்

உரையிற்கோட லென்பதனால், புளிய விலை எனவும் உயிர் வருவழிக் கேடும் கொள்க.

## இன்சாரியை முழுதும் கெடுமிடம்

**132. இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்கு**
**இன்னென சாரியை இன்மை வேண்டும்.**

இஃது, இன் சாரியை முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இன்என வரும் வேற்றுமை உருபிற்கு - இன் என்று சொல்ல வருகின்ற வேற்றுமையுருபிற்கு, இன் என் சாரியை இன்மை வேண்டும் - இன் என்னும் சாரியைதான் இன்றி முடிதல் வேண்டும்.

விளவின், பலாவின் என வரும்.

"அவற்றுள் இன்னின் இகரம்" (புணரியல் 18) என்றதன்பின் வையாததனால், சிறுபான்மை இன் சாரியை கெடாது நிற்றல் கொள்க.

பாம்பினிற் கடிது தேள் என வரும்.

## புணர்மொழிகளிற் சாரியை வருதல்

**133. பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப**
**வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்**
**தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்**
**ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்**
**சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது**
**இடைநின் றியலுஞ் சாரியை இயற்கை**
**உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்.**

இ.ஃது, சாரியைகட்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பெயரும் தொழிலும் பிரிந்து ஒருங்கு இசைப்ப-பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெயரும் வினையுமாய்ப் பிரிந்தும் பெயரும் பெயருமாய்க் கூடியும் இசைப்ப, வேற்றுமை உருபு நிலை பெறு வழியும் -வேற்றுமை யுருபு தொகாது நிலை பெற்ற இடத்தினும், தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும்- அவை தோற்றுதல் வேண்டாத தொகுதிக் கண்ணும், 1.ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணி - தாம் தாம் பொருந்துதற்கேற்ப நடந்த வழக்கோடு பொருந்தி, சொல் சிதர் மருங்கின் - சாரியை பெறும் புணர்மொழிகளை பிரித்துக் காணுமிடத்து, வழி வந்து விளங்காது இடைநின்று இயலும் - அவற்றின் பின் வந்து விளங்காது அவற்றிடையே நின்று நடக்கும், சாரியை இயற்கை- சாரியையின். இயல்பு, உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்-அவைதாம் உண்டாதலும் இல்லையாதலும் ஒடு உருபினிடத்து ஒக்கும்.

**எ - டு:** விளவினைக் குறைத்தான், விளவினைக் குறைத்தவன் எனவும், நிலாத்துக்கொண்டன், நிலாத்துக்கொண்டான் எனவும் ஒட்டுதற்கொழுகிய வழக்கன்மையின், நிலாக்கதிர் நிலா முற்றம் என்பன சாரியை பெறாவாயின.

எல்லா நம்மையும் எனச் சாரியை ஈற்றின்கண்ணும் வருதலின், இடைநின்றியறல் பெரும்பான்மை யெனக் கொள்க.

பூவினொடு விரிந்த கூந்த லெனவும், பூவொடுவிரிந்த கூந்தலெனவும் உடைமையும் இன்மையும் ஓடுவயின் ஒத்தவாறு.

'இயற்கை' என்றதனான் ஒடுவுருபின்கண் சாரியை பெறுதலும், பெறாமையும் ஒழிய, ஒரோவழிப் பெற்றே வருமென்பது கொள்க. பலவற்றோடு என வரும்.

1. ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கு - சாரியை பொருந்துதற்கேற்ப நடந்த வழக்கு.

இந்நூற்பாவிற்கு, பெயரும் பெயரும், பெயரும் வினையும் வேற்றுமை விரியில் இருசொல்லாய்ப் பிரிந்திசைக்கும் என்றும், வேற்றுமைத் தொகையில் ஒருசொல்போல் ஒருங்கிசைக்கும் என்றும் பொருள் கொள்வர் நன்னூலாருள்ளிட்ட ஆசிரியர் சிலர். (பாவாணர் )

**குறிப்புகள்**

## அத்து வற்று வருமிடத்து நிகழும் விகாரம்

**134. அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்**
**ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே**
**அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே.**

குறிப்புகள்

இ.்.து, அத்தும் வற்றும் வருமிடத்து நிலைமொழியினும் வருமொழியினும் வருஞ் செய்கை கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அத்தே வற்றே அ இருமொழிமேல் ஒற்று மெய் கெடுதல் தெற்றென்றற்று - அத்தும் வற்றுமாகிய அவ்விருமொழி மேல்நின்ற எழுத்து ( ஒற்று) த் தன் வடிவு கெடுதல் தெளியப்பட்டது. அவற்றுமுன்வரும் வல்லெழுத்து மிகும் - அவ்விருசாரியை முன்னும் வரும் வல்லெழுத்து மிகும்.

**எ - டு:** கலத்துக்குறை, அவற்றுக்கோடு என வரும்.

கலன் என, னகாரமாக நிறுத்திக் கெடுக்கவே, 'ஒன்றின முடித்தல்' என்பதனால், புள்ளியீறல்வழி விகாரவசையான் நின்றனவும் அவற்றின் மிசையொற்றென்று கெடுக்கப்படுமெனக் கொள்க.

அவற்றுக்கோடு என வரும். இ.்.து ஐகார ஈறு.

ஈண்டு வல்லெழுத்து மிகுமென்றது, ஈற்றுவல்லெழுத்தின்றித்திரிந்து முடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் என இவற்றை நோக்கி யெனவுணர்க.

அத்து முற்கூறிய முறையன்றிக் கூற்றினான், அத்தின்மிசை யொற்றுக் கெடாது நிற்கவும் பெறும். விண்ணத்துக்கொட்கும் வெயிலத்துச் சென்றான், இருளத்துக்கொண்டான் என வரும்.

'மெய்' என்றதனால், அத்தின் அகரம் பிறவுயிரின்முன்னும் கெடுதல் கொள்க. அண்ணாத்தேரி என வரும்.

'தெற்று' என்றதனால், அத்தின் அகரம் கெடாது நிற்றலும் கொள்க. விளவத்துக்கண் என வரும்.

# கூறு - 7 எழுத்துச் சாரியை

## 5. எழுத்துச் சாரியை

குறிப்புகள்

### எழுத்துச் சாரியைகளின் பெயர்

**135. காரமுங் கரமுங் கானொடு சிவணி**
**நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை.**

இ∴து, எழுத்துச் சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) காரமும் கரமும் கானொடு சிவணி - காரமும் கரமும் கானொடு பொருந்தி, நேரத்தோன்றும் எழுத்தின் சாரியை - எல்லா ஆசிரியரானும் உடன்படத் தோன்றும் எழுத்துச்சாரியை யாதற்கு.

**எ - டு:** 'நேரத்தோன்றும்' என்றதனான், நேரத்தோன்றாதன ஆனம், ஓனம் என இவை.

### நெட்டெழுத்துக்குச் சாரியை

**136. அவற்றுள்**
**கரமுங் கானும் நெட்டெழுத் திலவே.**

இ∴து, அவற்றுட் சில சாரியை சில எழுத்தோடு வாரா என எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) அவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்து இல-மேற் சொல்லப்பட்டவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்திற்கு இல.

**எ - டு:** காரம் நெட்டெழுத்திற்கு உண்டு என்றவாறு.
ஆகாரம், ஈகாரம் என வரும்.

### குற்றெழுத்துக்குச் சாரியை

**137. வரன்முறை மூன்றுங் குற்றெழுத் துடைய.**

இ∴து, நெட்டெழுத்திற்குச் சில சாரியை விலக்கினமையின் குற்றெழுத்திற்கும் சில விலக்குவதுண்டுகொல் என்னும் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

(இ-ள்) வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய - வரலாற்று முறைமையை யுடைய மூன்று சாரியையும் குற்றெழுத்து உடைய.

**எ - டு**: அகாரம், அகரம், அ∴கான் என வரும்.

'வரன்முறை' என்றதனான், அ∴கான் என்புழி, ஆய்தமிக்கு முடியுமென்பது கொள்க.

### ஐ ஔவின் சாரியை

**138. ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்.**

இ∴து, அவற்றுள் காரமுங் கானும் என்பதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஐகாரம் ஔகாரம் கானொடும் தோன்றும்

- நெட்டெழுத்துக்களில் ஐகாரமும் ஔகாரமும் முன்விலக்கப்பட்ட கானொடும் தோன்றும்.

**எ - டு:** ஐகான், ஔகான் என வரும்.

குறிப்புகள்

## 6. உயிரெழுத்தின் புணர்ச்சி இயல்புகள்

**139. புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது**
**மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே.**

இஃது, உயிர்முதல் மொழி புள்ளியீற்றுமுன் வருங்காற் பிறப்புதோர் கருவி கூறுதல் நுதவிற்று.

(இ-ள்) புள்ளி ஈற்றுமுன் உயிர் தனித்து இயலாது - புள்ளியீற்றுச் சொல்முன் உயிர் நனித்து நடவாது, மெய்யொடு சிவணும் அ இயல் கொடுத்து - அப் புள்ளியொடும் கூடும் தான் தனிநின்ற அவ் வியல்பினைக் கெடுத்து.[1]

**எ - டு:** ஆல் ு அடை - ஆலடை என வரும்.

"ஒன்றென முடித்தல்" என்பதனால், இயல்பல்லாத புள்ளிமுன் உயிர் வந்தாலும் இவ் விதி கொள்க. அதனை எனவும் நாடுரி எனவும் வரும்.

புள்ளியீற்று முன்னும் என, தொகுத்து நின்ற உம்மையை விரித்ததனானே குற்றியலுகரத்தின் முன்னும் இவ் விதி கொள்க. நாகரிது என வரும்.

1. 'அவ்வியல் கெடுத்து' என்பதற்கு. புள்ளிபெற்று நிற்கும் அம் மெய்யின் இயல்பைக் கெடுத்து என்றே பொருள் கொள்வது தக்கது. 'மெய்யுயிர் நீங்கின் தன்னுருவாகும்' என்று அடுத்த நூற்பாவும் கூறுதல் காண்க. (பாவாணர் )

## உயிர் பிரிந்த மெய்யின் இயல்பு

**140. மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும்.**

இஃது, புணர்ச்சியிடத்து உயிர்மெய் உயிர்நீங்கியவழிப் படுவதோர் விதி கூறுதல் நுதலிற்று[1]

(இ-ள்) மெய் உயிர் நீங்கின் தன் உரு ஆகும் - மெய்தன்னொடு கூடிய உயிர் புணர்ச்சிடத்து நீங்கியவழித் தன் புள்ளி வடிவு பெறும்.

**எ - டு:** அதன் ஐ[2] என வரும்.

1. இவ் வியல்பு ஒன்றென முடித்தல் என்னும் உத்தியால் குற்றியலுகரத்திற்கும் ஏற்கும். (பாவாணர்)

2. உயிர் இன்ன வடிவிற்றென்று ஆசிரியர் கூறாமையின் உயிர்க்கண் ஆராயச்சி யின்று. இனி, எகர ஒகரங்களைப் புள்ளியான் வேற்றுமை செய்தலின், தொன்று தொட்டு வழங்கினவடிவுடைய என்று கோடலுமாம். புணர்ச்சியுள் உயிர்மெய்யினைப் பிரிப்பாராதலின் இது கூறாக்காற் குன்றக் கூறலாம் என்று உணர்க.( நச்.)

## உடம்படு மெய் தோன்றும் இடம்

**141. எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்.**

குறிப்புகள்

இ∴து, உயிரீறு உயிர்முதன் மொழியோடு புணரும்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) எல்லா மொழிக்கும் - மூவகைப்பட்ட மொழிக்கும், உயிர் வரு வழி - உயிர் முதன்மொழி வரும் இடத்து, உடம்படு மெய்யின் உருபு கொளல் வரையார் - இடை உடம் படுமெய் வடிவு கோடலை நீக்கார்.

**எ - டு:** புளியங்கோடு, எருவங்குழி, விளவத்துக்கொட்கும் என வரும்.

"உரையிற் கோடல்" என்பதனால், உடம்படுமெய்யாவன யகரமும் வகரமும் எனக்கொள்க. இகரவீறும் ஈகார வீறும் ஐகாரவீறும் யகரவுடம்படுமெய் கொள்வன் அல்லனவெல்லாம் வகரமெய் கொள்வன. 'ஒன்றென முடித்தல்' என்பதனான், விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம்படு மெய் கொள்க. மரவடி, ஆயிருதிணை என வரும்.

"வரையார்" என்றதனால், உடன்படுமெய் கோடல் ஒருதலை அன்றென்பது கொள்ளப்படும், கிளி அரிது, மூங்கா இல்லை என வரும்.[1]

1. இத் தொடர்களால், தமிழும் ஒரு காலத்தில் ஆங்கிலத்தைப்போல, புணர்ச்சியின்றி எழுதப்பட்டமை ஊகிக்கப்படும். (பாவாணர்)

## 7. புணர்ச்சியிற் பொருள் வேறுபடுமிடம்

## ஒலி வேற்றுமையாற் பொருள் வேறுபடல்

**142. எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி**
**இசையில் திரிதல் நிலைஇய பண்பே.**

இ∴து, எழுத்துக்கள் ஒன்று பலவாதல் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) எழுத்து ஓர் அன்ன பொருள் தெரி புணர்ச்சி - எழுத்து ஒரு தன்மையான பொருள் விளங்கிநிற்கும் புணர்மொழிகள், இசையில் திரிதல் நிலைஇய பண்பு - ஓசை வேற்றுமையால் புணர்ச்சி வேறுபடுதல் நிலைபெற்ற பண்பு.

**எ - டு:** செம்பொன் பதின்றொடி, குன்றேறாமா1 என வரும்

1. செம்பொன் பதின்றொடி, செம்பருத்தி, குறும்பரம்பு, நாகன்றேவன் போத்து, தாமரைக்கணியார், குன்றேறாமா என இவை இசையில் திரிந்தன. (நச்)

செம்பொன்பதின்றொடி - செம்பொன் - பதின்றொடி - செம்பு ஒன்பதி றொடி-செம்பருத்தி-செம்-பருத்தி, செம்பு-அருத்தீ-குறும்பரம்பு-குறும்பு-பரம்பு, குறும்பர்-அம்பு-நாகன்றேவன்போத்து-நாகன்றேவன-போத்து, நாகன்றே-வன்போத்து-தாமரைக்கணியார்-தாமரை-கணியார், தாம்-அரைக்கு-அணியார்- குன்றேறாமா-குன்றேறா-மா, குன்றேறு-ஆமா. (பாவாணர்.)

## ஒலி வேற்றுமையாற் பொருள் வேறுபடல்

குறிப்புகள்

**143. அவைதாம்**
**முன்னப் பொருள புணர்ச்சி வாயின்**
**இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே.**

இஃது, மேலதற்கு ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அவைதாம் - மேற்சொல்லிய புணர்மொழிகள்தாம், முன்னப் பொருள - முன்னத்தினான உணரும் பொருண்மையையுடைய் புணர்ச்சிவாயின் இன்ன என்னும் எழுத்துக்கடன் இல - அவை புணர்ச்சியிடத்து இத்தகைய வென்னும் எழுத்து முறைமையை உடையவல்ல.

செம்பொன்பதின்றொடி என்றவழி, பொன்னாராய்ச்சி உள்வழிப் பொன்னெனவும், செம்பாராய்ச்சி உள்வழிச் செம்பெனவும் குறிப்பால் உணரப்பட்டது. மற்று இதன் மேல் "இசையிற்றிரிதல் நிலைதல்" என அறியுமாறு கூறினானன்றோவெனின், ஓசை என்றமையான் அஃது1 ஒலியெழுத்திற் கெனவும்,இன்னவென்னுமெழுத்துக் கடனில், என்றதனான் இது வரிவடிவிற் கெனவுங்கொள்க.

நான்காவது புணரியல் முற்றிற்று.

1. ஒலி எழுத்திற்கும் வரிவடி வெழுத்திற்கும் இலக்கணம் பின்வரும் சூத்திரங்களான் உணர்க.

(1) "இசைப்படு புள்ளியின் எழாஅல் போலச், செவிப்புலனாவ தொலியெழுத் தாகும்."

(2) "கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும், சட்டகம் போலச் செவிப்புல ஒலியை உட்கொளற் கூடுமுருபாம் வடி வெழுத்தே."

# கூறு - 8 தொகை மரபு

## உயிரீறு மெய்யீறுகளின் பொதுப் புணர்ச்சி

குறிப்புகள்

### 5. தொகை மரபு

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மேல் அகத்தோத்தினுள் இருபத்துநான்கு ஈற்றிலும் விரிந்து முடிவனவற்றை யெல்லாம் தொகுத்து முடித்தலின் தொகைமரபு எனப்பட்டது. மேல் புணரியலுட் கூறிய கருவிகளாற் செய்கை கூறும் வழி, தொக்குப்புணருஞ் செய்கை கூறலிற் புசணரியலோடு, இயைபுடைத்தாயிற்று.

1.உயிரீறு மெய் யீறுகளின் பொதுப்புணர்ச்சி மெல்லினம் **தோன்றுமிடம்**

**144. க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும்**
**மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்**
**ஙஞநம வென்னும் ஒற்றா கும்மே**
**அன்ன மரபின் மொழிவயி னான.**

இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அல்வழியும் வேற்றுமையுமாகிய இருவழிக்கண்ணும், உயிர்மயங்கியலையும் புள்ளி மயங்கியலையும் நோக்கியதோர் வழிமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும் மெல்மெழுத்து இயற்கை - உயிரீற்றினும் புள்ளியீற்றினும் இருவழியும் க ச த ப க்களை முதலாகவுடைய மொழிகளின்மேல் தோன்றும் மெல்லெழுத்தினது இயல்புகூறின், சொல்லிய முறையான ங ஞ ந ம வென்னும் ஒற்றாகும் - மெல்லெழுத்து மேற்சொல்லும் முறைமையான க ச த ப க்களுக்கு நிரனிறை வகையானே ங ஞ ந ம வென்னும் ஒற்றாகும், அன்ன மரபின் மொழிவயின் ஆன - அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து.

**எ - டு:** விளங்கோடு,செதில், தோல்,பூ என வரும்.

தோன்றுமென்றதனால், தோன்றி நின்றனவும் அவ்வாறே திரிந்து மெல்லெழுத்தா மென்பது மரங்குறிது,சிறிது, தீது, பெரிது என வரும். அன்னமரபின் மொழியன்மையின் விளக்குறுமை என்புழி மெல்லெழுத்து மிகாதாயிற்று.

### வருமொழி இயல்பாதல்

**145. ஞ ந ம ய வ வெனும் முதலாகு மொழியும்**
**உயிர்முத லாகிய மொழியும் உளப்பட**
**அன்றி யனைத்தும் எல்லா வழியும்**
**நின்ற சொன்முன் இயல்பா கும்மே.**

இ∴து, இருபத்துநான்கு ஈற்றின் முன்னும், வன்கணமொழிந்த கணங்கட்கு இரு வழியும் வருமொழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஞ ந ம ய வ எனும் முதல் ஆகுமொழியும், ஞ ந ம

குறிப்புகள்

ய வ என்று சொல்லப்படும் முதலெழுத்து உளவாகும் மொழியும், உயிர்முதலாகிய மொழியும் உளப்பட - உயிர்முதலாகிய மொழியுமாக, அன்றி அனைத்தும் எல்லா வழியும் - அவ்வனைத்து மொழியும் அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லா விடத்தும், நின்ற சொல்முன் இயல்பாகும் - இருபத்துநான்கு ஈற்றுப்பெயராகிய நிலைமொழிமுன்னர் இயல்பாகி முடியும்.

ஈண்டு உளப்படவென்பது ஆகவென்னும் பொருண்மைத்து.

**எ - டு:** விள, தாழ் என நிறுத்தி ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, அடைந்தது, ஆடிற்று, இடிந்தது, ஈரிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒடிந்தது,ஓடிற்று, ஒளவியத்தது, நுந்தையது, எனவும் ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம், இடிபு, ஈட்டம், உடைபு ஊற்றம், எழு, ஏணி, ஐயம், ஒடுக்கம், ஓக்கம், ஒளவியம் நுந்தை எனவும் ஒட்டிக் கொளீஇஎல்லாம்' என்றதனான், ஒற்றிரட்டலும், உடம்படுமெய் கோடலும், உயிரேறி முடிதலும் என வரும் இக்கருவித்திரிபு (மூன்று திரிபும் அன்மையின்) திரிபெனப் படா வென்பது கொள்க. இஃது இருபத்து நான்கு ஈற்றிற்கும் அல்வழியினும் வேற்றுமையினும், அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தான் முடிவதனை ஈண்டு ஒரு சூத்திரத்தான் தொகுத்து முடித்ததாயிற்று. மேலும் இவ்வாறே தொகுத்து முடிக்கின்றவாறு அறிக.

## எழுத்ததிகாரம்

**146. அவற்றுள்**
**மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்**
**சொல்லிய தொடர்மொழி யிறுதி யான.**

இஃது,, மேற்கூறிய முடிபிற் சிலவற்றிற்கு அம் முடிபு விலக்கிப் பிறிது விதி எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட மூன்று கணத்தினும், மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார் - மெல்லெழுத்தினது இயல்பு இயல்பாதலே யன்றி உறழ்ந்து முடியினும் நீக்கார், சொல்லிய தொடர்மொழி இறுதியான- சொல்லப்பட்ட தொடர்மொழி ஈற்றுக்கண்.

**எ - டு:** கதிர்ஞெரி, கதிர்ஞ்ஞெரி, நுனி, முரி என வரும்.

வருமொழி முதற்கூறியவதனால் ஓரெழுத்தொருமொழியுள்ளும் ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு உறழ்ச்சி முடிபு கொள்க.

**எ - டு:** பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரி எனவும் ˙
காய்ஞெரி, காய்ஞ்ஞெரி, நுனி, முரி எனவும் வரும்.

'சொல்லிய' என்றதனான் ஓரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு மிக்கு முடிதல் கொள்க.

கைஞ்ஞெரித்தார், நீட்டினார்,முறித்தார், எனவும், மெய்ஞ்ஞானம் மெய்ந்நூல், மெய்ம்மறந்தார் எனவும் வரும்.

## ண ன முன் யாவும் ஞாவும்

**147. ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்**
**வினையோ ரனைய என்மனார் புலவர்.**

குறிப்புகள்

இ∴து, யகர ஞகரங்கள் முதலாம்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ண ன என் புள்ளிமுன் - ண ன என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன், யாவும் ஞாவும் வினை ஓர் அனைய என்மனார் புலவர் - யாவும் ஞாவும் வினைச்சொற்கள் முதலாதற்கு ஒரு தன்மைய வென்று சொல்லுவர் புலவர்.

**எ - டு:** மண்யாத்த எனவும், பொன்யாத்த எனவும், மண்ஞாத்த எனவும், பொன்ஞாத்த எனவும் வரும்.

ஞா முற்கூறாது யா முற்கூறியவதனான், யா முதன்மொழிக்கண் ஞா வருமென்று கொள்க1.

1. மண் ஞான்றது என்றவழி மண் யான்றது என்று வாராமை உணர்க. (நச்)

## ண ன ஈறு அல்வழியில் இயல்பாதல்

**148. மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்**
**வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்**
**வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே.**

இ∴து, ணகாரவீற்றிற்கும் னகாரவீற்றிற்கும் அல்வழிக்கண் நிலைமொழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மொழிமுதல் ஆகும் எல்லா எழுத்தும் வருவழி - மொழிக்கு முதலாமென்று சொல்லப்பட்ட இருபத்திரண்டெழுத்தும் வருமிடத்து, நின்ற அ இரு புள்ளியும் வேற்றுமை அல்வழி திரிபு இடன் இல் - மேற்சொல்லினின்ற ண னக்களாகிய அவ்விருபுள்ளியும் வேற்றுமையல்லாத அல்வழியிடத்துத் திரியும் இடம் இல.

**எ - டு:** மண், பொன் என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது என வன்கணத்தோடு ஒட்டுக. பிற கணத்துக்கண்ணும் அவ்வாறே ஒட்டுகவருமொழிமுதற் கூறியவதனால், ணகாரத்திற்குச் சிறு பான்மை திரிபும் உண்டெனக் கொள்க. அது சாட்கோல் என வரும்.

## அவை வேற்றுமையிலும் இயல்பாதல்

**149. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி**
**மேற்கூ றியற்கை யாவயி னான.**

இ∴து, அவ்விரண்டு ஈற்றிற்கும் வேற்றுமைக்கண் நிலைமொழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும், வல்லெழுத்து அல்வழி - வல்லெழுத்து அல்லாதவிடத்து, மேற்கூறு இயற்கை ஆவயின் ஆன - மேற் கூறிய இயல்பு முடிபாம் அவ்விரண்டு புள்ளியிடத்தும்.

**எ - டு:** மண், பொன் என நிறுத்தி, ஞாற்சி, நீட்சி என வன்கணம்

ஒழித்து எல்லாவற்றோடும் ஒட்டுக.

## லனமுன் தநக்கள் திரிதல்

குறிப்புகள்

**150. லனவென வரூஉம் புள்ளி முன்னர்**
**த ந எனவரிற் றனவா கும்மே.**

இ∴து, புள்ளி மயங்கியலை நோக்கியதோர் வருமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ல ன என வரும் புள்ளி முன்னர் ல ன என்று சொல்ல வருகின்ற புள்ளிகளின் முன்னர், த,ந, என வரின் - த, ந என வருமொழி வரின், ற ன ஆகும் - அத் தகர நகரங்கள் நிரனிறையானே றகர னகரங்களாம்.

**எ - டு:** க∴றீது, கன்னன்று, பொன்றீது, பொன்னன்று என்று வரும்.

## ணளமுன் தநமெய் டணவாதல்

**151. ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்.**

இதுவும் அது.

(இ-ள்) ண ள என் புள்ளிமுன் - ணள என்னும் புள்ளிகளின் முன்னர் (அதிகாரத்தினால் தகார்ர நகாரங்கள் வரின் ) ட, ண எனத் தோன்றும் அவை நிரனிறையால் டகார ணகாரங்களாய்த் தோன்றும்.

**எ - டு:** மண்டீது, மண்ணன்று, மு∴டீது, முண்ணன்று என வரும்.

## 2. உயிரீறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி

## முன்னிலை வினைச்சொல் முடியுமாறு

**152. உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்**
**புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்**
**இயல்பா குநவும் உறழ்பா1 குநவுமென்று**
**ஆயீ ரியல வல்லெழுத்து வரினே.**

இ∴து, முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயிரீ ஈறாகிய முன்னிலைக் கிளவியும் புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும் - உயிர் ஈறாகிய முன்னிலைச் சொற்களும், புள்ளி இறுதியையுடைய முன்னிலைச் சொற்களும், வல்லெழுத்துவரின் - வல்லெழுத்து முதல்மொழி வரின், இயல்பு ஆகுநவும் உறழ்பு ஆகுநவும் என்று அ ஈர் இயல - இயல்பாவனவும் உறழ்ச்சியாவனவும் என அவ்விரண்டு இயல்பினையுடைய.

உயிரீறு புள்ளியீறு என்றமையான், முன்னிலை வினைச்சொல் என்பது கொள்க.

**எ - டு:** எறிகொற்றா, கொணாகொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்˙ உண்கொற்றா, தின்கொற்றா எனவும் வரும். இவை இயல்பு.

நடகொற்றா, நடக்கொற்றா எனவும், ஈர்கொற்றா, ஈர்க்கொற்றா எனவும் வரும். இவை உறழ்ச்சி[2].

1. (பாடம்) உறழாகுநவும்.(நச்.)

2. இவை முன்னின்றான் தொழிலுணர்த்துவனவும் அவனைத் தொழிற்படுத்துவனவும்3 என இருவகைய. இ, ஐ, ஆய் முதலியன தொழிலுணர்த்துவன. நடவா முதலியன உயிரீறும் புள்ளியீறும் தொழிற்படுத்துவன. நில்கொற்றா நிற்கொற்றா எனத் திரிந்துறழ்ந்தனவும், உறழாகுநவுமென்னும் பொதுவகையான் முடிக்க இயல்பு முறழ்வுமென் றிரண்டியல்பின் என்னாது ஆகுநவு மென்றதனான் துக்கொற்றா நொக்கொற்றா, ஞெள்ளா நாகா, மாடா வடுகா என ஓரெழுத் தொருமொழி முன்னிலை வினைச்சொல் மிக்கே முடிதல் கொள்க. (நச்.)

குறிப்புகள்

3. தொழிலுணர்த்துவன : செய்தாய், செய்கின்றாய், செய்வாய் என்பன போன்ற முக்கால முன்னிலை வினைமுற்று.

தொழிற்படுத்துவன : ஏவல் வினைமுற்று (பாவாணர்)

## அதற்குச் சிறப்பு விதி

**153. ஔவென வரூஉம் உயிரீறு சொல்லும்**
**ஞ ந ம வ வென்னும் புள்ளி யிறுதியும்**
**குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட**
**முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.**

இ∴து, மேல் முடிபு கூறியவற்றுட் சிலவற்றிற்கு அம் முடிபு விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) ஔ என வரும் உயிர் இறு சொல்லும் - ஔ என வருகின்ற உயிரீற்றுச் சொல்லும், ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும் - ஞ ந ம வ என்று சொல்லப்படும் புள்ளியீற்றுச் சொல்லும், குற்றியலுகரத்து இறுதியும் உளப்பட - குற்றியலுகரமாகிய இறுதியையுடைய சொல்லுமாகிய இவை, முன்னிலை மொழிக்கு முற்ற தோன்றா - முன்னிலை மொழிக்குக் கூறிய இயல்பும் உறழ்வுமாகிய முடிவிற்கு முற்றத்தோன்றா.

'முற்ற' என்றதனான் ஈண்டு விலக்கப்பட்ட வற்றுட் குற்றியலுகர ஈறுஒழித்து ஒழிந்தனவெல்லாம் நிலைமொழி உகரம்பெற்று, வருமொழி வல்லெழுத்து உறழ்ந்து முடிதலும், குற்றியலுகர ஈறு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலுங் கொள்க.

**எ-டு:** கௌவுகொற்றா, கௌவுக்கொற்றா, உரிஞுகொற்றா, உரிஞுக்கொற்றா· பொருநுகொற்றா, பொருநுக்கொற்றா, திருமுகொற்றா, திருமுக்கொற்றா, தெவ்வு கொற்றா, தெவ்வுக் கொற்றா எனவும் · கூடுகொற்றா, கூடுக்கொற்றா எனவும் வரும்.

## உயர்திணைப்பெயர் புணருமாறு

**154. உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்**
**புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்**
எல்லா வழியும் இயல்பென மொழிப.

இ∴து, உயர்திணைப் பெயர் நான்கு[1] கணத்துக்கண்ணும், இரு வழியும் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயிர் ஈறாகிய உயர்திணைப்பெயரும் - உயிர்ஈறாகிய உயர்திணைப் பெயர்களும், புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும் - புள்ளி இறுதியையுடைய உயர்திணைப் பெயர்களும், எல்லா வழியும் இயல்பு என மொழிப - நான்குகணத்தினும் அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லாவிடத்தும் இயல்பாம் என்று சொல்லுவர்.

குறிப்புகள்

**எ-டு:** நம்பி எனவும் அவன் எனவும் நிறுத்தி, அல்வழிக்கண் குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்-ஞான்றான், நீண்டான், மாண்டான் எனவும்-யாவன், வலியன் எனவும்-அடைந்தான், ஔவியத்தான் எனவும்-வேற்றுமைக்கண் கை, செவி, தலை, புறம் எனவும்- ஞாற்சி, நீட்சி, மாட்சி எனவும்-யாப்பு வலிமை எனவும்-அடைபு, ஔவியம் எனவும் ஒட்டுக. ஒருவன் என நிறுத்தி குறியன், சிறியன் எனவும்-கை, செவி, தலை, புறம் எனவும் தன்மைப் பெயர்க் கண்ணும் ஒட்டுக.

உயிரீறு புள்ளியிறுதி என்றதனால், உயர்திணைப்பெயருள் இயல்பன்றி முடிவன வெல்லாம் கொள்க. [1].பல்சான்றார், கபிலபரணர் இறைவநெடுவேட்டுவர், மருத்துவமாணிக்கர், பல்லரசர் என இவை ஈறுகெட்டு முடிந்தன.

கோலிகக்கருவி, வண்ணாரப் பெண்டிர், ஆசீவகப்பள்ளி என ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்கன.

குமரகோட்டம், குமரக்கோட்டம்- பிரமகோட்டம், பிரமக்கோட்டம் என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து உறழ்ந்துமுடிந்தன. பிறவும் அன்ன.

எல்லாம் என்றதனால், உயர்திணைச்சொல் இயல்பாயும் திரிந்தும் முடிவன கொள்க. உண்ப சான்றார், உண்டார் சான்றார், உண்பேன், பார்ப்பேன் என இவை இயல்பு. உண்டேஞ் - சான்றேம், உண்டே நாம் என இவை திரிந்தன. பிறவும் அன்ன.

1. நான்குகணம் : வன்கணம், மென்கணம், இடைக்கணம, உயிர்க்கணம் என்ப.

2. 'பலர்' என்பதன் ரகரமெய்யும் அகரஉயிருடன் கெட்டன.

## அதற்குச் சிறப்பு விதி

**155. அவற்றுள்**

**இகரஈற [1]றுப்பெயர் திரிபிட னுடைத்தே.**

இஃது, உயர்திணைப்பெயருட் சிலவற்றிற்கு எய்தாதது எய்து வித்தல் நுதலிற்று.

(இ-ள்) அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட உயர்திணைப் பெயருள் இகர ஈற்றுப் பெயர் திரிபு இடன் உடைத்து - இகர மாகிய இறுதியையுடைய பெயர் திரிந்து முடியும் இடமும் உடைத்து.

உரையிற்கோடல் என்பதனான், இது மிக்க திரிபென்பது கொள்ளப்படும்.

**எ - டு:** [2]எட்டிப்பூ, எட்டிப்புரவு, காவிதிப்பூ, காவிதிப்புரவு, நம்பிப்பூ நம்பிப்பேறு என வரும்.

இடனுடைத்து என்பதனான், இகர ஈறன்றிப் பிற ஈறும் ஈறு திரியாது வல்லெழுத்து மிக்கு வருவன ஈண்டுக்கொள்க. தினைப்பூ, தினைப்புரவு என வரும்.

1. (பாடம்)இகர இறுபெயர். (நச்.)

2. எட்டி - வணிகருட் சிறந்தோர்க்கு அரசராற் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்.

காவிதி - உழுவித்துண்ணும் வேளாளருட் சிறந்தோர்க்கு அரசராற் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்.(பாவாணர்)

குறிப்புகள்

## விரவுப்பெயருள் இயல்பு

**156. அ∴றிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே.**

இ∴து, விரவுப்பெயர் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அ∴றிணை விரவுப்பெயர் இயல்பும் உள - உயர் திணையோடு அ∴றிணை விரவும் விரவுப்பெயர் இயல்பாய் முடிவனவும் உள˙ இயல்பின்றி முடிவனவும் உள, இயல்பின்றி முடிவன இன்னவாறு முடியுமென, மேல் அகத்தோத்தினுட் கூறப்படும்.

**எ-டு:** சாத்தன்குறியன், சாத்தன்குறிது எனவும்˙ சாத்தன் கை எனவும்˙ இவ்வாறு அல்வழியினும் வேற்றுமையினும் நான்கு கணத்தோடும் ஒட்டிக்கொள்க.

## மூன்றாம் வேற்றுமை முடிபு

**157. புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்**
**வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்**
**தம்மி னாகிய தொழிற்சொல் முன்வரின்**
**மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்**
**அம்முறை யிரண்டும் உரியவை உளவே**
**வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.**

இ∴து, மூன்றாம் வேற்றுமைத் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புள்ளி இறுதியும் உயிர் இறு கிளவியும் - புள்ளியீற்றுச் சொல்லும், உயிரீற்றுச் சொல்லும் வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையான் - வல்லெழுத்தினது மிகுதி மேற்சொல்லும் முறைமையான், தம்மின் ஆகிய தொழிற்சொல் முன்வரின் - அம் மூன்றாவதன் பொருளாகிய வினைமுதற் பொருள்கள் தம்மான் உளவாகிய வினைச்சொற்கள் தாம் அவற்று முன் வரின், மெய்ம்மையாகலும் உறழத் தோன்றலும் அ முறை இரண்டும் உரியவை உள - இயல்பாகலும் உறழத்தோன்றுதலுமாகிய அம்முறைமையினையுடைய இரண்டு செய்கையும் உரியன உள. வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும் - அவற்றை மேலே வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபு சொல்லுமிடத்துப் போற்றியறிதல் வேண்டும்.

**எ-டு:** நாய்கோட்பட்டான், புலிகோட்பட்டான், சாரப்பட்டான், தீண்டப்பட்டான், பாயப்பட்டான் என இவை இயல்பு. சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான், வளிகோட்பட்டான், வளிக்கோட்பட்டான் என இவை உறழ்ச்சி.

புள்ளியீறு உயிரீறு என்றதனால், பேஎய்கோட்பட்டான், பேஎய்க்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் எகரப்பேறு கொள்க. உரியவையுள என்றதனான், பாம்புகோட்பட்டான், பாம்புக்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொழி யொற்றுத் திரியாமையும் திரிதலும்

கொள்க.

## இரண்டாம் வேற்றுமைத் திரிபு

குறிப்புகள்

**158. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்**
**வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்**
**இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்**
**உயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலுஞ்**
**சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலுஞ்**
**சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலுஞ்**
**சாரியை யியற்கை உறழத் தோன்றலும்**
**உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்**
**அ∴றிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலும்**
**மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்**
**அன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்மெ**
**மய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்**
**ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப.**

இ∴து, இரண்டாம் வேற்றுமைத்திரிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும் - மெல்லெழுத்து மிகுமிடத்து வல்லெழுத்தாதலொடு தோன்றுதலும், வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும் - வல்லெழுத்து மிகுமிடத்து மெல்லெழுத்தாதலொடு தோன்றுதலும், இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும் - இயற்கையிடத்து மிகுதி தோன்றுதலும், உயிர் மிக வருவழி உயிர் கெட வருதலும் - உயிர்மிக வருமிடத்து அவ்வுயிர்கெட வருதலும், சாரியை உள்வழி சாரியை கெடுதலும் - சாரியையுள்ள இடத்துச் சாரியை கெடுதலும், சாரியை உள்வழி தன் உருபு நிலையலும் - சாரியை உள்ளவிடத்துச் சாரியையொடு தன்னுருபு நிற்றலும், சாரியை இயற்கை உறழத்தோன்றலும் - சாரியை பெறுகவென்ற வழிச் சாரியை பெறாது. இயல்பாகிய மொழிகள் வருமொழியினும் நிலைமொழியினும் மிக்கும் திரிந்தும் வருமொழி வல்லெழுத்துக்கள் உறழ்ச்சியாகத் தோன்றுதலும், உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும் - உயர்திணைப் பெயரிடத்துத் தன்னுருபு தொகாதே விரிந்து வருதலும், அ∴றிணை விரவுப்பெயர்க்கு அ இயல நிலையலும் - உயர்திணையோடு அ∴றிணை விரவுப்பெயர்க்கும் அவ் வுருபு அவ்வியல்பிலே நிற்றலும், மெய்பிறிது ஆகு இடத்து இயற்கை ஆதலும் - மெய்பிறிதாய் முடியுமிடத்து இயல்பாய் முடிதலும், அன்ன பிறவும் - அத் தன்மையன பிற முடிபுகளும், தன் இயல் மருங்கின் மெய்பெற கிளந்து பொருள் வரைந்து இசைக்கும் - தனது இயல்பாகிய கூற்றால் அகத்தோத்தினுட் பொருள் பெற எடுத்தோதப்பட்ட வேற்றுமைப் பொருட்புணர்ச்சியது பொது முடிவினைத் தான் வரைந்து வேறு முடிபிற்றாய் நின்று ஒலிக்கும் ஐகார வேற்றுமைத்திரிபு என மொழிப - ஐகார வேற்றுமையினது வேறுபாட்டுப் புணர்ச்சி என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு:** விளக்குறைத்தான் என்பது மெல்லெழுத்து மிகுவழி

வல்லெழுத்து மிக்கது. மரங்குறைத்தான் என்பது வல்லெழுத்து மிகுவழி மெல்லெழுத்து மிக்கது. தாய்க்கொலை என்பது இயல்பாமிடத்து மிக்கது. பலாக்குறைத்தான் என்பது உயிர்மிக வருவழி உயிர்கெட்டது. வண்டுகொணர்ந்தான் என்பது சாரியை உள்வழிச் சாரியை கெட்டது. வண்டினைக் கொணர்ந்தான் என்பது சாரியை உள்வழித் தன்னுருபு நிலையிற்று. புளிகுறைத்தான், புளிக்குறைத்தான், ஆல்குறைத்தான், ஆற்குறைத்தான் என இவை சாரியை யியற்கை உறழத்தோன்றின. நம்பியைக்கொணர்ந்தான் என்பது உயர்திணைமருங்கின் ஒழியாது வந்தது. கொற்றனைக் கொணர்ந்தான் என்பது விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையது. மண்கொணர்ந்தான் என்பது மெய்பிறிதாகிடத்து இயற்கையாய் வந்தது.

குறிப்புகள்

அன்ன பிறவும் என்றதனாற் கொள்வன கழிகுறைத்தான் திணைபிளந்தான் என்பன. பிறவும் அன்ன.

ஒழியாது என்றதனான் ஒரோவழி ஒழிந்தும் வரும். அவர்க்கண்டு எனவும், 'ஒன்னார்த்தெறலும்' எனவும் இவை உயர்திணையுள் ஒழிந்துவந்தன, மகற்பெற்றான், மகட்பெற்றான் என இவை விரவுப் பெயருள் ஒழிந்து வந்தன. இவ்விலேசுதன்னானே இவற்றின் முடிபு வேற்றுமையும் கொள்க.

'மெய்பெற' என்றதனான், உறழ்ச்சியாய் முடிவனவும் கொள்க. மைகொணர்ந்தான், மைக்கொணர்ந்தான் எனவும் ' வில்கோள், விற்கோள் எனவும் வரும். இவ்வாறு திரிந்து முடியாது, அகத்தோத்தில் பொதுமுடிபே முடிபாய்க் கடுக்குறைத்தான், செப்புக் கொணர்ந்தான் என்றாற்போல்வன அறிந்து கொள்க. இவ்வாறு வேறுபட முடிவது பெரும்பான்மையும் இரண்டாவது வினையோடு முடியும் வழிப்போலும். அது 'தம்மி னாகிய தொழிற்சொன் முன்வரின்' (தொகை மரபு - 14) என நின்ற அதிகாரத்தாற் கொள்ள வைத்தார் போலும். 'தன்னின முடித்தல்' என்பதனான், ஏழாம்வேற்றுமை வினையொடு முடியும்வழித் திரிபும் கொள்க வரைபாய்வருடை, புலம் புக்கனனே புல்லணற்காளை என வரும்.

## இகர ஐகார ஈற்று அல்வழி முடிபு

**159. வேற்றுமை யல்வழி இ ஐ யென்னும்**
**ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைஇய1**
**அவைதாம்**
**இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்**
**உறழா குநவும் என்மனார் புலவர்.**

இ∴து, இகரவீற்றுப் பெயர்க்கும் ஐகாரவீற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமை அல்வழி இ ஐ என்னும் ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைய - வேற்றுமையல்லாத அல்வழியிடத்தும் இ ஐ என்னும் ஈற்றையுடைய பெயர்ச்சொற்கள் மூவகை முடிபு நிலைமையுடைய அவைதாம் இயல்பாகுநவும் வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும் என்மனார் புலவர் - அவைதாம் இயல்பாய் முடிவனவும் வல்லெழுத்து

மிகுவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் இவையென்று சொல்லுவர் புலவர்.

**எ - டு:** பருத்தி குறிது, அரை குறிது ˙ சிறிது, தீது, பெரிது என இவை இயல்பு. அலிக்கொற்றன், புலிக்கொற்றன் என இவை மிகுதி. கிளி குறிது, கிளிக்குறிது, தினை குறிது, தினைக் குறிது என இவை உறழ்ச்சி.

குறிப்புகள்

'பெயர்க்கிளவி' மூவகை நிலைய எனவே, பெயர்க்கிளவியல்லாத கிளவி மிகுதியும் இயல்பும் என இருவகைய எனக் கொள்க. ஒல்லைக்கொண்டான் என்பது ஐகாரவீற்று வினைச்சொல் மிகுதி. இகரவீற்று மிகுதி வந்தவழிக் கண்டுகொள்க.

தில்லைச்சொல்லே, மன்னைச்சொல்லே என்றது ஐகாரவீற்றிடைச்சொல் மிகுதி. இவற்றியல்பு வந்தவழிக் கண்டுகொள்க.

கடிகா என்பது இகரவீற்று உரிச்சொல்லியல்பு. இவ்வீற்று மிகுதி வந்தவழிக் கண்டுகொள்க. பணைத்தோள் என்பது ஐகார வீற்று உரிச்சொல் மிகுதி. இவற்றியல்பு வந்தவழிக் கண்டுகொள்க.

1. (பாடம் ) நிலைய. (நச்)

## இ ஐ ஈற்று ஏழாம் வேற்றுமை முடிபு

**160. சுட்டுமுத லாகிய இகர இறுதியும்**
**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்**
**சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்**
**யாவென் வினாவின் ஐயென் இறுதியும்**
**வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவுஞ்**
**சொல்லிய மருங்கின் உளவென மொழிப.**

இ∴து, அவ்விகர ஐகாரவீற்றுள் ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொல் முடிபு நுதலிற்று.

(இ-ள்) சுட்டு முதலாகிய இகர இறுதியும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய இகரவீற்று இடைச்சொல்லும் எகர முதல் வினாவின் இகர இறுதியும் - இறுதியும் எகரமாகிய மொழி முதல் வினாவினுடைய இகரவீற்று இடைச்சொல்லும், சுட்டுச்சினை நீடிய ஐஎன் இறுதியும் - சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட ஐகாரவீற்று இடைச்சொல்லும், யா என் வினாவின ஐ என் இறுதியும் - யா என்னும் வினாவினை முதற்கண்ணுடைய ஐகாரவீற்று இடைச்சொல்லும், வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும் சொல்லிய மருங்கின் உள என மொழிப - வல்லெழுத்து மிக்கு முடிவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் மேற்சொல்லப்பட்ட இடத்தின் கண்ணே உள வென்று சொல்லுவர் புலவர்.

**எ-டு:** அதோளிக்கொண்டான், இதோளிக்கொண்டான், உதோளிக்கொண்டான், எதோளிக்கொண்டான், சென்றான்,தந்தான், போயினான் எனவும் ஆண்டைக்கொண்டான்,ஈண்டைக்கொண்டான், ஊண்டைக்கொண்டான், யாண்டைக்கொண்டான் எனவும் இவை மிக்கு முடிந்தன.

அவ்வழிகொண்டான், அவ்வழிக்கொண்டான் இவ்வழிகொண்டான், இவ்வழிக்கொண்டான் உவ்வழிகொண்டான், உவ்வழிக்கொண்டான்

எவ்வழிகொண்டான், எவ்வழிக்கொண்டான் எனவும்1 ஆங்கவைகொண்டான், ஆங்கவைக்கொண்டான் ஈங்கிவைகொண்டான், ஈங்கிவைக்கொண்டான் ஊங்குவைகொண்டான், ஊங்குவைக்கொண்டான் யாங்கவைகொண்டான், யாங்கவைக்கொண்டான் எனவும் இவை உறழ்ந்து முடிந்தன இவற்றுள் ஐகார வீற்றுள் உறழ்ந்து முடிந்தன. திரிபுடையன. திரிபில்லன பெற்றவழிக் கண்டு கொள்க.

'சொல்லியமருங்கு' என்றதனால், பிற ஐகாரவீறு மிக்கு முடிவன கொள்க பண்டைச்சான்றார், ஒருதிங்களைக் குழவி என வரும்.

1. மறுப்பு: ஆங்கவைகொண்டான், ஆங்கவைக்கொண்டான் என்பன காட்டுவாருமுளர். அவை திரிபுடையனவாம். (நச்.)

குறிப்புகள்

## நெடில்முன் குறில்முன் ஒற்றுக்கள்

**161. நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலுங்**
**குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்1**
**அறியத் தோன்றிய நெறியிய லென்ப.**

இ.ஃது, புள்ளி மயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதலும் - நெட்டெழுத்தின்முன் நின்ற ஒற்றுத் தன்வடிவு கெடுதலும், குறியதன் முன்னர் தன்உருபு இரட்டலும் - குற்றெழுத்தின் முன்னர் நின்ற ஒற்றுத் தன்வடிவு இரட்டுதலும் அறியத் தோன்றிய நெறி இயல் என்ப - இவை அறியும்படி தோன்றிய முறைமையான இயல்புடையனவென்று சொல்லுவர்.

**எ - டு:** கோறீது, கோனன்று என இவை நெடியதன் முன்னர் ஒற்றுக்கெட்டன.

மண்ணகல், பொன்னகல் என இவை குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டின.

மேலைச்சூத்திரத்து நான்கனுருபிற் கூறியவதனான், ஒற்று இரட்டுதல் உயிர்முதன்மொழிக்கண்ணதென்று கொள்க. குறியது பின்கூறிய முறையன்றிய கூற்றினால் நெடியன குறுகிநின்ற வழியும் குறியதன் முன்னர் ஒற்றாய் இரட்டுதலும், குறியது திரிந்து நெடியதாயவழி அதன்முன்னர் ஒற்றுக்கெடுதலும் கொள்க.

தம்மை, நம்மை என இவை நெடியன குறுகிநின்று ஒற்று இரட்டின. மற்றையது வந்தவழிக் கண்டுகொள்க.

'அறிய' என்றதனால், நெடியதன்முன்னர் ஒற்றுக் கெடுவது தகார நகாரங்கள் வந்து திரிந்தவழி யென்பதூஉம், ஆண்டெல்லாம் கெடாதென்பதூஉங் கொள்க. தேன்றீது என்பது ஆண்டுக் கெடாதது.

'நெறியியல்' என்றதனாற் குறியதன் முன்னர் நின்ற ஒற்றின்றிப் புணர்ச்சியாற் பெற்றதும் இரட்டுமென வுணர்க. அவ்வடை என வரும்.

(பாடம்)1. தன்னுரு இரட்டலும். (நச்.)

குறிப்புகள்

## குறில்முன் ஒற்று இரட்டாத இடம்

**162. ஆறன் உருபின நான்கன் உருபினும்**
**கூறிய குற்றொற் றிரட்ட லில்லை**
**ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்**
**நெடுமுதல் குறுகு மொழிமுன் னான.**

இஃது, உருபியலை நோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஆறன் உருபினும் நான்கன் உருபினும் ஈறு ஆகு புள்ளி அகரமொடு நிலையும் - ஆறனுருபின்கண்ணும் நான்கனுருபின்கண்ணும் ஈறாகு புள்ளிகள் அகரத்தொடு நிலைபெறும், நெடு முதல் குறுகும் மொழிமுன் கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை - நெடிதாகிய முதலெழுத்துக் குறுகிமுடியும் மொழிக்கண் மேற்கூறிய குற்றொற்று இரட்டல் (ஆறனுருபின்கண்ணும் நான்கனுருபின்கண்ணும்) இல்லை.

**எ - டு:** தமது, தமக்கு் நமது, நமக்கு என வரும்.

'கூறிய' என்றதனானே1 நெடுமுதல் குறுகாதமொழிக்கு இவ்விருவிதியும் கொள்க. எல்லார் தமதும், எல்லார் தமக்கும் என வரும்.

1. நெடுமுதல் குறுகாத மொழிகள் தம், நம், நும் என்னும் சாரியை இடைச்சொற்கள், இங்ஙனம் காட்டிய நெடுமுதல் குறுகாத மொழிகட்கு, முன்னர் நன்னூல் விருத்தியுட் காட்டினமையுணர்க.

## நும் என் மொழிக்கும் அவ்விதி

**163. நும்மென் இறுதியும் அந்நிலை திரியாது.**
**இதுவும் அது.**

(இ-ள்) நும் என் இறுதியும் அ நிலை திரியாது - நும் என்னும் மகரவிறுதி மேற்கூறிய ஈறாகு புள்ளி அகரமொடு நிலையலும் குற்றொற்றிரட்டாமையுமாகிய அந்நிலைமையில் திரியாது.

**எ - டு:** நுமக்கு, நுமது என வரும்.

## புள்ளியிறுதி உகரம் பெறாத இடம்

**164. உகரமொடு புணரும் புள்ளி யிறுதி**
**யகரமும் உயிரும் வருவழி இயற்கை.**

இஃது, புள்ளிமயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிச் செய்கை கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) உகரமொடு புணரும் புள்ளி இறுதி - உகரப் பேற்றோடு புணரும் புள்ளியிறுதிகள், யகரமும் உயிரும் வருவழி இயற்கை - யகரமும் உயிரும் வருமொழியாய் வருமிடத்து அவ்வுகரம் பெறாது இயல்பாய் முடியும்.

**எ - டு:** உரிஞ் யானா, உரிஞ் அனந்தர் பொருந் யானா, பொருந் அனந்தர் உரிஞ் ஆதா, பொருந் ஆதா என ஒட்டுக.

## அளபு நிறை எண்ணுப் பெயர்கள் தம்மிற் புணருமாறு

**165. உயிரும் புள்ளியும் இறுதி யாகி**
**அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி**
**உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்**
**தத்தங் கிளவி தம்மகப் பட்ட**
**முத்தை வரூஉங் காலந் தோன்றின்**
**ஒத்த தென்ப ஏயென் சாரியை.**

குறிப்புகள்

இஃது, அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் தம்மிற் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயிரும் புள்ளியும் இறுதியாகி அளவும் நிறையும் எண்ணும் சுட்டி உள எனப்பட்ட எல்லா சொல்லும் - உயிரும் புள்ளியும் ஈறாய் அளவையும் நிறையையும் எண்ணையும் கருதி உளவென்று சொல்லப்பட்ட எல்லாச் சொற்களும், தம் தம் கிளவி தம் அகப்பட்ட முத்தைவரும் காலம் தோன்றின் ஏ என்சாரியை ஒத்தது என்ப-தமக்கு இனமாகிய சொற்களாய்த் தமக்கு அகப்படும் மொழியாயுள்ளன தம்முன்னே வரும் காலம் தோன்றுமாயின் ஏ என்னுஞ் சாரியை பெற்று முடிதலைப் பொருந்திற்று என்ப.

**எ - டு:** உழக்கே யாழாக்கு, கலனே பதக்கு என இவை அளவுப் பெயர். தொடியேகஃசு, கொள்ளே ஐயவி என இவை நிறைப்பெயர். காணியே முந்திரிகை, காலேகாணி என இவை எண்ணுப் பெயர்.

உயிரீறு புள்ளியீறு என்றதனானே, ஏ என் சாரியை பெறாதனவும் உளவென்று கொள்க. குறுணி நானாழி என வரும்.

## அவை ‘அரை’ என்பதனோடு புணர்தல்

**166. அரையென வரூஉம் பால்வரை கிளவிக்குப்**
**புரைவ தன்றாற் சாரியை யியற்கை.**

இஃது, எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) அரை என வரும் பால் வரை கிளவிக்கு புரைவது அன்று சாரியை இயற்கை - அரை என்று சொல்ல வருகின்ற பொருட்கூற்றை யுணரநின்ற சொல்லிற்குப் பொருந்துவதன்று மேற்கூறிய ஏ என் சாரியை பெறும் இயல்பு.

**எ - டு:** உழக்கரை, தொடியரை, ஒன்றரை என வரும்.

இஃது, ’ஒட்டுதற் கொழுகிய வழக்கு’ (புணரியல் - 30) அன்று என்பதனான் விலக்குண்ணாதோவெனில், ‘தம்மகப்பட்ட’ என்று வருமொழியையும் வரைந்தோதினமையின் இதற்கு அவ்விதி செல்லாதென்பது.

## அவை ‘குறை’ என்பதனோடு புணர்தல்

**167. குறையென் கிளவி முன்வரு காலை**
**நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை.**

இஃது, எய்தியது விலக்கிப் பிறிதுவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குறை என் கிளவி முன் வருகாலை - குறை என்னும் சொல்

அளவு முதலியவற்றின்முன் வருங்காலத்து, நிறைய தோன்றும் வேற்றுமை இயற்கை - நிறையத் தோன்றும் மேல் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபிற்குச் சொல்லும் இயல்பு.

குறிப்புகள்

**எ - டு:** உரிக்குறை, கலக்குறை, தொடிக்குறை, கொட்குறை, காணிக்குறை, காற்குறை என வரும்.

'முன்' என்றதனான், பொருட்பெயரோடு புணரும் வழியும் வேற்றுமை முடிபு எய்துகவென்பது, கலப்பயறு என வரும்.

'நிறைய' என்பதனால், கூறு என்பதன் கண்ணும் வேற்றுமை முடிபு எய்துமென்பது நாழிக்கூறு என வரும்.

## அவற்றுட் குற்றுகர மொழிகட்குச் சாரியை

**168. குற்றிய லுகரக் கின்னே சாரியை.**

இ∴து, வேற்றுமைமுடிபு விலக்கி முன் வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) குற்றியலுகரக்கு - குற்றுகரவீற்று அளவுப்பெயர் முதலியவற்றிற்கு, சாரியை இன் - (குறையொடு புணரும் வழி வரும்) சாரியை இன்.

**எ - டு:** உழக்கின்குறை, கழஞ்சின்குறை, ஒன்றின் குறை என வரும்.

## 'கலம்' அத்துச் சாரியை பெறுதல்

**169. அத்திடை வரூஉங் கலமென் அளவே.**

இதுவும் அது.

(இ-ள்) கலம் என் அளவு இடை அத்து வரும் - கலம் என்னும் அளவுப்பெயர் (குறையொடு புணரும் வழி) இடையில் அத்து வரும்.

**எ - டு:** கலத்துக்குறை என வரும்.

இ∴து, 'கலன்' என்னும் னகரவீறேல், நிலைமொழி ஒற்றுக்கேடும் வருமொழி ஒற்றுப்பேறும் 'அத்தே வற்றே' (புணரியல்-31) என்பதனாற் கொள்ளப்படும். 'கலனெனளவு' என ஓதாதது செய்யுளின்பம் நோக்குப் போலும். சாரியை முற்கூறியவதனான், இன்சாரியை பெற்றவழி முன்மாட்டேற்றான் எய்திய வல்லெழுத்து வீழ்க்க.

## பனையும் காவும் இன்சாரியை பெறுதல்

**170. பனையென் அளவுங் காவென் நிறையும்**
**நினையுங் காலை இன்னொடு சிவணும்.**

இதுவும் அது.

(இ-ள்) பனை என் அளவும் கா என் நிறையும் - பனை என்னும் அளவுப் பெயரும் கா என்னும் நிறைப் பெயரும், தினையும் காலை இன்னொடு சிவணும் - (குறை என்பதனோடு புணருமிடத்து) ஆராயுங்காலத்து இன்சாரியையொடு பொருந்தும்.

**எ - டு:** பனையின்குறை, காவின்குறை என வரும்.

'நினையுங் காலை' என்றதனான், வல்லெழுத்துப்பேறும் சிறுபான்மை

கொள்க. பனைக்குறை காக்குறை என வரும்.

## அளவுநிறைப் பெயர்களின் மொழிமுதலாம் எழுத்துக்கள்

**171. அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி**
**உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே**
**அவைதாம்**
**க ச த ப என்றா ந ம வ என்றா**
**அகர உகரமொ டவையென மொழிப.**

இ∴து, அளவுப்பெயர்க்கும் நிறைப்பெயர்க்கும் முதலாம் எழுத்துக்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி உள எனப்பட்ட ஒன்பதிற்று எழுத்து - அளவுப் பெயர்க்கும் நிறைப்பெயர்க்கும் மொழிமுதலாய் உளவென்று சொல்லப்பட்டன ஒன்பதெழுத்து, அவை தாம் - அவை (யாவையோ வெனின்) க ச த ப என்றா ந ம வ என்றா அகரமொடு உகரமொடு அவை என மொழிப - க ச த பக்களும் ந ம வக்களும் அகரமும் உகரமுமாகிய அவை என்று சொல்லுவர்.

**எ - டு:** கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு எனவும், கழஞ்சி, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை எனவும் வரும்.

'உளவெனப் பட்ட' என்றதனான், உளவெனப் படாதனவும் அளவை உளவென்பது. இம்மி, ஓரடை, ஓராடை என வரும்.

மற்று இவ்வரையறை கூறிப் பயந்தது என்னையெனின், மேல் அகத்தோத்தினுள் அவற்றிற்கு முடிபு கூறும் வழி அதிகாரத்தான் வன்கணத்தும், மேற்சொல்லா தொழிந்த கணத்தினும் சேறற்கு என்பது.

## 3. புறனடை

## இவ்வியலுக்குப் புறனடை

**172. ஈறியல் மருங்கின் இவையிவற் றியல்பெனக்**
**கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்**
**மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி**
**ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே.**

இ∴து, இவ்வோத்துப் புறனடை.

(இ-ள்) ஈறு இயல் மருங்கின்-உயிரும் புள்ளியும் இறுதியானவை வருமொழியொடு கூடி நடக்குமிடத்து, இவை இவற்று இயல்பு என கூறிய கிளவிப் பல் ஆறு எல்லாம்-இம் மொழிகளின் முடிபு இவையெனக் கூறி முடிக்கப்பட்ட சொற்களின் (அவ்வாற்றான் முடியாதுநின்ற) பலவகை முடிபுகளெல்லாம், மெய் தலைப்பட்ட வழக்கொடு சிவணி ஒத்தவை உரிய புணர் மொழி நிலை - உண்மையைத் தலைப்பட்ட வழக்கொடு கூடிப் பொருந்தினவை உரியவாம் புணரும் மொழிகள் நிலைமைக்கண்.

**எ - டு:** விள ஞான்றது என்புழி
நிலைமொழிப்பெயரது இயல்பும், ஞான்ற என நிலைமொழி
வினையாயவழி இருமொழி இயல்புமாகிய

குறிப்புகள்

குறிப்புகள்

' ஞ ந ம ய வ ' (தொகை - 2) என்பதன் ஒழிபும். மாண்கடிது என்புழி வருமொழி வன்கணத்து இயல்பாகிய ' மொழிமுதலாகும்' (தொகை - 5) என்பதன் ஒழிபும், நட ஞெள்ளா என்னும் இயல்பு கணத்து இருமொழி இயல்பும், நில்கொற்றா என்புழி நில்கொற்றா, நிற் கொற்றா என நிலைமொழி திரிந்த உறழ்ச்சியும், துக்கொற்றா, துஞ்ஞெள்ளா என்னும் மிகுதியும், உரிஞுஞெள்ளா என்னும் இயல்பு கணத்து உகரப்பேறும் உரிஞ்யானா, உரிஞ் அனந்தா என்னும் இரு மொழி இயல்பும் மண்ணுகொற்றா, மண்ணுக்கொற்றா, ஞெள்ளா என வரும். ' ஔ வென வரூஉம் ' (தொகை - 10) என்பதனுள் விலக்கப் படாத ணகர லகரமாகிய புள்ளியிறுதிகளின் நிலைமொழி உகரப் பேறுமாகிய ' உயிரீ றாகிய முன்நிலைக் கிளவி ' (தொகை - 9) என்பதன் ஒழிபும்' விரவுபெயர்த் திரிபின்மேல் எடுத்து ஓதப் படாதன வாய நின்ஞாண் என்றாற்போல வரும் 'அ∴றிணை விரவுப்பெயர் '(தொகை - 13) என்பதன் ஒழிபும், காவிக்கண், குவளைக்கண் என்றாற் போல அவ்வழிமுடிபாகிய 'வேற்றுமையல்வழி' (தொகை - 13) என்பதன் ஒழிபும், பதக்கு நானாழி, சீர்கரை, ஒருமாவரை என்னும்' உயிரும் புள்ளியு மிறுதியாகி' (குற்றியலுகரப் புணரியல்-79) என்பதன் ஒழிபும், பிறவற்றின் ஒழிபுமெல்லாம் ஈண்டேகொள்க.

## 'யாவர்' 'யாது' என்னுஞ் சொற்களின் மரூஉ

**173. பலரறி சொன்முன் யாவ ரென்னும்**
**பெயரிடை வகரங் கெடுத்தலும் ஏனை**
**ஒன்றறி சொன்முன் யாதென் வினாவிடை**
**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**
**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே.**

இ∴து, மரூஉமுடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பலர் அறி சொல்முன் யாவர் என்னும் பெயரிடை வகரம் கெடுதலும் - பலரை அறியும் சொல்முன்னர் வருகின்ற யாவர் என்னும் பெயரிடையில் வகரம் கெடுதலும், ஏனை ஒன்று அறி சொல்முன் யாது என வினா இடை ஒன்றிய வகரம் வருதலும் - ஒழிந்த ஒன்றனை அறியும் சொல்முன்னர் வரும் யாது என்னும் வினா மொழியிடை உயிரொடு பொருந்திய வகரம் வருதலும், இரண்டும் மருவின் பாத்தியில் பயின்று திரியும் - இரண்டும் மரூஉக்களது முடிபினிடத்துப் பயின்று வழங்கும்.

**எ - டு:** அவர் யார் எனவும், அது யாவது எனவும் வரும்.

'ஒன்றிய' என்றதனான், வகரஉயிர்மெய் என்று கொள்க. இன்னும் அதனானே, யாரென்பதும் யாவதென்பதும் நிலைமொழியாய்ப் பிற வருமொழியொடு புணரும் வழியும் இம்முடிபு கொள்க. ' யார்யார்க்கண்டே யுவப்பர் ' எனவும், ' யாவது நன்றென வுணரார் மாட்டும் ' எனவும் வரும்.

'பயின்று' என்றதனால், பலரறிசொல்லும் ஒன்றறிசொல்லும் வருமொழியாய வழியும் இம்முடிபு கொள்ளப்படும். யாரவர், யாவதது என வரும்.

ஐந்தாவது தொகைமரபு முற்றிற்று.

# கூறு - 9 உருபியல் - உயிரீறுகள

குறிப்புகள்

## உருபியல்

## 6. உருபியல்

உருபெழுத்துக்களின் புணர்ச்சியிலக்கணம் உணர்த்துவது

இவ்வோத்து என்ன பெயரத்தோ வெனின், உருபுகளோடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமையின், உருபியல் என்னும் பெயர்த்து. மேல் தொகுத்துப் புணர்த்த செய்கை ஈண்டு நின்றும் விரித்துப்புணர்க்கின்றாராகலின், தொகைமரபினோடு இயைபு உடைத்தாயிற்று.

## 1. உயிரீறுகள்

### அகர ஈறு முதலியவற்றில் வேற்றுமை யுருபிற்கு இன்சாரியை

**174. அ ஆ உ ஊ ஏ ஔ என்னும்**
**அப்பா லாறன் நிலைமொழி முன்னர்**
**வேற்றுமை உருபிற் கின்னே சாரியை.**

இத் தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின் அகர ஆகார உகர ஊகார ஏகார ஔகார ஈறுகளும் உருபினொடு புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அ ஆ உ ஊ ஏ ஔ என்னும் அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர் - அ ஆ உ ஊ ஏ ஔ என்று சொல்லப்படுகின்ற அக் கூற்று ஆறனையும் ஈறாகவுடைய நிலைமொழிகளின் முன்னர், வேற்றுமை உருபிற்கு சாரியை இன் - வேற்றுமையுருபுகள் வருமொழியாய் வந்த நிலைமைக்கு இடைவரும் சாரியை இன் சாரியை.

**எ - டு:** விளவினை, விளவினோடு, விளவிற்கு, விளவினது, விளவின்கண் எனவும் பலாவினை, பலாவினோடு எனவும் கடுவினை, கடுவினோடு எனவும் கழூஉவினை, கழூஉவினோடு எனவும், சேவினை, சேவினோடு எனவும் வெளவினை வெளவினோடு எனவும் கருவி அறிந்து ஒட்டுக.

### அகர ஈற்றுப் பன்மைப் பெயர்கட்கு வற்றுச்சாரியை.

**175. பல்லவை நுதலிய அகர இறுபெயர்**

**வற்றொடு சிவணல் எச்ச மின்றே.**

இ∴து, மேற்கூறிய ஈற்றுள் அகரஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பல்லவை நுதலிய பெயர் இறு அகரம் - பன்மைப் பொருளைக் கருதின பெயர்களின் இறுதி அகரம், வற்றொடு சிவணல் எச்சம் இன்று - வற்றுச்சாரியையொடு பொருத்துதலை ஒழிதல் இல்லை.

**எ - டு:** பல்லவற்றை, பல்லவற்றோடு உள்ளவற்றை, உள்ளவற்றோடு இல்லவற்றை, இல்லவற்றோடு சில்லவற்றை, சில்லவற்றோடு என ஒட்டுக.

குறிப்புகள்

'எச்சமின்று' என்றதனான் ஈண்டு மூன்றாம் உருபின்கண் சாரியை பெற்றே முடியுமென்று கொள்க இன்னும் இதனானே மேல் இன் பெற்றன பிறசாரியையும் பெறுமெனக் கொள்க. மகத்தை, நிலாத்தை என வரும்.

## 'யா' என் வினாவுக்கும் வற்றுச்சாரியை

**176. யாவென் வினாவும் ஆயியல் திரியாது.**

இ∴து, ஆகார வீற்றுள் ஒரு மொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) யா என் வினாவும் அ இயல் திரியாது - யா என்று சொல்லப்படும் ஆகாரவீற்று வினாப்பெயரும் மேற் கூறப் பட்ட வற்றுப்பெறும். அவ்வியல்பில் திரியாது.

**எ - டு:** யாவற்றை, யாவற்றோடு என ஒட்டுக.

## உகர வீற்றுச் சுட்டுக்கு அன்சாரியை

**177. சுட்டுமுத லுகரம் அன்னொடு சிவணி**
**ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே.**

இ∴து, உகரவீற்றுட் சிலமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டு முதல் உகரம் அன்னொடு சிவணி - சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகரவீற்றுச் சொல் அன்சாரியையொடு பொருந்தி, ஒட்டிய மெய் ஒழித்து உகரம் கெடும்-தான் பொருந்திய மெய்யை ஒழித்து உகரம்கெடும்.

**எ - டு:** அதனை, அதனொடு: இதனை, இதனொடு உதனை,உதனொடு என ஒட்டுக.

## ஐகார ஈற்றிற்கு வற்றுச்சாரியை

**178. சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி**
**வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே.**

இ∴து, ஐகாரவீற்றுட் சிலமொழிக்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டு முதலாகிய ஐ என் இறுதி - சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுச்சொல். வற்றொடு சிவணி நிற்றலும் உரித்து - வற்றுச் சாரியையொடு பொருந்தி அவ்வீற்று ஐகாரம் நிற்றலுமுரித்து (நில்லாமையு முரித்து.)

**எ - டு:** அவையற்றை,அவையற்றோடு இவையற்றை, இவையற்றோடு உவையற்றை, உவையற்றோடு என ஒட்டுக.

ஐகாரம் கெட்டவழி, நின்ற வகரத்தினை வற்றின்மிசை ஒற்றென்று கெடுத்து அவற்றை, இவற்றை, உவற்றை என ஒட்டுக.

மற்று, இம் முடிபு சுட்டுமுதல் வகர வீற்றோடு ஒத்தமையின், ஈண்டு இது கூறல் மிகைபடக் கூறலாம் பிற எனின், அஃது ஒக்கும் இவ்வாறு கூறுவன மேலும் உள் அவற்றிற்கெல்லாம் ஆசிரியன் கருத்து அறிந்து கொள்ளப்படுமென்பது.

குறிப்புகள்

## யாவென் வினாவின் ஐக்கும் வற்றுச்சாரியை

**179. யாவென் வினாவின் ஐயென் இறுதியும்**
**ஆயியல் திரியா தென்மனார் புலவர்**
**ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே.**

இதுவும் அது.

(இ-ள்) யா என் வினாவின் ஐ என் இறுதியும் - யா என்னும் வினாவினையுடைய ஐகாரவீற்றுச் சொல்லும், ஆ இயல் திரியாது என்மனார் புலவர் - மேற்கூறிய சுட்டுமுதல் ஐகாரம் போல வற்றுப் பெறும் இயல்பில் திரியாதென்று சொல்லுவர் ஆசிரியர், ஆ வயின் வகரம் ஐயொடும் கெடும் - அவ்விடத்து வகரம் ஐகாரத்தோடு கூடக் கெடும்.

**எ - டு:** யாவற்றை, யாவற்றோடு என ஒட்டுக.

வகரம் வற்றின்மிசை ஒற்றென்று கெடுவதனை ஈண்டுக்கேடோதியவதனால் பிற ஐகாரமும் வற்றுப் பெறுதல் கொள்க.

கரியவற்றை, செய்யவற்றை என வரும்.

## நீ என்னும் ஈகார ஈற்றுப் பெயர்க்கு னகர வொற்று.

**180. நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்**
**ஆவயின் னகரம் ஒற்றா கும்மே.**

இஃது, ஈகாரவீற்றுள் ஒரு மொழிக்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நீ என் ஒருபெயர் நெடுமுதல் குறுகும் - நீ என்னும் ஒரு பெயர் நெடிதாகிய முதல் குறுகும் ஆ வயின் னகரம் ஒற்றாகும் - அவ்விடத்து வரும் னகரம் ஒற்றாகும்.

**எ - டு:** நின்னை, நின்னொடு என ஒட்டுக.

'ஒரு பெயர்' என்றது, நின் என்பதும் வேறொரு பெயர் போறலை விலக்கிற்று. பெயர் குறுகும் என்னாது முதல் குறுகும் என்றது, அப்பெயரின் நெட்டெழுத்து நிலையது அக் குறுக்கமென்றற்கென்பது, நெடுமுதல் என்றது அம்மொழி முதலின் நகரம் குறுகுதலை விலக்கிற்று. ஈண்டு, உயிர்மெய் யொற்றுமை பற்றி நெடியது முதலாயிற்று - சாரியைப் பேற்றிடை எழுத்துப் பேறு கூறியது, மூன்றாம் உருபின்கண் சாரியை பெற்றே வந்த அதிகாரம் மாற்றி நின்றது.

## ஓகார ஈற்றுக்கு ஒன்சாரியை

**181. ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை.**

இஃது, ஓகார ஈறு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஓகார இறுதிக்குச் சாரியை ஒன் - ஓகாரவீற்றுக்கு இடைவரும் சாரியை ஒன்சாரியை.

குறிப்புகள்

**எ - டு:** கோஒனை, கோஒனொடு என ஒட்டுக.[1]

1. சிறுபான்மை இன்சாரியை வருமென்று கொள்க. 'ஒன்றாக நின்ற கோவினை யடர்க்க வந்த' எனவும், கோவினை கோவினோடு சோவினை சோவினொடு ஓவினை ஓவினொடு எனவும் வரும். ஓவென்பது மதகுநீர் தாங்கும் பலகை. (நச்)

## அகர ஆகார ஈற்றுப் பெயர்க்கு அத்துச் சாரியை

**182. அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு**
**அத்தொடுஞ் சிவணும் ஏழன் உருபே.**

இ∴து, அகர ஆகாரவீற்றுட் சில மொழிக்கு உருபின்கண் எய்தியதன் மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு - அ ஆ என்று சொல்லப்படும் மரத்தை உணரநின்ற பெயராகிய சொற்கு, அத்தொடும் சிவணும் ஏழன் உருபு - முன்கூறிய இன்னொடன்றி அத்தோடும் பொருந்தும் ஏழாம் உருபு.

**எ - டு:** விளவத்துக்கண், பலாவத்துக்கண் என வரும்.

# 2. மெய்யீறுகள்

## ஞ, ந மெய் ஈற்றுக்கு இன்னே சாரியை

**183. ஞ ந என்புள்ளிக்கு இன்னே சாரியை.**

இ∴து, புள்ளியீற்று ஞகாரவீறும் நகாரவீறும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஞ ந என் புள்ளிக்கு இன்னே சாரியை - ஞ ந என்று சொல்லப்படுகின்ற புள்ளியீறுகட்கு வரும் சாரியை இன்சாரியை.

**எ - டு:** உரிஞினை, உரிஞினொடு பொருநினை, பொருநினொடு என ஒட்டுக.

## வகர ஈற்றுச் சுட்டுக்கு வற்றுச் சாரியை

**184. சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்**
**கெட்ட இறுதி யியல்திரி பின்றே.**

இ∴து, வகரவீறு நான்கனுள்ளும் சுட்டு முதல் வகரவீற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டுமுதல் வகரம் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகரவீற்றுச்சொல், ஐயும் மெய்யும் கெட்ட இறுதி இயல்திரிபு இன்று - ஐகாரமும் அதனாற் பற்றப்பட்ட மெய்யும் கெட்டு வற்றுப்பெற்று முடிந்த சுட்டுமுதல் ஐகாரவீற்றியல்பில் திரிபின்றி வற்றுப் பெற்று முடியும்.

**எ - டு:** அவற்றை அவற்றொடு இவற்றை இவற்றொடு உவற்றை உவற்றொடு என ஒட்டுக.

## ஏனை வகர ஈற்றுக்கு இன்சாரியை

**185. ஏனை வகரம் இன்னொடு சிவணும்.**

குறிப்புகள்

இ∴து, வகரவீற்றுள் ஒழிந்த வகரவீற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஏனை வகரம் இன்னொடு சிவணும் - ஒழிந்த வகரவீறு இன்சாரியையோடு பொருந்தி முடியும்.

**எ - டு:** தெவ்வினை, தெவ்வினொடு என ஒட்டுக.

மற்று இது உரிச்சொல்லன்றோவெனின், உரிச்சொல்லேயெனினும் படுத்தலோசையாற் பெயராயிற்றெனக் கொள்க.

## மகர ஈற்றுக்கு அத்துச்சாரியை

**186. ம∴கான் புள்ளிமுன் அத்தே சாரியை.**

இ∴து, மகரஈறு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ம∴கான் புள்ளிமுன் அத்து சாரியை - மகரமாகிய புள்ளியீற்றுச் சொல்முன் வரும் சாரியை அத்துச் சாரியை.

**எ - டு:** மரத்தை மரத்தொடு என வரும்.

## சில மகர ஈறு இன்சாரியை பெறுதல்

**187.இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே.**

இ∴து, மகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) இன் இடைவரும் மொழியும் உள - மகரவீறு அத்துச் சாரியை யொழிய இன்சாரியை இடைவந்து முடியும் மொழிகளும் உள.

**எ - டு:** உருமினை, உருமினொடு என ஒட்டுக.

## 'நும' என்னும் மகர ஈற்றுப்பெயர் சாரியை பெறாமை

**188. நும்மென் இறுதி இயற்கை யாகும்.**

இ∴து, மகரவீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) நும் என் இறுதி இயற்கை ஆகும் - நும் என்னும் மகரவீறு மேற்கூறிய அத்தும் இன்னும் பெறாது இயல்பாய் முடியும்.

**எ - டு:** நும்மை, நும்மொடு என ஒட்டுக.

## 'தாம்' 'நாம்' 'யாம்' என்னும் மகர ஈறுகளும் அன்ன.

**189. தாம்நாம் என்னு மகர இறுதியும்**
**யாமென் இறுதியும் அதனோ ரன்ன**
**ஆஎ1ஆகும் யாமென் இறுதி**
**ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்**
**ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும்.**

இ∴து, மகரவீற்றுள் முன்கூறிய முடிபு ஒவ்வாதனவற்றிற்கு முடிபு கூறுதல்

நுதலிற்று.

(இ-ள்) தாம் நாம் என்னும் மகர இறுதியும் யாம் என் இறுதியும் அதன் ஓர் அன்ன-தாம் நாம் என்று சொல்லப்படும். மகரவீறும் யாம் என்னும் மகரவீறும் மேற்கூறிய நும் என்னும் மகரவீறு போல அத்தும் இன்னும் பெறாது முடிதலையுடையவாம் யாம் என் இறுதி ஆ எ ஆகும்-யாம் என்னும் மகரவீற்று மொழி-ஆகாரம் ஏகாரமாம் அ வயின் யகரமெய் கெடுதல் வேண்டும். அவ்விடத்து யகரமாகிய மெய் கெடுதல் வேண்டும் ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்-ஒழிந்த இரண்டும் நெடியவாகிய முதல் குறுகி நின்று முடியும்.

குறிப்புகள்

**எ - டு:** தம்மை, தம்மொடு நம்மை, நம்மொடு எம்மை, எம்மொடு என ஒட்டுக.

'ஆவயின்மெய்' என்றதனால், பிறவயின் மெய்யும் கெடுமெனக் கொள்க. தங்கண், நங்கண், எங்கண் என வரும்.

(பாடம்)1.ஆஎவ் வாகும்.(நச்.)

## 'எல்லாம்' என்னும் மகர ஈற்றின் வற்றின் உம்மும்

**190. எல்லா மென்னும் இறுதி முன்னர்**
**வற்றென் சாரியை முற்றத் தோன்றும்**
**உம்மை நிலையும் இறுதி யான.**

இஃது, மகரவீற்றுள் ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) எல்லாம் என்னும் இறுதிமுன்னர் - எல்லாம் என்னும் யகரவீற்றுச் சொல்லின்முன்பு வற்று என் சாரியை முற்றத்தோன்றும் - மேற்கூறிய அத்தும் இன்னுமன்றி வற்று என்னும் சாரியை முடியத்தோன்றி முடியும், உம்மை நிலையும் இறுதியான-உம் என்னும் சாரியை முடியத்தோன்றி முடியும், உம்மை நிலையும் இறுதியான - உம் என்னும் சாரியை நிலைபெறும் இறுதிக்கண்.

**எ - டு:** எல்லாவற்றையும், எல்லாவற்றோடும் என ஒட்டுக

'முற்ற' என்றதனான், மூன்றாம் உருபின்கண்ணும் நான்காம் உருபின்கண்ணும் ஆறாம் உருபின்கண்ணும் உம்மின் உகரக்கேடு கொள்க.[1]

1. எல்லாவற்றொடும், எல்லாவற்றுக்கும், எல்லாவற்றதும் என வரும், 'முற்றுகர' மாதலின் ஏறி முடியா. (நச்.)

இங்கு முற்றுகரம் என்றது ஒடு,கு, அது என்னும் உருபுகளை. (பாவாணர்.)

## உயர் திணையில் அது 'நம்' சாரியை பெறுதல்

**191. உயர்திணை யாயின் நம்மிடை வருமே.**

இதுவும் அது.

(இ-ள்) உயர்திணையாயின் நம் இடைவரும்-எல்லாம் என்னும் விரவுப்பெயர் அஃறிணைப் பெயரன்றி உயர்திணைப் பெயராய் நிற்குமாயின், நம் இடைவரும்-நம் என்னும் சாரியை இடை வந்து புணரும்.

நிலைமொழியொற்றும் மேல் 'வற்று மிசையொற்று' என்று கெட்டுநின்ற அதிகாரத்தாற் கெடுக்க இன்னும் அதனானே உம்மும்பெற்றும், அதன்கண் உகரம் சில உருபின்கண் கெடுதலும் கொள்க.

**எ - டு:** எல்லா நம்மையும், எல்லா நம்மொடும் என ஒட்டுக.[1]

1. மகர ஈற்றினை மேல் வற்றின்மிசை யொற்றெனக் கெடுத்த அதிகாரத்தாற் கெடுக்க, எல்லா நம்மையும் எல்லா நம்மினும் எல்லா நங்கணும் என உகரம் பெற்றும் எல்லா நம்மொடும் எல்லா நமக்கும் எல்லா நமதும் என உகரங்கெட்டும், மகரம் நிற்கும். இவற்றிற்கு எல்லாரையும் எல்லாரொடும் என்பது பொருளாக ஒட்டுக. இதற்கு நம்மு வகுத்ததே வேறுபாடு. 'ஈறாகு புள்ளி அகரமொடு நிற்றல்' (ஏழு: 196) நான்காவதற்கும் ஆறாவதற்குங் கொள்க.ஜநச்.ஸ

எல்லாம் என்பதில் 'ஆம்' ஈறு தன்மைப் பன்மையாதலாலும் அது பெற்றுவரும் 'நம்' சாரியை தன்மையிடத்திற் குரியதாதலாலும். அடுத்த நூற்பாவில் எல்லாரும் எல்லீரும் என்னும் படர்க்கை முன்னிலைப் பெயர்கள் முறையே தம் நும் என்னும் சாரியைபெறுமென்று கூறியிருப்பதாலும்,எல்லா நம்மையும் எல்லா நம்மொடும் என்பவற்றிற்கு நம்மெல்லாரையும் நம் எல்லாரோடும் என்று தன்மைப் பொருள் கொள்ளாது எல்லாரையும் எல்லாரொடும் என்று படர்க்கைப்பொருள் கொள்வது பொருந்தாது. ஜபாவாணர்ஸ

## 'எல்லாரும்' 'எல்லீரும்' என்னும் மகர ஈறுகளின் முடிவு.

**192. எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்**
**எல்லீரு மென்னும் முன்னிலை யிறுதியும்**
**ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிப**
**நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி**
**உம்மை நிலையும் இறுதி யான**
**தம்மிடை வரூஉம் படர்க்கை மேன**
**நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே.**

இ∴து, மகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்- எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும் எல்லாரும் என்று சொல்லப்படும் படர்க்கையிடத்து மகரவீற்றுச் சொல்லும் எல்லீரும் என்று சொல்லப்படும் முன்னிலையிடத்து மகரவீற்றுச் சொல்லும், ஒற்றும் உகரமும் கெடும் என மொழிப- இவற்றின் மகரவொற்றும் அதன்முன் நின்ற உகரமுங் கெட்டு முடியுமென்று சொல்லுவர். ரகரப்புள்ளி நிற்றல் வேண்டும்- அவ்வுகரம் கெடுவழி அதனால் ஊரப்பட்ட ரகரப்புள்ளி கெடாது நிற்றல் வேண்டும். இறுதியான உம்மை நிலையும்- அவ்விரு மொழிக்கும் இறுதிக்கண் உம் என்னும் சாரியை நிலைபெறும். படர்க்கை மேன தம் இடைவரும்- படர்க்கையிடத்துத் தம்முச் சாரியை இடைவரும், முன்னிலை மொழிக்கு நும் இடைவரும்-முன்னிலை மொழிக்கு நும்முச்சாரியை இடைவரும்.

**எ - டு:** எல்லார்தம்மையும், எல்லார்தம்மொடும் எல்லீர் நும்மையும், எல்லீர் நும்மொடும் என ஒட்டுக.

குறிப்புகள்

'படர்க்கை' முன்னிலை என்ற மிகுதியான் மகரவீற்றுத்தன்மை பெயரிடைக்கண் நம்முச்சாரியையும் ஈற்றுக்கண் உம்முச்சாரியையும் பெற்றுமுடிவன கொள்க. கரியே நம்மையும், கரியேநம்மொடும் என ஒட்டுக.

குறிப்புகள்

படர்க்கைப் பெயர் முற்கூறியவதனால், ரகாரவீற்றுப் படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் இறுதிக்கண் தம்மொடு நும்முச்சாரியையும் பெற்று முடிவன கொள்க. கரியார் தம்மையும், சான்றீர் நும்மையும் என ஒட்டுக உகரமும் ஒற்றும் என்னாத முறையன்றி கூற்றினான், அம்மூன்று உருபின்கண் உம்மின் உகரக்கேடு எடுத்தோதியவற்றிற்கும் இலேசினாற் கொண்டவற்றிறகும் கொள்க.

## 'தான' 'யான்' என்னும் னகர ஈற்றுப்பெயர்கள் சாரியை பெறாமை

**193. தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்**
**மேன்முப் பெயரோடும் வேறுபா டிலவே.**

இ∴து, னகரவீற்றுட் சிலவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தான் யான் என்னும் ஆ ஈர் இறுதியும்- தான் யான் என்று சொல்லப்படும் அவ்விரண்டு னகர வீறும், மேல் முப்பெயரொடும் வேறுபாடு இல-மேல் மகர வீற்றுட் சொல்லப்பட்ட மூன்று பெயரோடும் வேறுபாடின்றித் தானென்பது நெடுமுதல் குறுகியும் யான் என்பதன்கண் ஆகாரம் எகாரமாய் யகரங்கெட்டும் முடியும்.

**எ - டு**: தன்னை, தன்னொடு என்னை என்னொடு என ஒட்டுக.

## 'அழன்' 'புழன்' என்னும் னகர ஈறுகள் அத்தும் இன்னும் பெறுதல்.

**194. அழனே புழனே ஆயிரு மொழிக்கும்**
**அத்தும் இன்னும் உறழத் தோன்றல்**
**ஒத்த தென்ப உணரு மோரே.**

இதுவும் அது,

(இ-ள்) அழன் புழன் அ இரு மொழிக்கும்- அதன் புழனாகிய அவ்விருமொழிக்கும், அத்தும் இன்னும் உறழத்தோன்றல் ஒத்தது என்ப உணருமோர்- அத்துச் சாரியையும் இன் சாரியையும் மாறிவரத் தோன்றுதலைப் பொருத்திற்றென்ப உணருவோர்.

**எ - டு:** அழத்தை, அழத்தொடு அழனினை, அழனினொடு புழத்தை, புழத்தொடு புழனினை புழனினொடு என ஒட்டுக.'தோன்றல்' என்றதனான் எவன் என்றும் என் என்றும் நிறுத்தி வற்றுக்கொடுத்து வேண்டும் செய்கைசெய்து எவற்றை எவற்றொடு எனவும் எற்றை எற்றொடு எனவும் முடிக்க.

'ஒத்தது' என்றதனால், எகின் என நிறுத்தி அத்தும் இன்னும் கொடுத்துச் செய்கை செய்து எகினத்தை, எகினத்தொடு எகினினை, எகினினொடு எனவும் முடிக்க.

அத்து முற்கூறியவதனான், அத்துப் பெற்றவழி இனிது இசைக்குமெனக்கொள்க.

அழன்-பிணம்.

# கூறு - 10 உருபியல் - முற்றுகர

## முற்றுகர குற்றுகர ஈறுகள்

குறிப்புகள்

### 3. முற்றுகர குற்றுகர ஈறுகள்

'ஏழு' என்னும் எண்ணுப்பெயர்க்கு அன்சாரியை

**195. அன்னென் சாரியை ஏழன் இறுதி**
**முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப.**

இ∴து, ழகாரவீற்று ஒருமொழிக்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அன் என் சாரியை ஏழன் இறுதி முன்னர்த் தோன்றும் இயற்கைத்து என்ப-அன் என்னும் சாரியை ஏழென்னும் சொல்லிறுதியின் முன்னே தோன்றும் இயல்பினையுடைத்தென்று சொல்லுவர்.

**எ - டு**: ஏழனை ஏழனொடு என ஒட்டுக.

சாரியை முற்கூறியவதனால், பிறவும் அன்பெறுவன கொள்க. பூழனை, பூழனொடு˙ யாழனைன் யாழனொடு என ஒட்டுக.1

1.மேல் வருகின்ற இன்சாரியையை சேர வைத்தமையான் அவையெல்லாம் இன்சாரியை பெற்று வருதலுங் கொள்க. ஏழினை, பூழினை, யாழினை என வரும். (நச்)

### குற்றுகர ஈற்றிற்கு இன்சாரியை

**196. குற்றிய லுகரத் திறுதி முன்னர்**
**முற்றத் தோன்றும் இன்னென் சாரியை.**

இ∴து, குற்றியலுகர ஈற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) குற்றியலுகரத்து இறுதிமுன்னர் முற்றத் தோன்றும் இன் என் சாரியை- குற்றியலுகரமாகிய ஈற்றின் முன்னா முடியத்தோன்றும் இன் என் சாரியை.

**எ - டு:** வரகினை, வரகினொடு நாகினை, நாகினொடு என ஒட்டுக.

'முற்ற' என்றதனால், பிறசாரியை பெறுவனவும் கொள்க, வழக்கத்தாற் பாட்டாராய்ந்தான் கரியதனை கரியதனொடு எனவரும்.

### சில குற்றுகர ஈறுகள் இரட்டி முடிதல்

**197. நெட்டெழுத் திம்பர் ஒன்றுமிகத் தோன்றும்**
**அப்பான் மொழிகள் அல்வழி யான.**

இ∴து, அவற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) நெட்டெழுத்து இம்பர் ஒற்று மிகத்தோன்றும்-நெட்டெழுத்தின் பின்னாக (இடை) இனவொற்று மிகத்தோன்றும், அப்பால் மொழிகள் அல்வழியான - அக் கூற்று மொழிகள் அல்லாத இடத்தின்கண்ணே.

அவ்வீறு இன்சாரியை பெறுவது ஆண்டாயின் பெறாது.

**எ - டு:** யாட்டை, யாட்டொடு என வரும்.

அப்பான் மொழிகளாவன கசதபக்கள். இவை இனவொற்று மிகாதென்று கொள்க.

குறிப்புகள்

'தோன்றும்' என்றதனான், உயிர்த்தொடர் மொழியும் இன்பெறாது இனவொற்று மிகுதல் கொள்க. முயிற்றை, முயிற்றொடு என வரும்.

## இரட்டி முடிதல் சாரியை பெறாமை

**198. அவைதாம்**
**இயற்கைய வாகுஞ் செயற்கைய என்ப.**

இஃது, மேற்சாரியை விலக்கப்பட்டவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அவைதாம் - மேற் சாரியை பெறாவென விலக்கப் பட்ட அவைதாம், இயற்கையவாகும் செயற்கைய என்ப - இயல்பாய் முடிதலையுடையவாகும் செய்தியையுடைய வென்று சொல்லுவர்.

**எ - டு**: யாட்டை, யாட்டொடு என ஒட்டுக.

'செயற்கைய' என்றதனால் இனவொற்று மிக்கன சிறுபான்மை இன்பெறுதலும் கொள்க. யாட்டினை, யாட்டினொடு, முயிற்றினை, முயிற்றினொடு என வரும்.

## குற்றுகர ஈற்று எண்ணுப் பெயர்க்கு அன்சாரியை

**199. எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்.**

இஃது, அவ்வீற்று எண்ணுப்பெயர் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) எண்ணின் இறுதி அன்னொடு சிவணும் - எண்ணுப் பெயர்களினது குற்றுகர வீறு அன்சாரியையொடு பொருந்தும்,

**எ - டு:** ஒன்றனை, ஒன்றனோடு இரண்டனை, இரண்டனோடு என ஒட்டுக.[1]

1. முன்னர் செயற்கைய என்ற இலேசானே ஒன்றினை இரண்டினை என இன்சாரியையும் கொடுக்க. (நச்)

## ஒருபஃது முதலிய குற்றுகர ஈறுகள் அன்சாரியையும் பெறுதல்

**200. ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்**
**எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை**
**ஆனிடை வரினும் மான மில்லை**
**அஃதென் கிளவி ஆவயிற் கெடுமே**
**உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.**

இதுவும் அது.

(இ-ள்) ஒன்று முதலாக பத்து ஊர்ந்து வரும் எல்லா எண்ணும் - ஒன்று என்னும் எண்ணுப்பெயர் முதலாகப் பத்து என்னும் எண்ணுப்பெயரால் ஊரப்பட்டுவரும் எல்லா எண்ணுப் பெயர்களும், சொல்லுங்காலை - முடிபு

சொல்லுங்காலத்து, ஆன் இடைவரினும் மானம் இல்லை - அவ்வீற்றிற்கு மேற் கூறிய அன்னேயன்றி ஆன்சாரியை இடைவரினும் குற்றமில்லை, அவயின் அ∴து என் கிளவி கெடும் - அவ்வான்சாரியை பெற்றவழி அ∴து என்னும் சொல் கெடும், ப∴கான்மெய் உய்தல் வேண்டும் - அது கெடுவழி அவ்வகரத்தான் ஊரப்பட்ட பகரமாகிய மெய் கெடாது நிற்றல் வேண்டும்.

**எ - டு:** ஒருபானை, ஒரு பானொடு ஒருப∴தினை, ஒரு ப∴தினொடு, இருப∴தினை, இருப∴தினொடு என ஒட்டுக.

'சொல்லுங்காலை' என்றதனால், ஒன்பதென்னும் எண்ணுப் பெயரும் ஆன் பெற்று அவ்வீற்றின் அது என்னும் சொற்கெட்டு முடிதல் கொள்க. ஒன்பானை, ஒன்பானொடு என ஒட்டுக.

## 'யாது' 'அ∴து' என்னும் குற்றுகர ஈறுகட்கு அன்சாரியை

**201. யாதென் இறுதியுஞ் சுட்டு முதலாகிய**
**ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்**
**ஆய்தங் கெடுதல் ஆவயினான.**

இதுவும், அக் குற்றுகர வீற்றுட் சிலவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) யாது என் இறுதியும் - யாது என வரும் குற்றுகர ஈறும், சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஆய்தத்தொடர் மொழிக் குற்றுகர ஈறும், அன் ஒடு சிவணும் - அன்சாரியையொடு பொருந்தும் ஆ வயினான ஆய்தம் கெடுதல் - அவ்விடத்து ஆய்தம் கெடுக.

**எ - டு:** யாதனை, யாதனொடு அதனை, அதனொடு இதனை, இதனொடு உதனை, உதனொடு என ஒட்டுக.

## குற்றுகர ஈற்றுத் திசைப்பெயர் ஏழனுருபிற் சாரியை பெறாமலும் வருதல்

**202. ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்**
**சாரியைக் கிளவி இயற்கையு மாகும்**
**ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே.**

இதுவும், குற்றுகரவீற்றுட் சிலவற்றிற்கு ஏழாம் உருபோடு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஏழன் உருபிற்கு - ஏழாம் வேற்றுமைக்கு, திசைப் பெயர் முன்னர் - திசையை உணரநின்ற பெயர்களின் முன்னர், சாரியைக்கிளவி இயற்கையும் ஆகும் - இவ்வீற்றிற்கு முன் கூறிய இன்சாரியையாகிய சொல் நின்று முடிதலேயன்றி நில்லாது இயல்பாயும் முடியும் ஆ வயின் இறுதி மெய்யொடும் கெடும் - இயல்பாயவழிப் பெயர் இறுதிக் குற்றுகரம் தன்னால் ஊரப்பட்ட மெய்யொடும் கெடும்.

**எ - டு:** வடக்கின்கண், கிழக்கின்கண், தெற்கின்கண், மேற்கின்கண்

குறிப்புகள்

எனவும் வடக்கண், கிழக்கண், தெற்கண், மேற்கண் எனவும் வரும்.

உருபு முற்கூறியவதனால், கீழ்சார், கீழ்புடைட் மேல்சார், மேல்புடைட் தென்சார், தென்புடைட் வடசார், வடபுடை என இவ்வாறு சாரியை பெறாது திரிந்து முடிவனவெல்லாம் கொள்க.[1]

குறிப்புகள்

1. இன்னும் இதனானே கீழைக்குளம், மேலைக்குளம், கீழைச்சேரி மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும் கொள்க.(நச்.)

## 4. புறனடை

## இவ்வியலின் புறனடை

**203. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்**
**சொல்லிய அல்ல ஏனைய வெல்லாம்**
**தேருங் காலை உருபொடு சிவணிச்**
**சாரியை நிலையுங் கடப்பா டிலவே**

இ∴து, இவ்வோத்திற்கெல்லாம் புறனடை கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) புள்ளி இறுதியும் உயிர் இறு கிளவியும் சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்- புள்ளியீற்றுச் சொல்லும் உயிரீற்றுச் சொல்லுமென முடிபு சொல்லியவை அல்லாத ஒழிந்தவையெல்லாம் தேரும் காலை- ஆராயுங்காலத்து, உருபொடு சிவணி சாரியை நிலையும் கடப்பாடு இல- உருபுகளொடு பொருந்தி இன் சாரியை நின்று முடியும் முறைமையை யுடையவல்ல (நின்றும் நில்லாதும் முடியும்.)

புள்ளியீற்றுள் ஒழிந்தன ஐந்து உயிரீற்றுள் ஒழிந்தது ஒன்று.1 இவையும் எடுத்தோதிய ஈற்றுள் ஒழிந்தனவுமெல்லா, ஈண்டுக் கொள்ளப்படும்.

**எ - டு:** மண்ணினை, மண்ணை் வேயினை, வேயை் நாரினை, நாரை் கல்லினை, கல்லை் முள்ளினை, முள்ளை எனவும் கிளியினை, கிளியை எனவும் பொன்னினை பொன்னை எனவும் தாழினை தாழை,தீயினை தீயை் கழையினை, கழையை எனவும் ஒட்டுக.

புள்ளியீற்றுள் ஒழிந்தன பலவாகலின், அது முற்கூறப்பட்டது. 'தேருங்காலை' என்றதனான், உருபுகள் நிலைமொழியாக நின்று தம் பொருளோடு புணரும் வழி முடியும் முடிபு வேற்றுமையெல்லாம் கொள்க.

மண்ணிணைக் கொணர்ந்தான், நம்பியைக் கொணர்ந்தா கொற்றனைக் கொணர்ந்தான்.மலையொடு பொருது மரத்தாற் புடைத்தான் மரத்துக்குப் போனான் காக்கையிற் கரிது காக்கையது பலீ மரத்துக்கண் கட்டினான் எனவும் ஒட்டுக.

இ∴து உருபியலாகலின் 'உருபொடு சிவணி' என வேண்டா வன்றே. அதனான் உருபு புணர்ச்சிக்கண் சென்ற சாரியைகளெல்லாம் ஈற்றுப்பொது முடிபு உள் வழிப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் செல்லுமென்பது கொள்க. இன்னும் அதனானே, உயிரீறும் மெய்யீறும் சாரியை பெறாது இயல்பாய் முடிவன கொள்க. நம்பியை, கொற்றனை என வரும்.

ஆறாவது உருபியல் முற்றிற்று.

1. கூறாத புள்ளியீறுகள் ஐந்து. அவை ணகர யகர ரகர லகர ளகரங்களாம். உயீரீற்றுள் ஒழிந்தது. இகரம் ஒன்றுமே. (நச்)

# கூறு - 11 உயிர் மயங்கியல்

## உயிர் மயங்கியல்

குறிப்புகள்

### 7. உயிர் மயங்கியல்

உயிரீறுகளின் புணர்ச்சியிலக்கணம் உணர்த்துவது. இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உயிரீறு வன்கணத்தொடும் சிறுபான்மை பிறகணத்தொடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தலின் உயிர்மயங்கியல் என்னும் பெயர்த்து. மேல் உருபு புணர்ச்சி கூறி ஈண்டுப் பொருட்புணர்ச்சி கூறுகின்றமையின், மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

### 1. அகர ஈறு

### அல்வழியில் அகர ஈற்றுப்பெயர் புணருமாறு

**204. அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை யல்வழிக் க ச த ப த் தோன்றின்**
**தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே.**

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், அகரவீற்றுப் பெயர்க்கு வன்கணத்தோடு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்- அகரமாகிய இறுதியுடைய பெயர்ச்சொல் முன்னர், வேற்றுமை அல்வழிக் க ச த பத் தோன்றின் - வேற்றுமையல்லாத அல்வழிக்கண் க ச த ப முதல் மொழி வருமொழியாய்த்தோன்றின், தம் தம் ஒத்த ஒற்று இடைமிகும்- தத்தமக்குப் பொருந்தின அக் க ச த பக்களாகிய ஒற்று இடைக்கண் மிகும்.

**எ - டு:** விளக்குறிது, மகக்குறிது சிறிது, தீது, பெரிது என வரும்.

'ஒத்த' ஒற்றென்னாது 'தத்தம்' என்றதனான், அகரவீற்று உரிச்சொல் வல்லெழுத்துமிக்கும் மெல்லெழுத்துமிக்கும் முடியும் முடிபும் இடைச் சொற்களுள் எடுத்தோதாதவற்றின் முடிவும்.1 அகரம் தன்னை உணரநின்றவழி முடியும் முடிபும் கொள்க.

தடக்கை, தவக்கொண்டான் என இவை உரிச்சொல் வல்லெழுத்துப்பேறு, தவஞ்செவி,தடந்தோள் என இவை மெல்லெழுத்துப்பேறு, 'மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை' என்பது இடைச்சொல் முடிபு அக் குறிது, சிறிது, தீது,பெரிது என்பது தன்னை உணர நின்றவழி வல்லெழுத்து மிகுதி,அவ்யாது என்பதும் இடையெழுத்து மிகுதி, அவ்வழகிது என்பதற்கு உயிர்க்கணத்து முடிபு.

1. இனி, இடைச்சொல் வல்லொற்றுப் பெற்று வருவன உளவேல் அவற்றையும் அவ்விலேசினான் முடித்துக்கொள்க. (நச்சி.)

## அகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்

**205. வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.**

குறிப்புகள்

இ∴து, அகர ஈற்று வினைச்சொல் முடிபும் இடைச்சொல் முடிபும் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்-அகர வீற்று வினையெச்சமாகிய சொல்லும் உவமச்சொல்லும், என என் எச்சமும் சுட்டின் இறுதியும்- என என்று சொல்ல வருகின்ற எச்சச் சொல்லும் சுட்டாகிய அகர வீறும், ஆங்க என்னும் உரையசைக்கிளவியும்- ஆங்க என்று சொல்லப்படும் உரையசையாகிய சொல்லும் ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகும்- மேலைச்சூத்திரத்துச் சொன்ன வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு:** உணக்கொண்டான், தினக்கொண்டான்˙ சென்றான், தந்தான், போயினான் என்பன வினையெச்சம். மேலனவெல்லாம் இடைச்சொல். புலிபோலக்கொன்றான் என்பது உவமம். கொள்ளெனக்கொண்டான் என்பது என என் எச்சம், அக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன் என்பன சுட்டின் இறுதி. ஆங்கக் கொண்டான் என்பது உரையசைக்கிளவி.

## சுட்டின் முன் ஞ ந ம மெய்

**206. சுட்டின் முன்னர் ஞ ந ம த் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்.**

இ∴து, அகரச்சுட்டு மென்கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டின் முன்னர் ஞ ந ம தோன்றின் - அகரச்சுட்டின் முன்னர் ஞ ந ம க்கள் முதலாகிய மொழி வருமொழியாய்த் தோன்றின், ஒட்டிய ஒற்று இடைமிகுதல் வேண்டும்- தத்தமக்குப் பொருந்திய ஒற்று இடைக்கண்ணே மிகுதல் வேண்டும்.

**எ - டு:** அஞ்ஞாலம், நூல், மணி என வரும்.

## சுட்டின் முன் யவ மெய்

**207. யவ முன் வரினே வகரம் ஒற்றும்.**

இ∴து, சுட்டு இடைக்கணத்தோடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) யவமுன் வரின் வகரம் ஒற்றும்- யகரம் வகரம் முதல்மொழியாகச் சுட்டின் முன்னே வரின் இடைக்கண் வகரம் ஒற்றும்.

**எ - டு:** அவ்யாழ், அவ்வளை என வரும்.[1]

1. வருமொழி முற்கூறியவதனால் அகரந் தன்னை யுணர நின்ற வழியும் வகரம் மிகுதல் கொள்க. அவ்வளைந்தது என வரும்.(நச்சி)

## சுட்டின் முன் உயிர்

**208. உயிர்முன் வரினும் ஆஇயல் திரியாது.**

இ∴து, அச்சுட்டு உயிர்க்கணத்தோடு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயிர் முன் வரினும் ஆ இறல் திரியாது- உயிர் முதல்மொழி அகரச் சுட்டின் முன்னர் வரினும் மேற்கூறிய வகரம் மிக்கு முடியும் அவ்வியல்பில் திரியாது.

**எ - டு:** அவ்வாடை, அவ்வாண்டை என ஒட்டுக.

இடைமிக்க வகரத்தினை 'நெறியியல்' என்ற இலேசினான் இரட்டுதல் கூறினமையின், அது நிலை மொழி தொழிலென்பதுவே கூறப்பட்டது. 'திரியாது' என்றதனானே, மேற்சுட்டு நீண்ட வழி யகரத்தோடு கொள்க.

குறிப்புகள்

## செய்யுளில் சுட்டு நீளுதல

**209. நீட வருதல் செய்யுளுள் உரித்தே.**

இ∴து அச்சுட்டுச் செய்யுள் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நீட வருதல் செய்யுளுள் உரித்து- அகரச்சுட்டிற்கு நீளும்படியாக வருதல் செய்யுளிடத்து உரித்து.

**எ - டு:** 'ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே' (கிளவி யாக்கம்-1) என வரும்.

வருமொழி வரையாது கூறினமையின், இம் முடிபு வன்கண மொழிந்த கணமெல்லாவற்றோடும் சென்றது. உதாரணம் பெற்றவழிக்கொள்க.

## 'சாவ' என்னுஞ் சொல

**210. சாவ என்னுஞ் செயவென் எச்சத்து**
**இறுதி வகரங் கெடுதலும் உரித்தே.**

இ∴து, மேல் 'வினையெஞ்சு கிளவியும்' (உயிர்மயங்கியல் - 2) என்ற முடிபிற்கு எய்தாது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) சாவ என்னும் செய என் எச்சத்து இறுதி வகரம் கெடுதலும் உரித்து - சாவ என்று சொல்லப்படும் செய என் எச்சத்து இறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட வகர வொற்றும் கெடாது நிற்றலேயன்றிக் கெட்டு முடிதலும் உரித்து.

**எ - டு:** சாக்குத்தினான், சீறினான், தகர்த்தான், புடைத்தான் என வரும்.

இதனை, 'வினையெஞ்சு கிளவியும்' (உயிர் மயங்கியல் - 2) என்றதன்பின் வையாத முறையன்றிய கூற்றினான், இயல்பு கணத்தும் அந் நிலைமொழிக்கேடு கொள்க, சாஞான்றார் என வரும்.

## இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள்

**211. அன்ன என்னும் உவமக் கிளவியும்**
**அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்**
**செய்ம்மன என்னுந் தொழிலிறு சொல்லும்**
**ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்**
**செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்**
**செய்யிப என்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அம்ம என்னும் உரைப் பொருட் கிளவியும்**
**பலவற்றிறுதிப் பெயர்க்கொடை உளப்பட**
**அன்றி அனைத்தும் இயல்பென மொழிப.**

இ∴து, அகரவீற்றுள் ஒருசார் பெயர்க்கும் வினைக்கும் இடைக்கும்

முன் எய்தியது விலக்கியும் எய்தாதது எய்துவித்தும் முடிபு கூறுதல் நுதலிற்று. அன்னவென்பதும் செய்யியவென்பதும் பலவற்றிறுதிப் பெயர்க்கொடை யென்பதும் எய்தியது விலக்கின. மற்றையன எய்தாதது எய்துவித்தன.

குறிப்புகள்

(இ-ள்) அன்ன என்னும் உவமக்கிளவியும் - அன்ன என்று சொல்லப்படும் உவம உருபாகிய இடைச்சொல்லும், அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும் - அணியாரைக் கருதிய விளியாகிய நிலைமையையுடைய உயர்திணைப் பெயர்ச்சொல்லும், செய்ம்மன என்னும் தொழில் இறு சொல்லும் - செய்ம்மன என்று சொல்லப்படும் வினைச்சொல்லாகிய அகரவீற்றுச் சொல்லும், ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவியும் - ஏவலைக் கருதிய வியங்கோளாகிய வினைச்சொல்லும், செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும். செய்த என்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய வினைச்சொல்லும், செய்யிய என்னும் வினை எஞ்சு கிளவியும் - செய்யிய என்று சொல்லப்படும் வினையெச்சமாகிய வினைச்சொல்லும், அம்ம என்னும் உரைப்பொருள் கிளவியும் - அம்ம என்று சொல்லப்படும் உரையசைப் பொருண்மையையுடைய இடைச்சொல்லும், பலவற்று இறுதிப்பெயர்க்கொடை உளப்பட அன்றி அனைத்தும் - பன்மைப்பொருள்களின் அகர வீற்றுப் பலவென்னும் பெயர்ச்சொல்லுமாகிய அவ்வனைத்துச் சொல்லும், இயல்பு என மொழிப - இயல்பாய் முடியுமென்று சொல்லுவர். (ஆசிரியர்.)

**எ - டு:** பொன் அன்ன குதிரை, செந்நாய், தகர், பன்றி,எனவும் ஊர கொள், செல், தா, போ எனவும் உண்மன குதிரை,செந்நாய், தகர், பன்றி எனவும் செல்க குதிரை, செந்நாய், தகர் பன்றிஎனவும் உண்ட குதிரை, செந்நாய், தகர், பன்எனவும் இதன் எதிர்மறை: உண்ணாத குதிரை எனவும் இதன் குறிப்பு நல்ல குதிரை, செந்நாய் எனவும் உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும் அம்ம கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் பலகுதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும் வரும்.

‘ஊரகொள்’ என்பது உயிரீறாகிய உயர்திணைப் பெயர் என்பதனுள் அடங்காதோவெனின், ஊரன் என்பது ஊர என ஈறு திரிந்தமையின் ஆண்டு அடங்காதாயிற் றென்பது.

விளிநிலைக்கிளவியாகிய பெயரை முன்வைத்ததனால், செய்த வென்பதன் மறையன்றிச் செய்யும் என்பதற்கு மறையாகிய செய்யாத என்பதும் அவ்வியல்பு உடைத்தெனக்கொள்க. அது வாராத கொற்றன் என வரும்.

‘உரையிற்கோடல்’ என்பதனால், வியங்கோள் முன் வைக்கற் பாலதனை முன்வையாது செய்ம்மன என்பதனை முன்வைத்ததனான், இவ் வியல்பு முடிபின்கண் செய்ம்மன என்பது சிறப்புடைத்தெனப் பெறப் பட்டது. அதனால், ‘ஏவல்கண்ணாத வியங்கோளும்’[1] இவ்வியல்பு முடிபு உடைத்தெனக் கொள்க. அது, ’மன்னிய பெரும நீ’ (புறம் 6) என வரும்.

‘பலவற்றிறுதிப் பெயர்க்கொடை’ என்பதனை அம்ம என்பதற்கு முன் வையாததனால், பல என்பது மேற்கூறும் செய்யுள் முடிபில் திரிந்து முடிதல் ஈண்டை இயற்பிற் சிறப்பிற்றென்பதூஉம், அகரவீற்றின்

முடிபுகூறாத முற்று வினையும் வினைக்குறிப்பும் அவ்வியல்பின வென்பதூஉம் பெறப்படும். உண்டன குதிரை என்பது முற்றுவினை, கரியகுதிரை என்பது முற்றுவினைக் குறிப்பு.

'தன்னின முடித்தல்' (பொருள் 199 உரை) என்பதனால், பல என்பதின் இனமாகிய சில என்பதற்கும் அவ்வியல்பு கொள்க. சில குதிரை என வரும்.

குறிப்புகள்

1.மாறுபாடு: கூறுகின்றான் அவன் நிலைபெற்றிருத்தல் வேண்டுமென்றே கருதிக் கூறுதலின் அதுவும் ஏவல் கண்ணிற்றேயாம். (நச்.)

## 'வாழிய' என்னும் சொல்

**212. வாழிய வென்னுஞ் சேயென்1 கிளவி**
**இறுதி யகரங் கெடுதலும் உரித்தே.**

இ∴து, ஏவல்கண்ணாக வியங்கோட்களில் ஒன்றற்கு எய்திய இயல்பு விலக்கி விகாரம் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வாழிய என்னும் சேய் என் கிளவி- வாழிய என்று சொல்லப்படுகின்ற அவ்வாழுங்காலம் அண்மையவன்றிச் சேய்மைய என்று உணர்த்தும் சொல், இறுதி யகரம் கெடுதலும் உரித்து - தன்னிறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட யகரவொற்றும் கெடாது முடிதலேயன்றிக் கெட்டு முடிதலும் உரித்து.

**எ - டு:** வாழிகொற்றா என வரும்.

'சேயென் கிளவி' என்றதனான், அம் முடிபு இவ் 'வாழிய' என்பதற்கு ஏவல் கண்ணாத நிலையதென்பது விளக்கி நின்றது. 'ஒன்றென முடித்தல்' (பொரு-999 உரை) என்பதனால், பிற கணத்துக் கண்ணும் இவ் விதி கொள்க. வாழிஞெள்ளா என வரும்.

## 'அம்ம' என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு விதி

**213. உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.**

இ∴து, அம்ம என்பதற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார்-உரையசைப் பொருண்மையினையுடைய அம்ம என்னும் இடைச்சொல் தன் ஈற்றகரம் அகரமாய் நிற்றலேயன்றி ஆகாரமாய் நீண்டு முடிதலையும் வரையார்.

**எ - டு:** அம்மாகொற்றா என வரும்.

'ஒன்றென முடித்தல்' (பொருள்-999 உரை) என்பதனான், அந் நீட்சி இயல்பு கணத்தும் கொள்க. அம்மாஞெள்ளா என வரும்.

## 'பல' என்னுஞ்சொல

**214. பலவற் றிறுதி நீடுமொழி உளவே**
**செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான,**

இ∴து, மேற் 'பலவற்றிறுதிப் பெயர்க்கொடை' (உயிர் மயங்கியல்:8) என்று ஓதியதற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பலவற்று இறுதி நீடும் மொழி உள - பல என்னும் சொல்லின் இறுதி அகரம் நீண்டு முடியும் மொழிகளும் உள˙ (யாண்டு உளவெனில்) செய்யுள் கண்ணிய தொடர்மொழியான- செய்யுளாதலைக்

குறிப்புகள்

கருதிய ஒன்றோடொன்று தொடர்ச்சிப் படும் செய்யுள் முடிபுடைய மொழிகளின்கண்ணே.

‘செய்யுள் கண்ணியமொழி’ என்னாது தொடர்மொழி, என்றதனான், இப் பலவென்பது நீளும்வழி வருமொழியாவது சிலவென்பதே என்று கொள்ளப்படும். ‘செய்யு ளான’ என்னாது ‘செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான’ என்றதனால், பல என்னும் மொழியீறு நீண்ட வழி நிலைமொழி அகரப்பேறும் வருமொழி ஞகார மெல்லெழுத்துப் பேறும், வருமொழியீறு நீண்ட வழி அகரப்பேறும் மகரமாகிய மெல்லெழுத்துப் பேறும் கொள்க. ‘உண்டு’ என்னாது ‘உள’ என்றதனால், சிலவென்னும் வருமொழியிறுதி நீடலும் கொள்க.

**எ - டு:** ’பலா அஞ் சிலாஅ மென்மனார் புலவர்’ என வரும். இதன் சொல்நிலை பலசில என்னும் செவ்வெண்.1

1. செவ்வெண்-எண்ணும்மை தொக்கு வருவது. (பாவாணர்.)

## ‘பல’ ‘சில’ என்னுஞ் சொற்கள்

**215. தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்**
**லகரம் றகரவொற் றாதலு1 முரித்தே.**

இஃது, பல சில என்பவற்றிற்கு இயல்பேயன்றித் திரிபும் உண்டென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்-தொடர் மொழியல்லாத ஈரெழுத்தொருமொழியாகிய பல சில என்னும் அகரவீற்றுச் சொல் தம்முன்னே தாம் வரின், லகரம் றகர ஒற்று ஆதலும் உரித்து - தம் ஈற்றில் நின்ற லகரவொற்று றகர வொற்றாய்த் திரித்து முடிதலும் உரித்து.

**எ - டு:**பற்பல கொண்டான் எனவும், சிற்சில வித்தி எனவும் வரும்.

‘தன்முற்றான’ என ஒருமையாற் கூறாது ‘தம்முன் தாம்வரின்’ என்ற பன்மையான், மேல் பல சில என நின்ற இரண்டும் தழுவப் பட்டன. ‘தொடரலிறுதி தம் முன்வரின்’ என்னாது ‘தாம்’ என்றதனான். இம் முடிவின்கண் பலவென்பதன்முன் பலவருக சிலவென்பதன்முன் சில வருக என்பது கொள்ளப்பட்டது.

‘லகரம் றகரமாம்’ என்னாது ‘லகரம் றகரவொற்றாம்’ என்ற ஞாபகத்தான், அகரம் கெடுமென்றானாகக் கொள்க. அருத்தாபத்தி முகத்தால், தம்முன் தாம்வரின் லகரம் றகரவொற்றா மெனவே, தம் முன் பிற வந்தவிடத்து லகரம் றகரவொற்றாகாது அகரம் கெடுமென்பது கொள்ளப்படும். பல்படை, பல்யானை, சில்படை, சில்வேள்வி என வரும்.

‘தொடரலிறுதி’ என்பது சுட்டல்லது ஓரெழுத்தொருமொழி அகரமின்மையின், ஓரெழுத்தொருமொழிமேற் செல்லாதாயிற்று, உரித்தென்றது, அகரவீற்றொருமை பற்றி.

1. (பாடம்) றாகலு. (நச்.)

## வேற்றுமையில் அகர ஈறு

**217. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.**

இஃது, அகர ஈற்றுப்பெயர்க்கு வன்கணத்தொடு வேற்றுமை முடிபு

நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - அகர வீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் மேற்கூறிய அல்வழியோடு ஒருதன்மைத்தாய்க் கசதப முதல் மொழி வந்தவழி தத்தம் ஒற்று இடைமிக்கு முடியும்.

**எ - டு:** இருவிளக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன் என வரும். விளக்குறுமை எனக் குணவேற்றுமைக்கண்ணும் கொள்க. (இருவிள ஓலை வேணாட்டகத்து ஓர் ஊர்)[1]

1. கருவூரினகத்து ஒரு சேரியுமென்ப. இருவிளவிற் கொற்றன் என விரிக்க. (நச்.)

குறிப்புகள்

### மரப் பெயர்க்குப் பிறிதுவிதி

**218. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.**

இ.்.து, அகரவீற்று மரப்பெயர்க் கிளவிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகும்-அகரவீற்று மரப்பெயராகிய சொல் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு:** விளங்கோடு, விளஞ்செதிள், தோல், பூ என வரும்.

## மக என்னும் பெயர்

**219. மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை.**

இ.்.து, அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) மகப்பெயர்க் கிளவிக்கு இன்சாரியை-அகரவீற்று மக என்னும் பெயர்ச்சொல்லிற்கு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வரும் சாரியை இன்.

**எ - டு:** மகவின்கைச் செவி, தலை, புறம் என வரும்.

சாரியைப்பேறு வரையாது கூறியவழி நான்கு கணத்துக் கண்ணும் செல்லுமென்பதாகலின், மகவின்ஞாண் என இயல்பு கணத்துக்கண்ணும் கொள்க.

## மக என்னும் பெயர்

**220. அத்தவண் வரினும் வரைநிலை இன்றே.**

இதுவும் அது.

(இ-ள்) அத்து அவண் வரினும் வரை நிலை இன்று- மேற்கூறிய இன்னேயன்றி அத்து என்னும் சாரியை இயைபு வல்லெழுத்தினோடு அம் மக என்னும் சொல்லிடத்து வந்து முடியினும் நீக்கும் நிலைமை இன்று.

**எ - டு:** மகத்துக்கைச் செவி, தலை, புறம் எனச் செய்கை அறிந்து முடிக்க.

'அவண்' என்றதனால், மகப்பால்யாடு என வல்லெழுத்துப் பேறும், மகவின்கை என மேல் இன்சாரியை பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் வந்தவழி விளவின்கோடு

என இயைபு வல்லெழுத்து வீழ்வும் கொள்க. ‘நிலை’ என்றதனால், மகம்பால்யாடு என மெல்லெழுத்துப்பேறும் கொள்க.

## அகர ஈற்றுப் பன்மைச் சொற்கள்

குறிப்புகள்

**221. பலவற் றிறுதி உருபியல் நிலையும்.**

இ∴து, அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) பலவற்று இறுதி உருபு இயல் நிலையும் - பல என்னும் அகரவீற்றுச்சொல் உருபு புணர்ச்சிக்கண் வற்றுப் பெற்றுப் புணர்ந்த இயல்பின் கண்ணே நிற்கும்.

**எ - டு:** பலவற்றுக்கோடு செவி, தலை, புறம் என வரும்.

## 2. ஆகார ஈறு

## அல்வழியில் ஆகார ஈற்றுப்பெயர்

**222. ஆகார இறுதி அகர இயற்றே.**

இ∴து, ஆகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஆகார இறுதி அகர இயற்று - ஆகாரவீற்றுப் பெயர் (அல்வழிக்கண் ) அகரவீற்று அல்வழியது இயல்பிற்றாய் வல்லெழுத்துப் பெற்று முடியும்.

**எ - டு:** தாராக்கடிதுசிறிது, தீது, பெரிது என வரும்.

## ஆகார ஈற்றுவினை

**223. செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.**

இ∴து, அவ்வீற்று வினைச்சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) செய்யா என்னும் வினைஎஞ்சு கிளவியும்-ஐபெயரேயன்றிஸ செய்யா என்று சொல்லப்படும் ஆகாரவீற்று வினையெச்சச்சொல்லும், அ இயல் திரியாது என்மனார் புலவர்-வல்லெழுத்து மிக்குமுடியும் அவ்வியல்பில் திரியாதென்று சொல்லுவர் புலவர்.

**எ - டு:** உண்ணாக்கொண்டான் சென்றான் தந்தான், போயினான் என வரும்.

‘திரியாது’[1] என்றதனால், ‘செய்யா’ என்னும் பெயரெச்சமும் அவ்வாறு முடியுமெனக் கொள்க.

உண்ணாக்கொற்றன் என வரும்.

1. ‘உம்மை’ யாற் பெயரெச்ச மறையாகிய சொல்லும். (நச்)

## உம்மைத் தொகை முடிபு

**224.உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி**
**மெய்ம்மை யாக அகரம் மிகுமே.**

குறிப்புகள்

இ∴து, அவ்வீற்று அவ்வழிக்கண் உம்மைத் தொகை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி-உம்மைதொக்க இருபெயராகிய தொகைச்சொல், மெய்ம்மையாக அகரம் மிகும்-மெய்யாக நிலைமொழியீற்று அகரம் மிக்கு முடியும்.

**எ - டு:** உவா அப் பதினான்கு.

'மெய்ம்மையாக' என்றதனால் வல்லெழுத்துக் கொடுக்க. 'உம்மை தொக்க' என்னாது 'எஞ்சிய' என்ற வாய்பாட்டு வேற்றுமையான். இம் முடிபு இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கும் கொள்க. அராஅப்பாம்பு என வரும்.

இன்னும் அதனான், எழுவாய் முடிபிற்கும் பெயரெச்சத்திற்கும் அகரப்பேறு கொள்க. இரா அக்கொடிது, இரா அக்காக்கை என வரும்.

நிலைமொழி எழுத்துப்பேறு வருமொழி வரையாது கூறின வழி நான்கு கணத்துக்கண்ணும் செல்லுமாகலின், இயல்பு கணத்துக் கண்ணும் அகரப்பேறு கொள்க. இறாஅ, வழுதுணங்காய் என வரும்.

## இயல்பாகும் ஆகார ஈற்றுச் சொற்கள்

**225. ஆவு மாவும் விளிப்பெயர்க் கிளவியும்**
**யாவென் வினாவும் பலவற் றிறுதியும்**
**ஏவல்குறித்த உரையசை மியாவும்**
**தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியோ**
**டன்றி அனைத்தும் இயல்பென மொழிப.**

இ∴து, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு இயல்புகூறி எய்தியது விலக்குதலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

(இ-ள்) ஆவும் மாவும் விளிப்பெயர்க்கிளவியும்- ஆ என்னும் பெயர்ச்சொல்லும் மா என்னும் பெயர்ச்சொல்லும் விளித்தலையுடைய பெயராகிய உயர்திணைச்சொல்லும், யா என் வினாவும் பலவற்று இறுதியும்-யா என்னும் வினாப்பெயரும் அ∴றிணைப்பன்மைப்பொருளை உணர்த்தும் ஆகாரவீற்று முற்று வினைச்சொல்லும், ஏவல் குறித்த உரையசைமியாவும்-முன்னிலையில் ஏவல் வினைச்சொல்லைக் குறித்துவரும் உரையசையாகிய மியா என்னும் ஆகாரவீற்று இடைச்சொல்லும், தன் தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு அன்றி அனைத்தும்- தனது தொழிலினைச் சொல்லும் ஆகார வினாவினையுடைய வினைச்சொல்லுமாகிய அவ்வனைத்தும், இயல்பு என மொழிப-இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு:** ஆகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும் மாகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும் ஊராகொள், செல், தா, போ எனவும் வரும் யாகுறிய, சிறிய, தீய, பெரிய எனவும் உண்ணா குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும் கேண்மியாகொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்

உண்கா[1] கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

விளிப்பெயர்க் கிளவியும், பலவற்றிறுதியும், ஏவல்குறித்த உரையசை மியாவும், தன்றொழிலுரைக்கும் வினாவும் எய்தாதது எய்துவிக்கப்ட்டன. ஊரா கொள் என்பது உயிரீறாகிய உயர்திணைப் பெயரென்பதனுள் அடங்காதோ வெனின், முன் (உயிர் மயங்கியல்-8) கூறிற்றே கூறுக.

குறிப்புகள்

1. 'உண்கா' என்பது யானுண்பேனோ என்னும் பொருட்டு (நச்.)

## வேற்றுமையில் ஆகார ஈறு

**226. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.**

இ∴து, அவ்வீற்று வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - (ஆகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண்ணேயன்றி) வேற்றுமைக் கண்ணும் அகரவீற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்குமுடியும்.

எ - டு: தாராக்கால் சிறகு, தலை, புறம் என வரும்.

## குறிற்கீழ் ஆகாரமும் தனி ஆகாரமும்

**227. குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**அறியத் தோன்றும் அகரக் கிளவி.**

இ∴து, அவ்வீற்றில் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) குறியதன்முன்னரும் ஓர் எழுத்து மொழிக்கும்- குற்றெழுத்தின்முன் நின்ற ஆகாரவீற்றிற்கும் ஓரெழுத்தொருமொழி ஆகாரவீற்றிற்கும், அகரக்கிளவி அறிய தோன்றும்-(நிலைமொழிக்கண்) அகரமாகிய எழுத்து அறியத்தோன்றும்.

**எ - டு:** பலாஅக்கோடு செதிள், தோல், பூ எனவும்
காஅக்குறை, செய்கை, தலை, புறம் எனவும் வரும்.

ஓரெழுத்தொருமொழி முற்கூறாவதனால், அதன்கண் அகரப் பேறு சிறுபான்மையெனக் கொள்க. 'அறிய' என்றதனால் அவ்விரு வழியும் அகரம் பொருந்திய வழியே வருதலும், அவ்வீற்று வேற்றுமையுள் எடுத்தோதாதவற்றின் முடிபும். இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், இவ்வுயிரீற்றில் வரும் உருபீற்றுச் செய்கையும் கொள்க.

**எ-டு:**அண்ணாஅத்துஉவாஅத்துஞான்றுகொண்டான ',உவாஅத்தாற் கொண்டான், யாவற்றுக்கோடு என இவை பிறமுடிபு. மூ ங்காவின்றோல் என்பது வல்லெழுத்து வீழ்வு. இடாவினுட் கொண்டான் என்பது உருபீற்றுச்செய்கை.

## 'இரா' என்னும் சொல

**228. இராவென் கிளவிக் ககர மில்லை.**

இ∴து, அவ்வகரப் பேற்றிற்கு ஒருவழி எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) இரா என் கிளவிக்கு அகரம் இல்லை - இரா என்னும்

ஆகாரவீற்றுச் சொல்லிற்கு முன்கூறிய அகரப்பேறு இல்லை.

**எ - டு:** இராக்கொண்டான்1 என வரும்.

1. 'இரா' என்னும் சொல் இரத்தல் என்னும் பொருள்பட்டு, வினையைக்குறிப்பின் அகரம் பெறும். இராவில் என்று பொருள் பட்டுக் காலத்தைக் குறிப்பின் அகரம் பெறாது.(பாவாணர்)

குறிப்புகள்

## 'நிலா' என்னும் சொல

**229. நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்.**

இஃது, அவ்வீற்று ஒருவழி அகரம் விலக்கி அத்து வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) நிலா என் கிளவி அத்தொடு சிவணும் - நிலா என்னும் சொல் அத்துச் சாரியையோடு பொருந்தி முடியும்.

**எ - டு:** நிலாத்துக்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'நிலைமொழித்தொழிலை நிலைமொழித் தொழில்1 விலக்கு மாகலின்' அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது.

1. நிலைமொழித்தொழில், அத்துப்பேறு, நிலைமொழித் தொழிலை விலக்கல், 24 ஆம் நூற்பாவில் விதித்த அகரத்தை விலக்கல்.

## சில மரப் பெயர்கள்

**230. யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்**
**ஆமுப் பெயரும் மெல்லெழுத்து முடிமே.**

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

(இ-ள்) யா மரக்கிளவியும் பிடாவும் தளாவும் ஆ முப்பெயரும்-யா என்னும் மரத்தை உணரநின்ற சொல்லும் பிடா என்னுஞ் சொல்லும் தளா என்னும் சொல்லுமாகிய அம்மூன்று பெயரும், மெல்லெழுத்து மிகும்-வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்குமுடியும்.

**எ - டு:** யாஅங்கோடு, பிடாஅங்கோடு, தளாஅங்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

மெல்லெழுத்துப்பெறு வருமொழித் தொழிலாதலின், வருமொழி வல்லெழுத்தை விலக்கிற்று.

## அவற்றிற்கு மேலும் ஒரு முடிபு

**231. வல்லெழுத்து மிகினு மான மில்லை.**

இஃது, மேலனவற்றிற்கு வல்லெழுத்தும் சிறுபான்மை மிக்கு முடியும் என இறந்தது காத்தல் நுதலிற்று.

(இ-ள்) வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை - மேற் கூறிய மூன்று பெயரும் மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை.

**எ - டு:** யாஅக்கோடு, பிடாஅக்கோடு, தளாஅக்கோடு செதிள், தோல், பூ என வரும்.

'மான மில்லை' என்றதனால், யா முதலிய மூன்றற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி, இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

**எ - டு:** யாஅவின்கோடு, பிடாஅவின்கோடு, தளாஅவின் கோடு எனவரும்.

இன்னும் அதனானே, யாஅத்துக்கோடு எனச் சிறுபான்மை அத்துப்பேறுண்டேனும் கொள்க. அவ்வகரப்பேற்றோடு வல்லெழுத்துப்பெறுதலின், 'யாமரக்கிளவி' என்பதனைக் 'குறியதன் முன்னரும்' என்பதன்பின் வையாத விதனால், இராவிற்கொண்டான், நிலாவிற்கொண்டான் என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. நிலாவிற்கொண்டான் என்பதற்கு நிலாத்துக் கொண்டான் என்பது ஈற்றுப் பொது முடிபாயினவாறு அறிக.

குறிப்புகள்

## 'மா' என்னும் மரப்பெயரும் 'ஆ' 'மா' என்னும் விலங்கின் பெயர்களும்

**232 மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன**
**அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும்.**

இ∴து, அவ்வீற்றில் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மாமரக்கிளவியும் ஆவும் மாவும் ஆமுப்பெயரும் அவற்று ஓர் அன்ன-மாமரமாகிய சொல்லும் ஆ என்னும் சொல்லும் மா என்னும் சொல்லுமாகிய அம் மூன்று பெயர்ச்சொல்லும் மேற்கூறிய யா முதலிய மூன்றனொடும் ஒரு தன்மையவாய வல்லெழுத்துப் பெறாது மெல்லெழுத்துப் பெற்று முடிதலுமுடைய, ஆவும் மாவும் அகரம் வல்லெழுத்து அவை அவண் நிலையா னகரம் ஒற்றும் - அவற்றுள் ஆவும் மாவும் முன்பெற்று நின்ற அகரமும் வல்லெழுத்துமாகிய அவை அவ்விடத்து நிலை பெறாவாய் னகரம் ஒற்றாகப் பெற்றுமுடியும்.

**எ - டு:** மாஅங்கோடு, செதிள், தோல், பூ, எனவும்˙ ஆன்கோடு மான்கோடு, செவி, தலை, புறம் எனவும் வரும்.

'அறிய' (உயிர்மயங்கியல் - 24) என்றதனால், சிறுபான்மை மாங்கோடு என அகரமின்றியும் வரும். இனி 'அவண்' என்றதனால் காயாங்கோடு, ஆணாங்கோடு, நுணாங்கோடு என்றாற்போலப் பிறவும் மெல்லெழுத்துப் பெறுதலும், அங்காக்கொண்டான், இங்காக்கொண்டான், உங்காக்கொண்டான், எங்காக்கொண்டான் என இவ்வீற்று ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைச்சொற்கள் வல்லெழுத்துப் பெறுதலும்˙ ஆவின்கோடு, மாவின்கோடு எனச் சிறுபான்மை இன்பெறுதலும் பெற்றவழி வல்லெழுத்து வீழவும் கொள்க.'அவற்றோரன்ன' என்ற மாட்டேற்றால் பெற்று நின்றது மெல்லெழுத் தாகலின் 'அகரம் வல்லெழுத் தவையவ ணிலையா' என்று ஓதற்பாலதன்றெனின், மேல்' ஊவென்னொரு பெயராவொடு சிவணும்' (உயிர் மயங்கியல் - 57) என்றவழி, அம்மாட் டேற்றானே அதன் வல்லெழுத்து வீழ்வும் கொளல் வேண்டித் 'திரிந்த தன்றிரிபது' என்னும் நயத்தானே மெல்லெழுத்தை வல்லெழுத்தாக ஓதினானெனக் கொள்க.

## 'ஆன்' என்னும் சொல

**233. ஆனொற் றகரமொடு நிலையிடன் உடைத்தே.**

இஃது, அவ்வீற்றுள் ஆ என்றதற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஆன்ஒற்று அகரமொடும் நிலைஇடன் உடைத்து - முன்பு பெற்றுநின்ற ஆன் என்னும் சொல்லினது னகரவொற்று அகரத்தொடும் நிற்கும் இடனுடைத்து.

'இடனுடைத்து' என்றதனான், வன்கணம் ஒழிந்தகணத்து இம் முடிபெனக் கொள்க.

**எ - டு:** 'ஆனநெய்தெளித்து நான நீவி' என வரும்.

'அகரமொடும' என்ற உம்மையான், அகரமின்றி வருதலே பெரும்பான்மை எனக் கொள்க.

## 'ஆன்' என்னும் சொல்

**234. ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்**
**தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே.**

இஃது, இன்னும் ஆன் என்பதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) ஆன்முன் வரும் ஈகார பகரம் - ஆன் என்னும் சொல் முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தொடு கூடிய பகரமாகிய மொழி, தான்மிகத் தோன்றி குறுகலும் உரித்து - அப் பகரமாகிய தான் மிகத் தோன்றி அவ் வீகாரம் இகரமாகக் குறுகி முடிதலையும் உடைத்து.

'தோன்றி' என்றதனால், நிலைமொழிப்பேறாகிய னகர வொற்றின் கேடு கொள்க.

**எ - டு:** ஆப்பி என வரும்.

உம்மையான், ஆன்பீ என்பதே பெரும்பான்மையெனக் கொள்க.

## சிலவற்றிற்கு உகரப்பேறு

**235. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்**
**அறிய வருதல் செய்யுளுள் உரித்தே.**

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) குறியதன் இறுதிச்சினை கெட உகரம் அறிய வருதல் செய்யுளுள் உரித்து - குறியதன் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது சினையாகிய அகார மாத்திரை கெட ஆண்டு உகரம் அறியவருதல் செய்யுளிடத்து உரித்து.

**எ - டு:** 'இறவுப் புறத்தன்ன பிணர்படு தடவுமுதல்'1 என வரும்.

'அறிய' என்றதனான், உகரம்பெறாது சினைகெடுதலும் கொள்க.

பிணவுநாய் முடுக்கிய என்றாற்போல வரும் அல்வழி முடிபு 'கிளந்தவல்ல' (குற்றியலுகரப் புணரியல் - 77) என்னும் புறனடையதெனக் கொள்க.

'1. சுறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை' (நற். 19)

'புறவுப் புறத்தன்ன புன்காய் உகாய்' (குறுந். 274) (நச்.)

குறிப்புகள்

## 3. இகர ஈறு

**236. இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**

**குறிப்புகள்**

வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது, இகரவீற்றுப் பெயர்க்கு அல்வழி முடிபு தொகை மரபினுட் கூறி நின்றமையின் அதன் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இகர இறுதிப் பெயர்நிலை முன்னர் வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும் - இகரவீற்றுப் பெயர்ச்சொல் முன்னர் அதிகாரத்தாற் க ச த ப முதல்மொழி வந்தவழி வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்குமுடியும்.

**எ - டு:** கிளிக்கால்- சிறகு- தலை, புறம் என வரும்.

### இகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்

**237. இனி அணி என்னுங் காலையும் இடனும்**
**வினை யெஞ்சு கிளவியுஞ் சுட்டும் அன்ன.**

இஃது, இவ்வீற்றுள் சில இடைச்சொல்லும் வினைச்சொல்லும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இனி, அணி என்னும் காலையும் இடனும் வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன - இனி என்றும் அணி என்றும் சொல்லப்படுகின்ற காலத்தையும் இடத்தையும். உணர நின்ற இடைச்சொல்லும் இவ்விகரவீற்று வினையெச்சமாகிய சொல்லும் இவ்வீற்றுச் சுட்டாகிய இடைச்சொல்லும் மேற் கூறியவாறே வல்லெழுத்து மிக்கு முடியும் தன்மைய.

**எ - டு:** இனிக்கொண்டான், அணிக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும் ˙ தேடிக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும் ˙ இக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன் எனவும் வரும்.

### இன்றி என்னும் சொல

**238. இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி**
**நின்ற இகரம் உகரம் ஆதல்**
**தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே.**

இஃது, இவ்வீற்றுள் வினையெச்சக் குறிப்பினுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி நின்ற இகரம் உகரம் ஆதல் - இன்றி என்று சொல்லப்படும் வினையெச்சத்து இறுதிக்கண் நின்ற இகரம் உகரமாய்த் திரிந்து முடிதல் பழகநடந்த கூற்றையுடைய செய்யுட்களிடத்து உரித்து.

**எ - டு:** 'உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே' என வரும்.

'நின்ற' என்றதனான், முன் பெற்றுநின்ற வல்லெழுத்து வீழ்ந்த 'தொன்றியன் மருங்கு' என்றதனால், அன்றி என்பதும் செய்யுளுள் இம் முடிபிற்றாதல் கொள்க. 'நாளன்று போகிப் புள்ளிடை தட்ப' என வரும்.

## சுட்டுப்பெயர்

**239. சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே.**

இஃது, இவ்வீற்றுச் சுட்டுப்பெயர் இயல்புகணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டின் இயற்கை முன்கிளந்த அற்று - இகரவீற்றுச் சுட்டினது இயல்பு இயல்புகணம் வரும்வழியும் உயிர்க்கணம் வரும்வழியும் முன் அகரவீற்றுச் சுட்டிற்குச் சொல்லப்பட்ட தன்மைத்தாம்.

என்றது மென்கணம் வரும்வழி அம் மெல்லெழுத்து மிக்கும் (உயிர் மயங்கியல்- 3) இடைக்கணம் வரும்வழியும் உயிர்க்கணம் வரும் வழியும் நிலைமொழி வகரம் பெற்றும் (உயிர் மயங்கியல் - 4,5) செய்யுட்கண் வகரம் கெட்டுச் சுட்டு நீண்டு (உயிர் மயங்கியல் - 6 ) முடியும் என்றவாறு

**எ-டு:** இஞ்ஞானம்,இந்நூல்,இம்மணி எனவும் ' இவ்யாழ், இவ்வட்டு எனவும் ' இவ்வடை, இவ்வாடை, இவ்வெளவியம் எனவும் ஈவயினான1 எனவும் வரும்.

1. ஈ - இதோ, ஈ என்பதே அண்மைச் சுட்டின் முதல் வடிவம். இத்தகைய முதல் வடிவங்கள் சில, செய்யுளில் அருமையாய்ப் போற்றப்பட்டுள (பாவாணர்).

## 'தூணி' முன் 'பதக்கு'

**240. பதக்குமுன் வரினே தூணிக் கிளவி**
**முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே.**

இஃது, இவ்வீற்று அல்வழிகளில் அளவுப்பெயருள் ஒன்றற்கு மேல் தொகை மரபினுள் (சூத் - 22) எய்திய ஏ என்சாரியை விலக்கி வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பதக்கு முன் வரின் தூணிக்கிளவி முதல் கிளந்து எடுத்த வேற்றுமை இயற்று - பதக்கு என்னும் சொல் தன்முன்வரின் தூணி என்னும் சொல்லளவு முன்பு விதந்தெடுத்த வேற்றுமைமுடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு:** தூணிப்பதக்கு என வரும்.

வருமொழி முற்கூறியவதனால், இருதூணிப்பதக்கு என அடையடுத்து வந்த வழியும் இவ்விதி கொள்க. 'கிளந்தெடுத்த' என்றதனால், தூணிமுன்னர்ப் பிறபொருட்பெயர் வந்தவழியும் ஆண்டு நிலைமொழியடையடுத்து வந்தவழியும் தன் முன்னர்த்தான் வந்தவழியும் இம் முடிபு கொள்க. இன்னும் அதனானே தன்முன்னர்த் தான் வந்தவழி இக்குசாரியைப்பேறும் கொள்க.

**எ - டு:** தூணிக்கொள், தூணிச்சாமை எனவும்' இரு தூணிக்கொள் எனவும்' தூணித்தூணி எனவும்' தூணிக்குத்தூணி1 எனவும் வரும்.

1. இன்னும் அதனானே தன் முன்வந்த தான் வந்துழியும் அது தான் அடையடுத்து வந்துழியும் இக்குச் சாரியை பெறுதலும் கொள்க. தூணிக்குத்தூணி, இருதூணிக்குத் தூணி என வரும். இவற்றுட் பண்புத் தொகையும் உள. (நச்.)

குறிப்புகள்

## 'நாழி' முன் 'உர'

**241. உரிவரு காலை நாழிக் கிளவி**
**இறுதி இகர மெய்யொடுங் கெடுமே**
**டகார மொற்றும் ஆவயினான.**

குறிப்புகள்

இதுவும் அது.

(இ-ள்) உரி வரு காலை நாழிக்கிளவி இறுதி இகரம் மெய்யொடும் கெடும் - உரி என்னும் சொல் வருமொழியாய் வந்த காலத்து நாழி என்னும் சொல் தன் ஈற்றில் நின்ற இகரம் தான் ஊர்ந்துநின்ற மெய்யோடும் கெடும், அ வயின் டகாரம் ஒற்றும் - அவ்விடத்து டகரம் ஒற்றாய் வரும்.

**எ - டு:** நாடுரி என வரும்.

வருமொழி முற்கூறியவதனான், நிலைமொழி அடையடுத்து இருநாடுரி என்ற வழியும் இம்முடிபு கொள்க. 'இகரம் என்னாது இறுதி இகரம்' என்றதனால் ஈண்டை நிலைமொழியும் வருமொழியும் நிலைமொழிகளாய் நின்று பிறபொருட் பெயரோடு வல்லெழுத்து மிக்கு முடிதலும் கொள்க. நாழிக் காயம், உரிக்காயம் என வரும்.

## 'நாழி' முன் 'உரி'

**241. உரிவரு காலை நாழிக் கிளவி**
**இறுதி இகர மெய்யொடுங் கெடுமே**
**டகார மொற்றும் ஆவயினான.**

இதுவும் அது.

(இ-ள்) உரி வரு காலை நாழிக்கிளவி இறுதி இகரம் மெய்யொடும் கெடும் - உரி என்னும் சொல் வருமொழியாய் வந்த காலத்து நாழி என்னும் சொல் தன் ஈற்றில் நின்ற இகரம் தான் ஊர்ந்துநின்ற மெய்யோடும் கெடும், அ வயின் டகாரம் ஒற்றும் - அவ்விடத்து டகரம் ஒற்றாய் வரும்.

**எ - டு:** நாடுரி என வரும்.

வருமொழி முற்கூறியவதனான், நிலைமொழி அடையடுத்து இருநாடுரி என்ற வழியும் இம்முடிபு கொள்க. 'இகரம் என்னாது இறுதி இகரம்' என்றதனால் ஈண்டை நிலைமொழியும் வருமொழியும் நிலைமொழிகளாய் நின்று பிறபொருட் பெயரோடு வல்லெழுத்து மிக்கு முடிதலும் கொள்க. நாழிக் காயம், உரிக்காயம் என வரும்.

## 'பனி' என்னும் காலச்சொல்

**242. பனியென வரூஉங் கால வேற்றுமைக்**
**கத்தும் இன்னும் சாரியை ஆகும்.**

இ∴து, இவ்வீற்று வேற்றுமையுள் ஒன்றற்கு வல்லெழுத்தினொடு சாரியை பெறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பனி என வரும் காலவேற்றுமைக்கு அத்தும் இன்னும்

சாரியை ஆகும் - பனி என்று சொல்ல வருகின்ற பனிக்காலத்தை உணர நின்ற வேற்றுமை முடிபுடைய பெயர்க்கு வரும் சாரியை அத்தும் இன்னும் ஆகும்.

**எ - டு:** பனியத்துக்கொண்டான், பனியிற் கொண்டான்˙ சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'வேற்றுமை' என்றதனான் இன்பெற்றவழி இயைபு வல்லெழுத்தை வீழ்க்க.

குறிப்புகள்

## 'வளி' என்னும் பூதச்சொல

**243. வளியென வரூஉம் பூதக் கிளவியும்**
**அவ்வியல் நிலையல் செவ்விதென்ப.**

இதுவும் அது.

(இ-ள்) வளி என வரும் பூதக்கிளவியும் அ இயல் நிலையல் செவ்விது என்ப - வளி என்று சொல்ல வருகின்ற இடக்கரல்லாத1 ஐம்பெரும் பூதங்களில் ஒன்றை உணர நின்ற சொல்லும் மேற்கூறிய அத்தும் இன்னும் பெறும் அவ்வியல்பின்கண் நிற்றல் செவ்விதென்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** வளியத்துக் கொண்டான், வளியிற் கொண்டான் ˙ சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'செவ்விது' என்றதனால், இன்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

1. இடக்கர் என்றது மலவாய்க் காற்றை. ஐபாவாணர்ஸ

## 'உதி' என்னும் மரப்பெயர்

**244. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே.**

இ∴து, இவ்வீற்று மரப்பெயர் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

(இ-ள்) உதிமரக்கிளவி மெல்லெழுத்து மிகும் - உதி என்னும் மரத்தினை உணரநின்ற சொல் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** உதிங்கோடு˙ செதிள், தோல், பூ1 என வரும்.

1.அம்முச்சாரியை விதிக்கின்ற புளி மரத்தினை இதன்பின் வைத்தமையான் உதியங்கோடு என இதற்கும் அம்முப் பெறுதல் கொள்க. இக்காலத்து ஒதியென மருவிற்று.

## 'புளி' என்னும் மரப்பெயர்

**245.புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.**

இ∴து, இவ்வீற்று மரப்பெயர் ஒன்றற்கு மேல் எய்திய வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதித்தல் நுதலிற்று.

(இ-ள்) புளிமரக்கிளவிக்கு சாரியை அம்-புளி என்னும் மரத்தினை

உணர நின்ற சொல்லிற்கு வரும் சாரியை அம்முச்சாரியை.

**எ - டு :** புளியங்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

சாரியைப்பேற்றிடை எழுத்துப்பேறு கூறியவதனால், அம்முப்பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

குறிப்புகள்

## ‘புளி’ என்னும் சுவைப்பெயர்

**246. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.**

இ∴து, அம் மரப்பெயரல்லாத புளிப்பெயர்க்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஏனை புளிப்பெயர் மெல்லெழுத்துமிகும் - அம்மரப் பெயரன்றி ஒழிந்த சுவைப்புளி உணரநின்ற பெயர் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** புளிங்கூழ் சோறு, தயிர் பாளிதம்1 என வரும்.

1.பாளிதம் - பாற்சோறு.

## அதற்கு மேலும் ஒரு முடிபு

**247. வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை**
**ஒல்வழி யறிதல் வழக்கத் தான.**

இ∴து, மேலதற்கு வல்லெழுத்து மிகுமென எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை - ஏனைப் புளிப்பெயர் முன் எய்திய மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை, ஒல்வழி அறிதல் வழக்கத்தான, பொருந்தும் இடமறிக வழக்கிடத்து.

**எ - டு :** புளிக்கூழ், சோறு, பாளிதம் என வரும்.

‘ஒல்வழியறிதல்’ என்றதனால், புளிச்சோறு என்றது போல மற்றையவை வழக்குப் பயிற்சி இலவென்பதும் கொள்க. ‘வழக்கத்தான்’ என்றதனான், இவ்வீற்றுள்[1] கடுத்தோத்தும் இலேசும் இல்லாதனவற்றின் முடிபு வேற்றுமையெல்லாம் கொள்க. கூதாளங் கோடு எனவும், கணவிரங்கோடு எனவும், துளியத்துக்கொண்டான் எனவும், பருத்திக்குச் சென்றான் எனவும், கப்பிதந்தை கப்பிந்தை எனவும் கட்டி அகல் கட்டகல் எனவும், குளிகுறுமை குளிக்குறுமை எனவும், இன்னினிக் கொண்டான் அண்ணணிக் கொண்டான் எனவும், புளியங்காய் எனவும் வரும்.

இன்னும் அதனானே, இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி, இயைபு வல்லெழுத்து வீழ்தலும் கொள்க. கிளியின்கால் என வரும்.

1. எடுத்தோத்து - எடுத்துக் கூறல்.

## நாட் பெயர்

**248. நாள்முன் தோன்றுந் தொழில்நிலைக் கிளவிக்கு**
**ஆன்இடை வருதல் ஐயம் இன்றே.**

இ∴து, இவ்வீற்றுட் சிலவற்றிற்குச் சாரியை விதித்தல் நுதலிற்று.

(இ-ள்) நாள் முன் தோன்றும் தொழில்நிலை கிளவிக்கு இகரவீற்றுள் நாட்பெயர்களின் முன்னர்த் தோன்றும் வினைச்சொல்லிற்கு, ஆன்இடை வருதல் ஐயம் இன்று - ஆன்சாரியை இடைவந்து முடிதல் ஐயம் இல்லை

**எ - டு :** பரணியாற் கொண்டான்˙ சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'ஐயமின்று' என்றதனான், இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

## திங்கட் பெயர்

**249. திங்கள் முன்வரின் இக்கே சாரியை.**

இதுவும் அது.

(இ-ள்) திங்கள் முன் வரின் சாரியை இக்கு - திங்களை உணர நின்ற இகரவீற்றுப் பெயர் முன்னர்த் தொழில்நிலைக் கிளவி வரின் வரும் சாரியை இக்குச் சாரியை.

**எ - டு :** ஆடிக்குக் கொண்டான்- சென்றான், தந்தான், போயினான் என வரும்.

## 4. ஈகார ஈறு

## அல்வழியில் ஈகார ஈற்றுப்பெயர்

**250. ஈகார இறுதி ஆகார இயற்றே.**

இ∴து, ஈகார வீற்றுப்பெயர் அல்வழியின்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஈகார இறுதி ஆகார இயற்று - ஈகார வீற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வரும்வழி வல்லெழுத்து மிக்குமுடியும்.

**எ - டு :** தீக்கடிது- சிறிது, தீது, பெரிது என வரும்.

## 'நீ' 'மீ' முதலிய சொற்கள்

**251. நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்**
**மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்**
**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.**

இ∴து, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நீ என் பெயரும் இடக்கர்ப்பெயரும் மீ என மரீஇய இடம் வரை கிளவியும் - நீ என்னும் பெயரும் இடக்கர்ப்பெயராகிய (பீ என்னும் ) ஈகாரவீற்றுப்பெயரும் மீ என்று சொல்ல வரூஉம் மருவாய் வழங்கின ஓர் இடத்தினை வரைந்துணர்த்தும் சொல்லும், ஆ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும் - மேல் இவ்வீற்றுட் கூறிய வல்லெழுத்துப் பெறாது

குறிப்புகள்

இயல்பாய் முடியும்.

**எ - டு :** நீ குறியை- சிறியை, தீயை, பெரியை எனவும்- பீ குறிது-சிறிது, தீது, பெரிது எனவும- மீகண், செவி, தலை, புறம் எனவும் வரும்.

குறிப்புகள்

'நீ குறியை' என்பது மேல் 'அ∴றிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே' (தொல் மரபு - 13) என்றவழி அடங்காதோவெனின்மேல் வேற்றுமைக்கண் நின்கை எனத் திரிந்துமுடிதலின் அடங்காதாயிற்றென்க. மீகண் என்பது அல்வழி முடிபன்றெனினும் இயல்பாதல் நோக்கி உடன் கூறப்பட்டது.

## 'மீ' என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு

**252. இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்**
**உடனிலை மொழியும் உளவென மொழிப.**

இ∴து, மேற்கூறியவற்றுள் மீ என்பதற்கு வேறொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம் உடன்நிலைமொழியும்உள என மொழிப - இடத்தினை வரைந்துணர்த்தும் மீ என்னும் சொல்முன் இயல்பாய் முடிதலேயன்றி வல்லெழுத்து மிக்குமுடியும் தம்மில் இயைந்து நிற்றலையுடைய மொழிகளும் உளவென்று சொல்லுவர்.

**எ - டு :** மீக்கோள், மீப்பல் என வரும்.

'உடனிலை' என்றதனால், மீங்குழி, மீந்தோல் என மெல்லெழுத்துப் பெற்று முடிவனவும் கொள்க.

## வேற்றுமையில் ஈகார ஈற்றுப்பெயர்

**253. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.**

இ∴து, அவ்வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - ஈகார வீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் ஆகார வீற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்துப் பெற்று முடியும்.

**எ - டு :** ஈக்கால் சிறகு, தலை, புறம் என வரும்.

## 'நீ' என்னும் பெயர்

**254. நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்**
**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.**

இ∴து, அவ்வீற்று வேற்றுமை முடிபினுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நீ என் ஒருபெயர் உருபுஇயல் நிலையும் - நீ என் நின்ற ஒருபெயர் உருபு புணர்ச்சிக்கண் நெடுமுதல் குறுகி னகர வொற்றுப் பெற்று முடிந்த இயல்பின்கண்ணே நின்றுமுடியும், ஆ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும் - அவ்வாறு முடிந்த விடத்து இயைபு வல்லெழுத்து மிகாது.

எ - டு : நின்கை˙ செவி, தலை, புறம் என வரும்.

## 5. உகர ஈறு

### அல்வழியில் உகர ஈற்றுப் பெயர்

குறிப்புகள்

**255. உகர இறுதி அகர இயற்றே.**

இ∴து, உகரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) உகர இறுதி அகர இயற்று - உகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் அகர ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்குமுடியும்.

**எ - டு** : கடுக்குறிது சிறிது, தீது, பெரிது என வரும்.

### உகரச் சுட்டு

**256. சுட்டின் முன்னரும் அத்தொழிற்றாகும்.**

இ∴து, இவ்வீற்றுச் சுட்டு வன்கணத்தொடு கூடி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும் - உகரவீற்றுச் சுட்டின்முன்னரும் வல்லெழுத்து வரும்வழி அவ் வகரவீற்று அல்வழியின் தொழிற்றாய் வல்லெழுத்து மிக்குமுடியும்.

**எ - டு** : உக்கொற்றன்˙ சாத்தன், தேவன், பூதன் என வரும்.

### சுட்டின்முன் மென்கணம் முதலியன

**257. ஏனவை வரினே மேல்நிலை யியல்பே.**[1]

இ∴து, அவ்வீற்றுச்சுட்டு ஒழிந்த கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஏனவை வரின் மேல்நிலை இயல்பு - உகரவீற்றுச் சுட்டின்முன் ஒழிந்த கணம் வருமொழியாக வரின் மேல் அகர வீற்றுச்சுட்டு முடிந்து நின்ற நிலைமையின் இயல்பையுடையவாய் முடியும்.

**எ - டு** : உஞ்ஞாண், உந்நூல், உம்மணி எனவும் உவ்யாழ், உவ்வட்டு எனவும் உவ்வடை, உவ்வாடை, உவ்வௌவியம் எனவும் ஆவயினான எனவும் வரும்.

1. (பாடம்) இயல.(நச்.)

### சுட்டின்முன் வலி இயல்பாதல்

**258. சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே.**

இ∴து, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி இயல்பு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டுமுதல் இறுதி இயல்பாகும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுப்பெயர் மேற்கூறிய வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.

**எ - டு** : அதுகுறிது, இதுகுறிது, உதுகுறிது சிறிது, தீது, பெரிது என வரும்.

## செய்யுளிற் சுட்டுப்பெயர்

**259. அன்றுவரு காலை ஆவா குதலும்**
**ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்**
**செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப.**

குறிப்புகள்

இ∴து, இவ்வீற்றுச் சுட்டு முதற்பெயர்க்கு ஓர் செய்யுள் முடிபு நுதலிற்று.

(இ-ள்) அன்று வருகாலை ஆ ஆகுதலும் - அதிகாரத்தான் நின்ற சுட்டுமுதல் உகர வீற்றுப்பெயர் அன்று என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து அவ் வுகரம் ஆகாரமாகித் திரிந்துமுடிதலும், ஐ வருகாலை மெய் வரைந்து கெடுதலும் - ஐ என்னும் சாரியை இடைவந்து முடியுங்காலத்து அவ் வுகரம் தான் ஊர்ந்த மெய்யை ஒழித்துக் கெட்டு முடிதலும், செய்யுள் மருங்கின் உரித்து என மொழிப - அவ்விரு முடிபும் செய்யுட்கண் உரித்தென்று சொல்லுவர்.

**எ - டு :** அதாஅன்றம்ம, இதாஅன்றம்ம, உதாஅன்றம்ம
எனவும் அதைமற்றம்ம, இதைமற்றம்ம, உதைமற்றம்ம எனவும்வரும்.[1]

1. மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் முடியாததனை முட்டின்றி முடித்தல் என்பதனால், அதன்று இதன்று உதன்று என உகரங் கெட்டுத் தகரவொற்று நிற்றல் கொள்க. (நச்.)

## வேற்றுமையின் உகர ஈற்றுப்பெயர்

**260. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.**

இ∴து, இவ்வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - உகர வீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணும் அவ் அகரவீற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்குமுடியும்.

**எ - டு :** கடுக்காய் செதிள், தோல், பூ என வரும்.

## ‘எரு’ ‘செரு’ என்னும் சொற்கள்

**261. எருவுஞ் செருவும் அம்மொடு சிவணித்**
**திரிபிடன் உடைய தெரியுங் காலை**
**அம்மின் மகரஞ் செருவயின் கெடுமே**
**தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை.**

இ∴து, இவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதியும் ஒன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியை விதியும் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) எருவும் செருவும் அம்மொடு சிவணித் திரிபு இடன் உடைய தெரியும் காலை - எரு என்னும் சொல்லும் செரு என்னும் சொல்லும் அம்முச்சாரியையொடு பொருந்தி முன் சொன்ன வேற்றுமைப் பொதுவிதியின் வேறுபட்டு முடியும் இடனுடைய ஆராயுங்காலத்து அம்மின் மகரம் செருவயின் கெடும் - அவ் வம்முச்சாரியையது ஈற்றின் மகரம் செரு என்னும் சொல்லிடத்துக் கெட்டு முடியும் வல்லெழுத்து இயற்கை தம்ஒற்று மிகூஉம் - அவ்வாறு கெட்டவிடத்துச் செரு என்பது வல்லெழுத்தாகிய இயல்பையுடைய தமது ஒற்று மிக்கு முடியும்.

**எ - டு :** எருவங்குழி, சேறு, தாறு, பூழி எனவும்
செருவக்களம் சேனை, தானை, பறை எனவும் வரும்.

'தெரியுங்காலை' என்றதனால், எரு என்பதற்குப் பெரும்பான்மை மெல்லெழுத்துப்பேறும், சிறுபான்மை வல்லெழுத்துப் பேறும், செரு என்பதற்குச் சிறுபான்மை வல்லெழுத்துப்பேறும் கொள்க. எருங்குழி, எருக்குழி, செருக்களம் என வரும்.

குறிப்புகள்

'வல்லெழுத்தியற்கை' என்றதனான் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி அவ்விருமொழிக்கும் அதிகார வல்லெழுத்து வீழ்வும் கொள்க. எருவின் கடுமை, செருவின் கடுமை என வரும்.

இன்னும் அதனானே, 'அம்மொடு சிவணித் திரிபிடனுடைய' என வல்லெழுத்தின்கண்ணதாக வரைந்து கூறினமையின், அம்முச் சாரியை இயல்புகணத்துக்கண் பெறுவன கொள்க. எருவஞாற்சி, செருவஞாற்சி என வரும்.

## ழகர உகர ஈறு

**262. ழகர உகரம் நீடிடன் உடைத்தே**
**உகரம் வருதல் ஆவயினான.**

இ∴து, இவ்வீற்றில் சிலவற்றிற்குச் செய்யுள் எய்தியதன் மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ழகர உகரம் நீடு இடன் உடைத்து-இவ்வீற்று மொழிகளுள் ழகரத்தொடு கூடிய உகரவீற்றுமொழி அவ் வுகரம் ஊகாரமாய் நீண்டு முடியும் இடன் உடைத்து ' ஆவயின் உகரம் வருதல்-அவ்விடத்து உகரம் வந்து முடிக.

'இடனுடைத்து' என்றதனான் இது செய்யுளிடத்தெனக் கொள்க.

**எ - டு :** 'பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி' என வரும்.

## 'ஒடு' என்னும் மரப்பெயர்

**263. ஒடுமரக் கிளவி யுதிமர இயற்றே.**

இ∴து, இவ்வீற்று மரப்பெயருள ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஒடு மரக்கிளவி உதிமர இயற்று-ஒடு என்னும் மரத்தினை உணரநின்ற சொல் உதி என்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும்.

**எ - டு :** ஒடுங்கோடு செதிள், தோல், பூ என வரும்.

## சுட்டுப் பெயர்க்குச் சாரியை

**264. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்**
**ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை.**

இ∴து, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டு முதல் இறுதி உருபு இயல் நிலையும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகரவீற்றுச் சொற்கள் உருபு புணர்ச்சியிற் சொன்ன இயல்பிலே நின்று அன்சாரியை பெற்று உகரம் கெட்டு முடியும்

வல்லெழுத்து இயற்கை ஒற்று இடை மிகா - அவ்விடத்து வல்லெழுத்து இயற்கையாகிய ஒற்று இடைக்கண் மிகா.

**எ - டு :** அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு செதிள், தோல், பூ என வரும்.

குறிப்புகள்

'ஒற்று இடைமிகா' என்றதனால், சாரியை வகுப்ப வல்லெழுத்து விழாதென்பது பெற்றாம். 'வல்லெழுத்தியற்கை' என்றதனால், இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கடுவின்குறை, ஒடுவின்குறை என வரும்.

ஊகார ஈறு

## 6. ஊகார ஈறு

## அல்வழியில் ஊகார ஈற்றுப்பெயர்

**265. ஊகார இறுதி ஆகார இயற்றே.**

இ∴து, ஊகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஊகார இறுதி ஆகார இயற்று - ஊகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** கொண்மூக்கடிது சிறிது, தீது, பெரிது எனவரும்.

## ஊகார ஈற்று வினைச்சொல்

**266. வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்**
**நினையும் காலை அவ்வகை வரையார்.**

இ∴து, இவ்வீற்று வினைச்சொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும் - ஊகாரவீற்று வினையெச்சமாகிய சொல்லிற்கும் முன்னிலை மொழியாகிய வினைச்சொல்லிற்கும், நினையும்காலை அவ்வகை வரையார் - ஆராயுங்காலத்து அவ் வல்லெழுத்து மிக்குமுடியும் கூற்றினை நீக்கார்.

**எ-டு :** உண்ணூக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்: கைத்தூக்கொற்றர் சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

'நினையுங்காலை' என்றதனான், இவ்வீற்று உயர்திணைப்பெயர் அல்வழிக்கண் வல்லெழுத்து மிக்கு முடிவன கொள்க. ஆடூஉக்குறியன், மகடூஉக்குறியள் என வரும்.

## வேற்றுமையில் ஊகார ஈறு

**267. வேற்றுமைக் கண்ணும் அதனோரற்றே.**

இ∴து, ஊகாரவீறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - ஊகார வீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் அவ்ஆகார வீற்று அல்வழியோடு ஒத்த இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** கொண்மூக்குழாம் செலவு, தோற்றம், மறைவு என வரும்.

## குறிற்கீழ் ஊகாரமும் தனிமொழி ஊகாரமும

**268. குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**நிற்றல் வேண்டும் உகரக் கிளவி.**

குறிப்புகள்

இ∴து, இவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) குற்றெழுத்து இம்பரும் ஓர் எழுத்து மொழிக்கும் உகரக்கிளவி நிற்றல் வேண்டும்-குற்றெழுத்தின்பின் நின்ற ஊகாரவீற்றுமொழிக்கும் ஓரெழுத்தொரு மொழியாகிய ஊகாரவீற்று மொழிக்கும் உகரமாகிய எழுத்து நிற்றல் வேண்டும்.

**எ - டு :** உடூஉக்குறை, தூஉக்குறை, செய்கை, தலை, புறம் என வரும்.

'நிற்றல' என்றதனால் இவ்வீற்று உயர்திணைப்பெயர் வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுவனவும் கொள்க. ஆடூஉக்கை, மகடூஉக்கை செவி, தலை,புறம் என வரும்.

## பூ என்னும் பெயர்

**269. பூ என ஒருபெயர் ஆஇயல் பின்றே**
**ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே.**

இ∴து, அவற்றுள் ஒன்றக்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல்லெழுத்தும் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறுமென எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) பூ என ஒரு பெயர் அ இயல்பு இன்று - பூ என்னும் ஊகாரவீற்றையுடைய ஒரு பெயர் மேற்சொன்ன உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் அந்த இயல்பில்லாமையை உடைத்து எனவே, வேறு ஓர் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்குமுடியும். ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து-அவ்விடத்து அம் மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து.

மெல்லெழுத்துப் பெறுமென்றது, உரையிற் கோடலாற் கொள்ளப்பட்டது.

**எ - டு :** பூங்கொடி, பூக்கொடி செய்கை, தாமம் பந்து என வரும்.

## 'ஊ' என்னும் பெயர்

**270. ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும்,**

இ∴து இன்னும் அவ்வீற்றுள் ஒன்றற்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கி நிலைமொழி னகரம் பெறுமென எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) ஊ என் ஒரு பெயர் ஆவொடு சிவணும்-ஊ என்று சொல்லப்படும் ஊகாரவீற்றையுடைய ஒரு பெயர் ஆகார வீற்றில் ஆ என்னும் சொல்லொடு பொருந்தி வல்லெழுத்துப் பெறாது நிலைமொழி னகரவொற்றுப் பெற்று முடியும்.

**எ - டு :** ஊன்குறை செய்கைத் தலை, புறம் என வரும்.

## இதுவும் அது

**271. அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே**
**தக்கவழி அறிதல் வழக்கத் தான.**

குறிப்புகள்

இ∴து, இன்னும் அதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அக்கு என் சாரியை பெறுதலும் உரித்து-அதிகாரத்தான் நின்ற ஊ என்னும் பெயர் மேற் கூறிய னகரத்தோடு அக்கு என்னும் சாரியை பெற்று முடிதலும் உரித்து வழக்கத்தான் தக்கவழி அறிதல்-வழக்கிடத்து அம்முடிபு தக்க இடம் அறிக.

'தக்க வழியறிதல்' என்றதனால், சாரியை பெற்றவழி நிலைமொழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும் முன்மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலும் கொள்க.

**எ - டு :** ஊனக்குறை˙ செய்கை, தலை, புறம் என வரும்.

'வழக்கத்தான' என்றதனான், இவ்வீற்று உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க கொண்மூவின் குழாம் என வரும்.

## 'ஆடூஉ, மகடூஉ' என்னும் பெயர்கள்

**272. ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்**
**இன்னிடை வரினும் மான1 மில்லை.**

இ∴து, அவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கும் முன்எய்திய வல்லெழுத்தேயன்றி, சாரியையும் பெறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஆடூஉ மகடூஉ ஆ இரு பெயர்க்கும்-ஆடூஉ மகடூஉவாகிய அவ்விரண்டு பெயர்க்கும், இன் இடைவரினும் மானம் இல்லை-மேல் 'குற்றெழுத் திம்பரும்' (உயிர் மயங்கியல்-65) என்னும் சூத்திரத்தின் 'நிற்றல்' என்பதனால் வந்த வல்லெழுத் தேயன்றி இன்சாரியை இடை வரினும் குற்றம் இல்லை.

**எ - டு :** ஆடூஉவின்கைம் மகடூஉவின்கைச் செவி, தலை, புறம் என வரும்.

'மான மில்லை' என்றதனான், இன் பெற்றவழி மேல் இலேசினானெய்திய வல்லெழுத்து வீழ்க்க.

1. மானம்-அளவு, வரை, வரைதல்,நீக்குதல். 'உருவுகொளல் வரையார்' (எழுத். 140) என்றும், அவ்வகை வரையார் (எழுத்.266) என்றும் ஆசிரியர் கூறுதல் காண்க. மானமில்லை, வரைவில்லை, விலக்கில்லை. (பாவாணர்.)

# கூறு - 12 உயிர் மயங்கியல

## 7. எகர ஒகர ஈறு

குறிப்புகள்

### அல்வழியில் எகர ஒகர ஈறுகள்

**273. எகர ஒகரம் பெயர்க்கீ றாகா**
**முன்னிலை மொழிய என்மனார் புலவர்**
**தேற்றமுஞ் சிறப்பும் அல்வழி யான.**

இ∴து எகரவீற்றிற்கும் ஒகரவீற்றிற்கும் ஈறாகாத நிலையில் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எகரம் ஒகரம் பெயர்க்கு ஈறு ஆகா-எகரமும் ஒகரமும் பெயர்ச்சொற்கு ஈறு ஆகா, முன்னிலை மொழிய என்மனார் புலவர் - வினைச்சொல்லுள் முன்னிலை மொழியிடத்தன வென்று சொல்லுவர் புலவர் தேற்றமும் சிறப்பும் அல்வழியான -தேற்றப் பொருண்மையில் வரும் இடைச்சொல் எகார வீறும் சிறப்புப்பொருண்மையின் வரும் இடைச்சொல் ஒகார வீறும் அல்லாதவிடத்து.

**எ - டு :** ஏஎ எனவும், ஓஒ எனவும் வரும். இவை முன்னிலைவினை. ஏஎ கொண்டான், ஓஒ கொண்டான் இவை இடைச்சொல்.

## 8. ஏகார ஈ று

### எகர ஒகர இடைச்சொற்கள்

**274. தேற்ற எகரமுஞ் சிறப்பின் ஒவ்வும்**
**மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா.**

இ∴து, முன் ஈறாம் என்னப்பட்ட எகர ஒகர ஈற்று இடைச்சொற்கும் அவ்வீற்று முன்னிலை வினைச்சொற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்-தேற்றப் பொருண்மையில் வரும் எகரவீற்று இடைச்சொல்லும், சிறப்புப் பொருண்மையில் வரும் ஒகரவீற்று இடைச்சொல்லும், மேல்கூறு இயற்கை வல்லெழுத்து மிகா-மேலை முன்னிலை வினைச்சொற்குக் கூறப்படும் இயல்புடைய வல்லெழுத்து மிகாவாய் இயல்பாய் முடியும்.

'மேற் கூறியற்கை வல்லெழுத்து மிகா' என்றதனால் 'வந்தது கொண்டு வராதது உணர்க' என்னும் தந்திரவுத்திவகையான் வல்லெழுத்து மிகுமென்பது கூறப்பட்டதாயிற்று.

**எ - டு :** யானேஎ கொண்டேன், நீயேஎ கொண்டாய், அவனே எ கொண்டான் எனவும் (ஓஒகொண்டேன், ஓஒ கொண்டாய்.) ஓஒகொண்டான் எனவும் வரும். இவை இடைச்சொல்.

ஏஎக்கொற்றா, ஓஒக்கொற்றா் சாத்தா, தேவா, பூதா என இவை முன்னிலைவினை. 'இயற்கை' என்றதனான், அம் முன்னிலை வினைகளை அளபெடையாக நிறீஇக் கொள்க.

## அல்வழியில் ஏகார ஈற்றுப்பெயர்

**275. ஏகார இறுதி ஊகார இயற்றே.**

இ∴து, ஏகாரவீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

குறிப்புகள்

(இ-ள்) ஏகார இறுதி ஊகார இயற்று - ஏகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் ஊகாரவீற்று அல்வழி இயல்பிற்றாய். வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** சேக்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

## ஏகார இடைச் சொற்கள்

**276. மாறுகொள்1 எச்சமும் வினாவும் எண்ணும்**
**கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்.**

இ∴து, அவ்வீற்று இடைச்சொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்- மாறுபாடுகோடலையுடைய எச்சப்பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும் வினாப் பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும் எண்ணுப்பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும், கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்- மேற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்.

**எ - டு :** யானே கொண்டேன் சென்றேன், தந்தேன்,போயினேன் எனவும் நீயே கொண்டாய் சென்றாய், தந்தாய், போயினாய் எனவும் கொற்றனே, சாத்தனே, தேவனே, பூதனே எனவும் வரும்.

'கூறிய' என்றதனால், பிரிநிலைப் பொருண்மைக்கண்ணும் ஈற்றசைக்கண்ணும் வரும் ஏகாரங்களின் இயல்பு முடிபு கொள்க.

அவனே கொண்டான் என்பது பிரிநிலை, 'கடலே பாடெழுந்தொலிக்கும்' என்பது ஈற்றசை.

1. (பாடம்) மாறுகோள். (நச்.)

## வேற்றுமையின் ஏகார ஈறு

**277. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே**

இ∴து, இவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-ஏகாரவீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் அவ் வூகாரவீற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** வேக்குடம்1 சாடி, தூதை, பானை எனவரும்.

1. வேக்குடம், வேதலையுடைய குடமென விரியும். (நச்.)

## அதற்கு மேலும் ஒரு முடிபு

**278. ஏயென் இறுதிக்கு எகரம் வருமே.**

இ∴து, அவ்வீற்றிற்கு எய்தியதன் மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஏ என் இறுதிக்கு எகரம் வரும்-அவ்வேற்றுமைக்கண் ஏ என்னும் இறுதிக்கு எகரம் வரும்.

**எ - டு :** ஏஎக்கொட்டில் சாலை, துளை, புழை என வரும்.

[1]‘உரையிற்கோடல்’ என்பதனான், அவ்வெகரப்பேறு பொருந்தின வழிக் கொள்க.

1. வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்துக் கண்ணுமெனக் கொள்க. ஏஎ ஞெகிழ்ச்சி நேர்மை என வரும். (நச்.)

குறிப்புகள்

## சே என்னும் மரப்பெயர்

**279. சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே.**

இஃது, அவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

(இ-ள்) சே என் மரப்பெயர் ஒடு மர இயற்று - சே என்னும் மரத்தினை உணரநின்ற பெயர் ஒடுமரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** சேங்கோடு செதிள், தோல், பூ என வரும்.

## சே என்னும் விலங்கின் பெயர்

**280. பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்.**

இஃது, அம் மரப்பெயரல்லாத சே என்பதற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும் - மேற் கூறிய சே என்பது பெற்றத்தினை உணரநின்ற பொழுதாயின் முடிய இன்சாரியை பெற்று முடிய வேண்டும்.

**எ - டு :** சேவின்கோடு செவி, தலை, புறம் என வரும்.

‘முற்ற’ என்றதனால் இச் சே என்பது எடுத்தோத்தான் இன் பெற்றவழியும், அதுவே மரப்பெயராய் உருபிற்கு எய்திய சாரியை பெற்றவழியும் பிறசொல் அவ்வாறு இன் பெற்ற வழியும் இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

**எ - டு :** சேவின்கோடு செவி, தலை, புறம் எனவும் சேவின் கோடு செதிள், தோல், பூ எனவும் ஏவின் கடுமை சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

## 9. ஐகார ஈறு

## வேற்றுமையின் ஐயீற்றுப் பெயர்

**281. ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே.**

இஃது, ஐகாரவீற்று அல்வழி முடிபு தொகை மரபினுட் கூறி நின்றமையின் அதன் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர் - ஐகார வீற்றுப் பெயர்ச்சொல் முன்னர், வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகும் - அதிகாரத்தாற் க ச த ப முதல்மொழி வந்தவழி வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** யானைக்கோடு செவி, தலை, புறம் என வரும்.

## சுட்டுப்பெயர்

**282. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்.**

இ∴து, இவ்வீற்றுட் சுட்டு முதற்பெயர்க்கு வல்லெழுத்தோடு வற்று வகுத்தல் நுதலிற்று.

குறிப்புகள்

(இ-ள்) சுட்டு முதல் இறுதி உருபு இயல் நிலையும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுப்பெயர் உருபு புணர்ச்சியிற் கூறிய இயல்பின்கண்ணே நின்று ஐகாரம் கெடாதும் கெட்டும் வற்றுப்பெற்று முடியும். (உருபியல், சூத் - 5. பார்க்க.)

**எ - டு :** அவையற்றுக்கோடு, இவையற்றுக்கோடு, உவையற்றுக்கோடு செவி, தலை, புறம் எனவும் அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு செவி, தலை, புறம் எனவும் வரும்.

## 'விசை' 'ஞெமை' 'நமை' என்னும் மரப்பெயர்கள்

**283. விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்**
**அவைமுப் பெயருஞ் சேமர இயல.**

இ∴து, இவ்வீற்றுள் மரப்பெயர் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) விசை மரக்கிளவியும் ஞெமையும் நமையும் அவை முப்பெயரும் - விசை என்னும் மரத்தினை உணர நின்ற சொல்லும் ஞெமை என்னும் மரத்தினை உணர நின்ற சொல்லும் நமை என்னும் மரத்தினை உணர நின்ற சொல்லும் ஆகிய அம் மூன்று பெயரும், சேமர இயல-மேற்கூறிய வல்லெழுத்து மிகாது சே என்னும் மரத்தினது இயல்பினவாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு செதிள்,தோல், பூ என வரும்.

## 'பனை' 'அரை' 'ஆவிரை' என்னும் மரப்பெயர்கள்

**284. பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்**
**நினையுங் காலை அம்மொடு சிவணும்**
**ஐயென் இறுதி யரைவரைந்து கெடுமே**
**மெய்அவண் ஒழிய என்மனார் புலவர்.**

இதுவும் அது.

(இ-ள்) பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்-பனை என்னும் சொல்லும் அரை என்னும் சொல்லும் ஆவிரை என்னும் சொல்லும், மேற் கூறிய வல்லெழுத்து மிகா, நினையுங் காலை அம்மொடு சிவணும் - ஆராயுங்காலத்து அம் என்னும் சாரியையொடு பொருந்தி முடியும், ஐ என் இறுதி அரை வரைந்து கெடும்-அவ்விடத்து ஐ என்னும் ஈறு அரை என்னும் சொல்லை நீக்கிக் கெடும், மெய்அவண் ஒழிய என்மனார் புலவர்-தன்னாலூரப்பட்ட மெய் அச் சொல்லிடத்தே ஒழியவென்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** பனங்காய் செதிள்,தோல், பூ எனவும் அசையுங்கோடு

செதிள்,தோல், பூ எனவும் ஆவிரங்கோடு செதிள்,தோல், பூ எனவும் வரும்.

'நினையுங்காலை' என்றதனால் பிறவும் தூதுணை, வழுதுணை தில்லை, ஓலை என வருவனவற்றிற்கும் அம்முக்கெடுத்து ஐகாரம் கெடுத்துத் தூதுணங்காய், வழுதுணங்காய், தில்லங்காய், ஓலம் போழ் என்று முடிக்க.

குறிப்புகள்

## 'பனை' முன் 'அட்டு'

**285. பனையின் முன்னர் அட்டுவரு காலை**
**நிலையின் றாகும் ஐயென் உயிரே**
**ஆகாரம் வருதல் ஆவயினான.**

இதுவும் அது.

(இ-ள்) பனையின் முன்னர் அட்டு வருகாலை - மேற் கூறிய வழியேயன்றிப் பனை என்னும் சொல்லின் முன்னர் அட்டு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலை இன்றாகும் ஐ என் உயிர் - நிற்றல் இன்றாம் ஐ என்னும் உயிர் ஆ வயின் ஆன ஆகாரம் வருதல் - அவ்விடத்து வந்து அம்மெய்ம்மேல் ஏறி முடிக.

**எ - டு :** பனாஅட்டு என வரும்.

'ஆவயின்' என்றதனால், விச்சாவாதி என்றாற் போல்வன வற்றது வேற்றுமை முடிபு கொள்க.

## 'பனை' முன் 'கொடி'

**286. கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக்**
**கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி.**

இதுவும் அது.

(இ-ள்) கொடி முன் வரின் - கொடி என்னும் சொல் பனை என்னும் சொல்முன்னர் ஐ வரின் - அவண் நிற்ப வல்லெழுத்து மிகுதி கடிநிலை இன்று - மேற்கெடுக்க எனப்பட்ட ஐகாரம் ஆண்டுக் கெடாதே நிற்ப வல்லெழுத்து மிகுதி நீக்கும் நிலைமையின்று.

**எ - டு :** பனைக்கொடி என வரும்.

'கடிநிலை' என்றதனான், இவ்வீற்றுள் எடுத்தோத்தானும் இலேசினானும் அம்முச்சாரியையும் பிற சாரியையும் பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. இன்னும் இதனானே உருபிற்குச் சென்ற சாரியை பொருட்குச் சென்ற வழியும் இயைபு வல்லெழுத்து வீழ்க்க. பனையின் காய், அரையின் கோடு, ஆவிரையின்கோடு எனவும் விசையின்கோடு, ஞெமையின்கோடு, நமையின்கோடு எனவும் தூதுணையின்காய், வழுதுணையின் காய் எனவும் வழையின்கோடு, வழையின் பூ எனவும் வரும். 'அவண்' என்றதனால், பனைத்திரள் என வல்லெழுத்துப் பேறும் கொள்க.

குறிப்புகள்

## திங்கட்பெயரும் நாட்பெயரும்

**287. திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன.**

இஃது, இயைபு வல்லெழுத்தினோடு சாரியைப்பேறும் வல்லெழுத்து விலக்கிச் சாரியைப்பேறும் கூறுகின்றமையின் எய்தியதன் மேற் சிறப்பு விதியும் விலக்கிப் பிறிது விதியும் வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன-ஐகார வீற்றத் திங்களை உணர நின்ற பெயரும் அவ்வீற்று நாள் உணர நின்ற பெயரும் முன் இகரவீற்றுத் திங்களும் நாளும் கிளந்த தன்மையவாய் இருக்கும் ஆனும் பெற்று முடியும்.

**எ - டு :** சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற் கொண்டான் சென்றான், தந்தான், போயினான் என வரும்.

நாள் முன்கூறாது திங்கள் முன்கூறியவதனால், கரியவற்றுக் கோடு எனவும் அவையத்துக் கொண்டான் எனவும் வழைங் கோடு எனவும் கலைங்கோடு, கலைக்கோடு, எனவும் இவ்வீற்று முடியாதனவெல்லாம் கொள்க.

## 'மழை' என்னும் சொல்

**288. மழையென் கிளவி வளியியல் நிலையும்.**

இஃது, இயைபு வல்லெழுத்தினோடு அத்துப்பேறும் வல்லெழுத்து விலக்கி இன்னும் வகுக்குக்கின்றமையின் எய்தியதன் மேற் சிறப்பும் எய்தியது விலக்கிப் பிறிதும் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மழை என் கிளவி வளி இயல் நிலையும்- மழை என்னும் ஐகாரவீற்றுச்சொல் இகரவீற்று வளி என்னும் சொல் அத்தும் இன்னும் பெற்று முடிந்த இயல்பின் கண்ணே நின்று முடியும்.

**எ - டு :** மழையத்துக் கொண்டான், மழையிற் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

## வேட்கை முன் அவா

**289. செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்**
**ஐயென் இறுதி அவாமுன் வரினே**
**மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்**
**டகாரம் ணகார மாதல் வேண்டும்.**

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு அல்வழிக்கண் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) செய்யுள் மருங்கின் வேட்கை என்னும் ஐ என் இறுதி - செய்யுளிடத்து அல்வழிக்கண் வேட்கை என்னும் ஐகார வீற்றுச்சொல், அவா முன்வரின் - அவா என்னும் சொல் தனக்கு முன்வரின், மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்-அவ்வைகாரம் தான் ஊர்ந்த மெய்யொடுங்கூடக் கெடுகவென்று சொல்லுவர் புலவர் டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும். அவ்விடத்து நின்ற டகாரவொற்று ணகாரவொற்றாய்த் திரிந்து முடிதல் வேண்டும்.

**எ - டு :** 'வேணவா1 நலிய வெய்ய வுயிரா' என வரும். இதனை உம்மைத் தொகையாகக் கொள்க. அவாவென்பது அவ்வேட்கையின் விகுதி.

இவ்வல்வழியை வேற்றுமை முடிபிற்கு முன் கூறாததனால் விச்சாவாதி என்றாற்போல வரும் உம்மைத் தொகை அல்வழி முடிபும், பாறங்கல் என இரு பெயரொட்டு அல்வழி முடிபும் கொள்க.

குறிப்புகள்

1. வேட்கையாவது பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம் எனவும், அவாவாவது அப்பொருள்களைப் பெறவேண்டும் என்று மேன்மேல் நிகழும் ஆசை எனவும், ' பொருள்கூறி வேணவா' என்பதனை வேட்கையாலுண்டாகிய அவா என முன்றனுருபும் பயனும் தொக்க தொகையாகக் கொண்டார்.2 (நச்.)

2. இந்நூற்பாவின்படி வேட்கை-அவா-வேணவா என்று முடிக்காமல் வேண்-அவா-வேணவா என்றே முடிக்கவும் கூடும். வேள்-வேண், ஒ, நோ: பெள் - பெண். (பாவாணர்.)

## 10. ஓகார ஈறு

### அல்வழியில் ஓகார ஈற்றுப்பெயர்

**290. ஓகார இறுதி ஏகார இயற்றே.**

இ∴து, ஓகார வீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஓகார இறுதி ஏகார இயற்று - ஓகாரவீற்று அல்வழிப் பெயர்ச் சொல் ஏகாரவீற்று அல்வழி இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்த வழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** ஒக்கடிது சிறிது, தீது, பெரிது என வரும்.

### ஓகார இடைச்சொல்

**291. மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்**
**கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.**

இ∴து, இவ்வீற்று இடைச்சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும் - மாறுபாட்டினைக் கொண்ட எச்சப் பொருண்மையினையுடைய ஓகாரமும், வினாப்பொருண்மையையுடைய ஓகாரமும் ஐயப் பொருண்மையினையுடைய ஓகாரமும். கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும் - முன் பெயர்க்குக் கூறிய வல்லெழுத்தன்றி இயல்பாய் முடியும்.

**எ - டு :** யானோ கொண்டேன் எனவும், நீயோ கொண்டாய் எனவும், பத்தோ பதினொன்றோ எனவும் வரும்.

'கூறிய' என்றதனால், பிரிநிலையும், தெரிநிலையும், எண்ணும் ஈற்றசையும் இயல்பாய் முடிதல் கொள்க. அவனோ கொண்டான் எனவும், நன்றோ தீதோவன்று எனவும், 'குன்றுறழ்ந்த களிறென்கோ கொய்யுளைய மாவென்கோ' எனவும் யானோ தேறேன் எனவும் வரும்.

## இதுவும் அது

**292. ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற்1 றியற்றே.**

இதுவும் அது.

குறிப்புகள்

(இ-ள்) ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற்று இயற்று - ஒழியிசை ஓகாரத்தினது நிலையும் மேற்சொல்லியொழிந்த ஓகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய் முடியும்.

**எ - டு :** கொளலோ கொண்டான் என வரும்.

1. (பாடம்) மொழிந்தவற். (நச்.)

## வேற்றுமையில் ஓகார ஈற்றுப்பெயர்

**293. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே**
**ஓகாரம் வருதல் ஆவயி னான.**

இஃது, அவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - ஓகார வீற்று வேற்றுமைக்கண்ணும் அவ்வோகார வீற்று அல்வழியோடொத்து வல்லெழுத்துப் பெற்றுப் புணரும். ஆவயின் ஆன ஒகரம் வருதல் - அவ்விடத்து ஒகரம் வருக.

**எ - டு :** ஓஒக்கடுமை சிறுமை, தீமை, பெருமை என வரும்.

## 'கோ' முன் 'இல்'

**294. இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்.**

இஃது, எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

(இ-ள்) இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும் - ஓகார வீற்றுக் கோ என்னும் மொழியினை இல் என்னும் வருமொழியொடு சொல்லின் ஓகாரம் மிகாது இயல்பாய் முடியும்.

**எ - டு :** கோயில் என வரும்.

நிலைமொழி ஒகரவெழுத்துப்பேறும் வரையாது கூறினவழி நான்கு கணத்துக் கண்ணும் செல்லுமென்பதனாற் பெற்றாம். கோ வென்றது உயர்திணைப் பெயரன்றோவெனின் கோவந்ததென அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப்பாற்பட்டது போலும்.1

1. அஃறிணைப்பாற் படுதலாவது சொல்லால் அஃறிணையாயும் பொருளால் உயர்திணையாயுமிருத்தல். (பாவாணர்.)

## சில ஈறுகட்குச்சாரியை

**295. உருபியல் நிலையும் மொழியுமா ருளவே**
**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.**

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) உருபுஇயல் நிலையும் மொழியுமார் உள - அவ்வீற்றுட் சில உருபுபுணர்ச்சியது இயல்பிலே நின்று ஒன்சாரியை பெற்று முடியும் மொழிகளும் உள் ஆ வயின் வல்லெழுத்து இயற்யை ஆகும் - அவ்விடத்து வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும்.

**எ - டு :** கோஒன்கைச் செவி, தலை, புறம் என வரும்.

இதனானும் பெற்றாம், சாரியைப்பேறு வருமொழி வல்லெழுத்து விலக்காமை.

குறிப்புகள்

## 11. ஔகார ஈறு

### இருவழியிலும் ஔகார ஈற்றுமெய்

**296. ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே**
**அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்**
**செவ்வி தென்ப சிறந்திசி னோரே.**

இ∴து, ஔகார ஈறு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஔகார இறுதி பெயர்நிலைமுன்னர் அல்வழியானும் வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்று - ஔகாரவீற்றுப் பெயர்ச் சொல்முன்னர் வல்லெழுத்து முதல் மொழி வரின் அவை அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத்து மிக்கு முடிதல் நீக்கும் நிலையின்றாம், அஇரு ஈற்றும் உகரம் வருதல் செவ்விது என்ப சிறந்திசினோர் - அவ்விருகூற்று முடிபின்கண்ணும் நிலைமொழிக்கண் உகரம் வந்து முடிதல் செவ்விதென்று சொல்லுவர் சிறந்தோர்.

**எ - டு :** கௌவுக்கடிது சிறிது, தீது, பெரிது எனவும் கௌவுக்கடுமை சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

'செவ்விது' என்றதனான், மென்கணத்துக்கண்ணும் இடைக்கணத்துக்கண்ணும் இருவழியும் உகரப்பேறு கொள்க. கௌவுஞான்றது, கௌவுஞாற்சி எனவும் கௌவு வலிது, கௌவு வலிமை எனவும் வரும்.

'நிலை' என்றதனால், கௌவின் கடுமை என உருபிற்குச் சென்ற சாரியை. பொருட்கள் சென்றவழி, இயைபு வல்லெழுத்து வீழ்வு கொள்க.

ஏழாவது உயிர் மயங்கியல் முற்றிற்று.

# கூறு - 13 புள்ளி மயங்கியல்

## புள்ளி மயங்கியல்

குறிப்புகள்

### 8. புள்ளி மயங்கியல்

(மெய்யீறுகளின் புணர்ச்சி இலக்கணம் உணர்த்துவது)
இவ்வோத்து என்ன பெயர்தோவெனின், புள்ளியீறு வன்கணத்தோடும் சிறுபான்மை பிறகணத்தோடும் மயங்கிப்புணரும் இயல்வு உணர்த்தினமையின் புள்ளிமயங்கியல் என்னும் பெயர்த்து.

### 1. மெல்லொற்று ஈறுகள்

### இருவழியிலும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர்

**297. ஞகார ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே**
**உகரம் வருதல் ஆவயி னான.**

இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், ஞகாரவீறு வன்கணத்தோடு இருவழிக்கண்ணும் புணருமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர் - ஞகாரம் ஈற்றின்கண் ஒற்றாகநின்ற தொழிற்பெயரின் முன்னர், அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும் - அல்வழிக் கண்ணும், வேற்றுமைக்கண்ணும், வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்துமிகும் - வல்லெழுத்து முதல்மொழி வருமொழியாயின் வல்லெழுத்து வருமொழிக்கண் மிக்கு முடியும், ஆவயின் ஆன உகரம் வருதல் - ஆண்டு நிலைமொழிக்கண் உகரம் வருக.

**எ - டு :** உரிஞுக்கடிது சிறிது, தீது, பெரிது எனவும் உரிஞுக்கடுமை சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

### அதற்குமேலும் ஒரு முடிபு

**298. ஞநமவ இயையினும் உகர நிலையும்.**

இஃது, அவ்வீறு மென்கணத்தோடும் இடைக்கணத்து வகரத்தோடும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஞநமவ இயையினும் உகரம் நிலையும்-அந்த ஞகரவீறு வன்கணமன்றி ஞநமவ முதன்மொழி வருமொழியாய் இயையினும் நிலைமொழிக்கண் உகரம் நிலைபெற்று முடியும்.

**எ - டு :** உரிஞுஞான்றது ' நீண்டது, மாண்டது எனவும் ' உரிஞுஞாற்சி ' நீட்சி, மாட்சி எனவும் ' உரிஞுவலிது, வலிமை எனவும் வரும்.

இடைக்கணத்து யகரத்தோடும் உயிரோடும் புணருமாறு தொகை மரபினுள் 'உகரமொடு புணரும் புள்ளியிறுதி' (சூத் - 21) என்பதனுட் கூறப்பட்டது.

## அல்வழியில் நகர ஈறு

**299. நகர இறுதியும் அதனோ ரற்றே.**

இ∴து, நகரவீறு மேற்கூறிய கணங்களோடு ஒருவழி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நகர இறுதியும் அதன் ஓர் அற்று - நகரவீற்றுப் பெயரும் மேற்கூறிய கணங்களொடு புணரும் வழி அஞ்ஞகாரவீற்றோடு ஓர் இயல்பிற்றாய் முடியும்.

எ - டு : பொருநுக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவும்` ஞான்றது ` நீண்டது` மாண்டது எனவும்` பொருநுவலிது எனவும் ஒட்டுக.

## வேற்றுமையில் நகர ஈறு

**300. வேற்றுமைக்கு உக்கெட அகர நிலையும்.**

இ∴து, அவ்வீற்று வேற்றுமைக்கண் நிலைமொழி முடிபு வேறாய் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமைக்கு உ கெட அகரம் நிலையும் - அந்நகரவீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் எய்திய நிலைமொழி உகரம் கெட அகரம் நிலைபெற்று முடியும்.

**எ - டு :**1பொருநக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை,எனவும்` பொருந ஞாற்சி, நீட்சி, மாட்சி எனவும்` பொருநவலிமை எனவும் வரும்.

அகரம் நிலையும் என்னாது ‘உகரங்கெட’ என்றதனான், அவ்விரு வீற்றின் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்வும் சிறுபான்மை உகரப்பேறும் கொள்க. பொருநின்குறை, உரிஞின்குறை எனவும்` ’உயவல் யானை வெரிநுச் சென்றன்ன’ (அகம் - 65) எனவும் வரும்.

1.பொருந் என்பது ஒருசாதிப் பெயரும், பொருநுதல் என்னும் வினைப்பெயருமாம்.(நச்.).

## ‘வெரிந்’ என்னும் சொல்

**301. வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி**
**வருமிடன் உடைத்தே மெல்லெழுத் தியற்கை.**

இ∴து, அந்நகரவீற்று ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) வெரிந்1என் இறுதி முழுதும் கெடுவழி - வெரிந் என்று சொல்லப்பட்ட நகரவீற்று மொழி தன் ஈற்று நகரம் முன்பெற்ற அகரத்தோடு எஞ்சாமற் கெட்டவிடத்து, மெல்லெழுத்து இயற்கை வரும் இடன் உடைத்து - மெல்லெழுத்துப் பெறும் இயல்பு வந்துமுடியும் இடனுடைத்து.

**எ - டு :** வெரிங்குறை` செய்கை, தலை, புறம் என வரும்.

1.’வெயில் வெரி நிறுத்த.... இட்டெழுதுப’ (அகம் - 37) என்பது நனண என்னும் மூன்று இனவெழுத்துக்களுள் முதலதே முந்தினது என்பதை உணர்த்தும். (பாவாணர்)

குறிப்புகள்

## அதற்கு மேலும் ஒரு முடிபு

**302. ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே.**

இ∴து, இன்னும் அம்மொழிக்கு எய்தியதோர் முடிபு கூறுதல் நுதலிற்று.

குறிப்புகள்

(இ-ள்) ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து - அவ்வெரிந் என்னும் சொல் அவ்வாறு ஈறு கெட்டு நின்றவிடத்து மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்குமுடிதலும் உரித்து.

**எ - டு :** வெரிக்குறை˙ செய்கை, தலை புறம் என வரும்.

ஞகாரவீற்றொடு நகாரவீறு ஒத்தமுடிபிற்றாதலின் உடன் கூறப்பட்டது.

## வேற்றுமையில் ணகர ஈறு

**303. ணகார இறுதி வல்லெழுத் தியையின்**
**டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.**

இ∴து, ணகாரவீறு வேற்றுமைப் பொருட்கண் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ணகார இறுதி வல்லெழுத்து இயையின் - ணகார வீற்றுப் பெயர் வல்லெழுத்து முதன்மொழி இயையின். டகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கு - டகாரமாய் முடியும் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்.

**எ - டு :** மட்குடம்˙ சாடி, தூதை, பானை என வரும்.

## 'ஆண்' 'பெண' என்னும் சொற்கள்

**304. ஆணும் பெண்ணும் அ∴றிணை இயற்கை.**

இ∴து, அவ்வீற்று விரவுப்பெயருட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) ஆணும்பெண்ணும் அ∴றிணை இயற்கை - ஆண் என்னும் பெயரும் பெண் என்னும் பெயரும் மேல் தொகை 'மரபினுள் மொழிமுத லாகும்' (சூத்திர்ம - 5) என்பதன்கண் அ∴றிணைப் பெயர் முடிந்த இயல்புபோலத் தாம் வேற்றுமைக் கண் இயல்பாய் முடியும்.

**எ - டு :** ஆண்கை, பெண்கை, செவி, தலை, புறம் என வரும்.

மற்றிது தொகை மரபினுள் 'அ∴றிணை விரவுப்பெயர்' (சூத்திரம் - 13) என்பதனுள் இயல்பாய் முடிந்ததன்றோ வெனின், இவை ஆண்டு முடிந்தனபோலத் தத்தம் மரபின் வினையாற் பாலறியப் பவனவன்றி, இருதிணைக்கண்ணும் அ∴றிணையாய் முடிதலின் அவ்வ∴றிணைப் பெயரது இயல்போடு மாட்டெறிந்து முடித்தான் எனக் கொள்க. இவ்வாறாதலின், ஆண்கடிது பெண்கடிது என்னும் அல்வழியும் 'மொழி முதலாகும்' (தொகைமரபு - 5) என்பதனுட் கொள்ளப்படும்.

## ஆண்ய என்னும் மரப்பெயர்

**305. ஆண்மரக் கிளவி அரைமா இயற்றே.**

இ∴து, திரிபு விலக்கிச் சாரியை வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) ஆண் மரக் கிளவி அரை மர இயற்று - ஆண் என்னும் மரத்தை உணரநின்ற பெயர்ச்சொல் அரைமரம் அம்முப் பெறும்

இயல்பிற்றாய்த் தானும் அம்முப்பெற்று முடியும்.

**எ - டு :** ஆணங்கோடு- செதின், தோல், பூ என வரும்.

## ‘விண்’ என்னும் சொல்

குறிப்புகள்

**306. விண்ணென வருஉங் காயப் பெயர்வயின்**
**உண்மையும் உரித்தே அத்தென் சாரியை**
**செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை.**

இஃது,செய்யுளுள் திரிபு விலக்கிச் சாரியை வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) விண் என வரும் காயப் பெயர்வயின் - விண் என்று சொல்லவருகின்ற ஆகாயத்தை உணரநின்ற பெயர்க்கண், அத்து என் சாரியை எண்மையும் உரித்து - அத்து என்னும் சாரியை உண்டாதலும் உரித்து இல்லையாதலும் உரித்து, செய்யுள் மருங்கின் தொழில் வரு காலை - செய்யுளிடத்து வினை வரும் காலத்து.

**எ - டு :** விண்ணத்துக் கொட்கும் எனவும், ’விண்குத்து நீள் வரை’ (நாலடி - 226) எனவும் வரும்.

## ணகர ஈற்றுத் தொழிற்பெயர்

**307. தொழிற்பெயர் ரெல்லாந் தொழிற்பெய ரியல.**

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி உகரமும் வல்லெழுத்தும் வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) தொழிற் பெயரெல்லாம் தொழிற்பெயர் இயல - ணகாரவீற்றுத் தொழிற்பெயரெல்லாம் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகாரவீற்றுத் தொழிற்பெயரது இயல்பாய் வன்கணம் வந்தவழி வல்லெழுத்து உகரப்பேறும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வந்தவழி உகரமும் பெற்று முடியும்.

**எ - டு :** மண்ணுக்கடிது எனவும்: மண்ணுக்கடுமை எனவும் ் மண்ணுஞ்ஞான்றது ் ஞாற்சி எனவும் மண்ணுவலிது, வலிமை எனவும் இருவழியும் ஒட்டுக.

‘எல்லாம்’ என்றதனான், தொழிற் பெயரெல்லனவும் உகரமும் வல்லெழுத்தும் பெறுவன கொள்க.1வெண்ணுக்கரை, எண்ணுப்பாறு, மண்ணுச்சோறு என வரும்.

1. வெண் - வெண்ணாறு (சோழநாட்டில் ஓர் ஆறு ) எண்ணுப்பாறு - எள்ளேற்றிய மரக்கலம், எண் - எள், பாறு - தோணி (பாவாணர்)

## ணகர ஈற்றுக் கிளைப்பெயர்

**308. கிளைப்பெய ரெல்லாங் கொளத்திரி பிலவே.**

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி இயல்பு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) கிளைப்பெயரெல்லாம் கொள திரிபு இல - ணகர வீற்றுள் ஓர் இனத்தை உணர நின்ற பெயரெல்லாம் திரிபுடைய வென்று கருதும்படியாகத் திரிதலுடையவன்றி இயல்பாய் முடியும்.

**எ - டு :** உமண்குடி் சேரி, தோட்டம், பாடி என வரும்.

‘எல்லாம்’ என்றதனான் இவ்வீறு சாரியை பெற்று முடிவனவும்

இயல்பாய் முடிவனவும் கொள்க, மண்ணக்கடி, எண்ண நோலை1 எனவும் பரண்கால், கவண்கால் எனவும் வரும்.

'கொள' என்றதனான், இவ்வீறு ஏழாம் வேற்றுமைப் பொருண்மை உணரநின்ற இடைச்சொல் திரிந்து முடிவனகொள்க. அங்கட்கொண்டான், இங்கட்கொண்டான், உங்கட்கொண்டான் எனவும் ஆங்கட்கொண்டான், ஈங்கட்கொண்டான், ஊங்கட்கொண்டான் எனவும், அவட்கொண்டான், இவட்கொண்டான், உவட்கொண்டான் எனவும் ஒட்டுக.

குறிப்புகள்

1. எண்ண நோலை - எள்ளுருண்டை, நோலை என்பதே எள்ளுருண்டையைக் குறிக்கும் ஆதலால், எண்ணநோலை என்பது நாண்கயிறு என்றாற்போல ஓரளவு மிகைபடக் கூறலாம். (பாவாணர்)

## அல்வழியில் 'எண்' என்னும் உணவுப்பெயர்

**309. வேற்றுமையல் வழி எண்ணென் உணவுப்பெயர்**
**வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே.**

இஃது, அவ்வீற்றுள் ஒன்று அல்வழியுள் வேற்றுமை முடிபுபோலத் திரிந்து முடிவது கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமை அல்வழி - வேற்றுமையல்லாத விடத்து, எண் என் உணவுப்பெயர் - எண் என்று சொல்லப் படுகின்ற உணவினையுணரத்தும் பெயர், வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்து - வேற்றுமையது திரிந்துமுடியும் இயல்பு நிற்றலும் உரித்து.

**எ - டு :** எட்கடிது சிறிது, தீது, பெரிது என வரும்.

உம்மையால், எண்கடிது என்று இயல்பாகவே பெரும் பான்மை.

## இருவழியிலும் 'முரண்' என்னும் தொழிற்பெயர்.

**310. முரணென் தொழிற்பெயர் முதலியல் நிலையும்.**

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர் ஒன்றற்குத் தொழிற்பெயர் முடிபு விலக்கி இவ்வீற்று அல்வழி முடிபும் வேற்றுமை முடிபுங் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) முரண் என் தொழிற்பெயர் முதல் இயல்நிலையும் - முரண் என்று கூறப்படும் தொழிற்பெயர் இவ்வீற்றிற்கு இரு வழியும் முன்கூறிய இயல்பும் திரிபுமாகிய இயல்பின் கண்ணே நின்று முடியும்.

**எ - டு :** முரண்கடிது சிறிது, தீது, பெரிது எனவும் முரட்கடுமைசேனை, தானை, பறை எனவும் வரும்.

இதனைத் 'தொழிற்பெய ரெல்லாம்' (சூத்திரம்-11) என்பதன் பின் வையாத முறையன்றிய கூற்றினான், முரண்கடுமை என்னும் இயல்பும் அரண்கடுமை,அரட்கடுமை என்னும் உறழ்ச்சியும் கொள்க.

## வேற்றுமையில் மகர ஈறு

**311. மகர இறுதி வேற்றுமை யாயின்**
**துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே.**

இஃது, மகரவீற்றிற்கு மேற்கூறிய ணகரவீற்று வேற்றுமை முடிபோடு இயைய வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மகர இறுதி வேற்றுமையாயின் - மகரவீற்றுப் பெயர்ச்சொல்

வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணாயின். துவரக் கெட்டு வல்லெழுத்து மிகும் - அம்மகரம் முற்றக்கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** மரக்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

'துவர' என்றதனான், இயல்புகணத்துக்கண்ணும் உயர்திணைப் பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் மகரக்கேடு கொள்க.

**எ - டு :** மரஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் நங்கை, எங்கை, செவி, தலை, புறம் எனவும் நுங்கை, தங்கை எனவும் வரும்.

## அதற்கு மேலும் இரு முடிபுகள்

**312. அகர ஆகாரம் வருஉங் காலை**
**ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே.**

இ∴து, அவ்வீற்று முடிபு வேற்றுமையுடையன கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அகரம் ஆகாரம் வருங்காலை - அகர முதல் மொழியும் ஆகார முதல்மொழியும் வருமொழியாய் வருங்காலை, ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்து - நிலைமொழிக்கண் ஈற்றின் மேல் நின்ற அகரம் நீளாது நிற்பதேயன்றி நீண்டு முடிதலும் உரித்து.

**எ - டு :** மரா அடி, குளாஅம்பல் எனவும் மரவடி குளவாம்பல் எனவும் வரும்.

வருமொழி முற்கூறியவதனான், இவ்வீற்றுட் பிறவும் வேறுபாட்டின் முடிபுகொள்க. கோணாகோணம், கோணாவட்டம்[1] என வரும்.

முன்னர்ச் 'செல்வழியறிதல்' (சூத் - 17) என்பதனால் குளாஅம்பல் என்புழி வருமொழி ஆகாரக்குறுக்கமும், கோணாகோணம் என்புழி வருமொழி வல்லெழுத்துக்கேடும் கொள்க.

1. கோணா கோணம் கோணா வட்டம் என்பனவற்றுள் கோணத்துள் கோணம் கோணத்துள் வட்டம் என ஏழனுருபு விரிக்க.

## அதற்கு மேலும் இரு முடிபுகள்

**313. மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே**
**செல்வழி யறிதல் வழக்கத் தான.**

இ∴து, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உள - மெல்லெழுத்தோடு உறழ்ந்து முடியும் மொழிகளும் உள் வழக்கத்தான செல்வழி அறிதல் - வழக்கின்கண் அவை வழங்கும் இடம் அறிக.

**எ - டு :** குளங்கரை, குளக்கரை் சேறு, தாது, பூழி என வரும்.

'செல்வழியறிதல்' என்றதனால், குளங்கரை, குளக்கரை என்றது போல, அல்லன ஒத்த உறழ்ச்சியல்லவென்பது கொள்க. 'வழக்கத்தான என்றதனான்', இவ்வீற்று வேற்றுமைக்கண் முடியாதனவெல்லாம் முடித்துக்கொள்க. இலவங்கோடு எனவும், புலம்புக்கனனே எனவும், நிலத்துக்கடந்தான் எனவும் வரும்

குறிப்புகள்

## ‘இல்லம்’ என்னும் மரப்பெயர்

**314. இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே.**

இ:.து, இவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

குறிப்புகள்

(இ-ள்) இல்ல மரப்பெயர் விசை மர இயற்று- இல்லம் என்னும் மரத்தினை உணரநின்ற பெயர் விசையென்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** இல்லங்கோடு செதிள், தோல், பூ என வரும்.

இதன்கண் மகரக்கேடு முன்னர் ’எல்லாம்’ (சூத்திரம்-69)என்பதனாற் கொள்க.

## அல்வழியில் மகர ஈறு

**315. அல்வழி யெல்லாம் மெல்லெழுத் தாகும்.**

இ:.து, அவ்வீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும் - மகரவீறு அல்வழிக்கணெல்லாம் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும்.

**எ - டு :** மரங்குறிது1 சிறிது, தீது, பெரிது என வரும்.

‘எல்லாம்’ என்றதனான், இவ்வீற்று அல்வழி முடிபில் முடியாதனவெல்லாம் கொள்க. மரஞான்றது நீண்டது மாண்டது எனவும் வட்டத்தழை, வட்டப்பலகை எனவும் கலக்கொள் கலநெல் எனவும் நீளக்கண், பவளவாய் எனவும் நிலநீர் எனவும் கொல்லுங்கொற்றன், பறக்குநாரை எனவும் வரும்.

1. ஆணைகூறல் - இவ்வாசிரியன் கருத்து இதுவெனக்கொள்ள வைத்தல். மகரம் பகரத்திற்கு இன மெல்லெழுத்தாதலின் அதன் முன் திரியாது என்பது கருத்து. (பாவாணர்.)

## ‘அகம்’ முன்கை

**316. அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே**
**முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்**
**வரைநிலை யின்றே யாசிரி யர்கக**
**மெல்லெழுத்து மிகுதல் ஆவயினான.**

இ:.து, இவ்வீற்றுள் மரூஉ முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அகம் என் கிளவிக்கு கைமுன்வரின் - அகம் என்னும் சொல்லிற்குக் கை என்னும் சொல் முன்வரின், முதல் நிலை ஒழிய முன்னவை கெடுதலும் - முன் ‘மகரவிறுத’ (சூத்திரம்-15) என்றதனான் மகரம் கெட்டுநின்ற நிலைமொழி முதல் நின்ற அகரம் ஒழிய அதன் முன்நின்ற அகரமும் அகரத்தாற் பற்றப்பட்ட ககர மெய்யும் கெட்டு முடிதலும் அவைகெடாது நின்று முடிதலும், வரைநிலை இன்று ஆசிரியர்க்கு-நீக்கும் நிலைமையின்று ஆசிரியர்க்கு் ஆ வயின் ஆன மெல்லெழுத்து மிகுதல் - அவ்விரண்டிடத்தும் மெல்லெழுத்து மிக்குமுடிக.

**எ - டு :** அங்கை, அகங்கை என வரும்.

## 'இலம்' முன் 'படு'

**317. இலமென் கிளவிக்குப் படுவரு காலை**
**நிலையலும் உரித்தே செய்யு ளான.**

குறிப்புகள்

இ∴து, இவ்வீற்று உரிச்சொல்லுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இலம் என் கிளவிக்கு படு வருகாலை - இலம் என்னும் சொல்லிற்குப் படு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலையலும் உரித்து செய்யுளான - முன் 'மகரவிறுதி' (சூத்திரம்-15) என்பதனாற் கெட்ட ஈறு கெடாது நின்று முடிதலும் உரித்துச் செய்யுட்கண்.

**எ - டு** :1'இலம்படு புலவரேற்றகை நிறைய' என வரும்.

உரிச்சொல்லாகலான் உருபு விரியாதெனினும் இலத்தாற் பற்றப்படும் புலவரென்னும் பொருள் உணர நிற்றலின் வேற்றுமை முடிபாயிற்று. உம்மை மகரவீறு என்னும் சாதி யொருமை பற்றி வந்த எதிர் மறை.

1. இலம்படு புலவர் ஏற்றகை நிறைய (மலைபடு - 576) என்பதற்கு 'இலத்தாற் பற்றப்பட்ட புலவர் என வேற்றுமை என்றாரால் உரையாசிரியர் எனின், பற்றப்பட்ட புலவர் என்பது பெயரெச்சமாதலின் பற்றவென்னும் தொழில் தோற்றுவிக்கின்ற முதனிலைச் சொல்லைச் சூத்திரத்து ஆசிரியர் எடுத்தோதிற்றிலர் ஆகலானும், படு என்பது தானும் புலவரென்னும் பெயரோடு முடியுங்கால் இரண்டுகாலமும் காட்டும் ஈறுகள் தொக்க முதனிலைச் சொல்லாய் நிற்றலின் அதனை எடுத்தோதினார் ஆதலானும், ஆசிரியர்க்கு அங்ஙனம் கூறுதல் கருத்தன்மை உணர்கவென்பதும் நெற்பாடு பெரிது என்பதில் பாடு உண்டாதற் பொருளுணர்த்தல் நின்றாற்போல இதற்கு இல்லாமை உண்டாகின்ற புலவர் எனப் பொருள் கூறுக'.(நச்.)

## ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர்

**318. அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி**
**ஒத்த எண்ணு முன்வரு காலை.**

இ∴து, இவ்வீற்று எண்ணுப்பெயருள் ஒன்றற்குத் தொகை மரபினுள் எய்திய ஏ என் சாரியை விலக்கி அத்து வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) ஆயிரத்து இறுதி - ஆயிரம் என்னும் எண்ணுப் பெயரின் மகரமெய், ஒத்த எண்ணு முன் வருகாலை - தனக்கு அகப்படுமொழியாய்ப் பொருந்தின எண்ணுப்பெயர் தன்முன் வருங்காலத்து, அத்தொடு சிவணும் - தொகைமரபிற் கூறிய ஏ என் சாரியை ஒழித்து அத்துச்சாரியை பொருந்தி முடியும்.

**எ - டு** :ஆயிரத்தொன்று, ஆயிரத்திரண்டு மூன்று, நான்கு என ஒட்டுக.

நிலைமொழி முற்கூறாது சாரியை முற்கூறியவதனான,. இதன் முன்னர்க் குறை கூறு முதல் என்பன வந்தவழியும் இம்முடிபு கொள்க. ஆயிரத்துக் குறை, கூறு, முதல் என ஒட்டுக.

## அடையடுத்த ஆயிரம்

**319. அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே,**

இ∴து, அவ் வெண்ணுப்பெயர் அடையடுத்த வழி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

குறிப்புகள்

(இ-ள்) அடையொடு தோன்றினும் அதன் ஓர் அற்று - அவ்வாயிரம் என்னும் எண்ணுப்பெயர் அடையடுத்த மொழியோடு தோன்றினும் மேற்சொன்னதனோடு ஒரு தன்மைத்தாய் அத்துப் பெற்று முடியும்.

**எ - டு :** பதினாயித்தொன்று இரண்டு என ஒட்டுக.

மேல் இலேசினான் வந்தனவும் அடையடுத்து ஒட்டுக. பதினாயிரத்துக் குறை, கூறு, முதல் என வரும்.

## அதன்முன் அளவுப்பெயரும் நிறைப்பெயரும

**320. அளவும் நிறையும் வேற்றுமை யியல.**

இ∴து, அவ் வெண்ணின் முன்னர் அளவுப்பெயர் நிறைப் பெயர் வந்தால் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அளவும் நிறையும் வேற்றுமை இயல-ஆயிரத்துமுன் அளவும் நிறையும் வந்தால் இவ்வீற்று வேற்றுமை இயல்பாய் மகரம் கெட்டு வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு** :ஆயிரக்கலம் சாடி, தூதை, பானை எனவும்

ஆயிரக்கழஞ்சு : தொடி,பலம் எனவும் ஒட்டுக.

இம் மாட்டேற்றானே, மேல் 'துவர' (சூத்திரம் - 15) என்ற இலேசினான், இயல்புகணத்துக்கட்கு எய்திய மகரம் ஈண்டும் கெடுத்துக் கொள்க. ஆயிரநாழி வட்டி,அகல் என வரும்.

பதினாயிரக்கலம் என்றாற்போல அடையடுத்து வந்த வழியும் ஒட்டுக.

## வேற்றுமையில் உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும்

**321. படர்க்கைப் பெயரும் முன்னிலைப்பெயரும்**
**தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்**
**வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்**
**மெல்லெழுத்து மிகுத லாவயி னான.**

இ∴து, இவ்வீற்றுட் சில உயர்திணைப்பெயரும் விரவுப் பெயரும் உருபியலுள் முடிந்தவாறே ஈண்டுப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் முடியுமென உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் தொடக்கம் குறுகும் பெயர் நிலைக்கிளவியும் - எல்லாரும் என்னும் படர்க்கைப்பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப்பெயரும் கிளைத்தொடர்ச்சிப்பொருளவாய் நெடுமுதல் குறுகி முடியும் தாம் நாம் யாம் என்னும் பெயரும்,வேற்றுமையாயின் உருபு இயல் நிலையும் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணாயின் உருபு புணர்ச்சிக்கண் சொன்ன இயல்பின்கண்ணே நின்று, சாரியை பெறுவன ஈறுகெட்டு

இடையும் ஈறும் சாரியை பெற்றும், நெடுமுதல் குறுகுவன நெடுமுதல் குறுகியும் முடியும். அ வயின் மெல்லெழுத்து மிகுதல் ஆன - அந் நெடுமுதல் குறுகு மொழிக்கண் மெல்லெழுத்து மிகும்.

குறிப்புகள்

**எ - டு :** எல்லார்தங்கையும், எல்லீர், நுங்கையும் : செவியும், தலையும், புறமும் எனவும் தங்கை, நங்கை, எங்கை, - செவி, தலைபுறம் எனவும் ஒட்டுக.

'வேற்றுமையாயின்' என்றதனால், படர்க்கைப் பெயர்க்கும் முன்னிலைப்பெயர்க்கும் இயல்புகணத்து ஞகரமும் நகரமும் வந்தவழி தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் ஈறு கெடுதல் கொள்க.

'ஆவயி னான' என்றதனால், படர்க்கைப் பெயர்க்கும் முன்னிலைப்பெயர்க்கும் ஞகரமும் நகரமும் வந்துழி அவை மிகுதலும் தொடக்கம் குறுகும் பெயர்க்கும் அஞ்ஞகரமும் நகரமும் வந்துழி மகரங்கெட்டு அவை மிகுதலுங் கொள்க. எல்லார் தஞ்ஞாணும், எல்லீர் நுஞ்ஞாணும், நூலும்' எனவும் தஞ்ஞாண்' நஞ்ஞாண்' எஞ்ஞாண் : நூல் எனவும் வரும்.

இன்னும் 'ஆவயினான' என்றதனால். படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் சாரியை பெறாது இறுதி உம்முப்பெறுதலும் கொள்க. எல்லார்கையும், எல்லீர்கையும்' செவியும். தலையும் புறமும் என வரும். இன்னும் அதனானே, உருபீற்றுச்செய்கை யெல்லாம் கொள்க. தம்காணம்1 என வரும்.

1. தம்காணம்,அகர உருபெற்றது

## அல்வழியில் அவை

**322. அல்லது கிளப்பின் இயற்கை யாகும்.**

இ∴து, மேலனவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்லது கிளப்பின் இயற்கை ஆகும் - மேற் கூறிய படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் தொடக்கம் குறுகும் பெயர்நிலைக்கிளவியும் அல்வழியைச் சொல்லுமிடத்து இயல்பாய் முடியும்.

ஈண்டு இயல்பென்பது சாரியை பெறாமை நோக்கி, இவற்றின் ஈறு திரிதல் ' அவ்வழியெல்லாம் ' (சூத்திரம் 19) என்றதனுள் ' எல்லாம்' என்னும் இலேசினாற் கொள்க.

**எ - டு :** எல்லாருங் குறியர், சிறியர், தீயர், பெரியர் எனவும் எல்லீருங்குறியீர் சிறியீர், தீயீர், பெரியீர் எனவும், தாம் குறியர் சிறியர், தீயர், பெரியர் எனவும் நாங்குறியேம் சிறியம், தீயம், பெரியம் எனவும் யாங்குறியேம் சிறியேம், தீயேம், பெரியேம் எனவும் வரும்இன்னும் 'எல்லாம்' என்னும் இலேசினானே, இவ்வீற்றுக்கண் மென்கணத்து மகரம் ஒழிந்தன வந்தவழி மகரம் அவ்வொற்றாய்த் திரிதலும் கொள்க. எல்லாருஞ் ஞான்றார் நீண்டார் எனவும் எல்லீருஞ் ஞான்றீர் நீண்டீர் எனவும் தாஞ்ஞான்றார் நீண்டார் எனவும் நாஞ்ஞான்றாம் நீண்டாம் எனவும் யாஞ்ஞான்றேம் நீண்டேம் எனவும் கொள்க.

## ‘எல்லாம் என்னும் விரவுப்பெயர்

குறிப்புகள்

**323. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா மெனும்பெயர் உருபிய நிலையும்**
**வேற்றுமை அல்வழிச் சாரியை நிலையாது.**

இ∴து, அவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் உருபியலோடு மாட்டெறிந்து முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும்- அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியிடத்தும். எல்லாம் எனும் பெயர் உருபு இயல் நிலையும் - எல்லாம் என்னும் விரவுப்பெயர்1 உருபு புணர்ச்சியின் இயல்பிலே நின்று வற்றுச்சாரியையும் இறுதி உம்முச் சாரியையும் பெற்று முடியும். வேற்றுமை அல்வழி சாரியை நிலையாது -அப்பெயர் வேற்றுமையல்லாத இடத்துச் சாரியை பெறுதல் நிலையாதாயே முடியும்.

மாட்டேறு ஏலாத அல்வழியினையும் உருபியலோடு மாட்டெறிந்து விலக்கிய மிகுதியான், அல்வழிக்கண் வன்கணத்திறுதி உம்முப்பேறும் நிலைமொழி மகரக்கேடும் வருமொழி வல்லெழுத்துப் பேறும். மென்கணத்து மகரக்கேடும், பண்புத்தொகைக்கண் மகரக் கேட்டோடு இறுதி உம்முப்பேறும் கொள்க.

**எ - டு :** எல்லாகுறியவும் சிறியவும், தீயவும், பெரியவும் எனவும் எல்லாவற்றுக்கோடும் செவியும், தலையும், புறமும் எனவும் எல்லா ஞான்றன் நீண்டன, மாண்டன எனவும் எல்லா ஞாணும் நூலும், மணியும் யாப்பும், வலிமையும், அடையும், ஆட்டமும் எனவும் எல்லாவற்று ஞாணும்˙ நூலும், மணியும் யாப்பும், வலிமையும், அடைவும், ஆட்டமும் எனவும் வரும்.

எல்லாக் குறியரும் ˙ சிறியரும், தீயரும், பெரியரும் என உயர்திணைக்கண்ணும் ஒட்டுக.

ஈண்டுச் சாரியை பெற்றவழி, மகரக்கேடு வற்றின்மிசை ஒற்றாய்க் கெட்டது. இது விரவுப்பெயராகலின், ஈற்றுப் பொது முடிவிற்கு ஏலாதென்று சாரியை வல்லெழுத்துக் கொள்ளப்பட்டது.

1.எல்லாம் என்பது, எல்லா மாந்தரும், எல்லா மரமும், மாந்தரெல்லாம், மரமெல்லாம் என, நிலைமொழியாயும் வருமொழியாயும் இருதிணையிலும் செல்லுதலின் விரவுப் பெயராயிற்று. எல்லாம் என்னும் தன்மைப்பன்மைப் பெயரும், எல்லாம் என்னும் விரவுப்பெயரும் வெவ்வேறு. (பாவாணர்)

## அதற்கு மேலும் ஒரு முடிபு

**324. மெல்லெழுத்து மிகினும் மான மில்லை.**

இ∴து, மேற்கூறிய எல்லாம் என்பதற்கு அல்வழிக்கண் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை - அவ்வெல்லாமென்பது அல்வழிக்கண் மேல் இலேசினாற் கூறிய வல்லெழுத்தேயன்றி மெல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை.

மேற்கூறிய செய்கைமேலே இது கூறினமையின், மகரக்கேடும் இறுதி உம்முப்பேறுங் கொள்க.

**எ-டு :** எல்லாங்குறியவும் சிறியவும், தீயவும், பெரியவும் எனவும் எல்லாங்குறியரும் சிறியரும், தீயரும், பெரியரும் எனவும் ஒட்டுக.

இனி, உரையிற்கோடல் என்பதனால், இறுதி உம்மின்றி எல்லாங் குறிய, எல்லாருங்குறியர் எனவும் வரும்.

மேல் இலேசினாற் கூறிநின்ற வல்லெழுத்தினோடு மெல்லெழுத்து வகுத்தமையின், இஃது அல்வழியாயிற்று.

குறிப்புகள்

## அதற்கு, உயர்திணை முடிபு

**325. உயர்திணை யாயின் உருபியல் நிலையும்.**

இஃது, மேலதற்கு உயர்திணை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) உயர்திணையாயின் உருபு இயல் நிலையும் - அவ்வெல்லாமென்பது அஃறிணைப்பெயராயன்றி, உயர்திணைப் பெயராய் நின்ற நிலைமையாயின் உருபு புணர்ச்சியின் இயல்பிலே நின்று ஆண்டுக் கூறிய நம்முச்சாரியை பெற்று முடியும்.

வற்றுவகுத்து செய்கை மேல் வகுத்தமையின், மகரக்கேடு கொள்க. இறுதி உம்மையும் அச்செய்கை மேலே வகுத்தமையிற் கொள்க.

**எ - டு :** வல்லாநங்கையும் செவியும், தலையும், புறமும் என வரும்.

மேல் 'மான மில்லை' (சூத்திரம் - 28) என்றதனால், அல்வழிக் கண் வன்கணத்து மகரம் கெட்டு வல்லெழுத்து மிக்கு இறுதி உம்முப் பெற்று முடிதலும். இயல்புகணத்துக்கண் மகரம் கெட்டு இறுதி உம்முப்பெற்று முடிதலும் கொள்க. எல்லாக்கொல்லரும், சேவகரும், தச்சரும், புலவரும் எனவும் ' எல்லாஞாயிறும் ' நாயகரும், மணியகாரரும், வணிகரும், அரசரும் எனவும் வரும்.

## வேற்றுமையில் 'நும்' என்னும் பெயர்

**326. நுமமெ னொருபெயர்1 மெல்லெழுத்து மிகுமே.**

இதுவும் அவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நும் என் ஒரு பெயர் மெல்லெழுத்து மிகும் - நும் என்று சொல்லப்படுகின்ற ஓர் விரவுப்பெயர் வேற்றுமைக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** நுங்கை ' செவி, தலை, புறம் என வரும்.

மகரம் 'துவர' (சூத்திரம் - 15) என்ற இலேசினாற் கெட்டது. 'ஒரு பெயர்' என்றதனான், ஞகர நகரங்கள் வந்த இடத்தும் அவ்வொற்று மிகுதல் கொள்க.

நுஞ்ஞாண், நுந்நூல் என வரும்.

'ஒன்றின முடித்தல்' என்பதனால், உங்கை என உம் என்பதன் முடிபும் இவ்வீற்றாகக் கொள்க.

1. நும் என்பது நூம் என்னும் வழக்கற்ற பழம்பெயரின் வேற்றுமைக்

குறுக்கம். எம் தம் என்னும் பிறவிடக் குறுக்கங்கள் போன்றே நும் என்பதும் உருபுபெற்றும் பெறாதும் ஆறாம்வேற்றுமைப் பொருள் தரும். ( பாவாணர்.)

குறிப்புகள்

## அல்வழியில் ‘நும்’ என்னும் பெயர்

**327. அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வயின் ஈவர**
**இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பான் மொழிவயி னியற்கை யாகும்1.**

இ∴து, மேலதற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்லதன் மருங்கின் சொல்லும் காலை - அந் நும் என ஒரு பெயர் தன்னை அல்வழியிடத்துச் சொல்லுங்காலை, உ கெட நின்ற மெய்வயின் ஈ வர இ இடைநிலை ஈறு கெட ரகரம் புள்ளியொடு புணர்ந்து நிற்றல் வேண்டும் - நகரத்து உகரங் கெட அந்நின்ற மெய்யிடத்து ஈகாரம் வர, ஓர் இகரம் இடையிலே பெற மகரம் கெட அவ்விடத்து ஒரு ரகரம் புள்ளியோடு பொருந்தி நிற்றல்வேண்டும். அப்பால் மொழிவயின் இயற்கை யாகும் - வரு மொழியிடத்து அம் மொழி தான் இவ்வாறு திரியாது இயல்பாதல் வேண்டும்.

**எ - டு :** நீயிர்குறியீர்˙ சிறியீர், தீயீர், பெரியீர் என வரும். ஞான்றீர், நீண்டீர், மாண்டீர் என இயல்புகணத்தோடும் ஒட்டுக.

1. நும் என்னும் வேற்றுமைத் திரிபுப்பெயர் எழுவாய் வேற்றுமையின் நீயீர் என்றாகும் என இந்நூற்பாவிற் கூறியிருப்பது தமிழியல்புக்கும் உத்திக்கும் பொருந்தாது. நும் வேறு நீயிர் வேறு. நீன் என்னும் முன்னிலையொருமைப் பெயர் ஈறுகெட்டு நீ என வழங்குவதே இர் ஈறு பெற்று நீயிர் என்னும் பன்மைப் பெயராகும். (பாவாணர்)

## மகர ஈற்றுத் தொழிற்பெயர்

**328. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.**

இ∴து, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கண் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடிபு வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தொழிற்பெயரெல்லாம் தொழிற்பெயர் இயல - மகரவீற்றுத் தொழிற்பெய ரெல்லாம் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகாரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பினவாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் இயல்புகணத்து உகரம் பெற்றும் வரும்.

**எ - டு :** செம்முக்கடிது- சிறிது, தீது, பெரிது, எனவும்- செம்மு ஞான்றது- நீண்டது, மாண்டது, வலிது எனவும்- செம்முக்கடுமை- சிறுமை, தீமை, பெருமை எனவும- செம்முஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

‘எல்லாம்’ என்றதனான், உகரம்பெறாது அல்வழிக்கண் நாட்டங் கடிது என, மெல்லெழுத்தாய்த் திரிவனவும்- வேற்றுமைக்கண் நாட்டக்கடுமை என மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கு வருவனவும் கொள்க.

## ‘ஈம்’ ‘கம்’ ‘உரும்’ என்னும் பெயர்கள்

**329. ஈமுங் கம்மும் உருமென் கிளவியும்**
**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன.**

குறிப்புகள்

இது, பொருட்பெயருட் சில அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் தொழிற் பெயரோடு ஒத்து முடியுமெனக் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஈமும் கம்மும் உரும் என் கிளவியும் ஆ முப்பெயரும்-ஈம் என்னும் சொல்லும் கம் என்னும் சொல்லும் உரும் என்னும் சொல்லுமாகிய அம்மூன்று பெயரும், அவற்று ஓர் அன்ன - அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் அத் தொழிற்பெயரோடு ஒரு தன்மையவாய் வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் இயல்புகணத்து உகரம் பெற்றும் முடியும்.

**எ - டு :** ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது1 சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும் ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை் சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

1.ஈம்-இடுகாடு, கம்- கம்மியரது தொழில், உரும் - இடி.

## ‘ஈம்’ ‘கம’ இருபெயர்க்கும் சாரியை

**330. வேற்றுமை யாயின் ஏனை யிரண்டும்**
**தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை.**

இது, மேல் முடிபுகூறிய மூன்றனுள் இரண்டற்கு வேற்றுமைக் கண் வேறு ஓர் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமை ஆயின் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின், ஏனை இரண்டும் அக்கு என் சாரியை தோற்றம் வேண்டும் - இறுதி உரும் ஒழிந்த இரண்டும் அக்கு என்னும் சாரியை தோற்றி முடிதல் வேண்டும்.

‘தோற்றம்’ என்றதனான் உகரம் நீக்குதல் வேண்டுமென்க.

**எ - டு :** ஈமக்குடம், கம்மக்குடம் சாடி, தூதை, பானை என வரும்.

மேல் வேற்றுமை கூறிய முடிபு குணவேற்றுமைக்கண்ணதென்றும், ஈண்டுக் கூறிய முடிபு பெருட்பெயர்க்கண்ணதென்றும் கொள்க.

## மகரம் குறுகுமிடம்

**331. வகார மிசையும் மகாரங் குறுகும்.**

இது, பருந்துவிழுக்காடாய் ’ அரையளபு குறுகல் ’ (நூன் மரபு - சூத்திரம், 13 ) என்பதற்கு ஓர் புறனடை கூறுகின்றது.

(இ-ள்) வகாரம் மிசையும் மகாரம் குறுகும் - மேல் ஒரு மொழிக்கண் கூறிய ’னகாரை முன்னர்’ (மொழிமரபு - சூத்திரம் 19) அன்றி ஈண்டு புணர்மொழிக்கண் வகரத்தின் மேலும் மகரங்குறுகும்.

**எ - டு :** நிலம் வலிது என வரும்.

## மகர ஈற்று நாட்பெயர்

**332. நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன**
**அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே**
**ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்.**

குறிப்புகள்

இ.்.து, இவ்வீற்று நாட்பெயர்க்கு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நாள்பெயர்க் கிளவி மேல் கிளந்து அன்ன - மகர வீற்று நாட்பெயர்ச்சொல் மேல் இகரவீற்று நாட்பெயரிற் கிளந்த தன்மையவாய் ஆன் பெற்று முடியும் அத்து ஆன் மிசையும் வரை நிலை இன்று - அத்துச்சாரியை அவ்வான்சாரியை மேலும் பிற சாரியை மேலும் நீக்கும் நிலைமையின்றாம் ஒற்று மெய் கெடுதல் என்மனார் புலவர் - அவ்விடத்து மகரவொற்றுத் தம் வடிவு கெடுக வென்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** மகத்தாற் கொண்டான் மகத்துஞான்று கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'ஒற்று' என்னாது 'மெய்' என்றதனான், நாட்பெயரல்லாத பொருட் பெயர்க்கண்ணும் அம்முடிபு கொள்க. மரத்தாற்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் என வரும்.

## வேற்றுமையில் னகார ஈறு

**333. னகார இறுதி வல்லெழுத் தியையின்**
**றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.**

இ.்.து, னகார ஈற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) னகார இறுதி வல்லெழுத்து இயையின் - னகார வீற்றுப்பெயர் வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வந்து இயையின், றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கு - றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்.

**எ - டு :**பொற்குடம்- சாடி- தூதை, பானை என வரும்.

## சில னகர ஈற்றுச் சொற்கள்

**334. மன்னுஞ் சின்னும் ஆனும் ஈனும்**
**பின்னு முன்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அன்ன இயல என்மனார் புலவர்.**

இ.்.து, அவ்வீற்று அசைநிலை இடைச்சொல்லும் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைச்சொற்களும் வினையெச்சமும் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மன்னும் சின்னும் ஆனும் ஈனும் பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும் - மன் என்னும் சொல்லும் சின் என்னும் சொல்லும் ஆன் என்னும் சொல்லும் ஈன் என்னும் சொல்லும் பின் என்னும் சொல்லும் முன் என்னும் சொல்லும் வினையெச்சமாகிய சொல்லும், அன்ன இயல என்மனார் புலவர் - மேற்கூறிய இயல்பினவாய் னகரம் றகரமாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** அதுமற் கொண்கன் றேரே, காப்பும் பூண்டிசிற்

கடையும் போகல் எனவும்˙ ஆற்கொண்டான், ஈற்கொண்டான், புற்கொண்டான், முற்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்˙ வரிற்கொள்ளும்˙ செல்லும், தரும், போம் எனவும் வரும்.

பெயராந் தன்மையவாகிய ஆன், ஈன்1 என்பனவற்றை முற்கூறாததனான், ஆன்கொண்டான், ஈன்கொண்டான் எனத் திரியாது முடிதலும் கொள்க.

பின், முன் என்பன பெயர் நிலையும் வினையெச்ச நிலையும் உருபு நிலையும் படும். அவற்றுள் வினையெச்சநிலை ஈண்டு வினையெஞ்சு கிளவியும் என்பதனான் முடியும். உருபுநிலை உருபியலுள் முடியும். ஈண்டுப் பெயர் கூறுகின்றது. அப்பெயரை முன்கூறாததனால் பின் கொண்டான், முன்கொண்டான் எனத் திரியாமையும் கொள்க.

'இயல', என்றதனான், ஊன் என்னும் சுட்டு ஊன்கொண்டான் என இயல்பாய் முடிதல் கொள்க.

1. ஆன் - அங்கு, ஈன் - இங்கு, ஊன் - உங்கு, உவ்விடம்.

## 'வயின்' என்னும் சொல்

**335. சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்**
**அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப.**

இ∴து, இவ்வீற்றுள் ஒருசார் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்திநின்ற இடைச்சொல்லிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய வயின் என்னும் சொல்லும் எகரமாகிய முதலையுடைய வயின் என்னும் சொல்லும், அ பண்பு நிலையும் இயற்கைய என்ப - மேல் றகரமாய் முடியுமென்ற அப்பண்பு நிலைபெற்று முடியும் இயற்கையுடைய என்று சொல்லுவர்.

**எ - டு :** அவ்வயிற்கொண்டான், இவ்வயிற்கொண்டான், உவ்வயிற் கொண்டான், எவ்வயிற்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'இயற்கைய' என்றதனால், திரியாது இயல்பாய் முடிவனவும் கொள்க. கான்கோழி என வரும்.

## 'குயின்' என்னும் சொல்

**336. குயினென் கிளவி இயற்கை யாகும்.**

இ∴து, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) குயின் என் கிளவி இயற்கையாகும் - குயின் என்னும் சொல் திரியாது இயல்பாய் முடியும்.

**எ - டு :** குயின்குழாம்˙ செலவு, தோற்றம், பறைவு என வரும். குயின் என்பது மேகம்.

குறிப்புகள்

குறிப்புகள்

## 'எகின்' என்னும் மரப்பெயர்

**337. எகின்மர மாயின் ஆண்மர இயற்றே.**

இது, திரிபு விலக்கி அம்மு வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) எகின் மரம் ஆயின் ஆண்மர இயற்று - எகின் என்னும் சொல்லும் மரப்பெயராயின் ஆண்மரத்தினது இயல்பிற்றாய் அம்முப் பெற்று முடியும்.

**எ - டு :** எகினங்கோடு- செதிள், தோல், பூ என வரும்.

## 'எகின்' என்னும் பிற உயிரி1யின் பெயர்

**338. ஏனை யெகினே அகரம் வருமே**
**வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்.**

இதுவும் அது.

(இ-ள்) ஏனை எகின் அகரம் வரும் - ஒழிந்த மரமல்லா எகின் நிலைமொழிக்கண் அகரம் வந்து முடியும்் வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும் - அவ்விடத்து வருமொழி வல்லெழுத்து இயல்பு மிக்கு முடிதல் வேண்டும்.

**எ - டு :** எகினக்கால்் செவி, தலை, புறம் என வரும்.

மேலைச்சூத்திரத்தோடு இதனை ஒன்றாக ஓதாததனான், இயல்பு கணத்துக்கண்ணும் அகரப்பேறு கொள்க. எகினஞாற்சி் யாப்பு, அடைவு என வரும்.

'இயற்கை' என்றதனான், அகரப்பேற்றோடு மெல்லெழுத்துப் பேறும் கொள்க. எகினங்கால்் செவி, தலை, புறம் என வரும்.

1.உயிரி -பிராணி.

## கிளைப்பெயர்

**339. கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல.**

இ∴து, இவ்வீற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) கிளைப்பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல - னகாரவீற்றுக் கிளைப்பெயரெல்லாம் ணகாரவீற்றுக் கிளைப்பெயர் போலத் திரியாது இயல்பாய் முடியும்.

**எ - டு :** எயின்குடி் சேரி, தோட்டம், பாடி என வரும்.

'எல்லாம்' என்றதனான், அக்குச்சாரியையும் வல்லெழுத்தும் பெற்று எயினக்கன்னி என முடிதலும், பார்ப்பனக்கன்னி என நிலைமொழி திரிந்து அக்கும் வல்லெழுத்தும் பெறுதலும், இனிச்சாரியை பெறாது திரிந்து வேளாண்குமரி, வேளாண் வாழ்க்கை என முடிதலும் கொள்க.

## 'மீன்' என்னும் சொல்

**340. மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே.**

இதுவும், அவற்றுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மீன் என் கிளவி வல்லெழுத்து உறழ்வு- மீன் என்னும் சொல் தன் திரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்து முடியும்.

**எ - டு :** மீன்கண், மீற்கண் சினை, தலை, புறம் என வரும்.

## ‘தேன்’ என்னும் சொல்

குறிப்புகள்

**341. தேனென் கிளவி வல்லெழுத் தியையின்**
**மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்**
**ஆமுறை யிரண்டும் உரிமையு முடைத்தே**
**வல்லெழுத்து மிகுவழி இறுதி யில்லை.**

இதுவும் அது.

(இ-ள்) தேன் என் கிளவி வல்லெழுத்து இயையின் - தேன் என்னும் சொல் வல்லெழுத்து முதன்மொழியாய் வந்து பொருந்தின், மேல்நிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும் ஆ முறை இரண்டும் உரிமையும் உடைத்து - மேல் மீன் என்னும் சொல்லிற்குச் சொன்ன திரிபுறழ்ச்சியின் நிலைமையை யொத்து முடிதலும் வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலுமாகிய அம் முறையையுடைய இரண்டினையும் உரித்தாதலையும் உடைத்து˙ வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை - வல்லெழுத்து மிகுமிடத்து நிலைமொழியிறுதி னகரவொற்று நிலையின்றிக் கெடும்.

‘உரிமையும்’ என்றவும்மை 'மெல்லெழுத்து மிகினும்’ (சூத் - 342) என மேல்வருகின்ற முடிவினை நோக்கி நின்றது.

**எ - டு :** தேன்குடம், தேற்குடம், சாடி, தூதை, பானை, எனவும்˙ தேக்குடம்˙ சாடி, தூதை, பானை எனவும் வரும்.

## அதற்கு மேலும் முடிபுகள்

**342. மெல்லெழுத்து மிகினும் மான மில்லை.**

இது, மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை - மேற் கூறிய தேன் என் கிளவி வல்லெழுத்து வந்தால் வல்லெழுத்து மிகுதலேயன்றி மெல்லெழுத்து மிக்குமுடியினும் குற்றம் இல்லை.

னகரக் கேடு அதிகாரத்தாற் கொள்க.

**எ - டு** :தேங்குடம்˙ காடி, தூதை, பானை என வரும்.

## அதற்கு மேலும் முடிபுகள்

**343. மெல்லெழுத் தியையின் இறுதியோ டுறழும்.**

இது, மேலதற்கு மென்கணத்துக்கண் தொகைமரபிற் கூறிய முடிபு ஒழிய வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும் - அத் தேன் என் கிளவி மெல்லெழுத்து முதல்மொழி வந்து இயையின் நிலைமொழியிறுதி னகார வொற்றுக்கெடுதலும் கெடாமையுமாகிய உறழ்ச்சியாய் முடியும்.

**எ - டு :** தேன்ஞெரி, தேஞெரி˙ நுனி, முரி எனக் கொள்க.

மேல் 'மான மில்லை’ (சூத்திரம் - 49) என்றதனான், இறுதியோடு உறழும் என்ற ஈறுகெட்டு வருமொழி மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் உறழ்தற்கும். வருமொழி மிகாது இறுதிகெட்டும் கெடாதும் உறழ்தற்கும்,

அவ்விரண்டற்கும் உரித்தாய்ச் சென்றதனை விலக்கி வருமொழி மிகாதே நிற்ப அவ்வீறே கெட்டும் கெடாதும் நின்று உறழுமென்பது கொள்ளப்பட்டது.

அதன்மேல் 'ஆமுறை' (சூத்திரம் - 45) என்றதனான், சிறு பான்மை ஈறு கெட்டுத் தேஞ்ஞெரி, நுனி, முரி என மெல்லெழுத்து மிகுதலும் கொள்க.

குறிப்புகள்

## 'தேன்' முன் 'இறால்'

**344. இறாஅல் தோற்றம் இயற்கை யாகும்.**

இஃது, இன்னும் அதற்கு உயிர்க்கணத்து ஒரு மொழிக்கண் முடியும் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இறாஅல் தோற்றம் - தேன் என்னும் சொல் இறால் என்னும் வரு மொழியது தோற்றத்துக்கண் இயற்கை ஆகும் - நிலைமொழி னகாரங் கெடாதே நின்று இயல்பாய் முடியும்.

**எ - டு :** தேனிறால் என வரும்.

## அதற்கு மேலும் ஒரு முடிபு

**345. ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே.**

இஃது, அதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்து - அத்தேன் என்பது இறால் என்னும் வருமொழிக்கண் பிறிதும் ஓர் தகரவொற்று உடன்மிகு தகரத்தோடு நின்று முடிதலும் உரித்து. மேல் 'வல்லெழுத்து மிகுவழி யிறுதியில்லை' (சூத் - 45) என்றதனான், நிலைமொழி யீறு கெடுக்க 'தகரமிகும்' என்னாது ஒற்றுமிகு தகரம் என்றதனால் ஈரொற்றாக்குக.

**எ - டு :** தேத்திறால் என வரும்.

மேலைச் சூத்திரத்தோடு இதனை ஒன்றாக ஓதாததனால் பிற வருமொழிக்கண்ணும் இம் முடிபு கொள்க. தேத்தடை, தேத்தீ என வரும்.

'தோற்றம்' என்றதனால், தேனடை, தேனீ என்னும் இயல்பும் கொள்க.

## 'மின்' 'பின' 'பன்' 'கன்' என்னும் சொற்கள்

**346. மின்னும் பின்னும் பன்னுங் கன்னும்**
**அந்நாற் சொல்லும் தொழிற்பெய ரியல.**

இஃது, அவற்றுட் சிலவற்றிற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மின்னும் பின்னும் பன்னும் கன்னும் அநால் சொல்லும் - மின் என்னும் சொல்லும் பின் என்னும் சொல்லும் பன் என்னும் சொல்லும் கன் என்னும் சொல்லுமாகிய அந்நான்கு சொல்லும், தொழிற்பெயர் இயல - வேற்றுமைக்கண்ணும் அல்வழிக் கண்ணும் ஞகரவீற்றுத் தொழிற்பெயர்போல வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் மென்கணத்துக் கண்ணும் இடைக்கணத்துக்கண்ணும் உகரமும் பெற்று முடியும்.

**எ - டு :** மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது,

சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, யாது எனவும் மின்னுக்கடுமை, பின்னுக்கடுமை, பன்னுக்கடுமை, கன்னுக்கடுமை சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, யாப்பு எனவும் வரும்.

'தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெயரியல' என்று ஓதாது இவ்வாறு எடுத்தோதியவதனால், இம் முடிபினைத் தொழிற்பெயர்க்கும் பொருட்பெயர்க்கும் உடன் கொள்க. மின் என்பது ஓர் தொழிலுமுண்டு பொருளுமுண்டு, பிறவும் அன்ன.

குறிப்புகள்

## 'கன்' என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு

**347. வேற்றுமை யாயின் ஏனை யெகினொடு**
**தோற்ற மொக்குங் கன்னென் கிளவி.**

இது, மேல் முடிபு கூறியவற்றுள் ஒன்றற்கு வேறு ஓர் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) கன் என் கிளவி வேற்றுமையாயின் - கன் என்னும் சொல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின், ஏனை எகினொடு தோற்றம் ஒக்கும் - ஒழிந்த மரமல்லா எகினொடு தோற்றம் ஒத்து அகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும்.

**எ - டு :** கன்னக்குடம்1, சாடி, தூதை, பானை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை என வரும்.

சிறுபான்மை கன்னக்கடுமை என்று குணவேற்றுமைக்கண்ணும் இம் முடிபு கொள்க.

'தோற்றம' என்றதனால், அல்வழிக்கண் அகரமும், வன்கணத்துக்கண் மெல்லெழுத்தும் கொள்க. கன்னங்கடிது சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என வரும்.

இன்னும் 'தோற்றம்' என்றதனால், சிறுபான்மை கன்னங் கடுமை சிறுமை, தீமை, பெருமை என்ற் குணவேற்றுமைக் கண்ணும் அகரமும் மெல்லெழுத்தும் கொள்க.

இக்'கன்' என்பது வேற்றுமை முடிபிற்கு மேற்கூறியது குணவேற்றுமைக்கு எனவும், ஈண்டுக் கூறியது பொருட்பெயர்க்கு எனவும் கொள்க.2

1. கன்னம் - கன்னாரத்தொழில். (பாவாணர்).

2. கன்னம் - நோய் தணியும் பொருட்டுக் கோயிற்கு நேர்த்திக் கடனாகச் செய்து கொடுக்கும் சிறு படிமம்.

## இயற்பெயர் முன் 'தந்தை' என்னும் சொல்

**348. இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்**
**முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்**
**மெய்யொழித் தன்கெடும் அவ்வியற் பெயரே.**

இ∴து,இவ்வீற்று விரவுப்பெயருள் இயற்பெயர்க்குத் தொகைமரபினுள் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின் - னகாரவீற்று இயற்பெயர் முன்னர்த் தந்தை என்னும் முறைப் பெயர் வருமொழியாய்

குறிப்புகள்

வரின், முதற்கண் மெய்கெட அகரம் நிலையும் - முதற்கண் மெய்கெட அதன்மேல் ஏறி நின்ற அகரம் கெடாது நிலைபெறும். அ இயற்பெயர் மெய் ஒழித்து அன் கெடும் - நிலைமொழியாகிய இயற்பெயர் அவ் அன் என்னும் சொல்லின் அகரம் ஏறிநின்ற மெய்யை ஒழித்து அவ் அன் தான் கெட்டு முடியும்.

**எ - டு :** சாத்தந்தை, கொற்றந்தை என வரும்.

'முதற்கண் மெய்' என்றதனால் சாத்தன்றந்தை கொற்றன்றந்தை என்னும் இயல்பு முடிபும் கொள்க.

## இதற்கு, மேலும் ஒரு முடிபு

**349. ஆதனும் பூதனுங் கூறிய இயல்பொடு**
**பெயரொற் றகரந் துவரக் கெடுமே.**

இஃது, மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஆதனும் பூதனும் - மேற்கூறிய இயற்பெயருள் ஆதனும் பூதனும் என்னும் இயற்பெயர்கள், கூறிய இயல்பொடு பெயர் ஒற்று அகரம் துவரக் கெடும் - மேற்கூறிய செய்கையோடு நிலைமொழிப்பெயருள் அன் கெடநின்ற ஒற்றும் வருமொழியுள் ஒற்றுக்கெட நின்ற அகரமும் முற்றக்கெட்டு முடியும்.

**எ - டு :** ஆந்தை, பூந்தை என வரும்.

இயல்பு என்றதனால், பெயரொற்றும் அகரமும் கெடாதே நின்று முடிந்தவாறே முடிந்தாலும் கொள்க. ஆதந்தை, பூதந்தை என வரும்.

'துவர' என்றதனால், அழான், புழான் என நிறுத்திப் பொருந்தின செய்கை செய்து அழாந்தை, புழாந்தை என முடிக்க.

## இதற்கு வேறொரு முடிபு

350. சிறப்பொடு வருவழி யியற்கை யாகும்.

இஃது, எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) சிறப்பொடு வருவழி இயற்கை ஆகும் - அவ்வியற்பெயர் பண்படுத்து வருவழி முன்கூறிய இருமொழிச் செய்கையும் தவிர்ந்து இயல்பாய் முடியும்.

**எ - டு :** பெருஞ்சாத்தன்றந்தை, பெருங்கொற்றன்றந்தை என வரும்.

## இயற்பெயர் முன் 'மகன்' முதலிய பிற பெயர்கள்

**351. அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியும்**
**நிற்றலும் உரித்தே அம்மென்சாரியை**
**மக்கள் முறைதொகூஉம் மருங்கினான.**

இஃது, மேலதற்கு வேறு ஓர் வருமொழிக்கண் எய்தாதது எய்துவித்தது.

(இ-ள்) அ பெயர் மக்கள் முறை தொகூஉம் மருங்கின் ஆன மெய் ஒழித்து அன்கெடு வழி - அவ்வியற் பெயர் மக்கள் என்னும் முறைப்பெயர் வந்து கூடும் இடத்தின் கண்ணும் பிறிதிடத்தும் தான் ஏறிய மெய்யை ஒழித்து அன்கெடும் அவ்வழி அம் என்சாரியை நிற்றலும் உரித்து - அம் என்னும் சாரியை நிற்றலும் உரித்து.

**எ - டு :** சாத்தங்கொற்றன், கொற்றங்கொற்றன் எனவும், சாத்தங்குடி, கொற்றங்குடி எனவும் வரும்.

## 'தான்' 'பேன்' 'கோன்' என்னும் இயற்பெயர்கள்.

குறிப்புகள்

**352. தானும் பேனும் கோனும் என்னும்**
**ஆமுறை இயற்பெயர் திரிபிடனிலவே.**

இ∴து, மேலதற்கு ஒரு வழி எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தானும் பேனும் கோனும் என்னும் ஆ முறை இயற்பெயர் - அவ்வியற்பெயருள் தானும் பேனும் கோனும் என்னும் முறைமையினுடைய இயற்பெயர்கள் தந்தை மக்கள் என்னும் முறைப்பெயரோடு புணரும்வழி, திரிபு இடன் இல - மேற்கூறிய திரிபுகள் இன்றி இயல்பாய் முடியும்.

**எ - டு :** தான்றந்தை,பேன்றந்தை,கோன்றந்தை எனவும் தான் கொற்றன்,பேன்கொற்றன்,கோன்கொற்றன் எனவும் வரும்.

## 'தான்' 'யான்' என்னும் சொற்கள்

**353. தான்யா னெனும் பெயர் உருபியல் நிலையும்.**

இ∴து, விரவுப்பெயருள் தான் என்பதற்கும் உயர்திணைப் பெயருள் யான் என்பதற்கும் வேற்றுமைக்கண் தொகை மரபினுள் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தான் யான் எனும் பெயர் உருபு இயல் நிலையும் -தான் என்னும் விரவுப் பெயரும் யான் என்னும் உயர்திணைப்பெயரும் மேல் தொகைமரபினுட் கூறிய இயல்புகள் ஒழித்து உருபு புணர்ச்சியிற் கூறிய இயல்பின்கண்ணே நிலைபெற்றுத் தான் என்பது நெடுமுதல் குறுகித் தன் என்றாயும் யான் என்பது யகரம் கெட்டு ஆகாரம் எகாரமாய் என் என்றாயும் முடியும்.

**எ-டு :** தன்கை,என்கை,செவி,தலை,புறம்எனவும் தன்ஞாண்என் ஞாண்' நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் வரும்.

## அல்வழியில் அச்சொற்கள்

**354. வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலும்**
**தோற்றம் இல்லை யென்மனார் புலவர்.**

இ∴து, மேலவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமை அல்வழி - மேற்கூறிய தான் யான் என்னும் பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சி யல்லாதவிடத்து, குறுகலும் திரிதலும் தோற்றம் இல்லை என்மனார் புலவர் - தான் என்பது நெடுமுதல் குறுகலும் யான் என்பது அவ்வாறு திரிதலும் தோற்றமின்றி இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** தான்குறியன் சிறியன்,தீயன், பெரியன், ஞான்றான், நீண்டான், மாண்டான், எனவும் யான்குறியேன்,சிறியேன், தீயேன்,பெரியேன்,ஞான்றேன், நீண்டேன், மாண்டேன் எனவும் வரும்.

'தோற்றம' என்றதனான், வேற்றுமைக்கண் அவ்வாறன்றித் திரிதலும்

கொள்க.

**எ - டு :** தற்புகழ்,தற்பகை எனவும் வரும்.

## 8. மெய்யீற்றுப் புணரியல்

குறிப்புகள்

### அழன் என்னும் சொல

**355. அழனென் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே.**

இ∴து, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) அழன் என் இறுதி கெட வல்லெழுத்து மிகும்- அழன் என்னும் சொல் அழன் என்னும் கைரவீறு கெட வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** அழக்குடம் சாடி, தூதை, பானை, என வரும். அழனென்பது பிணம்.

### 'முன்' என்பதற்கு முன் 'இல்'

**356. முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்**
**இல்லென் கிளவிமிசை றகர மொற்றல்**
**தொல்லியன் மருங்கின் மரீஇய மரபே.**

இ∴து, இவ்வீற்றுள் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉக்களுள் ஒன்றற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) முன் என் கிளவி முன்னர்த் தோன்றும் இல் என் கிளவிமிசை றகரம் ஒற்றல் - முன் என்னும் சொல்லின் முன்னர்த் தோன்றும் இல் என்னும் சொல்லின்மேல் றகர வொற்று வந்து முடிதல், தொல் இயல் மருங்கின் மரீஇய மரபு - பழையதாகிய இயல்பினையுடையவிடத்து மருவிவந்த இலக்கண முடிபு.

இது கடைக்கண் என்றாற்போல் வரூஉம் மரூஉ முடிபு போலன்றி முன்னில் என ஒற்றிரட்டி முடியற்பாலது. இரு மொழிக்கும் இயல்பிலதோர் ஒற்றுமிக்கு முடிந்த மரூஉ முடிபு.

### 'பொன்' என்னும் சொல்

**357. பொன்னென் கிளவி யீறுகெட முறையின்**
**முன்னர்த் தோன்றும் லகார மகாரம்**
**செய்யுள் மருங்கின் தொடரிய லான[1]**

இ∴து, இவ்வீற்றுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பொன் என் கிளவி ஈறு கெட முன்னர் முறையின் லகாரம் மகாரம் தோன்றும் - பொன் என்னும் சொல் பகரமுதன்மொழி வந்தவிடத்துத் தன் ஈற்றின் னகரம்கெட அதன்முன்னர் முறையானே லகரமும் மகரமும் தோன்றி முடியும் செய்யுள் மருங்கின் தொடர் இயலான - (யாண்டெனில்,) செய்யுளிடத்துச் சொற்கள் தம்மில் தொடர்ச்சிப் படும் இயல்பின்கண்.

'முறையின்' என்றதனால், லகரம் உயிர்மெய்யாகவும் மகரம் தனி

மெய்யாகவும் கொள்க.

**எ - டு :** 'பொலம்படை பொலிந்த கொய்சுவற் புரவி' என வரும்.

'தொடரியலான' என்றதனான் பகரம் அல்லாத வன்கணத்துக் கண்ணும் சிறுபான்மை ஈறுகெட்டு லகரமும் வல்லெழுத்திற்கேற்ற மெல்லெழுத்தும் மிக்குமுடிதல் கொள்க.

பொலங்கலம்,பொலஞ்சுடர், பொலந்தேர் என வரும்.

'ஒன்றின முடித்தல்' என்பதனால், பொலநறுந்தெரியல், பொல மலராவிரை என்றாற்போல வரும், பிறகணத்து முடிபும் கொள்க.

1. பொல் - பொன்ஸ்ரீஅழகு, அழகிய உலோகம் என்றுமாம். பொல்,அம்ஸ்ரீபொலம். பொல்புஸ்ரீபொற்பு- அழகு. பொல்லுதல் ஸ்ரீ பொருந்துதல். அழகாயிருத்தல். ஒ. நோ: ஒப்பித்தல். பொருந்தச் செய்தல், அலங்கரித்தல், பொல்லாத - பொல்லா ஸ்ரீ பொருந்தாத அழகில்லாத, " பொல்லாக் கருங்காக்கை" என்று காரிகையாசிரியருங் கூறுதல் காண்க. (பாவாணர்.).

## 2. இடையொற்று ஈறுகள்

### வேற்றுமையின் யகர ஈறு

**358. யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்**
**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே.**

இது, யகாரவீற்றிற்கு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின் - யகாரவீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண், வல்லெழுத்து இயையின் அ எழுத்து மிகும் - வல்லெழுத்து முதன் மொழி வந்து இயையின் அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** நாய்க்கால் செவி, தலை, புறம் என வரும்.

### 'தாய்' என்னும் சொல்

**359. தாயென் கிளவி யியற்கை யாகும்.**

இஃது, இவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தாய் என் கிளவி இயற்கையாகும் - தாய் என்னும் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.

**எ - டு :** தாய்கைசெவி, தலை, புறம் என வரும்.

இவ்வியல்பு மேல் இன்னவழி மிகும் என்கின்றமையின், அஃறிணை விரவுப்பெயர் என்பதனுள் அடங்காதாயிற்று.

### அதற்கு மேலும் ஒரு முடிபு

**360. மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே.**

இது, மேலதற்கு அடையடுத்து வந்தவழி இன்னவாறு முடியுமென எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) மகன் வினை கிளப்பின் முதல்நிலை இயற்று - அத்

குறிப்புகள்

தாய் என்னும் சொல் மகனது வினையைக் கிளந்து சொல்லு மிடத்து இவ்வீற்று முதற்கண் கூறிய நிலைமையின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.

குறிப்புகள்

**எ - டு :** மகன்றாய்க் கலாம் செரு,தார், படை என வரும்.

'மகன்வினை' என்றது, மகற்குத் தாயாற் பயன்படும் நிலைமையன்றி, அவளோடு பகைத்த நிலைமையை.

## யகர ஈற்றிற்கு வேறு முடிபு

**361. மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே.**

இ∴து, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உள-மேற்கூறிய வல்லெழுத்தினொடு மெல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும் முடியும் மொழிகளும் உள.

**எ - டு :** வேய்ங்குறை, வேய்க்குறை் சிறை, தலை, புறம் என வரும்.

## அல்வழியில் யகர ஈறு

**362. அல்வழி யெல்லாம் இயல்பென மொழிப.**

இ∴து, இவ்வீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்வழி எல்லாம் இயல்பு என மொழிப - யகர வீற்று அல்வழியெல்லாம் இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** நாய்கடிது சிறிது, தீது, பெரிது என வரும்.

'எல்லாம்' என்றதனால், இவ்வீற்று உருபு வாராது, உருபின் பொருள்பட வந்த இடைச்சொல் முடிபும், வினையெச்சமுடிபும், இரு பெயரொட்டுப் பண்புத்தொகை முடிபும், அல்வழியுறழ்ச்சி முடிபும் கொள்க, அவ்வாய்க்கொண்டான், இவ்வாய்க்கொண்டான், உவ்வாய்க்கொண்டான் எவ்வாய்க்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும் தாய்க்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் எனவும் பொய்ச்சொல், மெய்ச்சொல் எனவும் வேய்கடிது, வேய்க்கடிது சிறிது, தீது, பெரிது எனவும் வரும்.

## வேற்றுமையில் ரகார ஈறு

**363. ரகார இறுதி யகார இயற்றே.**

இ∴து, ரகாரவீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ரகார இறுதி யகார இயற்று - ரகாரவீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் யகாரவீற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி மிக்கு முடியும்.

**எ - டு :** தேர்க்கால் செய்கை, தலை, புறம் என வரும்.

## ‘ஆர்’ ‘வெதிர்’ ‘சார்’ ‘பீர்’ என்னும் சொற்கள்

**364. ஆரும் வெதிருஞ் சாரும் பீரும்**
**மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்.**

குறிப்புகள்

இ∴து, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஆரும் வெதிரும் சாரும் பீரும் - ஆர் என்னும் சொல்லும், வெதிர் என்னும் சொல்லும் சார் என்னும் சொல்லும், பீர் என்னும் சொல்லும், மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும் - மெல்லெழுத்து மிக்கு முடிதல் மெய்ம்மைபெறத் தோன்றும்.

**எ - டு :** ஆர்ங்கோடு, வெதிர்ங்கோடு, சார்ங்கோடு, பீர்ங்கோடு செதிள், தோல், பூ என வரும்.

‘மெய்பெற’ என்றதனான், பிறவும் மெல்லெழுத்து மிகுதல் கொள்க.

குதிர்ங்கோடு,துவர்ங்கோடு செதிள்,தோல், பூ என வரும்.

இன்னும் அதனானே, பீர் என்பது மேல் அம்முப் பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

## 1. மெல்லொற்று ஈறுகள்

## ‘ சார்’ முன் ‘காழ்’

**365. சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்.**

இது, மேலனவற்றுட் சார் என்பதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சார் என்கிளவி காழ்வயின் வலிக்கும் - சார் என்னும் சொல் காழ் என்னும் சொல்லொடு புணருமிடத்து வல்லெழுத்து மிக்குப் புணரும்.

**எ - டு :** சார்க்காழ்1 என வரும்.

1. சாரினது வித்தென்பதே பொருள். இதனை வயிரமெனிற் கிளந்தோதுவரென்று உணர்க.

## ‘பீர்’ என்னுஞ் சொற்கு, மேலும் ஒரு முடிபு

**366. பீரென் கிளவி அம்மொடுஞ் சிவணும்.**

இ∴து, அவற்றுட் பீர் என்பதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பீர் என் கிளவி அம்மொடும் சிவணும் - பீர் என்னும் சொல் மெல்லெழுத்தேயன்றி அம்முச்சாரியையும் பெற்று வந்து முடியும்.

**எ - டு :** பீரங்கோடு செதிள், தோல், பூ என வரும்.

## வேற்றுமையில் லகார ஈறு

**367. லகார இறுதி னகார இயற்றே.**

இ∴து, லகார ஈற்றிற்கு னகாரஈற்று வேற்றுமையோடு இயைய வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) லகார இறுதி னகார இயற்று - லகார வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து முதன் மொழி வரின் னகாரவீற்றின் இயல்பிற்றாய் லகாரம் றகாரமாய்த் திரிந்து முடியும்.

குறிப்புகள்

**எ - டு :** கற்குறை சிறை, தலை, புறம் என வரும்.

## அதற்கு மேலும் ஒரு முடிபு

**368. மெல்லெழுத் தியையின் னகார மாகும்.**

இஃது, அவ்வீற்று மென்கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து இயையின் னகாரம் ஆகும் -அவ்வீறு மென்கணம் வந்து இயையின் லகாரம் னகாரமாய்த் திரிந்து முடியும்.

**எ - டு :** கன்ஞெரி, நுனி, முறி என வரும்.

இச் சூத்திரத்தினை வேற்றுமையது ஈற்றுக்கண் அல்வழியது எடுத்துக்கோடற்கண் சிங்கநோக்காக வைத்தமையான், அல்வழிக்கும் இம் முடிபு கொள்க.

கன்ஞெரிந்தது நீண்டது, மாண்டது என வரும்.

### அல்வழியில் லகார ஈறு

**369. அல்வழி யெல்லாம் உறழென மொழிப.**

இஃது, அவ்வீற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்வழி எல்லாம் உறழ்என மொழிப - அவ்வீறு அல்வழிக்கணெல்லாம் தந்திரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்து முடியும் என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** கல்குறிது, கற்குறிது சிறிது, தீது, பெரிது என வரும்.

'எல்லாம்' என்றதனால், கல்குறுமை, கற்குறுமை எனக் குணம் பற்றி வந்த வேற்றுமைக்கும் இவ்வுறழ்ச்சி கொள்க.

இன்னும் அதனானே, இவ்வீற்று வினைச்சொல்லீறு திரிந்தனவும் கொள்க. வந்தானாற்கொற்றன் என வரும்.

இன்னும் அதனானே, அக்காற்கொண்டான்,இக்காற்கொண்டான், உக்காற்கொண்டான் எக்காற்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் என உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபும் கொள்க.

இதனால் பிறவும் உள்ளவாறு அறிந்து ஒட்டிக்கொள்க

## லகார மெய் ஆய்தமாதல்

**370. தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்**
**புகரின் றென்மனார் புலமை யோரே.**

இஃது, மேலதனுள் ஒரு கூற்றிற்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தகரம் வரும் வழி - அவ்வாறு றகாரமாய்த் திரிந்த லகாரம் தகரமுதல்மொழி வருமொழியாய் வந்தவழி, ஆய்தம் நிலையலும் புகர் இன்று என்மனார் புலவர் - அவ்வாறு றகாரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாய்த் திரிந்து நிற்றலும் குற்றமின்றென்று சொல்லுவர் ஆசிரியர்.

**எ - டு :** கஃறீது, கற்றீது என வரும்.

‘புகரின்று’ என்றதனால், ‘நெடியத னிறுதி’ (சூத் - 75) என்பதனுள், வேரீது, வேற்றீது என்னும் உறழ்ச்சிமுடிபுங் கொள்க.

## லகார ஈற்றிற்கு வேறு முடிபு

குறிப்புகள்

**371. நெடியதன் இறுதி இயல்புமா ருளவே.**

இ∴து, மேலதற்கு ஒருவழி எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நெடிய தன் இறுதி இயல்புமார் உள - நெடியதன் இறுதிக்கண் நின்ற லகாரவீறு குறியதன் இறுதிக்கண் நின்ற லகாரம்போலத் திரிந்து உறழ்தலேயன்றி இயல்பாய் முடிவனவும் உள.

**எ - டு :** பால்கடிது சிறிது, தீது, பெரிது என வரும்.

இயல்பாகாது திரிந்தன வேல்கடிது, வேற்கடிது என்றாற் போல்வன.

## நெல் முதலிய சொற்கள்

**372. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல.**

இ∴து, இவ்வீற்று அவ்வழியுட் சிலவற்றிற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்- நெல் என்னும் சொல்லும் செல் என்னும் சொல்லும் கொல் என்னும் சொல்லும் சொல் என்னும் சொல்லும் ஆகிய இவை நான்கு சொல்லும், அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல - அல்வழியைச் சொல்லுமிடத்தும் தம் வேற்றுமை முடிபின் இயல்பிற்றாய் லகாரம் றகாரமாய்த் திரிந்து முடியும்.

**எ - டு :** நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது சிறிது,தீது, பெரிது என வரும்.

## ‘இல்’ என்னும் இன்மைச் சொல

**373. இல்லென் கிளவி யின்மை செப்பின்**
**வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை**
**வருதலும் இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்**
**கொளத்தகு மரபின் ஆகிட னுடைத்தே.**

இ∴து, இவ்வீற்று வினைக்குறிப்புச் சொல் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இல் என் கிளவி இன்மை செப்பின் - இல் என்னும் சொல் புக்குறையும் இல்லை உணர்த்தாது ஒரு பொருளது இல்லாமையை உணர்த்துமிடத்து, வல்லெழுத்து மிகுதலும் ஐ இடை வருதலும் இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும் - அல்வழி வல்லெழுத்து மிகுதலும் ஐ இடை வருதலும் இயல்பாகலும் ஆகாரம் மிக்குமுடிதலும் ஆகிய இம் முடிபு நான்கும், கொளத்தகும் மரபின் ஆகு இடன் உடைத்து - இச்சொல்லிற்கு முடிபாகக் கொளத்தகும் மரபானே இதன் முடிபு ஆகும் இடன் உடைத்து.

குறிப்புகள்

'கொளத்தகு மரபு' என்றதனான், வல்லெழுத்து மிக்குவழி ஐகாரம் வருதலும், ஆகாரம் மிக்கவழி வல்லெழுத்து மிகுதலும் கொள்க. இயல்பு முற்கூறாது ஒழிந்ததனால், வல்லெழுத்து மிகுதி ஆகாரம் வந்த வழி மிக்கே முடிதலின் சிறப்புடைத்தாதலும், ஐகாரம் வந்தவழி மிகுதலும் மிகாமையுமுடைமையின் சிறப்பின்றாதலும் கொள்க.

**எ-டு :** இல்லைக்கல், இல்லைகல் இல்கல் இல்லாக்கல் சுனை, துடி, பறை என வரும்.

இல்லைக்கல், இல்லைகல் என்பன இல்லை என்னும் ஐகாரவீற்றுச் சொல் முடிபன்றோவென்றும், இல்லாக்கல் என்பது உள்ள என்னும் பெயரெச்சத்து எதிர்மறையாகிய ஆகாரவீற்றுச் சொல்லது முடிபன்றோ வென்றும், இல்கல் என்பது பண்புத்தொகை முடிபன்றோ வென்றும் கூறின் அம் முடிபுகளோடு - இம் முடிபுகள் எழுத்தொப்புமையன்றி, இவை ஓசைவேற்றுமையுடைய வென்பது போலும் கருத்து. அவ்வோசை வேற்றுமையாவன, ஐகார வீறாயவழி அவ்வைகாரத்து மேல் ஒலியூன்றியும், லகார வீறாயவழி அந்த லகாரவொற்றின்மேல் ஒலியூன்றியும், அந்த லகாரமீது இயல்பு முடிபாயவழிப் பண்புத் தொகைபோல ஒரு திரண்மையாக ஒலியாது இடையற்று லகாரத்து மேல் ஒலியூன்றியும், ஆகாரவீறாய வழி ஒரு திரண்மையாய் அவ்வாகாரத்து மேல் ஒலியூன்றியும், ஆண்டு லகார வீறாயவழி ஒரு திரண்மையாக ஒலியாது அந்த லகாரத்துமேல் ஒலியூன்றியும் வரும் வேற்பாடுகள் போலும்.

இல் என்பது எதிர்மறை வினைக்குறிப்பு முற்று விரவுவினை.

## 'வல்' என்னும் சொல்

**374. வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே.**

இதுவும், இவ்வீற்றுள் ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) வல் என் கிளவி தொழிற்பெயர் இயற்று- வல் என்னும் சொல் அல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும் ஞகாரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், மென்கணத்தும் இடைக்கணத்தும் வகரத்தும் உகரம் பெற்றும் முடியும்.

**எ-டு:** வல்லுக்கடிது சிறிது, தீது, பெரிது,ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும் 'வல்லக்கடுமை ' சிறுமை,தீமை, பெருமை,ஞாறுசி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

## 2. இடையொற்று ஈறுகள்

## அதற்கு வேறொரு முடிபு

**375. நாயும் பலகையும் வரூஉங்காலை**
**ஆவயின் உகரங் கெடுதலும் உரித்தே**
**உகரங் கெடுவழி அகரம் நிலையும்.**

இது, மேலதற்கு எய்தியது ஒருமருங்கு மறுத்துப் பிறிதுவிதி கூறுதல்

நுதலிற்று.

(இ-ள்) நாயும் பலகையும் வரூஉம் காலை-மேல் நின்ற வல் என்பதன்முன் நாய் என்னும் பலகை என்னும் சொல்லும் வருமொழியாய் வருங்காலத்து, ஆவயின் உகரம் கெடுதலும் உரித்து - அவ்விடத்து உகரம் கெடாதே நின்று முடிதலேயன்றிக் கெட்டு முடியவும் பெறும், உகரம் கெடுவழி அகரம் நிலையும் - அவ்வுகரம் கெடுமிடத்து அகரம் நிலைபெற்று முடியும்.

**எ - டு :** வல்லநாய், வல்லப்பலகை என வரும்[1]

'அகரம் நிலையும்' என்னாது 'உகரம் கெடும்' என்றதனால், பிற வருமொழிக் கண்ணும் அவ் அகரப்பேறு கொள்க.

**எ - டு :** வல்லக்கடுமை சிறுமை, தீமை, பெருமை என வரும்.

1. உம்மை எதிர்மறையாகலான், உகரம் கெடாதே நின்று வல்லுநாய், வல்லுப்பலகை என வருதலுங் கொள்க. (நச்.)

## 'பூல' 'வேல' 'ஆல்'

**376. பூல்வே லென்றா ஆலென் கிளவியொடு**
**ஆமுப் பெயர்க்கும் அம்மிடை வருமே.**

இதுவும், அவற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பூல் வேல் ஆல் என் கிளவியொடு ஆ முப்பெயர்க்கும்-பூல் என்னும் சொல்லும் வேல் என்னும் சொல்லும் ஆல் என்னும் சொல்லும் ஆகிய மூன்று பெயர்க்கும், அம் இடை வரும் - வேற்றுமைக்கண் திரிபின்றி அம்முச்சாரியை இடை வந்து முடியும்.

**எ - டு :** பூலங்கோடு, வேலங்கோடு, ஆலம்கோடு செதிள், தோல், பூ என வரும்.

## லகர ஈற்றுத் தொழிற்பெயர்

**377. தொழிற்பெய ரெல்லாந் தொழிற் பெயர் இயல.**

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) தொழிற்பெயர் எல்லாம் தொழிற் பெயர் இயல-லகாரவீற்றுத் தொழிற்பெயரெல்லாம் ஞகாரவீற்றுத் தொழிற் பெயரின் இயல்பினவாய் அல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும் முடியும்.

**எ - டு :** கல்லுக்கடிது சிறிது,தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும் கல்லுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனால' இவ்வாறு முடியாது பிறவாறு முடிவனவும் கொள்க. பின்னல்கடிது துன்னல்கடிது பின்னற்கடுமை, துன்னற்கடுமை

குறிப்புகள்

என வரும்.

இன்னும் அதனானே, மென்கணம் வந்தவழி, பின்னன் ஞான்றது பின்னன் ஞாற்சி என மெல்லெழுத்தாய்த் திரிந்து முடிவனவும் கொள்க.

குறிப்புகள்

## ‘வெயில்’ என்னும் சொல்

**378. வெயிலென் கிளவி மழையியல் நிலையும்.**

இதுவும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) வெயில் என் கிளவி மழை இயல் நிலையும்-வெயில் என்னும் கிளவி மழை என்னும் சொல்லியல்பின் கண்ணே நிலைபெற்று அத்தும் இன்னும் பெற்று முடியும்.

**எ - டு :** வெயிலத்துக் கொண்டான் வெயிலிற் கொண்டான் சென்றான் தந்தான், போயினான் என வரும்.

## வேற்றுமையில் வகர ஈறு

**379. சுட்டுமுத லாகிய வகர விறுதி**
**முற்படக் கிளந்த உருபியல் நிலையும்.**

இஃது, வகாரவீற்றுப் பெயர் நான்கினும் சுட்டுமுதல் வகரம் மூன்றற்கும் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டுமுதலாகிய வகர இறுதி - சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர வீற்றுச்சொல்.முற்படக்கிளந்த உருபு இயல் நிலையும் - வேற்றுமைக்கண் முற்படச்சொன்ன உருபு புணர்ச்சியின் இயல்பு நிலைபெற்று வற்றுப் பெற்றுப் புணரும்.

**எ - டு :** அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு செவி, தலை, புறம் என வரும்.

‘முற்படக்கிளந்த’ என்றதனான் வற்றினோடு இன்னும் பெறுதல் கொள்க, அவற்றின் கோடு, இவற்றின்கோடு உவற்றின்கோடு செவி, தலை, புறம் என வரும்.

## அதற்கு அல்வழி முடிவு

**380. வேற்றுமை அல்வழி ஆய்த மாகும்.**

இஃது, மேலனவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வேற்றுமை அல்வழி ஆய்தம் ஆகும்- அச்சுட்டு முதலாகிய வகரவீறு வன்கணம் வந்தால் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியல்லாத அல்வழிக்கண் அவ்வகரம் ஆய்தமாய்த் திரிந்து முடியும்.

**எ - டு :** அஃகடிய, இஃகடிய, உஃகடிய் சிறிய, தீய, பெரிய என வரும்.

## அதற்கு வேறு முடிபுகள்

**381. மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும்.**

இஃது, மேலனவற்றிற்கு மென்கணத்து முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து இயையின் அ எழுத்து ஆகும்-அச்சுட்டு முதலாகிய வகரவீறு மென்கணம் வந்து இயைந்த விடத்து அவ்வகரம்

அம் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும்.

**எ - டு :** அஞ்ஞாண், இஞ்ஞாண், உஞ்ஞாண் நூல்,மணி என வரும்.

குறிப்புகள்

## அதற்கு வேறு முடிபுகள்

**382. ஏனவை புணரின் இயல்பென மொழிப.**

இஃது, மேலனவற்றிற்கு இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) ஏனவை புணரின் இயல்பு என மொழிப.-அச்சுட்டு முதலாகிய வகரவீறு ஒழிந்த இடைக்கணமும் உயிர்க்கணமும் வந்து புணரின் அவ்வகரம் திரியாது இயல்பாய் முடியும்.

**எ - டு :** அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ்,வட்டு, அடை, ஆடை என ஒட்டுக.

## வகர ஈற்று உரிச்சொல்

**383. ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே.**

இஃது, இவ்வீற்றுள் ஒழிந்த ஒன்றற்கும் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) ஏனை வகரம் தொழிற்பெயர் இயற்று- ஒழிந்த வகரவீறு ஞகரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன் கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் அல்லனவற்றுக்கண் உகரமே பெற்றும் முடியும்.

**எ-டு :** தெவ்வுக்கடிது சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும் தெவ்வுக்கடுமை சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

## வேற்றுமையில் ழகார ஈறு

**384. ழகார இறுதி ரகார இயற்றே.**

இஃது, ழகாரவீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ழகார இறுதி ரகார இயற்று- ழகார ஈற்றுப்பெயர் வன் கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகார ஈற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** பூழ்க்கால் சிறகு, தலை, புறம் என வரும்.

## 'தாழ்' என்னும் சொல்

**385. தாழென் கிளவி கோலொடு புணரின்**
**அக்கிடை வருதல் உரித்து மாகும்.**

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) தாழ் என் கிளவி கோலொடு புணரின்- தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லோடு புணரும் இடத்து, அக்கு இடை வருதலும் உரித்து- வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச்சாரியை இடை வந்து முடிதலும் உரித்து.

**எ - டு :** தாழக்கோல் என வரும்.

## ‘தமிழ்’ என்னும் சொல்

குறிப்புகள்

**386. தமிழென் கிளவியும் அதனோ ரற்றே.**
இதுவுமது

(இ-ள்) தமிழ் என் கிளவியும் அதன் ஓர் அற்று- தமிழ் என்னும் சொல்லும் அதனோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்கும் பெற்று முடியும்.

தமிழ்க்கூத்து சேரி,தோட்டம், பள்ளி என வரும்.

## குமிழ் என்னும் மரப்பெயர்

**387. குமிழென் கிளவி மரப்பெய ராயின்**
**பீரென் கிளவியோ டோரியற் றாகும்.**

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) குமிழ் என் கிளவி மரப்பெயர் ஆயின்- குமிழ் என்னும் சொல் குமிழ்த்தல் என்னும் தொழிலன்றி மரப்பெயராயின், பீர் என் கிளவியொடு ஓர் இயற்று ஆகும்- பீர் என் கிளவியோடு ஓர் இயல்பிற்றாய் மெல்லெழுத்தும் அம்முச்சாரியையும் பெற்று முடியும்.

**எ - டு :** குமிழங்கோடு செதிள்,தோல்,பூ என வரும்.

‘ஓர் இயற்று’ என்றதனால், பிறவற்றிற்கும் இம்முடிபு கொள்க. மகிழங்கோடு என வரும்.

## ‘பாழ்’ என்னும் சொல்

**388. பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே.**
இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியதன் மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பாழ் என் கிளவி மெல்லெழுத்து உறழ்பு- பாழ் என்னும் சொல் வல்லெழுத்தோடு மெல்லெழுத்து உறழ்ந்து முடியும்.

**எ - டு :** பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு் சேரி, தோட்டம், பாடி என வரும்.

## ஏழ் என்னும் எண்ணுப்பெயர்.

**389. ஏழென் கிளவி உருபியல் நிலையும்.**
இஃது, இவ்வீற்று எண்ணுப்பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஏழ் என் கிளவி- ஏழ் என்னும் எண்ணுப் பெயரது இறுதி, உருபு இயல் நிலையும்- உருபு புணர்ச்சிக்கண் சொன்ன இயல்பின்கண்ணே நிலைபெற்று (அன்பெற்று) முடியும்.

எ - டு : ஏழன் காயம் சுக்கு, தோரை, பயறு என வரும். இயல்பு வல்லெழுத்து இவ்வோத்தின் புறனடையான் வீழ்க்க.

## ஏழ் முன் அளவு முதலிய பெயர்கள்

குறிப்புகள்

**390. அளவு நிறையும் எண்ணும் வருவழி**
**நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்**
**கடிநிலை யின்றே ஆசிரியர்க்கே.**

இஃது, மேலதற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) அளவும் நிறையும் எண்ணும் வருவழி - (அவ் ஏழ் என்னும் எண்ணுப்பெயர்) அளவுப் பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் (வருமொழியாய்) வருமிடத்து, நெடு முதல் குறுகலும் உகரம் வருதலும் ஆசிரியர்க்கு கடிநிலை இன்று - நெடுமுதல் குறுகுதலும் (ஆண்டு) உகரம் வருதலும் ஆசிரியர்க்கு நீக்கும் நிலைமை இன்று.

**எ - டு :** எழுகலம் சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு, பலம் எனவும் எழுகழஞ்சு தொடி, பலம் எனவும் எழுமூன்று, எழுநான்கு எனவும் வரும்.

'நிலையின்று' என்றதனான், வன்கணத்துப் பொருட்பெயர்க்கும் இம்முடிபு கொள்க.

எழுகடல், சிலை, திசை, பிறப்பு என வரும்.

## ஏழ் முன் அளவு முதலிய பெயர்கள்

**391. பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி**
**நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி.**

இஃது, மேலதற்கு ஒருவழி எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பத்து என் கிளவி இடை ஒற்று கெடு வழி ஆய்தப்புள்ளி நிற்றல் வேண்டும் - (அவ்) ஏழ் என்பதனோடு பத்து என்பது புணரும் இடத்து அப்பத்து என்(னும்) கிளவி(யின்) இடை ஒற்றுக் கெடுவழி ஆய்தமாகிய புள்ளி நிற்றல் வேண்டும்.

**எ - டு :** எழுபஃது என வரும்.

## ஏழ் முன் அளவு முதலிய பெயர்கள்

**392. ஆயிரம் வருவழி உகரங் கெடுமே.**

இஃது, மேலதற்கு எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

(இ-ள்) ஆயிரம் வருவழி உகரம் கெடும் - (அவ் ஏழ் என்பது ) ஆயிரம் என்பது வருமிடத்து (முன்பெற்ற) உகரம் பெறாது முடியும்.

**எ - டு :** ஏழாயிரம் என வரும்.

## ஏழ் முன் அளவு முதலிய பெயர்கள்

**393. நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்**
**கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே.**

இதுவும், மேலதற்கு ஒருவழி எய்தியது முழுவதும் விலக்குகின்றது.

(இ-ள்) நூறு ஊர்ந்துவரும் ஆயிரக்கிளவிக்கு - (அவ் ஏழ் என்பது) நூறு என்னும் சொல் ஊர்ந்து வருகின்ற ஆயிரக்கிளவியாகிய நூறாயிரம் என்பதற்கு,கூறியநெடு முதல் குறுக்கம் இன்று-(முன்) கூறிய நெடுமுதல் குறுகி உகரம் பெறுதல் இன்று.

குறிப்புகள்

**எ - டு :** ஏழ் நூறாயிரம் என வரும்.

'கூறிய' என்றதனான், நெடுமுதல் குறுகி, உகரம் பெற்று எழுநூறாயிரம் என்றும் ஆம்.

இவ்விலேசினானே ஏழாயிரம் என்றும் ஆம்.

'இன்னும் அதனானே' இயல்புகணத்து முடிபு கொள்க.

எழுஞாயிறு, எழுநாள் என வரும்.

## ஏழ் முன் அளவு முதலிய பெயர்கள்

**394. ஐஅம் பல்லென வரூஉம் இறுதி**
**அல்பெய ரெண்ணு1 மாயியல் நிலையும்.**

இதுவும், மேலதற்கு ஒருவழி எய்தியது முழுவதும் விலக்குகின்றது.

(இ-ள்) ஐ அம் பல் என வரும் இறுதி அல்பெயர் எண்ணும் - (அவ் ஏழ் என்னும் எண்தான் ) ஐ என்றும் அம் என்றும் பல் என்றும் வருகின்ற இறுதிகளையுடைய (பொருட்பெயர்) அல்லாத எண்ணுப்பெயராகிய தாமரை வெள்ளம் ஆம்பல் என்பனவும்(வந்தால்), ஆ இயல் நிலையும் - (நெடுமுதல் குறுக்கம் இன்றி உகரம் பெறாது) அவ் இயல்பின் கண்ணே நின்று முடியும்.

**எ - டு :** ஏழ்தாமரை, ஏழ்வெள்ளம், ஏழாம்பல் என வரும்.

1.(பாடம்) ரெண்ணினும்.(நச்.)

## ஏழ் முன் அளவு முதலிய பெயர்கள்

**395. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.**

இதுவும், மேலதற்கு எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

(இ-ள்) உயிர் முன் வரினும் - (அவ் ஏழ் என்பது அளவு முதலிய பெயர்களுள்) உயிர் முதல்மொழி (முன் ) வரினும், ஆ இயல் திரியாது - (நெடுமுதல் குறுகி உகரம் வராது முடியும்) அவ் வியல்பில் திரியாது முடியும்.

**எ - டு :** ஏழ்கல், ஏழுழக்கு, ஏழொன்று, ஏழிரண்டு என வரும்.

## 'கீழ்' என்னும் சொல்

**396. கீழென் கிளவி உறழத் தோன்றும்**

இஃது, இவ் ஈற்றுள் ஒன்றற்கு வேற்றுமைக்கண் வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) கீழ் என் கிளவி உறழத் தோன்றும் - கீழ் என்னும் சொல் உறழ்ச்சியாகத் தோன்றி முடியும்.

**எ - டு :** கீழ்குளம், கீழ்க்குளம் என வரும்.

'தோன்றும்' என்றதனான் நெடுமுதல் குறுகாது உகரம் வருதலும்

கொள்க. (ஆங்கு) இயைபு வல்லெழுத்து இவ்வோத்தின் புறனடையான் வீழ்க்க.

**எ - டு :** கீழுகுளம் சேரி,தோட்டம்,பாடி என வரும்.

## வேற்றுமையில் ளகர ஈறு

குறிப்புகள்

**397. ளகார இறுதி ணகார இயற்றே.**

இ∴து, ளகார ஈற்றிற்கு ணகார ஈற்று வேற்றுமை முடிபோடு இயைய வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ளகார இறுதி ணகார இயற்று - ளகார (ஈற்றுப் பெயர் வேற்றுமைக்கண்) ணகார ஈற்று இயல்பிற்றாய் (வன்கணம் வந்தால்) ளகாரம் டகாரமாய்த் திரிந்து முடியும்.

**எ - டு :** முட்குறை் சிறை, தலை,புறம் என வரும்.

## அதற்கு வேறு முடிபு

**398. மெல்லெழுத் தியையின் ணகார மாகும்.**

இ∴து, மேலதற்கு மென்கணத்து முடிபு கூறுகின்றது.

(இ-ள்) மெல்லெழுத்து இயையின் ணகாரம் ஆகும் - (ளகார ஈறு ) மெல்லெழுத்து (வருமொழியாய் வந்து ) இயையின் ணகாரமாய்(த் திரிந்து) முடியும்.

**எ - டு :** முண்ஞெரி ˙ நுனி,முறி என வரும். இதனை வேற்றுமை இறுதிக்கண் அல்வழியது எடுத்துக்கோடற்கண் சிங்கநோக்காக வைத்தலின், அல்வழிக்கும் இம்முடிபு கொள்க.

முண்ஞெரித்தது நீண்டது, மாண்டது என வரும்.

## அல்வழியில் ளகர ஈறு

**399. அல்வழி யெல்லாம் உறழென மொழிப.**

இ∴து, மேலதற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்வழி எல்லாம் உறழ் என மொழிப - (ளகார ஈற்று) அல்வழிகளெல்லாம் (திரிந்தும் திரியாதும்) உறழ்ந்து முடியும் என்று சொல்லுவர் (புலவர்).

**எ - டு :** முள்கடிது, முட்கடிது சிறிது, தீது, பெரிது என வரும்.

‘எல்லாம்’ என்றதனால். குணவேற்றுமைக்கண்ணும் இவ்வுறழ்ச்சி கொள்க.

முள்குறுமை, முட்குறுமை் சிறுமை, தீமை, பெருமை எனவும் கோள்கடுமை,கோட்கடுமை எனவும் வரும்.

இன்னும் அதனானே, உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபும் கொள்க.

1அதோட்கொண்டான், இதோட்கொண்டான், உதோட்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் என வரும்.

1. அதோள் இதோள் முதலியன, அவ்விடத்து இவ்விடத்து எனச் சுட்டுவினாவிடப் பொருள்படுவன (பாவாணர்.)

## அதற்கு வேறு முடிபு

**400. ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே**
**தகரம் வருஉங் காலை யான.**

குறிப்புகள்

இஃது, மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) ஆய்தம் நிலையலும் வரைநிலை இன்று - (ளகாரம் டகாரமாயே திரியாது) ஆய்தமாய்த் திரிந்து நிற்றலும் வரையும் நிலைமை இன்று, தகரம் வரும் காலை - தகர முதல்மொழி வரும் காலத்து.

**எ - டு :** முஃடீது, முட்டீது என வரும்.

## அதற்கு மேலும் ஒரு முடிபு

**401. நெடியத னிறுதி இயல்பா குநவும்**
**வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்**
**போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே.**

இஃது, மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) நெடியதன் இறுதி இயல்பாகுநவும் - (ளகாரம்) நெடியதன் இறுதி திரியாது இயல்பாய் முடிவனவற்றையும், வேற்றுமை அல்வழி வேற்றுமை நிலையலும் - வேற்றுமை அல்லாத அல்வழியிடத்து (வேற்றுமையின் இயல்புடையனவாய்த் திரிந்து) முடிதலையும், போற்றல் வேண்டும் மொழியுமார் உள - போற்றுதல் வேண்டும் மொழிகளும் உள.

**எ - டு :** வாள்கடிது, கோள்கடிது : சிறிது, தீது, பெரிது எனவும்,தோட்கடிது, நாட்கடிதுசிறிது,தீது,பெரிது எனவும் வரும். 'போற்றல் வேண்டும்' என்றதனான், உதளங்காய் செதிள், தோல், பூ என அம்முப்பெற்று முடிவன கொள்க.

## ளகர ஈற்றத் தொழிற்பெயர்

**402. தொழிற்யெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.**

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல - (ளகார ஈற்றுத்) தொழிற்பெயரெல்லாம் வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய்(வன்கணம்) வந்தவழி வல்லெழுத்தும் உகரமும் பெற்றும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வந்தவழி உகரம் பெற்றும் முடியும்.

**எ - டு :** துள்ளுக்கடிது சிறிது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்' துள்ளுக்கடுமை: சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனால், தொழிற்பெயர்கள் இருவழியும் இவ்வாறன்றிப் பிறவாறு முடிவனவும் கொள்க.

கோள்கடிது, கோட்கடிது: வாள்கடிது,வாட்கடிது சிறிது. தீது, பெரிது எனவும்' கோள்கடுமை் கோட்கடுமை் வாள்கடுமை, வாட்கடுமை்

சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

ஈண்டு, வாள் என்றது கொல்லுதலை.

## 1. மெல்லொற்று ஈறுகள்

குறிப்புகள்

### இருள் என்னும் சொல்.

**403. இருளென் கிளவி வெயிலியல் நிலையும்.**

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) இருள் என் கிளவி வெயில் இயல் நிலையும்-இருள் என்னும் சொல் (வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்) வெயில் என்னும் சொல்லின் இயல்பிலே (நின்று அத்தும் இன்னும் பெற்று) முடியும்.

**எ - டு :** இருளத்துக் கொண்டான், இருளிற் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

### 'புள்' 'வள்' என்னும் சொற்கள்.

**404. புள்ளும் வள்ளும் தொழிற்பெய ரியல.**

இதுவும், அவ்வீற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல - புள் என்னும் சொல்லும் வள் என்னும் சொல்லும் (வேற்றுமைக் கண்ணும் அல்வழிக்கண்ணும் ஞகார ஈற்றுத்) தொழிற்பெயர் இயல்பிற்றாய் (வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும்) முடியும்.

**எ - டு** :புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது சிறிது,தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும் ' புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை் சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

இதனைத் 'தொழிற் பெயரெல்லாம்' (40) என்றதன்பின் வையாத முறையன்றிய கூற்றினான். இவ்வழியும் வேற்றுமைத் திரிபு எய்தி முடிவனவும் கொள்க.

புட்கடிது, வட்கடிது சிறிது, தீது, பெரிது,ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்' புட்கடுமை, வட்கடுமை, சிறுமை,தீமை,பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி. வலிமை எனவும் வரும்.

இன்னும் அதனானே, பள் என்பதன்கண்ணும், கள் என்பதன்கண்ணும் ' பட்கடிது, கட்கடிது' இருவழியும் இவ்விரு முடிபு பெற்றவழிக் கொள்க.

பள்ளுக்கடிது,கள்ளுக்கடிது பள்ளுக்கடுமை, கள்ளுக்கடுமை எனவும் பட்கடிது பட்கடும்,கட்கடுமை எனவும் ஒட்டுக.

### 'மக்கள்' என்னும் சொல்.

**405. மக்க ளென்னும் பெயர்நிலைக் கிளவியும்1**
**தக்கவழி அறிந்து வலித்தலு முரித்தே.**

இ∴து, மக்கள் என்னும் உயர்திணைப் பெயருக்கு 'உயிரீறாகிய

வுயர்திணைப் பெயரும்' (தொகை மரபு - சூத்திரம் 11) என்பதனுள் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) மக்கள் என்னும் பெயர்நிலைக் கிளவி - மக்கள் என்னும் பெயர்ச்சொல்லின் இறுதி, தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்து - (இயல்பே யன்றித்) தக்க இடம் அறிந்து வல்லொற்றாய்(த் திரிந்து) முடிதலும் ஆம்.

குறிப்புகள்

'தக்க வழி' என்றதனால் அம்மக்கள் உடம்பு, உயிர்நீங்கிய காலத்து இம்முடிபு எனக் கொள்க.

**எ - டு :** மக்கட்தொகைச் செவி, தலை,புறம் என வரும்.
1.(பாடம்) பெயர்ச்சொலிறுதி.(நச்.)

## 3. புறனடை

## இவ்வியலின் புறனடை

**406. உணரக் கூறிய புணரியல் மருங்கின்**
**கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே.**

இஃது, இவ்வோத்திற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உணரக் கூறிய -உணரக் கூறப்பட்ட புள்ளியீறு (கள்), புணர் இயல் மருங்கின் - (வருமொழியோடு) புணரும்இயல் பிடத்து, கண்டு செயற்கு உரியவை கண்ணினர் கொளல்-(மேல் முடித்த முடிபுகளேயன்றி வழக்கினுள்) கண்டு முடித்தற்குரிய பிற முடிபுகளைக் கருதிக்கொண்டு முடிக்க.

**எ - டு :** விழன்குளம் சேறு,தரை.பழனம் என இவை னகார ஈற்று வேற்றுமைக்கண் திரியாது இயல்பாய் முடிந்தன.

பொன்னப்பந்தம் என்பது அவ்வீறு அக்குப்பெற்று முடிந்தது.

நீர் குறிது சிறிது, தீது, பெரிது என்பது ரகார ஈற்று அல்வழி முடிபு.

வேர்குறிது வேர்க்குறிது (என்பது) அவ்வீற்று அல்வழி உறழ்ச்சி.

அம்பர்க்கொண்டான், இம்பர்க்கொண்டான், உம்பர்க்கொண்டான், எம்பர்க்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் என்பன அவ்வீற்றுள் உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபு.

தகர்க்குட்டி என்பது அவ்வீற்று இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகிய அல்வழி முடிபு.

வடசார்க்கூரை, தென்சார்க்கூரை என்பன அவ்வீற்று இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ முடிபு.

உசிலங்கோடு, எலியாலங்கோடு என்பன லகார ஈற்று அம்முப் பேறு.

கல்லம்பாறை என்பது அவ்வீற்று அல்வழி அம்முப்பேறு.

அழலத்துக்கொண்டான் என்பது அவ்வீற்று அத்துப்பேறு.

அழுக்கற்போர் என்பது அவ்வீற்று அல்வழித்திரிபு.

யாழ்குறிது சிறிது, பெரிது என்பன ழகார ஈற்று அல்வழி முடிபு.

வீழ்குறிது, வீழ்க்குறிது என்பன அவ்வீற்று அல்வழி உறழ்ச்சி.

தாழப்பாவை என்பது அவ்வீற்று அல்வழி அக்குப்பேறு.

இனி 'உணரக்கூறிய' என்றதனால், குளத்தின் புறம் மரத்தின் புறம் என உருபிற்கு எய்திய அத்தோடு இன்பெறுதலும் கொள்க.

இனிக்'கண்ணினர்' என்றதனால், ஒருநாளைக் குழவி என ளகர ஈறு ஐ என்னும் சாரியையும் வல்லெழுத்தும் பெற்று முடிந்தன கொள்க.

பிறவும், இவ்வோத்தின் வேறுபட வருவனவெல்லாம் இதன் அகத்து முடித்துக்கொள்க.

எட்டாவது புள்ளி மயங்கியல் முற்றிற்று

குறிப்புகள்

# கூறு - 14 குற்றியலுகரப் புணரியல்

குறிப்புகள்

## குற்றியலுகரப் புணரியல்

## 9. குற்றியலுகரப் புணரியல்

குற்றியலுகர ஈறுகட்குரிய புணர்ச்சி யிலக்கணம் உணர்த்துவது.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், குற்றியலுகர ஈறு வருமொழியோடு புணரும் இயல்பு உணர்த்தினமையின் குற்றியலுகரப் புணரியல் எனப்பட்டது.

### 1. குற்றியலுகரத்தின் இயல்பு

### குற்றியலுகரத்தின் பெயர், முறை, தொகை

**407. ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
**ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்**
**ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன்.**

இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இக்குற்றியலுகரம் வரும் இடத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈர் எழுத்து ஒரு மொழி - இரண்டு எழுத்தாலாகிய ஒரு மொழியும், உயிர்த்தொடர் - உயிர்த்தொடர்மொழியும், இடைத்தொடர் - இடைத்தொடர் மொழியும், ஆய்தத்தொடர்- ஆய்தத்தொடர் மொழியும், வன்தொடர் - வன்தொடர்மொழியும், மென்தொடர் - மென்தொடர்மொழியும், ஆ இரு மூன்று - (ஆகிய ) அவ் ஆறு (என்று சொல்லப்படும்), உகரம் குறுகு இடன் - உகரம் குறுகி வரும் இடன்.

**எ - டு :** நாகு, வரகு,தெள்கு,எ.்.கு,கொக்கு,குரங்கு என வரும்.

### அவற்றுள், ஈரொற்றுத் தொடர்கள்

**408. அவற்றுள்,**

**ஈரொற்றுத் தொடர்மொழி யிடைத்தொட ராகா.**

இ.்.து, அவ் ஆறனுள் ஓர் ஈற்றிற்கு எய்தியது விலக்கிப்பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) அவற்றுள் ஈர் ஒற்று தொடர்மொழி - அவற்றுள் ஈர் ஒற்றுத்தொடர் மொழி (களில்), இடைத்தொடர் ஆகா - இடைத்தொடர் ஆகா, (வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் ஆம்.)

**எ - டு :** ஈர்க்கு ˙ மொய்ம்பு என வரும்.

### இருவழியிலும் குற்றுகரம் வருமாறு

**409. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகர நிறையும்1.**

இ.்.து, எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

(இ-ள்) அல்லது கிளப்பினும் - அல்வழியைச் சொல்லும் இடத்தும், வேற்றுமைக்கண்ணும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும், எல்லா இறுதி உகரமும் நிறையும் - ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும்.

**எ - டு :** நாகு கடிது, நாகு கடுமை, வரகு கடிது, வரகு கடுமை என வரும்.

குறிப்புகள்

## அதற்கு, மேலும் ஒரு முடிபு

**410. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்**
**தொல்லை இயற்கை நிலையலு முரித்தே.**

இ∴து, எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

(இ-ள்) வல்லொற்றுத் தொடர்மொழி - (அவ் ஈற்றுள்ளும்) வல்லொற்றுத் தொடர்மொழி, வல்லெழுத்து வருவழி, வல்லெழுத்து (முதல்மொழி வருமொழியாய்) வரும் இடத்து-தொல்லை இயற்கை நிலையலும் உரித்து - முன் (கூறிய) இயற்கை நிற்றலும் உரித்து.

**எ - டு :** கொக்குக் கடிது, கொக்குக் கடுமை என வரும்.

## 2. குற்றியலிகரம்

## குற்றியலிகரம் வருமாறு

**411. யகரம் வருவழி இகரங் குறுகும்**
**உகரக் கிளவி துவரத் தோன்றாது.**

இ∴து, குற்றியலிகரம் புணர்மொழியுள் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) யகரம் வருவழி உகரக்கிளவி துவர தோன்றாது- யகர முதல்மொழி வரும் இடத்து நிலைமொழி உகரம் முற்றத் தோன்றாது இகரம் குறுகும் -(ஆண்டு) ஓர் இகரம் (வந்து) குறுகும்.

எ - டு : நாகியாது, வரகியாது, தெள்கியாது, எ∴கியாது,கொக்கியாது, குரங்கியாது என வரும்.

இதனானே, ஆகார ஈறு அகரம் பெற்றாற் (உயிர் மயங்கியல் - சூத்திரம்,24) போல ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் இகரம் பெற்று யகர முதல்மொழியோடு புணருமாறு கூறிற்றாயிற்று.

## 3. குற்றுகரப் பொதுப் புணர்ச்சி

## நெடிற்றொடர், உயிர்த்தொடர்

**412. ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்**
**வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்**
**தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.**

இ∴து, மேற்கூறிய ஆறினுள்ளும் முன் நின்ற இரண்டிற்கும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபு கூறுகின்றது.

(இ-ள்) ஈர் எழுத்து மொழியும் உயிர்த் தொடர் மொழியும்-ஈர் எழுத்து ஒரு மொழிக் குற்றியலுகர ஈறும், உயிர்த்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், வேற்றுமை ஆயின் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின்˙ இன

ஒற்று இடைமிக வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும்-இனமாகிய ஒற்று இடையிலே மிக வல்லெழுத்து மிகுதி தோற்றி முடிதல் வேண்டும்.

**எ - டு :** யாட்டுக்கால்˙ செவி, புறம் எனவும்˙ முயிற்றுக்கால்˙ சினை, தலை, புறம் எனவும் வரும்.

குறிப்புகள்

'தோற்றம்' என்றதனால், இவ்விரண்டும் (ஏனைக்கணத்து) இயல்பு கணத்து முடிபு கொள்க.

யாட்டுஞாற்சி, முயிற்றுஞாற்சி˙ நீட்சி,மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு,ஆட்டம் என வரும்.

## அதற்கு, வேறு முடிபு

**413. ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே**
**அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே.**

இ∴து, எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

(இ-ள்) இன ஒற்று இடை மிகா மொழியுமார் உள - இன ஒற்று இடை(யில்) மிக்கு முடியாத மொழிகளும் உள. வல்லெழுத்து மிகல் அ திறத்து இல்லை - வல்லெழுத்து மிக்கு முடிதல் அக்கூற்றுள் இல்லை.

**எ - டு :** நாகுகால்˙ சினை,தலை,புறம் எனவும்˙ வரகுகதிர்˙ சினை, தலை, புறம் எனவும் வரும்.

'அத்திறம்' என்றதனால், உருபிற்கு எய்திய சாரியை பொருட்கு எய்தியவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

யாட்டின்கால். முயிற்றின்கால், நாகின்கால்,வரகின்கால் என வரும்.

## இடைத்தொடர், ஆய்தத்தொடர்

**414.இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்**
**நடைஆ இயல என்மனார் புலவர்.**

இ∴து, இடை நின்ற இரண்டிற்கும் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) இடை ஒற்றுத்தொடரும் ஆய்தத்தொடரும் நடை - இடை ஒற்றுத்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் ஆய்தத்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் நடக்கும் இடத்து - ஆ இயல என்மனார் புலவர் - மேற்கூறிய இயல்பு முடிபினை உடைய என்று சொல்லுவர் புலவர்.

**எ - டு :** தெள்குகால்˙ சிறை, தலை, புறம் எனவும் எ∴கு கால் சிறை, தலை, புறம் எனவும் வரும்.

## வன்றொடர், மென்றொடர்

**415. வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்**
**வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே**
**மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்**
**றெல்லாம் வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்.**

இ∴து, பின் நின்ற இரண்டிற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் - வன்றொடர் மொழிக் குற்றியலுகர ஈறும் மென்றொடர் மொழிக் குற்றியலுகர ஈறும், வந்த வல்லெழுத்து ஒற்று இடை மிகும் - (வருமொழியாய்) வந்த வல்லொற்று இடையிலே மிக்கு முடியும்மெல்லொற்று தொடர்மொழி மெல்லொற்று எல்லாம் - (அவ்விரண்டு ஈற்றினுள்) மெல்லொற்றுத்

தொடர்மொழிக் (கண்நின்ற) மெல்லொற்றெல்லாம், இறுதி வல்லொற்று கிளை ஒற்று ஆகும் - இறுதி வல்லொற்றும் ஆய் முடியும்.

**எ - டு :** கொக்குக்கால் ˙ சிறகு, தலை, புறம், எனவும் குரக்குக்கால் செவி, தலை, புறம் எனவும் ˙ எட்குக் குட்டி1 செவி, தலை, புறம் எனவும் வரும்.

குறிப்புகள்

'வந்த' என்றதனால், இவ்விரண்டிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கு எய்தியவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

கொக்கின்கால், குரங்கின்கால் என வரும்.

'எல்லாம்' என்றதனால், பறம்பிற்பாரி என்றாற் போல்வன மெல்லொற்றுத் திரியாமையும் கொள்க.

'ஒற்று' என்ற மிகுதியான், இயல்புகணத்துக் கண்ணும் குரக்கு ஞாற்சி நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை,அடைவு, ஆட்டம் என மெல்லொற்றுத் திரிதலும் கொள்க.

1. கொக்குக்கால்- வன்றொடர்க் குற்றியலுகரம் வந்த வல்லெழுத்து மிக்கு முடிந்தது. குரங்குக்கால் - மென்றொடர்க் குற்றியலுகரம் வந்த வல்லெழுத்து மிக்கு முடிந்தது. குரக்குக்கால் மென்றொடரின் இடையில் நின்ற மெல்லொற்று இறுதி வல்லொற்றாய்த் திரிந்தது. எட்குக்குட்டி. மென்றொடரின் இடையில் நின்ற மெல்லொற்று இன வல்லொற்றாய்த் திரிந்தது.

## மரப்பெயர்

**416. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை.**

இ∴து, அவ்வீற்று இரண்டிற்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) மரப்பெயர் கிளவிக்கு சாரியை அம் - (வன்றொடரின்கண்ணும் மென்றொடரின்கண்ணும்) மரப்பெயராகிய சொல்லிற்கு (வரும்) சாரியை அம்(முச் சாரியை).

**எ - டு :** தேக்கங்கோடு செதிள், தோல், பூ எனவும்˙
வேப்பங்கோடு செதிள் தோல் பூ எனவும் வரும்.

## அதற்கு, மேலும் ஒரு முடிபு

**417. மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே.**

இ∴து, மென்றொடர் மொழிக்கு எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

(இ-ள்) மெல்லொற்று வலியா மரப்பெயரும் உள - மெல்லொற்று வல்லொற்றாய்த் திரியாது முடியும் மரப்பெயரும் உள.

**எ - டு :** குருந்தங்கோடு செதிள், தோல், பூ எனவும்
புன்கங்கோடு செதிள், தோல், பூ எனவும் வரும்.

மற்று, இது நிலைமொழித்தொழிலை நிலைமொழி விலக்குமாதலின்1 சாரியை வகுப்பவே முடியும் பிற எனின், இது நிலைமொழியின் உள்தொழிலாகலின் அவ்வாறு விலக்குண்ணாதென்பது கருத்து.

1. நிலைமொழித் தொழில், அத்துப்பேறு, நிலைமொழித் தொழிலை விலக்கல், 24 ஆம் நூறபாவில் விதித்த அகரத்தை விலக்கல

## நெடிற்றொடர் வன்றொடர்

**418. ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்**
**அம்மிடை வரற்கும் உரியவை உளவே**
**அம்மர பொழுகு மொழிவயி னான.**

குறிப்புகள்

இ∴து, ஈரெழுத்து ஒரு மொழிக்கும் வன்றொடர் மொழிக்கும் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) ஈர் எழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும் - ஈரெழுத்து ஒருமொழிக் குற்றியலுகரமும் வன்றொடர் மொழிக் குற்றியலுகரமும், அம் இடை வரற்கும் உரியவை உள- (முன் முடித்துப்போந்த முடிபுகளன்றி) அம்முச்சாரியை இடைவந்து முடித்தற்கு உரியனவும் உள.(யாண்டானின்,) அம் மரபு ஒழுகும் மொழிவயின் ஆன - அவ் இலக்கணம் நடக்கும் மொழியிடத்து.

**எ - டு :** ஏறங்கோள், வட்டம்போர் என வரும்.

'உள' என்றதனால், தெங்கங்காய்,பயற்றங்காய் என வன்றொடர் அல்லனவற்றிற்கு அம்(முப்) பேறு கொள்க.

'அம்மரபொழுகும்' என்றதனால், அரசக்கன்னி முரசக்கடிப்பு1 என அக்குப்பேறும் கொள்க.

இன்னும் அதனானே, இருட்டத்துக் கொண்டான் என்னும் அத்துப் பேறும் கொள்க.

இன்னும் அதனானே, மயிலாப்பிற் கொற்றன், பறம்பிற்பாரி என இன்பேறும் கொள்க.

1. அரசக்கன்னி, அரச வாழ்க்கை முதலிய தொடர்களின் இடையில் வந்துள்ளது. அக்குச் சாரியை என்பதைவிட அகரச்சாரியை என்பதே பொருத்தமாம்.

## சில மென்றொடர் மொழிகள்

**419. ஒற்றுநிலை திரியா தக்கொடு வருஉம்**
**அக்கிளை மொழியும் உளவென மொழிப.**

இ∴து, மென்றொடர் மொழியுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்குதலும் எய்தியதன் மேல் சிறப்பும் கூறுகின்றது.

(இ-ள்) ஒற்று நிலை திரியாது அக்கொடு வரும் அ கிளை மொழியும் உள என மொழிப - ஒற்று (முன் நின்ற) நிலை திரியாது அக்குச்சாரியையோடு(ம் பிற சாரியையோடும்) வரும் அக்கிளையெழுத்து மொழியும் உள என்று சொல்லுவர்.(ஆசிர

**எ - டு :** குன்றக்கூகை, மன்ற பெண்ணை என வரும்.

'உம்' மையால், கொங்கத்துழவு, வங்கத்து வாணிகம் என அத்துப்பெற்றன.

'நிலை' என்றதனான், ஒற்றுநிலை திரியா அதிகாரத்துக்கண் இயைபு வல்லெழுத்து விலக்குக.

'அக்கிளைமொழி' என்றதனால், பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச்சேரி என அன்னும் அக்கும் வந்தன கொள்க.

## எண்ணுப்பெயர்

**420. எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும்.**

இ∴து, குற்றுகர ஈற்று எண்ணுப்பெயரொடு பொருட்பெயர் முடிக்கின்றது.

(இ-ள்) எண்ணுப்பெயர் கிளவி உருபு இயல் நிலையும் - எண்ணுப்பெயராகிய சொற்கள் உருபுபுணர்ச்சியின் இயல்பின் கண்ணே (நின்று அன்பெற்று) முடியும்.

**எ - டு** :ஒன்றன்காயம், இரண்டன்காயம் சுக்கு, தோரை,பயறு என வரும்.

குறிப்புகள்

## 4. குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சி

## ‘வண்டு’, ‘பெண்டு’ என்னும் சொற்கள்

**421. வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்.**

இ∴து, மென்றொடர் மொழியுள் சிலவற்றிற்குப் பிற முடிபு கூறுகின்றது.

(இ-ள்) வண்டும் பெண்டும் இன் ஒடு சிவணும் - வண்டு என்னும் சொல்லும் பெண்டு என்னும் சொல்லும் இன்சாரியையோடு பொருந்தி முடியும்.

**எ - டு** : வண்டின்கால், பெண்டின்கால் என வரும்.

## ‘பெண்டு’

## என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு.

**422. பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்.**

இ∴து, மேற்கூறியவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) பெண்டு என் கிளவிக்கு அன்னும் வரையார் - பெண்டு என்னும் சொல்லிற்கு (இன்னேயன்றி) அன் சாரியையும் வரையார்.

**எ - டு** :பெண்டன்கை என வரும்.

## வினாப்பெயர், சுட்டுப்பெயர்

**423. யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய**
**ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்.**

இ∴து, ஈரெழுத்து ஒரு மொழியுள் ஒன்றற்கும் சுட்டுமுதல் ஆய்தத் தொடர் மொழிக்கும் வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) யாது என் இறுதியும் சுட்டுமுதல் ஆகிய ஆய்த இறுதியும் - யாது என்னும் ஈறும் சுட்டு முதலாகிய ஆய்தத்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், உருபு இயல்நிலையும் - உருபுப் புணர்ச்சியின் (கண்ணே) நின்று அன்பெற்று, சுட்டு முதல் மொழிகள் ஆய்தம் கெட்டு முடியும்.

**எ - டு** : யாதன் கோடு, அதன் கோடு, இதன் கோடு, உதன் கோடு1 என வரும்.

1.ஆய்தங்கெடா முன்னே அன்னின் அகரத்தைக் குற்றிகரத்தின்மேல் ஏற்றுக் ஆய்தங் கெட்டால் அது முற்றுகரமாய் நிற்றலின்.(நச்.)

## அல்வழியிற் சுட்டுப்பெயர்

**424. முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி**
**மன்னல் வேண்டும் அல்வழி யான.**

குறிப்புகள்

இஃது, மேற்கூறிய ஈற்றுள் சுட்டுமுதல் ஈற்று உகரத்திற்கு ஒரு வழி அல்வழி முடிபு கூறுகின்றது.

(இ-ள்) முன் உயிர் வரும் இடத்து- (அவற்றுள் சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழி உகர ஈறு தன்) முன்னே உயிர் வரும் இடத்து, ஆய்தப்புள்ளி மன்னல் வேண்டும் - ஆய்தப்புள்ளி (முன்பு போலக் கெடாது) நிலைபெற்று முடிதல் வேண்டும், அல்வழியான - அல்வழிக்கண்.

**எ - டு :** ஆஃதடை, இஃதடை, உஃதடை, ஆடை, இலை என ஒட்டுக.

'முன்' என்றதனான், வேற்றுமைக்கண்ணும் உயிர் முதல்மொழி வந்த இடத்து அஃதடைபு, அஃதாட்டம் என ஆய்தம் கெடாமை கொள்க.

## அல்வழியில் அதற்கு மேலும் ஒரு முடிபு

**425. ஏனைமுன் வரினே தானிலை யின்றே.**

இஃது, மேலனவற்றிற்குப் பிறகணத்தோடு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஏனை முன்வரின் தான் நிலையின்று - (அச் சுட்டுமுதல் உகர ஈறு உயிர்க்கணம் ஒழிந்த) பிற கணங்கள் முன்வரின் அவ் ஆய்தம் நிலையின்றி முடியும்.

எ - டு : அது கடிது, இது கடிது, உது கடிது, சிறிது, தீது் பெரிது, ஞான்றது,நீண்டது, மாண்டது் யாது, தீது, வலிது என வரும்.

## பொதுவாக அல்வழியில் குற்றுகர ஈறுகள்

**426. அல்லது கிளப்பின் எல்லா மொழியும்**
**சொல்லிய பண்பின் இயற்கை யாகும்.**

இஃது, ஆறு ஈற்றுக் குற்றியலுகரத்திற்கு, அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) அல்லது கிளப்பின் - அவ்வழியைச் சொல்லும் இடத்து, எல்லா மொழியும் - ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும், சொல்லிய பண்பின் இயற்கை ஆகும் - மேற்சொல்லிய பண்பினையுடைய இயல்பாய் முடியும்.

**எ - டு :** நாகு கடிது, வரகு கடிது, தெள்கு கடிது, எஃகு கடிது, குரங்கு கடிது் சிறிது. தீது, பெரிது என வரும்.

'எல்லா மெழியும்' என்றநனால், வினைச் சொல்லும் வினைக்குறிப்புச் சொல்லும் இயல்பாய் முடிந்தன கொள்க. கிடந்தது குதிரை, கரிது குதிரை கன வரும்.

'சொல்லிய' என்றதனான் இருபெயரொட்டுப் பண்புத்தொகை முடிபு கொள்க. காட்டுக் கானம், குருட்டெருது என வரும்.

'பண்பின்' என்றதனான், ஐ என்னும் சாரியை பெற்று வரும் அல்வழி முடிபும் கொள்க. அன்றைக்கூத்தன், பண்டைச்சான்றார் ஓர் யாட்டை யானை, மற்றை யானை என வரும்.

## வன்றொடர்

**427. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே.**

இ∴து, அவ்வாறீற்றின் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) வல்லொற்றுத் தொடர் மொழி - வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றியலுகரம், வல்லெழுத்து மிகும் - (வல்லெழுத்து வருவழி) வல்லெழுத்து மிக்கு முடியும்.

**எ - டு :** கொக்குக்கடிது சிறிது தீது என வரும்.

## 'ஆங்கு' 'யாங்கு' முதலிய மென்றொடர் மொழிகள்

**428. சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்**
**யாவினா முதலிய மென்றொடர் மொழியும்**
**ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை.**

இதுவும், அவ்வாறீற்றின் ஒன்றன்கண் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச் சொற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) சுட்டு சினை நீடிய மென்றொடர் மொழியும் - சுட்டாகிய சிலையெழுத்து நீண்ட மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், யா வினா முதலிய மென்றொடர்மொழியும் - யா என்னும் வினா முதலாகிய மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், வல்லெழுத்து இயற்கை ஆ இயல் திரியா - (மேற்கூறிய வல்லெழுத்து இயற்கையாகிய அவ் இயல்பில் திரியா(து) முடியும்.

**எ - டு :** ஆங்குக்கொண்டான், ஈங்குக்கொண்டான்,
ஊங்குகொண்டான், யாங்குக்கொண்டான் சென்றான், தந்தான்,
போயி[illegible]னான், அக் குற்றுகர ஈற்று வினையெச்ச முடிபு கொள்க. செத்துக்கிடந்தான், இருந்துகொண்டான் என வரும்.

1.மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈற்று வினைஎச்சம் இயல்பாம் இருந்து கொண்டான்.(நச்.

## யாங்கு என்பதற்கு மேலும் ஒரு முடிபு

**429. யாவினா மொழியே இயல்பு மாகும்.**

இ∴து, மேலவற்றுள் ஒன்றன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) யா வினா மொழி இயல்பும் ஆகும் - (அவற்றுள்) யா வினா மொழி (மேற்கூறிய விகாரமேயன்றி) இயல்பாயும் முடியும்.

**எ - டு :** யாங்கு1 கொண்டான்
சென்றான்,தந்தான்,போயினான் என வரும்.

1.யாங்கு - எப்படி

## அவற்றிற்கு நிலையொழிச் செய்கை

**430. அந்நான் மொழியுந் தந்நிலை திரியா,**

இ∴து, மேலனவற்றிற்கு நிலைமொழிச் செய்கை கூறுகின்றது.

(இ-ள்) அ நால் மொழியும் (சுட்டு முதல் மூன்றும் யாமுதல் மொழியுமாகிய) அந் நான்கு மொழியும், தம் நிலை திரியா-தம்

குறிப்புகள்

மெல்லொற்று நிலை திரிந்து வல்லொற்று ஆகாது முடியும்.

'தந்நிலை' என்றதனால், மெல்லொற்று திரியாது மிக்கு முடிவன பிறவும் கொள்க.

குறிப்புகள்

**எ - டு :** அங்குக்கொண்டான், இங்குக்கொண்டான், உங்குக்கொண்டான், எங்குக்கொண்டான் ' சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'யாமொழி' என்னாது 'வினா' என்றதனால், பிற இயல்பாய் முடிவனவும் கொள்க. முந்து கொண்டான், பண்டு கொண்டான், இன்று கொண்டான், அன்று கொண்டான் என வரும்.

## 'உண்டு' என்னும் சொல

**431. உண்டென் கிளவி உண்மை செப்பின்**
**முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்**
**மேனிலை யொற்றே ளகாரம் ஆதலும்**
**ஆமுறை யிரண்டும் உரிமையும் உடைத்தே**
**வல்லெழுத்து வரூஉங் காலை யான.**

இ∴து, மென்றொடர் மொழியுள் ஒரு வினைக்குறிப்பு மொழிக்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) உண்டு என் கிளவி உண்மை செப்பின் - உண்டு என்னும் சொல் ( உண்டு என்னும் தொழில் ஒழிய ) உண்மை என்னும்1 பண்பு உணர நிற்கும் இடத்து, முந்தை இறுதி மெய்யொடும் கெடுதலும் மேல் ஒற்று ளகாரம் ஆதலும்- முற்பட்ட ஈற்றுக் குற்றியலுகரம் (தான் ஏறி நின்ற) மெய்யொடும் கெடுதலும் அதற்கு மேல் நின்ற ணகார ஒற்று ளகாரம் ஆதலுமாகிய, ஆ முறை இரண்டும் உரிமையும் உடைத்து - அம்முறைமையுடைய இரண்டினையும் உரித்தாதலும் உடைத்து, வல்லெழுத்து வருங்காலை - வல்லெழுத்து முதல்மொழி வருங்காலத்து.

வல்லெழுத்ததிகாரம் வாரா நிற்ப, ('வல்லெழுத்து வரூஉங் காலை' என்பதனான்) இவ் இருமுடிபும் உள்ளது. பகர முதல்மொழி வந்தால், மற்றை மூன்று எழுத்தின்கண்ணும் ஈறு கெடாதே நின்று முடியும் என்று கொள்க.

இன்னும் அதனானே, இயல்பு கணத்து இறுதி கெடாதே முடிதல் கொள்க.

**எ - டு :** உள் பொருள், உண்டு பொருள் எனவும் ' உண்டு காணம், உண்டு சாக்காடு, உண்டு தாமரை எனவும் உண்டு ஞாண் நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் வரும்.'உள்பொருள்' என்பது பண்புத்தொகை முடிபு அன்றோ எனின்' அ∴து ஓசை ஒற்றுமைபடச் சொல்லும் வழியது:இ∴து, ஓசை இடையறவுபடச் சொல்லும் வழியது போலும்.

1. பண்பு : ஒரு பொருள் தோன்றுங்கால் தோன்றி, அது கெடுந் துணையும் உண்டாய் நிற்கின்ற தன்மை.

## திசைப்பெயர்

**432. இருதிசை புணரின் ஏயிடை வருமே.**

இ∴து, குற்றுகர ஈற்றுத் திசைப்பெயர்க்கு அல்வழிக்கண் வேறு முடிபு கூறுகின்றது.

இருதிசை புணரின் ஏ இடைவரும் - இரண்டு பெருந்திசைகள் (தம்மிற்) புணரின் ஏ என்னும் சாரியை இடைவந்து புணரும்.

**எ - டு :** வடக்கே தெற்கு˙ கிழக்கே மேற்கு என வரும்.

## திசைப்பெயர் முன் திசைப்பெயர்

**433. திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்1**
**கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்**
**ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்**
**தெற்கொடு புணருங் காலை யான.**

இ∴து, அப் பெருந்திசையோடு கோணத்திசை புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

திரிபு வேறு கிளப்பின் - (அப் பெருந்திசைகளோடு) கோணத்திசைகளை வேறாகப் புணர்க்கும் இடத்து, ஒற்றும் இறுதியும் கெடுதல் வேண்டும் என்மனார் புலவர் - அவ் உகரம் ஏறி நின்ற) ஒற்றும் அவ் ஈற்று உகரமும் கெட்டு முடிதல் வேண்டுமென்று சொல்லுவர் புலவர், தெற்கொடு புணரும் காலை - தெற்கு என்னும் திசையோடு புணரும் காலத்து, ஒற்று மெய் திரிந்து னகாரம் ஆகும் - (அதன்கண் நின்ற) ளகார ஒற்று(த்தன் வடிவு) திரிந்து னகாரமாய் முடியும்.

'திரிந்து' என்றதனான், வடக்கு என்பதன்கண் இடைநின்ற ககர ஒற்றுக் கெடுக்க.

**எ - டு :** வடகிழக்கு, வடமேற்கு˙ தென்கிழக்கு,தென்மேற்கு என வரும்.

'வேறு' என்றதனால், திசைப்பெயரோடு பொருட்பெயர்க்கும் இவ்விதி கொள்க.வடகடல், வடவரை என வரும்.

'மெய்' என்றதனான், அத்திசைப்பெயரோடு பொருட்பெயர் புணருமிடத்து இறுதியும் முதலும் திரிந்து முடிவனவெல்லாம் கொள்க. கீழ் கூரை, மேல் கூரை என வரும்.

1.(பாடம்) உகரமும் (நச்.)

## 5. குற்றுகர எண்ணுப்புணர்ச்சி

## பத்தொடு எண்ணுப்பெயர்

**434. ஒற்றுமுத லாக எட்ட னிறுதி**
**எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்**
**குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே**
**முற்றஇன் வருஉம் இரண்டலங் கடையே.**

இ∴து, இவ்வீற்று எண்ணுப்பெயரோடு எண்ணுப்பெயருக்கு முடிபு கூறுகின்றது.

குறிப்புகள்

குறிப்புகள்

ஒன்று முதலாக எட்டு என் இறுதி எல்லா எண்ணும் - ஒன்று என்னும் சொல் முதலாக எட்டு என்னும் சொல் இறுதியாகவுள்ள எல்லா எண்ணுப்பெயரும், பத்தன் முன்வரின் - பத்து என்னும் எண்ணுப்பெயர் முன் வரின், குற்றிலுகரம் மெய்யொடும் கெடும்-(அப் பத்து என்னும் சொல்லிற்) குற்றியலுகரம்(தான் ஏறி நின்ற) மெய்யொடும் கெட்டு முடியும். இரண்டு அலம் கடை முற்ற இன் வரும்- இரண்டாம் எண்ணுப்பெயர் அல்லாத எண்ணுப்பெயரிடத்து முடிய முன் வந்து புணரும்.

**எ - டு :** பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு என வரும்.

நிலைமொழி முற்கூறாததனால் பிறமொழியும் அவ் இன்பேறு கொள்க. ஒன்பதின்பால், ஒன்பதின்கூறு என வரும்.

'முற்ற' என்றதனான், மேல் எடுத்தோத்தானும் இலேசானும் இன்பெற்றவழி பின், பதிற்றொன்று, பதிற்றிரண்டு என்றாற்போல முடிபுகள் வேறுபட வருவன வெல்லாம் கொள்க.

## பத்தின் முன் இரண்டு

**435. பத்தனொற் றுக்கெட னகாரம் இரட்டல்**
**ஒத்த தென்ப இரண்டுவரு காலை.**

இ∴து, மேல் இன் பெறாதென்று விலக்கிய அதற்குப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

பத்தன் ஒற்று கெட னகாரம் இரட்டல் - பத்து என்னும் சொல்லில் நின்ற தகர ஒற்றுக் கெட னகர ஒற்றுவந்து இரட்டுதல், ஒத்தது என்ப - பொருந்திற்று என்று சொல்லுவர் (புலவர்), இரண்டு வரு காலை - இரண்டு என்னும் எண் வரும் காலத்து.

**எ - டு :** பன்னிரண்டு என வரும்.

## பத்தின் முன் ஆயிரம்

**436. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.**

இதுவும், எண்ணுப்பெயருக்கு முடிபு கூறுதல் நுதலிற்று. ஆயிரம் வரினும் - (மேற்கூறிய பத்து என்னும் எண்ணுப்பெயர் முன்னர் ஒன்று முதலாகிய எண்ணுப்பெயரேயன்றி) ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் வந்தாலும், ஆ, இயல் திரியாது - மேல் ஈறு கெட்டு இன் பெற்ற இயல்பில் திரியாதே முடியும்.

**எ - டு :** பதினாயிரம் என வரும்.

## பத்தின் முன் நிறை அளவுப்பெயர்கள்

**437. நிறையு மளவும் வருஉம் காலையும்**
**குறையா தாகும் இன்னென் சாரியை.**

இ∴து, எண்ணுப் பெயரோடு நிறைப்பெயரும் அளவுப்பெயரும் புணர்க்கின்றது.

குறிப்புகள்

நிறையும் அளவும் வரூஉம் காலையும் - மேல் நின்ற பத்தென்பதன்முன் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் வரும் காலத்தும், இன் என் சாரியை குறையாது ஆகும் -(அவ்) இன் என்னும் சாரியை குறையாது வந்து முடியும்.

**எ - டு :** பதின்கழஞ்சு, தொடி எனவும்˙ பதின்கலம்˙ சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும் வரும்.

'குறையாதாகும்' என்றதனால், பத்து என்பதன் முன்னர்ப் பொருட்பெயர்க்கு வரு முடிபும் கொள்க. பதின்றிங்கள், பதிற்றுமுழம், பதிற்றுவேலி, பதிற்றிதழ் என வரும்.

## எண்ணுப் பெயரொடு பத்து

**438. ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர்**
**நின்ற பத்த னொற்றுக்கெட ஆய்தம்**
**வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப**
**கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்ஊ**
**ஆற னிறுதி அல்வழி யான.**

இ∴து, எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர் நின்ற பத்தன் ஒற்று கெட ஆய்தம் வந்து இடைநிலையும் இயற்கைத்து என்ப - ஒன்று முதலாக ஒன்பது ஈறாகச் சொல்லப்படுகின்ற எண்ணுப் பெயர்களின் முன்னர் (வருமொழியாய் வந்து) நின்ற பத்து என்னும் சொல்லினது தகர ஒற்றுக் கெட ஆய்தமானது வந்து இடை(யில்) நிலைபெறும் இயல்பையுடைத்தென்று சொல்லுவர் (புலவர்), ஆறன் இறுதி அல்வழி குற்றியலுகரம் கூறிய இயற்கை- (அவற்றுள்) ஆறு என்னும் ஈறு அல்லாத இடத்துக் குற்றியலுகரம் மேற்கூறிய இயற்கை(யாய்) மெய்யோடும் கெட்டு முடியும்.

**எ - டு :** ஒருப∴து, எருப∴து என ஒட்டுக.

'வந்து' என்றதனால், ஆய்தமாய்த் திரியாது கெட்டு ஒருபது என்றுமாம்.

## அதன்கண் 'ஒன்று' 'இரண்டு' என்னும் சொற்கள்

**439. முதலீ ரெண்ணி னொற்று ரகரம் ஆகும்**
**உகரம் வருதல் ஆவயி னான.**

இ∴து, மேற்கூறிய முடிபிற்கு உரியதொன்று உணர்த்துதல் நுதலிற்று.

முதல் ஈர் எண்ணின் ஒற்று ரகரம் ஆகும் - (அவற்றுள்) முதற்கண் நின்ற இரண்டு எண்ணின் ஒற்று ரகார ஒற்றாய், ஆ வயின் உகரம் வருதல் - அவ்விடத்து உகரம் வருக.

**எ - டு :** ஒருப∴து என வரும்.

## 'இரண்டு' என்பதற்கு மேலும் ஒரு முடிபு

**440. இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கும்1**
**நடைமருங் கின்றே பொருள்வயி னான.**

இதுவும் அது.

இரண்டு என் எண்ணிற்கும் இடைநிலை ரகரம் பொருள்வயின் நடைமருங்கு இன்று- அவ் இரண்டு என்னும் எண்ணிற்கும் இடை நின்ற ரகாரம் அம்மொழி பொருளாமிடத்து நடக்கும் இடம் இன்றிக் கெடும்.

**எ - டு :** இருப∴து என வரும்.

குறிப்புகள்

1.எண்ணிற்கு.(நச்.)

## 'மூன்று' 'ஆறு'

**441. மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்**
**மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்.[1]**

இதுவும் அது.

மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும் -மூன்று என்னும் எண்ணும் ஆறு என்னும் எண்ணும் நெடு முதல் குறுகி முடியும், மூன்றன் ஒற்று பகாரம் ஆகும் - மூன்று என்னும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று பகர ஒற்றாய் முடியும்.

**எ - டு** :முப்ப∴து (அறுப∴து) என வரும்.

1. இதனை இரண்டு நூற்பாவாகக்கொள்வர் நச்சினார்க்கினியர்.

## 'நான்கு' என்னும் சொல்

**442. நான்க னொற்றே றகாரம் ஆகும்.**

இதுவும் அது.

நான்கன் ஒற்று றகாரம் ஆகும் - நான்கு என்னும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று றகார ஒற்றாய் முடியும்.

**எ - டு :** நாற்ப∴து என வரும்.

## 'ஐந்து' என்னும் சொல்

**443. ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்.**

இதுவும் அது.

ஐந்தன் ஒற்று மகாரம் ஆகும் - ஐந்து என்னும் எண்ணின்கண் நின்ற நகார ஒற்று மகார ஒற்றாய் முடியும்.

**எ - டு :** ஐம்ப∴து என வரும்.

ஆறன் நெடுமுதல் குறுகியவாறே நின்று அறுப∴து என வரும்.'ஏழு' குற்றகர ஈறு அன்றாம்.

## 'எட்டு' என்னும் சொல்

**444. எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்.**

இதுவும் அது.

எட்டன் ஒற்று ணகாரம் ஆகும் - எட்டு என்னும் எண்ணின்கண் நின்றடகார ஒற்று ணகார ஒற்றாய் முடியும்.

**எ - டு :** எண்ப∴து என வரும்.

## ‘ஒன்பது’ என்னும சொல

**445. 1ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**
**முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்**
**ப.்.தென் கிளவி யாய்தபக ரங்கெட**
**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**
**ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்.**

குறிப்புகள்

இதுவும் இது.

ஒன்பான் ஒகர மிசை தகரம் ஒற்றும் (நிலைமொழியாகிய) ஒன்பது என்னும் சொல்லின் ஒகரத்திற்கு மேலாகத்தகரம் ஒற்றாய் மிக்கு வரும், முந்தை ஒற்று ணகாரம் இரட்டும்- முன் சொன்ன ஒகரத்தின் முன்னர் னகர ஒற்று இரண்டு ணகார ஒற்றாய் மிக்கு வரும், பத்து என் கிளவி பகரம் ஆய்தம் கெட ஊகாரக் கிளவி நிற்றல் வேண்டும் - ( வருமொழியாகிய) பத்து என்னும் சொல் தன்கண் பகரமும் ஆய்தமும் கெட ( நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர்) ஊகாரமாகிய எழுத்து நிற்றல் வேண்டும் ஒற்றிய தகரம் றகாரம் ஆகும். (வருமொழியாகிய பத்து என்பதன் ஈற்றதன்மேல் ஏறிய உகரம் கெடாது பிரிந்து நிற்ப) ஒன்றாய் நின்ற தகரம் றகார ஒற்றாகும்.

இ.்.து, ஒன்பதும் பத்தும் என நின்றால் முடியற்பால (இன்ன) வென்பது. பகர ஆய்தம் என்னாத முறையன்றிய கூற்றினான். நிலைமொழிக்கண் பகரக்கேடும் கொள்க. குற்றயலுகரமும் அ.்.து ஏறிய மெய்யும் முன்னர் மாட்டேற்றாற் கெட்டன.

**எ - டு :** தொண்ணூறு என வரும்.

1.இந்நூற்பா ஒன்பது ¸ ப.்.து ஸ்ரீ தொன்னூறு என முடிக்கின்றது. இம் முடிவு எவ்வகையிலும் பொருந்தாத தொன்றாம். ஒன்பது என்னும் எண்ணுக்குப் பழம்பெயர் தொண்டு என்பது. ‘ தொண்டு தலையிட்ட ’ (தொல். 1358) என்று ஆசிரியரும், தொண்டுபடு திவவு (மலைபடு. 21) என்று பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனாரும் கூறுதல் காண்க. தொண்டு என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப் போய் விட்டது. அவர் காலத்திற்குமுன் தொண்டு தொண்பது தொண்ணூறு தொள்ளாயிரம் என்பன முறையே, 9, 90, 900,9000 என்னும் எண்களைக் குறிக்கும் பெயர்களாயிருந்தன. தொண்டு என்னும் ஒன்றாமிடப்பெயர் வழக்கறவே, தொண்டு என்னும் பத்தாமிடப்பெயர் ஒன்றாமிடத்திற்கும் தொண்ணூறு என்னும் நூறாமிடப் பெயர் பத்தாமிடத்திற்கும், தொள்ளாயிரம் என்னும் ஆயிரமிடாப் பெயர் நூறாமிடத்திற்குமாக வழங்கத் தலைப்பட்டன. தொண்பது என்னும் பெயர் முறையே தொன்பது ஒன்பது என மருவிற்று. ஆயிரத்தாமிடப்பெயர் நூறுமிடத்திற்கு வழங்கவே 9000 என்னும் எண்ணைக் குறிக்க ஒன்பது என்னும் பெயருடன் ஆயிரம் என்னும் பெயரைச் சேர்க்கவேண்டிய தாயிற்று. முதற் பத்து எண்ணுப்பெயர்களில் ஒன்பது என்பதைத் தவிர, மற்றவையெல்லாம் ஒரு சொல்லா யிருப்பதையும், ஒன்பது என்பது இரு சொல்லாய்ப் பது (பத்து) என்று முடிவதையும், தொண்ணூறு என்பது நூறு என்றும் தொள்ளாயிரம் என்பது ஆயிரம் என்றும் முடிவதையும் நோக்குக. தொண்பது என்பதின் திரிபான ஒன்பது என்னும் சொல்லுக்குப் பொருந்தப் புகலும் முறைபற்றி

குறிப்புகள்

ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவர் சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பனவற்றிற்கும் அப் பொருள் ஏற்கவேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலியுரையென மறுக்க. ஆகவே தொண்டு, பத்து ஸ்ரீ தொண்பது' தொண்டு, நூறு ஸ்ரீ தொண்ணூறு' தொண்டு, ஆயிரம் ஸ்ரீ தொள்ளாயிரம் என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண்ணுப் பெயர் வழக்கற்றதினால் அதன்மேலிடப் பெயர்கள் மூன்றும் ஒவ்வோரிடமாய்த் தாழ்ந்துவந்து வழங்கின என்றும் அறிந்து கொள்க. (பாவாணர்.)

## அவ்வெண்ணுப் பெயர்கள் முன் அளவு நிறைப்பெயர்கள்

**446. அளந்தறி கிளவியும் நிறையென் கிளவியும்**
**கிளந்த இயல தோன்றும் காலை.**

இ∴து, மேற்கூறிய ஒன்று முதல் ஒன்பான்களோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

அளந்து அறி கிளவியும் நிறை என் கிளவியும் தோன்றும் காலை - (மேற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பான்களின் முன்னா) அளந்து அறியப்படும் அளவுப் பெயர்ச்சொல்லும் தோன்றுங்காலத்து, கிளந்த இயல அவ் ஒன்று முதல் ஒன்பான்கள் மேல் பத்து என்பதோடு புணரும் வழிக் கிளந்த இயல்பினவாய் முடியும்.

**எ - டு :** ஒரு கலம், இருகலம்' சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி எனவும் ஒரு கழஞ்சு, இரு கழஞ்சு் தொடி, பலம் எனவும் வரும்.

'தோன்றுங்காலை' என்றதனான், அவ் வெண்களின்முன் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்ற எண்ணுப்பெயரையெல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்துவித்து முடித்துக்கொள்க.

ஓரொன்று, ஓரிரண்டு' ஈரிரண்டு ஒரு முந்திரிக்கை இரு முந்திரிக்கை ஓரரைக்கால்' ஈரரைக்கால்' ஒரு கால், ஓரரை, ஈரரை, ஒரு முக்கால், இரு முக்கால் என ஒட்டிக்கொள்க.

## அதன்கண் 'மூன்று' என்னும் சொல்

**447. மூன்றன் ஒற்றே வந்த தொக்கும்.**

இ∴து, மாட்டேறு எய்தாதற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

மூன்றன் ஒற்று வந்தது ஒக்கும் - மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வருமொழியாய் வந்த அளவுப் பெயர் நிறைப்பெயரின் முத(லி)ல் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்.

**எ - டு :**முக்கலம்' சாடி, தூதை, பானை எனவும்'
முக்கழஞ்சு் தொடி,பலம் எனவும் வரும்.

மாட்டேற்றானே நாற்கலம்' சாடி, பானை எனவும் நாற்கழஞ்சு: தொடி பலம் எனவும் வரும்.

## அதன்கண் 'மூன்று' என்னும் சொல

**448. ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்.**

இதுவும் அது.

ஐந்தன் ஒற்று மெல்லெழுத்து ஆகும் - ஐந்தாவதன்கண் நின்ற நகர ஒற்று ( மேல் வருகின்ற வருமொழி முதல் வல்லெழுத்திற்கு ஏற்ற) மெல்லெழுத்தாய் முடியும்.

**எ - டு :** ஐங்கலம்' சாடி, தூதை பானை எனவும்' ஐங்கழஞ்சு தொடி,பலம் எனவும் வரும்.

குறிப்புகள்

## அதன்கண் 'மூன்று' என்னும் சொல்

**449. க ச த ப முதன்மொழி வரூஉங் காலை.**

இ∴து, மேற்கூறிய மூன்றற்கும் ஐந்தற்கும் வருமொழி வரையறுக்கின்றது.

க ச த ப முதல்மொழி வரும் காலை - (மூன்றன் ஒற்று வந்தது ஒப்பதூஉம் ஐந்தன் ஒற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ் வளவுப்பெயர் நிறைப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய) க ச த ப முதல் மொழிகள் வந்த இடத்து.

**எ - டு :** மேன் மாட்டேற்றானே, அறுகலம்' சாடி, தூதை, பானை எனவும் வரும்.

ஏழு குற்றுகர ஈறன்மையின், மாட்டேறு ஏலாதாயிற்று.

## 'எட்டு' என்னும் சொல்

**450. ந ம வ என்னும் மூன்றொடு சிவணி**
**அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே.**

இ∴து, வேண்டா கூறி வேண்டியது முடித்தல் நுதலிற்று.

ந ம வ என்னும் மூன்றொடு சிவணி அகரம் வரினும். ( அளவுப்பெயர் நிறைப்பெயர்களில் மென்கணத்து இரண்டும் இடைக்கணத்து ஒன்றுமாகிய ) ந ம வ என்னும் மூன்றனோடும் பொருந்தி( உயிர்க்கணத்து) அகர முதல்மொழி வரினும் (உம்மையால் அவ் வுயிர்கணத்து ஒழிந்த உகரமும் கூறாத வல்லெழுத்துக்களும் வரினும்), எட்டன்முன் இயல்பு - எட்டென்ப தன் முன் (மேற்கூறி நின்ற விகாரமே விகாரமாக வேறோர் விகாரமின்றி) இயல்பாய் முடியும்.

**எ - டு :** எண்கலம்' சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும் எண் கழஞ்சு தொடி, பலம் எனவும் வரும்இவ் வேண்டா கூறலான், எண்ணகல் எனத் தொடர்மொழிக் கண் ஒற்றிரட்டல் கொள்ளப்பட்டது.

'ஐந்து' 'மூன்று' என்னும் இரண்டு சொற்களுக்கும் ஒத்த முடிபு.

## 'எட்டு' என்னும் சொல்

**451. ஐந்தும் மூன்றும் நமவருங் காலை**
**வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே.**

இதுவும், மேல்மாட்டேற்றொடு ஒவ்வா வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

ஐந்தும் மூன்றும் நமவரும் காலை - ஐந்து என்னும் எண்ணும்

மூன்று என்னும் எண்ணும் நகர முதல் மொழியும் மகர முதல்மொழியும் வருங்காலத்து, ஒற்று இயல் நிலை வந்தது ஒக்கும் - தங்கண் நின்ற ஒற்று நடக்கும் நிலைமை (சொல்லின்) அவ் வருமொழி முத(லி)ல் வந்த ஒற்றொடு ஒத்த ஒற்றாய் முடியும்.

குறிப்புகள்

**எ - டு :** முந்நாழி, மும்மண்டை ஐந்தாழி, ஐம்மண்டை என வரும்.

மூன்றும் ஐந்தும் என்னாத முறையன்றிய கூற்றினான், நானாழி என்னும் முடிபின்கண் விகாரமாகிய னகரத்தின் முன்னர் வருமொழி நகரத் திரிபும், அது காரணமாக நிலைமொழி னகரக்கேடும் கொள்ளப்பட்டன.

## 'மூன்று' 'நான்கு' 'ஐந்து' முன் வகர முதன்மொழி

**453. நான்க னொற்றே லகார மாகும்.**

இதுவும் அது.

நான்கன் ஒற்று லகாரம் ஆகும் - நான்காம் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று (வகரம் வந்தால் ) லகார ஒற்றாய்த் திரிந்து முடியும்.

**எ - டு :** நால்வட்டி என வரும்.

## 'மூன்று' 'நான்கு' 'ஐந்து' முன் வகர முதன்மொழி

**454. ஐந்த னொற்றே முந்தையது கெடுமே.**

இதுவும் அது.

ஐந்தன் ஒற்று முந்தையது கெடும் - ஐந்தாம் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று (வகரம் வந்தால் ) முன் நின்ற வடிவு கெட்டு முடியும்.

**எ - டு :** ஐவட்டி என வரும்.

'முந்தை', என்றதனால் நகர ஒற்றுக் கெடாது அவ்வகரமாய்த் திரிந்து ஐவ்வட்டி என்றும் ஆம்.

## 'ஒரு' 'இரு' முன் உயிர் முதன்மொழி

**455. முதலீ ரெண்ணின்முன் உயிர்வரு காலைத்**
**தவலென மொழிப உகரக் கிளவி**
**முதனிலை நீடல் ஆவயி னான.**

இதுவும் அது.

முதல் ஈர் எண்ணின்முன் உயிர் வரு காலை - முற்பட்ட இரண்டு எண்ணின்முன் உயிர் முதல்மொழி வருங்காலத்து, உகரக் கிளவி தவல் என மொழிப - உகரமாகிய எழுத்துக் கெடும் என்று சொல்லுவர் (புலவர்), முதல்நிலை ஆவயின் நீடல் - (அவ்வெண்ணின் முதற்கண்) நின்ற எழுத்துக்கள் அவ்விடத்து நீண்டு முடியும்.

**எ - டு :** ஓரகல், ஈரகல், ஓருழக்கு, ஈருழக்கு என வரும்

## 'மூன்று' 'நான்கு' 'ஐந்து' முன் உயிர் முதன்மொழி

**456. மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்**
**தோன்றிய வகரத் தியற்கை யாகும்.**

இதுவும் அது.

மூன்றும் நான்கும் ஐந்து என் கிளவியும் - மூன்று என்னும் எண்ணும் நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணுச் சொல்லும்,

தோன்றிய வகரத்து இயற்கையாகும் (மேல்) தோன்றி முடிந்த வகரத்து இயற்கையாய் மூன்றன்கண் வகர ஒற்றாயும் நான்கின்கண் லகர ஒற்றாயும் ஐந்தன்கண் ஒற்றுக் கெட்டும் முடியும்.

**எ - டு :** முவ்வகல், முவ்வுழக்கு எனவும்ˆ நாலகல், நாலுழக்கு எனவும்ˆ ஐயகல், ஐயுழக்கு எனவும் வரும்.

'தோன்றிய' என்றதனான், மேல் மூன்று என்பது முதல் நீண்ட இடத்து நிலைமொழி னகர ஒற்றுக் கெடுத்துக் கொள்க.

குறிப்புகள்

## அவற்றுள் 'மூன்று' என்பதற்கு மேலும் ஒரு முடிபு

**457. மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே**
**உழக்கென் கிளவி வழக்கத் தான.**

இதுவும் அது.

மூன்றன் முதல் நிலை உழக்கு என் கிளவி வழக்கத்தான - மூன்று என்னும் எண்ணின்கண் முத(லி)ல் நின்ற எழுத்து உழக்கு என்னுங் கிளவியது வழக்கிடத்து, நீடலும் உரித்து - குறுகாது நீண்டு முடிதலும் உரித்து.

**எ - டு :** மூவுழக்கு என வரும்.

'வழக்கத்தான' என்றதனான், அகல் என்பதன்கண்ணும் இச்செய்கை கொள்க.

மூவகல் என வரும்.

## 'ஆறு' என்பதற்கும் அம் முடிபு

**458. ஆறென் கிளவி முதல்நீ டும்மே.**

இதுவும் அது.

ஆறு என் கிளவி முதல் நீடும் - ஆறு என்னும் சொல் ( உயிர் முதல்மொழி வந்தால் முன் குறுகி நின்ற) முதலெழுத்து நீண்டு முடியும்.

**எ - டு :** ஆறகல், ஆறுழக்கு என வரும்.

## 'ஒன்பது' என்னும் சொல்

**459. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியாது**
**இன்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே.**

இதுவும் அது.

ஒன்பான் இறுதி உருபு நிலை திரியாது சாரியை மொழி இன் பெறல் வேண்டும் - ஒன்பது என்னும் எண்ணின் இறுதி தன் வடிவு நிலை திரியாது சாரியை மொழியாகிய இன் பெற்று முடிதல் வேண்டும்.

எ - டு : ஒன்பதின்கலம்ˆ சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும், கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'உருபு' என்றதனான், ஒன்பதிற்றகல் என்புழி இரட்டிய றகரமாகக் கொள்க.

## ஒன்று முதல் ஒன்பது எண்முன் நூறு

**460. நூறுமுன் வரினுங் கூறிய இயல்பே.**

இ∴து, ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்பதன் முடிபு கூறுகின்றது.

நூறு முன் வரினும் கூறிய இயல்பு - நூறு என்பது (ஒன்று முதல் ஒன்பான்கண்) முன் வரினும் (மேல் பத்தென்பதனோடு புணரும் வழி ) கூறிய இயல்பு எய்தி முடியும்.

**எ - டு :** ஒருநூறு, இருநூறு, அறுநூறு, எண்ணூறு என வரும். இவை மாட்டேற்றானே முடிந்தன.

குறிப்புகள்

## அதன்கண் 'மூன்று' என்னும் சொல்

**461. மூன்ற னொற்றே நகாரம் ஆகும்.**

இஃது, மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

மூன்றன் ஒற்று நகாரம் ஆகும் - மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று நகர ஒற்றாகும்.

**எ - டு :** முந்நூறு என வரும்.

## அதன்கண் 'நான்கு' 'ஐந்து'

**462. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா.**

இதுவும் அது.

நான்கும் ஐந்தும் ஒற்று மெய் திரியா - நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணும் தம் ஒற்றுக்கள் நிலை திரியாது முடியும்.

**எ - டு :** நானூறு, ஐந்நூறு என வரும்.

'மெய்' என்றதனால், நானூறு என்புழி வருமொழி ஒற்றாகிய நகரக்கேடு கொள்க. இன்னும் அதனானே, ஒற்றின்றி ஐநூறு என வரும் முடிபும் கொள்க.

## அதன்கண் 'ஒன்பது' என்னும் சொல்

**463. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே**
**முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்**
**நூறென் கிளவி நகார மெய்கெட**
**ஊஆ வாகும் இயற்கைத் தென்ப**
**ஆயிடை வருதல் இகார ரகாரம்**
**ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்.**

இதுவும் அது.

ஒன்பான் முதல் நிலை முந்து கிளந்து அற்று - ஒன்பது என்னும் சொல்லின் முதல் நின்ற ஒகரம் மேல் (பத்தென்பதனோடு புணரும் வழிக் ) கூறியவாறு போல் ஒகர மிசைத் தகர ஒற்று மிகும், முந்தை ஒற்று ளகாரம் இரட்டும் - அவ் வொகரத்தின் முன்னின்ற (னகர) ஒற்று இரண்டு ளகர ஒற்றாம், நூறு என் கிளவி நகார மெய் கெட ஊ ஆ ஆகும் இயற்கைத்து என்ப - (வருமொழியாகிய) நூறு என்னும் சொல்லும் நகாரமாகிய மெய் கெட ( அதன் மேல் ஏறிய) ஊகாரம் ஆகாரமாம் இயல்பையுடைத்து என்பர்(புலவர்), ஆ இடை இகாரம் ரகாரம் வருதல் - அம் மொழியிடை ஓரிகரமும் ரகாரமும் வரும். ஈறு மெய் கெடுத்து மகாரம் ஒற்றும் - இதற்கு ஈறாகிய குற்றியலுகரத்தினையும் அஃது ஏறி நின்ற ஒற்றினையும் கெடுத்து ஓர் மகரம் ஒற்றாய் வந்து முடியும்.

'மெய்' என்றதனான், நிலைமொழிக்கண் நின்ற பகரம் கெடுக்க.

**எ - டு :** தொள்ளாயிரம் என வரும்.

## ‘ஒன்று’ ‘இரண்டு’ முன் ஆயிரம்

குறிப்புகள்

**464. ஆயிரக் கிளவி வரூஉங் காலை**
**முதலீ ரெண்ணின் உகரங் கெடுமே.**

இ∴து, அவ்வொன்று முதல் ஒன்பான்கள் முன் ஆயிரம் என்பது வருங்கால் முடிபு கூறுகின்றது.

ஆயிரக்கிளவி வரும் காலை முதல் ஈர் எண்ணின் உகரம் கெடும் - ஆயிரம் என்னும் சொல் (ஒன்று முதல் ஒன்பான்கள்) முன் வருங்காலத்து முதல் ஈர் எண்ணின்கண் பெற்று நின்ற உகரம் கெட்டு முடியும்.

**எ - டு :** ஓராயிரம், இராயிரம் என வரும்.

## அவற்றிற்கு, மேலும் ஒரு முடிபு

**465. முதனிலை நீடினும் மான மில்லை.**

இ∴து, எய்தியதன் மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

முதல் நிலை நீடினும் மானம் இல்லை - அம் முதல் ஈர் எண்ணின் முதற்கண் நின்ற ஒகர இகரங்கள் நீண்டுமுடியினும் குற்றம் இல்லை.

**எ - டு :** ஓராயிரம், ஈராயிரம் என வரும்.

## ‘மூன்று’ முன் ஆயிரம்

**466. மூன்ற னொற்றே வகாரம் ஆகும்.**

இதுவும், மாட்டேற்றோடு ஒவ்வா முடிபு கூறுதல் நுதலிற்று.

மூன்றன் ஒற்று வகாரம் ஆகும் - மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வகர ஒற்றாய் முடியும்.

**எ - டு :** முவ்வாயிரம் என வரும்.

‘முதனிலை’ என்றதனான், முதல் நீண்டு வகர ஒற்றுக்கெட்டு மூவாயிரம் என்றும் வரும்.

## ‘நான்கு’ முன் ஆயிரம்

**467. நான்க னொற்றே லகாரம் ஆகும்.**

இதுவும் அது.

நான்கன் ஒற்று லகாரம் ஆகும் - நான்காம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று லகர ஒற்றாய் முடியும்.

**எ - டு :** நாலாயிரம் என வரும்.

## ‘ஐந்து’ முன் ஆயிரம்

**468. ஐந்த னொற்றே யகாரம் ஆகும்**

இதுவும் அது.

ஐந்தன் ஒற்று யகாரம் ஆகும் - ஐந்தாம் எண்ணின்கண் நின்ற நகர யகர ஒற்றாய் முடியும்.

**எ - டு :** ஐயாயிரம் என வரும். முன்னர் இவ்வாறு ஓதாமையான்,

ஐயகல், ஐயுழக்கு (என்பவை ) உடம்படுமெய் பெற்றன.

## 'ஆறு' முன் ஆயிரம்

குறிப்புகள்

**469. ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்**
**ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.**

இதுவும் அது.

ஆறன் மருங்கின் குற்றியலுகரம் ஈறு மெய் ஒழிய கெடுதல் வேண்டும். ஆறாம் எண்ணின்கண் நின்ற குற்றியலுகரம் (தான் ஏறிய) மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாது நிற்ப (உகரமாகிய அவ்வீறு தானே) கெட்டு முடிதல் வேண்டும்.

**எ - டு :** அறாயிரம் என வரும்.

திரிந்ததன் திரிபது என்னும் நயத்தான், ஆறன் மருங்கின் என்று ஓதப்பட்டது. ஆறு என்பது அறு எனக் குற்றியலுகரம் முற்றியலுகரமாக ஓதப்பட்டு நின்றமையின் அவ்வுகரக்கேடு ஓதப்பட்டது.

ஈறு எனவும் மெய் எனவும் அவ்வுயிர் மெய்யைப் பிரித்துச் செய்கை ஓதினமையான். அவ்வுயிர் மெய்யினை ஒற்றுமை நயத்தாற் குற்றயிலுகரம் என்று ஓதினானாகக் கொள்க.

ஆறன் மருங்கின் ஈறு மெய்யொழியக் கெடும் என்னாது குற்றியலுகரம் என்றோதினமையான், நெடுமுதல் குறுகாதே நின்று ஆறாயிரம் ஆம்.

இன்னும் அதனானே 'ஆறா குவதே' (சொல்லதிகாரம் - வேற்றுமையியல் - சூத்திரம் 18.) என்றாற்போலப் பொருட் பெயர்க்கண் வருமுடிபும் கொள்க.

மேல் மாட்டேற்றானே எண்ணாயிரம் என முடிந்தது.

## 'ஒன்பது' முன் ஆயிரம்

**470. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியாது**
**இன்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.**

இதுவும் அது.

ஒன்பான் இறுதி உருபு நிலை திரியாது சாரியை மரபு இன்பெறல் வேண்டும் - ஒன்பது என்னும் எண்ணின் இறுதிக் குற்றியலுகரம் தன் வடிவுநிலை திரிந்து கெடாது சாரியையாகிய மரபினையுடைய இன்பெற்று முடிதல் வேண்டும்.

**எ - டு:** ஒன்பதினாயிரம் என வரும்.

உருபு என்றும், நிலை என்றும், சாரியை மரபு என்றும் கூறிய மிகுதியான், ஆயிரமல்லாத பிற எண்ணின் கண்ணும் பொருட் பெயரிடத்தும், இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் முடிபும் கொள்க.

ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றுத்தடக்கை, ஒன்பதிற்றெழுத்து என வரும்.

இன்னும் அவ்விலேசானே, மேல் எண்ணாயிரம் என்றவழி ஒற்றிரட்டுக் கொள்க.

## ஒன்று முதல் ஒன்பது எண்முன் 'நூறாயிரம்'

**471. நூறா யிரமுன் வரூஉங் காலை**
**நூற னியற்கை முதனிலைக் கிளவி.**[1]

குறிப்புகள்

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்னும் அடையடுத்து ஆயிரம் என்பது முடியுமாறு கூறுகின்றது.

நூறாயிரம் முன்வரு காலை முதல் நிலைக்கிளவி நூறு என் இயற்கை - நூறாயிரம் என்னும் அடையடுத்த மொழி ( ஒன்று முதல் ஒன்பான்கள்) முன் வருங் காலத்து முதனிலைக் கிளவியாகிய ஒன்று என்னும் எண் (மேல் ஒன்று முதல் ஒன்பான்களோடு முடிந்த) நூறு என்னும் சொல் அவ் வொன்றனோடு முடிந்த விகார இயற்கை எய்தி முடியும்.

வழி நிலைக்கிளவியாகிய இரண்டு முதல் எண்கள் விகாரம் எய்தியும் எய்தாதது இயல்பாயும் முடியும்.

எ - டு : ஒரு நூறாயிரம் என வரும். இரு நூறாயிரம், இரண்டு நூறாயிரம்˙ முந்நூறாயிரம், மூன்று நூறாயிரம்˙ நானூறாயிரம், நான்கு நூறாயிரம், ஐந்நூறாயிரம், ஐந்து நூறாயிரம் ˙ அறுநூறாயிரம், ஆறு நூறாயிரம் ˙ எண்ணூறாயிரம், எட்டு நூறாயிரம்˙ ஒன்பது நூறாயிரம் என வரும்.

உரையிற் கோடல் என்பதனால், தொள்ளாயிரம் என்ற முடிபினோடு மாட்டேறு சென்றதேனும் அவ்வாறு முடியாதென்று கொள்க.

'முன்' என்பதனான் இன்சாரியை பெற்று ஒன்பதினூறாயிரம் என்றும் ஆம்.

'நிலை' என்றதனான், மூன்றும் ஆறும் இயல்பாய் முடியும் முடிபின்கண் நெடுமுதல் குறுகாமை கண்டுகொள்க.

இன்னும் அதனானே நானூறாயிரம் என்புழி வருமொழி நகரக்கேடு கொள்க.

1. இலக்கம், கோடி யென்னும் எண்ணுப் பெயர்கள் இவ்வியலிற் கூறப்படாமையால் பழந்தமிழர்க்கு 99,999 வரைதான் எண்ணத் தெரிந்திருந்தது என்று சிலர் கொள்வர். இலக்கம் கோடி என்பன குற்றியலுகரச் சொற்களல்லவென்றும் குற்றுகரச் சொற்களே இவ்வியலின் புணர்த்துக் காட்டப்படுவன வென்றும் இலக்கத்தின் மறு பெயரான நூறாயிரம் என்னும் சொல்லும் பத்து நூறாயிரம் வரை புணர்த்தற்கிடமும் அடுத்த (எழு. 471) நூற்பாவிற் கூறப்பட்டுள வென்றும் இலக்கம் கோடி என்னும் பெயர்கள் முறையே பெரிய இலக்கம் கடைசி எண் என்று பொருள்படும் தனித்தமிழ்ச் சொற்களே என்றும் அறிந்துகொள்க. (பாவாணர்.

## நூறு முன் ஒன்று முதல் ஒன்பது எண்கள்

**472. நூறென் கிளவி ஒன்றுமுத லொன்பாற்கு**
**ஈறுசினை யொழிய இனவொற்று மிகுமே.**

இஃது, நூறு என்பதனோடு ஒன்று முதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

நூறு என் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு ஈறுசினை ஒழிய இன

ஒற்று மிகும் - நூறு என்னும் சொல் ஒன்று முதல் ஒன்பான்களோடு புணருமிடத்து ஈறாகிய குற்றியலுகரமும் அவ்வுகரம் ஏறிய மெய்யாகிய சினையும் கெடாது நிற்ப (சினைக்கு) இனமாகிய இன ஒற்று மிக்கு முடியும்.

குறிப்புகள்

**எ - டு :** நூற்றொன்று' இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது என வரும்.

'ஈறுசினை' என்று ஓதிய மிகையானே நூறு என்பதனோடு பிற எண்ணும் பிற பொருட்பெயரும் இவ்விதியும் பிறவிதியும் முடியுமாறு கொள்க. நூற்றுக்கோடி, நூற்றுப்பத்து, நூற்றுத்தொண்ணூறு எனவும் நூற்றுக்குறை, நூற்றடுக்கு எனவும் வரும்.

## நூறு முன் 'ஒருப∴து' முதலியன

**473. அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும்.**

இ∴து, அந்நூறு என்பதனோடு ஒன்று முதல் ஒன்பான்கள் அடையடுத்தவழிப் புணருமாறு கூறுகின்றது.

அவை ஊர்பத்தினும் அத் தொழிற்று ஆகும் - (அந் நூறு என்பது) ஒன்று முதல் ஒன்பான்களான் ஊரப்பட்ட பத்தினோடு புணருமிடத்தும் அத்தொழிற்றாய் இன ஒற்று மிக்கு முடியும்.

**எ - டு :** நூற்றொருப∴து' இருப∴து, முப்ப∴து, நாற்ப∴து, ஐம்ப∴து, அறுப∴து, எழுப∴து, எண்ப∴து என வரும்.

'ஆகும்' என்றதனான், நிலைமொழியடையடுத்து வரும் முடிபும் கொள்க. ஒரு நூற்றொருப∴து என ஒட்டுக.

## நூறு முன் அளவுப்பெயர், நிறைப்பெயர்

**474. அளவும் நிறையும் ஆயியல் திரியா**
**குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்**
**முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.**

இ∴து, அந்நூறு என்பதனோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

அளவும் நிறையும் ஆ இயல் திரியா - (அந்நூறு என்பதனோடு புணருமிடத்து) அளவுப் பெயரும் நிறைப்பெயரும் மேற்கூறிய இயல்பில் திரியாதே நின்று இனவொற்றுமிக்கு முடியும். குற்றியலுகரமும் வல்லெழுத்து இயற்கையும் முன் கிளந்த அன்ன என்மனார் புலவர் - (அவ்விடத்துக் குற்றியலுகரம் கெடாமையும் இன ஒற்று மிக்கு வன்றொடர் மொழியாய் நின்றமையான் வருமொழி) வல்லெழுத்து மிகும் இயல்பும் மேல் (வன்றொடர் மொழிக்குக்) கூறிய தன்மையவென்று சொல்லுவர் புலவர்.

எ - டு : நூற்றுக்கலம்' சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அசல், உழக்கு எனவும்' கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'திரியா' என்றதனான், நூறு என்பது அடையடுத்த வழியும் இவ்விதி கொள்க.

ஒரு நூற்றுக்கலம், இருநூற்றுக்கலம் என ஒட்டுக.

## ஒருப.்.து முதலியவற்றின் முன் ஒன்றுமுதல் ஒன்பது எண்கள்

குறிப்புகள்

**475. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி**
**ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே**
**நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும்.**

இ.்.து, ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்கள் அடையடுத்த பத்தினொடு ஒன்று முதல் ஒன்பான்களைப் புண்ரக்கின்றது.

ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவி - ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்து என்னும் எண் ஊர்ப்பட்ட சொற்கள், ஒன்று முதல் ஒன்பாற்கு - அவ்வொன்று முதல் ஒன்பான்கள் வருமொழியாய் வந்து புணருமிடத்து, நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும் - (ஆண்டு) நின்ற ஆய்தம் கெட்டு முடிதல் வேண்டும். ஒற்று இடை மிகும் - (கெட்ட வழி இனவொற்றாய் ஓர் தகர) ஒற்று இடைமிக்க முடியும்.

எ - டு : ஒருபத்தொன்று, இருபத்தொன்று ஒருபத்திரண்டு, இருபத்திரண்டு, ஒருபத்து மூன்று, இருபத்து மூன்று என ஒட்டிகொள்க.

'நின்ற' என்றதனான், மேல் ஒரு பதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு இன்பேறும் கொள்க.

## அவற்றின் முன் ஆயிரம்

**476. ஆயிரம் வரினே இன்னாஞ் சாரியை[1]**
**ஆவயி னொற்றிடை மிகுத லில்லை.**

இ.்.து, அவ்வடையடுத்த பத்தினோடு ஆயிரத்தினைப் புணர்க்கின்றது.

ஆயிரம் வரின் சாரியை இன் ஆம் - (அவ் வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன் )ஆயிரம் என்பது வரின் இடை வந்து புணருஞ் சாரியை இன் ஆம், ஆ வயின் ஒற்று இடை மிகுதல் இல்லை - அவ்விடத்து(முன்கூறிய) ஒற்று இடை மிகுதல் இன்றி முடியும்.

**எ - டு :** ஒருபதினாயிரம், இருபதினாயிரம் என ஒட்டுக.

'ஆவயின்' என்றதனான், ஒருபதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு உகரமும் வல்லெழுத்துப் பேறும் கொள்க.

1.(பாடம்) இன்னென் சாரியை (நச்.)

## அவற்றின்முன் அளவுப்பெயர் நிறைப்பெயர்

**477. அளவும் நிறையும் ஆயியல் திரியா.**

இ.்.து, அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன் அளவுப் பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

அளவும் நிறையும் ஆ இயல் திரியா - (அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன் ) அளவுப்பெயரும் நிறைப்பெயரும் (மேல் ) ஆயிரத்தோடு புணரும் வழி முடிந்த இயல்பில் திரியாதே நின்று இன்பெற்று முடியும்.

**எ - டு :** ஒருபதின்கலம், இருபதின்கலம் ' சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும் ' ஒரு பதின் கழஞ்சு ' தொடி, பலம் எனவும் கொள்க.

‘திரியா’ என்றதனான், ஒருபதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு இன்னின் னகரம் இரட்டி றகரமாகலும், ஒருபதினாழி என்னும் முடிபின்கண் வருமொழி நகரம் திரிந்தவழி நிலைமொழியின் னகரக் கேடும் கொள்க.

குறிப்புகள்

## ஒன்று முதல் எண் முன் பொருட்பெயர்

**478. முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**
**ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்**
**முதனிலை யியற்கை என்மனார் புலவர்.**

இ∴து, ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட்பெயரைப் புணர்க்கின்றது.

முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும் ஞ ந ம தோன்றினும் ய வ வந்து இயையினும் - முதனிலை எண்ணாகிய ஒன்று என்னும் எண்ணின் முன் வல்லெழுத்து முதன்மொழி வரினும் ஞ ந ம க்களாகிய மெல்லெழுத்து முதன்மொழி வரினும் ய வ க்களாகிய இடையெழுத்து முதன்மொழி வந்து பொருந்தினும், முதல்நிலை இயற்கை என்மனார் புலவர் - அவ்வொன்று முதல் ஒன்பான்கள் முன் எய்திய முடிபுநிலை எய்தி முடியும் என்று சொல்லுவர் புலவர்.

எனவே, வழிநிலை எண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் அம்முதனிலை முடிபாகிய விகாரம் எய்தியும் எய்தாதும் இயல்பாயும் முடியும்.

**எ - டு :** ஒருகல் சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு என வரும். இருகல், இரண்டுகல் சுனை, துடி பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு எனவும் ஒன்பதின் காறும் ஒட்டுக.

ஒன்பதின்கல் எனச் சென்றதேனும் வழக்கின்மையின் ஒழிக்க.

‘நிலை’ என்றதனான், மாட்டேற்றுக்கு ஏலாத ஞகர யகரங்களின் முடிபு கொள்ளப்பட்டது.

## அவற்றுடன் உயிர் முதல் மொழியும் யகரமும்

**479. அதனிலை உயிர்க்கும் யாவரு காலையும்**
**முதனிலை ஒகரம் ஓவா கும்மே**
**ரகரத் துகரந் துவரக் கெடுமே.**

இ∴து, ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட்பெயருள் உயிர் முதன்மொழி முடியுமாறும் மேற்கூறிய யகரம் வேறுபட முடியுமாறும் கூறுகின்றது.

அதன் நிலை உயிர்க்கும் யா வருகாலையும் முதல் நிலை ஒகரம் ஓ ஆகும் - அவ்வொன்று முதல் ஒன்பான்களோடு புணருமிடத்து உயிர் முதன்மொழி வந்த இடத்தும் யா முதல் மொழி வந்த இடத்தும் முதல் நிலை எண்ணாகிய ஒன்று என்பதன்கண் ஒகரம் ஓகாரம் ஆம், ரகரத்து உகரம் துவரக் கெடும் - (அவ்விடத்து) ரகரத்து உகரம் முற்றக்கெட்டு முடியும்.

எனவே, வழிநிலை யெண்களுள் உயிர்நிலை முதன்மொழி வந்த இடத்து முன் கூறியவாறே இருவாற்றானும் முடியும்.

எ - டு : ஓரடை, ஓராடை எனவும்' இருவடை, இருவாடை,இரண்டடை இரண்டாடை எனவும் உயிர் முதல் மொழிகளை ஒட்டிக்கொள்க.

யா முதல் மொழி ஓர் யாழ் என வரும்.

'துவர' என்றதனான், இரண்டு என்னும் எண்ணும் மூன்று என்னும் எண்ணும் செய்யுளகத்து ஈரசை எனவும் மூவசை எனவும் முதல் நீண்டு வேறுபட முடியுமாறு கொள்க.

'அதனிலை' என்றதனான், முதனிலை நீளாதே நின்று உகரம் கெட்டு ஓரடை, ஓராடை ஓர்யாழ் என வரும் முடிபும் கொள்க.

குறிப்புகள்

## இரண்டு முதல் ஒன்பது எண்ணின் முன் 'மா' என்னும் சொல

**480. இரண்டுமுத லொன்பான் இறுதி முன்னர்**
**வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்**
**மகர அளபொடு நிகரலு முரித்தே.**

இ∴து, இரண்டு முதல் ஒன்பான்கள் முன்னர் அளவு முதலிய மூன்றற்கும் உரிய மா என்பது புணருமாறு கூறுகின்றது.

இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர் - இரண்டு முதலாக ஒன்பது ஈறாக சொல்லப்படுகின்ற எண்களின் முன்னர், வழங்கு இயல் மா என் கிளவி தோன்றின் - வழக்கின் கண்ணே கிடக்கின்ற (விலங்கு மரம் முதலிய அல்லாத அளவு முதலியவற்றிற்குரிய) மா என்னும் சொல் தோன்றின், மகர அளபொடு நிகரலும் உரித்து - (இயல்பாய் முடிதலேயன்றி மேற்கூறிய) மண்டை என்னும் அளவுப்பெயரோடு ஒத்து வேறுபட முடிவனவும் பெறும்.

**எ - டு :** இரண்டுமா, இருமா, மூன்றுமா, மும்மா என ஒன்பதின்காறும் இவ்வாறு ஒட்டுக.

இரண்டு முதல் ஒன்பான் என்று எடுத்தமையின், ஒன்றற்கு ஒருமா என்னும் முடிபேயன்றி ஒன்றுமா என்னும் முடிபு இல்லையாயிற்று- இவற்றுள் மிக்க எண்ணோடு குறைந்த எண்வருங்கால் உம்மைத் தொகையாகவும், குறைந்த எண்ணோடு மிக்கது வரிற் பண்புத் தொகையாகவும் முடித்தார் என்க.

## 6. அதிகாரப் புறனடை

## புள்ளி மயங்கியலுள் ஒழிந்து நின்ற மெய்யீறுகளின் செய்யுள் முடிபு

**481. லனவென வரூஉம் புள்ளி யிறுதிமுன்**
**உம்முங் கெழுவும் உளப்படப் பிறவும்**
**அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்**
**செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்**
**வேற்றுமை குறித்த பொருள்வயி னான.**

இ∴து, லகார னகார செய்யுள் முடிபு கூறுகின்றது.

ல ன என வரும் புள்ளி இறுதிமுன் - ல ன என்று சொல்ல வருகின்ற புள்ளியீற்றுச் சொல்முன், உம்மும் கெழுவும் உளப்பட பிறவும் - உம் என்னும் சாரியையும், கெழு என்னும் சாரியையும் உளப்படப் பிற சாரியையும், அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும் - அப் பெற்றிப்பட்ட

மரபினையுடைய மொழியிடைத் தோன்றிச் செய்யுள் மொழிகளைத் தொடர்ந்து சொல்லும் இடத்து மெய்ம்மை பெற நிலைபெற்று முடியும், வேற்றுமை குறித்த பொருள் வயின் - வேற்றுமை குறித்த பொருட் புணர்ச்சிக்கண்.

குறிப்புகள்

**எ - டு :** 'வானவரி வில்லுந் திங்களும், கல்கெழு கானவர் நல்குறு மகளே' எனவும், மாநிதிக் கிழவனும் போன்ம் எனவும் கான்கெழுநாடு எனவும் வரும்.

'மொழியிடைத் தோன்றி' என்ற மிகையால், பிற ஈற்றுள்ளும் இச்சாரியை பெற்று முடிவன கொள்க. துறைகெழுமாந்தை, வளங்கெழு திருநகர் என வரும்.

'அன்னமரபின்' என்றதனால், சாரியை காரணமாக வல்லெழுத்துப் பெறுதலும், அது காரணமாக நிலைமொழியீறு திரிதலும், சாரியையது உகரக்கேடும், எகர நீட்சியும் கொள்க. பூங்கேழூரன், வளங்கேழ் திருநகர் என்று அவ்வாறு வந்தமையறிக.

'மெய் பெற' என்றதனான், இச் சாரியைப் பேற்றின்கண் ஈற்று வல்லெழுத்து வீழ்க்க.

## எழுத்ததிகாரத்திற் புணர்க்கப்படாத சொற்கள்

**482. உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்**
**குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி**
**நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்**
**உயர்திணை அ∴றிணை ஆயிரு மருங்கின்**
**ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்**
**செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்**
**மெய்யொருங் கியலுந் தொழில்தொகு மொழியும்**
**தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்**
**எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்**
**அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய**
**புணரியல் நிலையிடை உணரத் தோன்றா.**

இ∴து, இவ் வதிகாரத்துப் புணர்க்கப்படா மொழிகள் இவையென அவற்றை எடுத்து உணர்த்துகின்றது.

உயிரும் புள்ளியும் இறுதியாகி குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்பட வாரா குறைச் சொல் கிளவியும் - உயிரெழுத்தும் புள்ளியெழுத்தும் ஈறாகிக் குறிப்பின் கண்ணும் பண்பின்கண்ணும் இசையின்கண்ணும் தோன்றி ஒரு நெறிப்பட வாராக் குறைச்சொற்களாகிய உரிச்சொற்களும், உயர்திணை அ∴றிணை ஆ இரு மருங்கின் ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும் - உயர்திணை அ∴றிணையாகிய அவ்விரண்டு திணையிடத்தும் உளவாய ஐந்து பாலினையும் அறியவரும் பண்புத்தொகை மொழிகளும், செய்யும் செய்த என்னும் கிளவியின் மெய் ஒருங்கு இயலும் தொழில் தொகு மொழியும் - செய்யும் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களின்படி ஒருங்கு நடக்கும் வினைச்சொல் தொக்க வினைத்தொகையும், தம் இயல் கிளப்பின் - (எண்கள்) தம் இயல்பு கிளக்கும் இடத்து, தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதி

உளப்பட பிறவும் அன்னவை எல்லாம் - (நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாய் வாராது) தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதியும் உட்பட்ட பிறவும் அத்தன்மையெல்லாம், மருவின் பாத்திய - வழக்கிடத்து மருவி நடந்த இடத்துள்ளன, (ஆகலான் அவ்வாறே கொள்ளப்படும்) புணர் இயல் நிலையிடை உணரத் தோன்றா - புணர்ச்சி இயன்ற நிலைமைக்கண் (அவற்றின் முடிபு ) விளங்கத் தோன்றா.

குறிப்புகள்

**எ - டு :** விண் வினைத்தது, கார் கறுத்தது, ஒல்லொலித்தது இவை குறைச்சொற்கிளவி ஆயினமையின் முடிக்கப்படாவாயின் விண்ணென விசைத்ததென இடைச் சொல்லோடு கூடியவழிப் புணர்க்கப்படும்.

கருஞ்சான்றான் என்றது பணபுத் தொகை, இது கரும் எனப் பண்புணர நின்றது. கருஞ்சான்றானெனத் தொகையாயவழி, கருமென்பது கரியானெனப் பால்காட்டி நிற்றலில் புணர்க்கப்படாதாயிற்று.

கொல்யானை என்றது வினைத்தொகை. அதுவும் கொல்லெனத் தொழின்மை உணர நின்றது. கொல்யானை எனத் தொகையாயவழி, கொன்ற எனக் காலம்காட்டி நின்றமையின், புணர்க்கப்படாதாயிற்று.

ஓரொன்று என இது, தம்முற்றாம் வந்த எண், இது நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் அண்மையிற் புணர்க்கப்படாதாயிற்று. இதுதானே ஓரொன்றாகக் கொடு என்புழிப் புணர்க்கப்படும்.

'பிறவும்' என்றதனான் முடியாதன உண்டான், கரியன் என்பன, இவை உண் எனவும் கருமை எனவும் பிரித்து நிறுத்தியவழி ஆனும் அன்னும் குறித்துவருகிளவி யன்மையான் வந்து புணராமையின், புணர்க்கப்படாவாயின.

'தோன்றி' என்றதனால், கொள்ளெனக் கொண்டான் என்புழிக் கொள்ளென்பதனை, என என்பதனோடு புணர்க்கப்படாமை கொள்க.

'மெய் ஒருங்கியலும்' என்றதனான், உண்டான். என்புழிச் செய்கையும் காலமும் பாலும் தோற்றி நிற்குமாறு பிரித்துப் புணர்க்கப்படாமை கொள்க.

## எழுத்ததிகாரத்திற்குப் புறனடை

**483. கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்**
**வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்**
**விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்**
**வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்**
**நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்.**

இ∴து, இவ் வதிகாரப் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

கிளந்த அல்ல செய்யுள்ளுள் திரிநவும் - முன் எடுத்தோதின அல்லாதன செய்யுளிடத்து வேறுபட வருவன வற்றையும், வழங்கு இயல் மருங்கின் மருவொடு திரிநவும் - வழக்கு நடத்துமிடத்து மருவுதலோடு வேறுபட வருவனவற்றையும், விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின் - முன்சொன்ன முடிபியற்கையின், வேறுபடத் தோன்றின், நல்மதி நாட்டத்து வழங்கு இயல் மருங்கின் உணர்த்தனர். ஒழுக்கல் நல்லறிவினது ஆராய்ச்சியான் வழக்கு இயலுமிடத்து அவற்றின் முடிபு வேறுபாடுகளை யறிந்து நடத்துக, என்மனார் புலவர் - என்று சொல்லுவர்

புலவர்.

எ - டு : நறவங்கண்ணி, கள்ளியங்கோடு, புன்னையங்கானல், பொன்னந்திகிரி, ஆரங்கண்ணி, கானலம்பெருந்துறை என இவை வேற்றுமைக்கண் அம்முப் பெற்று முடிந்தன.

'வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை' என்பது ரகர வீறு அத்துப்பெற்று முடிந்தது. முளவமா, பிணவுநாய் என்பன. அல்வழிக்கண் மென்கணத்துக் குறியதன் இறுதிச் சினை கெட்டு உகரம் பெற்று முடிந்தன.

'அஞ்செவி நிறைய மந்திரங் கூறி' என்பது அகம் என்னும் நிலைமொழி செவி என்னும் வருமொழியோடு வேறுபட முடிந்தது.

'ஆயிடை' என்பது அவ்வென்னும் வகரவீறு வேறுபட முடிந்தது.

தடவுத்திரை, தடவுத்தோள் என்பன உரிச்சொல் முடிபு.

அருமருந்தன்னான் எனற்பாலது அருமருந்தான் என மரூஉவாய் முடிந்தது. சோணாடு மலாடு என்பதும் அது.

பொதியி லென்பதும் அது. பிறவும் அன்ன.

ஒன்பதாவது குற்றியலுகரப் புணரியல் முற்றிற்று.

எழுத்ததிகாரம் இளம்பூரணருரை முற்றுப்பெற்றது

குறிப்புகள்

# முன்னுரை

குறிப்புகள்

தமிழில் முழுமையாகக் கிடைக்கும் முதல் இலக்கணநூல் தொல்காப்பியம். இது தொல்காப்பியர் இயற்றிய தொன்மைமிக்க நூலாகும். தமிழ் மொழ-யின் தொன்மையையும், தமிழ் இலக்கியத்தின் பழைமையையும் ஒருங்கே எடுத்துக்காட்டும் சான்றாகத் திகழ்வது இத்தொல்காப்பியமே. தொல்காப்பியர் தம் நூலை நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையில் அரங்கேற்றினார். எனவே தொல்காப்பியரின் காலம் கி.மு.5-ஆம் நூற்றாண்டு என்பதனை உணரலாம்.

குறையிலா நிறைவு அறிவுசால் செறிவு, நிரம்பு வளம் வரம்புபிறழாமல், வரையறுத்தவடித்த முனை வனப்பு, மொழிவளர்ச்சிக்கென்றும் தளர்ச்சிதரா

கட்டமைப்புகளால் ஒப்புயர்வற்ற சிறப்பு வாய்ந்த இலக்கண நூல் தொல்காப்பியர் பெயரால் வழங்குகிறது. தமிழில் மட்டுமன்று "உலகில் நிலவும் பலமொழிகளிலும் உள்ளபிற இலக்கணங்களுக்கு இல்லாத எழிலும் பயனும் வாய்ந்தது தொல்காப்பியம். பழமையும் பெருமையும் அழகும் அருமை-மயும் வாய்ந்தது" என நாவலர் சோமசுந்தரபாரதியார் தொல்காப்பியத்தைப் பாராட்டுகிறார்.

எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோல, இந்நூல் தோன்றுவதற்கு முன்பே இலக்கியங்கள் பல இருந்திருத்தல் வேண்டும். ஆவை காலப்போக்கில் இறந்துபட்டிருக்கலாம். இத்தகைய நூல்களின் பெயர்களையும், பகுதி-களையும் பிற்கால உரையாசிரியர்கள் மேற்கோளாகக் குறிப்பிடுவது, மேற்கூறிய கருத்தையே வலியுறுத்தும் சான்றாக உளது எனலாம். தொல்காப்பியர் தமது நூலில் ஏறத்தாழ 260 இடங்களில் தமக்கு முன்பு இருந்த அல்லது தம் காலத்தில் வாழ்ந்த இலக்கண ஆசிரியர்கள் பல-ரைப் பலவாறு குறிப்பிட்டுள்ளார். எனவே பற்பல இலக்கண நூல்கள் இருந்திருக்கவேண்டுமெனத் துணிந்துரைக்கமுடிகிறது.

தொல்காப்பியத்திற்கு முழுமையாக உரைகண்டவர் இளம்பூரணர் ஆவர். இவரைத் தொடர்ந்துகல்லாடர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் உரை எழுதியுள்ளனர்.

## தொல்காப்பியக் கட்டமைப்பு

தொல்காப்பியம் இலக்கண நூலேயாயினும் ஒரு பெருங்காப்பியம் போன்ற கட்டமைப்புடையது. தொல்காப்பியம்,

1. எழுத்ததிகாரம்

2. சொல்லகதிகாரம்

3. பொருளதிகாரம்

எனும் மூன்று அதிகாரங்களை உடையது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது.

ஒவ்வோரியலும் தன்னளவில் நிறைவுடையது. இயல்கள் அனைத்தும் காரணகாரிய இயைபுடையன. இயலுக்குள் நூற்பாக்களும் வரிசைமாற்ற இயலாத இயல்புடையன. முதலில் பொதுவிதிகளைக் கூறிப் பின்னர்ச் சிறப்பு இயல்களைப் புறனடைவிதி என வகுத்துக் கூறுவது தொல்காப்பியரின் சிறப்பாகும்.

குறிப்புகள்

தொல்காப்பியத்தை முழுமையாக கற்போர்க்கே, அதன் ஓர் இயல் அல்லது ஒரு நூற்பாவின் பொருள் தெளிவாக விளங்கும்.

## நூன்மரபு

### தமிழ் எழுத்துக்கள்

தமிழில் ''எழுத்து'' என்று சொல்லப்படுவன அகரம் முதல் னகரம் ஈறான முப்பதுமாகும். இவற்றைச் சார்ந்து வரும் எழுத்துக்கள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்பனவாம்.

### எழுத்தும் ஒலிக்கும் கால அளவும்

அ இ உ எ ஒ எனும் அவை ஐந்தும் ஒரு மாத்திரையளபு ஒலிக்கும் குற்றெழுத்துக்களாகும்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனும் ஏழும் இரண்டு மாத்திரையளபு ஒலிக்கும் நெட்டெழுத்துக்களாகும்.

ஓரெழுத்து மூன்று மாத்திரையளபு ஒலித்தல் தமிழில் இல்லை.

### அளபெடை

எழுத்துக்களை அளபு நீட்டித்தொலிக்க விரும்பினால், அவ்வளபுடைய ஒலியைக் கூட்டி ஒலித்திடுதல் வேண்டும்.

நுண்ணியதாக ஆராய்ந்தறிந்தவர்கண்டவாறு, கண்ணிமைப பொழுதும் கைந்நொடிப் பொழுதுமே ஒரு மாத்திரைக்கு அளபு கருவியாகும்.

## முதலெழுத்து வகை

அகரம் முதலாக ஔகாரம் ஈறாகப் பன்னிரெண்டெழுத்தும் உயிரெழுத்தாம். ககரம் முதலாக னகரம் ஈறாகப் பதினெட்டெழுத்தும் மெய்யெழுத்தாகும்.

குறிப்புகள்

## உயிர்மெய், மெய், சார்பு: மாத்திரை அளபு

மெய்யுடன் சேர்ந்தாலும் உயிரெழுத்தின் இயல்பு மாறாது. உயிரின் மாத்திரையளபே உயிர் மெய்க்கும் அளபாகும்.

மெய்யெழுத்தின் மாத்திரை அரையாகும்.

முதலெழுத்திலடங்காத குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் எனப்பட்ட ஏனைய மூன்றும் மெய்போல, அவ்அரை மாத்திரையே பெறும்.

## மகரக் குறுக்கமும், எழுத்து வடிவமும்

செய்யுளள் ஓசை கருதிவரும் சூழலில், மகர மெய் தன்அரை மாத்திரயேனும் குறைந்து ஒலிக்கும்.

அவ்வாறு குறைந்தொலிக்குமிடத்து அம்மகரக் குறுக்கத்திற்கு, மகர மெய்க்குரிய வடிவத்துடனே, உள்ளேயும் ஒரு புள்ளி பெறும்.

மேலே புள்ளியுடன் அமைவதே மெய்யின் வடிவத்தைக் காட்டும் இயல்பாகும்.

எகர ஒகரங்களும் மேலே புள்ளிபெறும் அவ்வியல்பை உடையன. (இவை முற்கால எழுத்து வடிவம்)

## உயிர் மெய்கள்

புள்ளி பெறாத எல்லா மெய்களும், அதுவே தன் வடிவ-மாக, அகரம் ஏறிய உயிர்மெய்களாக ஒலிக்கப்படும். ஏனைய உயிர்கள் சேரும்போது, அவ்வுருவமும் சிறிதுசிறிது மாற்றி எழுதப்பட்டு, உச்சரிக்கப்படும். உயிர்மெய்கள் வடிவம் பெற்று,

ஒலிக்குமாறு அவ்விருதிறத்தனவாகும்.

உயிர் மெய்யை ஒலிக்கும்போது மெய்யொலி முன்னும், உயிர் ஒலி பின்னுமாக அமையும்.

குறிப்புகள்

## மெய்கள்

க் ச் ட் த் ப் ற் ஆறும் வல்லெழுத்து

ங் ஞ் ண் ந் ம் ன் ஆறும் மெல்லெழுத்து

ய் ர் ல் வ் ழ் ள் ஆறும்

## இடையெழுத்து மெய்ம்மயக்கம்

ஆராயுமிடத்து அவை பதினெட்டாம் வழக்கின் கண்ணே ஓர் ஒற்று உடனிலை மெய்ம்மயக்கமாய் இடம்பெறும்.

ட ற ல ள மெய்க்குப்பின் க ச ப மூன்று மெய்யும் உயிர் மெய்யாய் வந்து மயங்கும்.

அவற்றுள் ல, ள வுக்குப் பிறகு ய வ வும் வரும்.

ங ஞ ண ந ம ன எனும் மெல்லின மெய்க்குப் பின்னர், அவ்வம் மெய்களின் முன்னுள்ள வல்லின எழுத்துக்கள் (க,ச,ட,த,ப,ற) பொருந்திவரும்.

அவற்றுள் ண ன மெய்க்குப் பின்னர் க ச ஞ ப ம ய வ என்ற ஏழு உயிர்மெய்களும் வந்து கலந்தற்குரியன.

ஞ ந ம வ என்னும் மெய்க்குப் பிறகு யகரம் வந்து

பொருந்துதல் வழக்காகும். மகர மெய்க்குப் பிறகு வகரமும்

இடம்பெறும்.

ய ர ழ மெய்களுக்கடுத்து மொழிக்கு முதலாகுமென்ற க ச த ப ஞ ந ம ய வ ஆகிய உயிர்மெய்களும் ஙகர ஒற்றும் பொருந்தும்.

வழக்காற்றுப்படி பார்த்தால் ர, ழ மெய் தவிர்த்த அனைத்து மெய்களும் தம்முன்தாம் - மெய்யும் அடுத்து அதே உயிர்மெய்யுமாய் வந்து மயங்கும். ர, ழ

குறிப்புகள்

இரண்டும் தம்முன் பிற உயிர் மெய்களுடனேனே

மயங்கும் என்பதாகும்.

**சுட்டும் வினாவும்**

அ இ உ என்ற அவை மூன்றும் சுட்டெழுத்துக்கள்.

ஆ ஏ ஓ என்ற அவை மூன்றும் உயிரெழுத்துக்களிலுள்ள வினாவெழுத்துக்கள்.

**இசையும் எழுத்தொலியும்**

பண்ணிசையோடு பாடப்படும் இயல்பு பொருந்திய இசைக்கலையில், உயிர்கள் தமக்குரிய மாத்திரையின் எல்லை கடந்து ஒலித்தலும், ஒற்றெழுத்துக்கள் ஓசை நீண்டு ஒலித்தலும் உளவென்பர்.

## மொழிமரபு கருத் துக்களின் தொகுப்பு

**சார்பெழுத்துக்கள்**

**குற்றியலிகரம்**

மியா என்னும் உரையசைச் சொல்லில், யா எழுத்துக்கு முன்னுள்ள மகர ஒற்றிற் காணப்படும் இகரம் குறுகி ஒலிக்கும்.

இங்ஙனம் தனிமொழியில் மட்டுமின்றி, இருசொற் புணர்ச்சியிலும் இகரம் குறுகுதலுண்டு. அதன் பின்னர் புணரியலில் விளங்கக் கூறப்படும். (நாடூயாதுஶ்ரீநாடியாது.)

**குற்றியலுகரம்**

தனி நெட்டெழுத்துக்குப் பின்பும் பல எழுத்துக்கள் தொடர்ந்த தொடர் மொழிகளின் ஈற்றிலும், வல்லினம் ஆறினையும் சார்ந்து குற்றியலுகரம் வரும்.

இங்ஙனம் தனிமொழிகளில் மட்டுமின்றி, இரு சொற் புணரும் புணர்மொழிகளிடையேயும் உரகம் குறுகும். அது முறைப்படி புணரியலில் பின்பு கூறப்படும். (தேக்குக்கதவு)

குறிப்புகள்

## ஆய்தம்

ஆய்தப்புள்ளி குற்றெழுத்தின் பின்னும் உயிர்மெய் வல்லெழுத்து ஆறனுக்கு முன்னுமாக வரும். (க.ஃ.சு)

இங்ஙனம் ஒருமொழிக் கண்ணேயன்றி, சொற்களின் ஈறு புணருமிடங்களிலும் ஆய்தமாக இசைக்கும் ஒலிப்புத் தோன்றும். (கல்+தீது=க.ஃ.றீது)

ஒலிக்குறிப்பாக வரும் ஆய்தம் நிறத்தையும் ஓசையையும் குறிக்க அருகித் தோன்றும். அப்போது அவ்வாய்த ஒலி சுருங்காமல் அளபெடைபோல நீண்டொலித்தாலும், அதனை எழுத்தால் எழுதிக் காட்டுவதில்லை.

## அளபெடைகள்

ஓசை குறையும் சொற்களில், நெட்டெழுத்துக்குப் பின்னே அதற்கு இனமொத்த குற்றெழுத்துக்கள் நின்று ஓசையை நிறைவிக்கும்.

ஐ, ஔ இரண்டனுக்கும் இனமொத்த குற்றெழுத்து இன்மையால், முறையே இகரமும் உகரமும் இசையை நிறைவிக்க வரும்.

## தமிழ்ச்சொல் அடிப்படைவகை

நெட்டெழுத்துக்கள் ஏழும் (பிறிதொரு பொருள் தரும்போது) ஓரெழுத்தொரு மொழிகள் ஆகும்.

குற்றெழுத்துக்கள் ஐந்தும் அங்ஙனம் ஓரெழுத்தொரு மொழிகளாக, நிறைவுபெற வருவதில்லை. சிற்சில வருமென்பதாம்.

தமிழில் சொற்கள் அமையும் விதம் ஓரெழுத்தொரு மொழியும் ஈரெழுத்தொரு மொழியும் இரண்டுக்கு மேற்பட்ட பலவெழுத்தத் தொடர்ந்த தொடர்மொழியும் என

மூன்றாகும்.

## மெய்கள் ஒலிப்பு முறை

மெய்கள் அகர உயிரோடு சேர்த்தே உச்சரிக்கப்படும். (க,ங)

குறிப்புகள்

அவற்றை ஞகாரம், டகாரமெனத் தனியெழுத்தாகிய நிலையைக் கூறும்பொழுது, எல்லா எழுத்தும் மெய்ம் மயக்க நிலைகளில் மாறிவரும். அதில் குற்றமில்லை.

## மெய்ம் மயக்கம் - ஈரொற்றுடனிலை

ய ர ழ எனும் மூன்று ஒற்றுக்களின் பின் க ச த ப ங ஞ ந ம என்ற எட்டு மெய்களும் வந்து ஈரொற்றுடனிலை யாகும்.

**அவற்றுள் ர, ழ இரண்டும் குறிற்கீழ் ஒற்றாக வாரா.**

குறில், நெடில் என்ற வேறுபாடு. மாத்திரை அளவாற் கொள்ளப்படுதலின்,இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடரும் தொடர்மொழிகள் எல்லாம் நெட்டெழுத்துப் போலும் இயல்புடையனவாம். குறிற்கீழ் வாரா எனப்பட்ட ரகர, ழகரம் குறிலி-னை முதலியவற்றின் பின் வருமென்பதாம். (பர் என வராது, பகர் என வரும். புழ் என வராதது புகழ் என்பதில் வரும்.)

## ஈரொற்றாய் நின்று மகரம் குறுகுதல்

செய்யுளின் இறுதியில் நிற்கும் ‘‘போலும்’’ எனும் சொல் ஓசைச்சூழல் கருதி போன்ம் எனத் திரிந்து,ஈரொற்றுடனிலையாய் நிற்கும்.

இந்தச் சூழலில் னகரத்தின் பின்னே நிற்கும் மகர ஒற்றுக் குறுகும்.

## சொல்லிடைப்படும் எழுத்தொலி மாற்றங்கள்

சொல்லிடைப் படுத்த ஒலித்தாலும் தனி எழுத்தாய்ப் பிரித்து ஒலித்தாலும் எழுத்தின் இயல்பு மாறுவதில்லை. (சிற்சில மாறும் என்பது மட்டும் பின்னே கூறப்படுகின்றன.)

சொல்லிடைவரும் அகர இகரம் ஐ போல ஒலிக்கும்.

குறிப்புகள்

(வயிரம்-வைரம்) சொல்லிடைவரும் அகர உகரம் ஔ போல ஒலிக்கும். (கவுதமன்-கௌதமன்) சொல்லிடையெ அகரத்தின் பின் யகர ஒற்றை எழுதினாலும் ஐ எனும் நெட்டெழுத்துப்போல ஒலி ஒற்றுமை உண்டாகும். (ஐயா் - அய்யா்)

ஐ, ஔ இரண்டும் ஆராயுங்கால் மொழியிடையே ஒரு மாத்திரை மட்டுமே பெறுமிடமும் உண்டு.

முன்பு எழுத்து மயக்கமாய் வருமெனப்பட்ட இகரமும், யகரமும் சொல் இறுதியில் மயங்கி வரக்கூடும். சில சொல்லில் இ ஆகவும் சில சொல்லில் 'ய்' ஆகவும் விரவிவரும் எனக் காட்டுவர். ஆய் - ஆயி. பாய்-பாயி.

## மொழி முதலெழுத்துக்கள்

பன்னிரண்டு உயிர்களும் மொழி முதலாக வரும்.

உயிருடன் கூடிய மெய்யல்லாதன (தனி மெய்கள்) தமிழில் மொழிமுதலாகா.

க த ந ப ம என்னும் ஐந்து மெய்களும் எல்லா உயிருடனும் கூடி மொழிமுதலாகும்.

'ச'கர மெய் அ ஐ ஔ மூன்று உயிர் தவிர்த்த பிற ஒன்பதுயிர்களோடும் மொழிமுதலாகும்.

'வ'கர மெய் உ ஊ ஒ ஓ எனும் நான்குயிர் தவிர்த்த பிற எட்டுயிர்களுடன் மட்டும் மொழிமுதலாகும்.

'ஞ'கர மெய் 'ஆ', எ, ஒ என்ற மூன்றுயிர்களோடு மட்டும் மொழி முதலாகும்.

'ய'கர மெய் ஆவுடன் மட்டுமே மொழிமுதலாகும்.

மொழிமுதலாகா எனக் கூறப்பட்ட பிற மெய்கள் எல்லாம், தம்பெயர் கூறுங்கால் மொழிமுதலாகும்.

நுந்தை என்ற முறைப்பெயரிலுள்ள 'ந'கரத்தின் மேல் பொருந்திய நகர மெய்யிலுள்ள உகரம் குறுகும். இது மொழி-

முதல் குற்றியலுகரம் ஆகும்.

அப்பெயரை இதழ்குவித்துக் கூறினால் முற்றியலுகரம், குவியாது கூறினால் குற்றியலுகரம். எப்படிக் கூறினும் இக்குற்றியலுகரம் முற்றியலுகரத்துடன் பொருள்வேறுபடுவதில்லை

குறிப்புகள்

## பிறப்பியல்

### பொதுப்பிறப்பு முறை

உந்தி எனப்படும் கொப்பூழ் அடியிலிருந்து மேலெழும் காற்று தலை, மிடறு, நெஞ்சு ஆகிய இடங்களில் தங்கி, அவற்றுடன் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் உட்பட எட்டுவகை நிலைக்களன்களின் வழி, அவ்வுறுப்புக்களில் முறைப்படி பொருந்தி, ஒருவன் முறைப்பட ஆராய்ந்து எல்லா எழுத்துக்களையும் சொல்லி ஒலிக்கும்போது எழுத்துக்கள் வேறுவேறாகத் தோன்றும். இது தெளிவாக அறியப்படும் பிறப்பியல்பாகும்.

### உயிர் எழுத்துக்களின் பிறப்பு முறை

அவ்வாறு பிறக்குமிடத்துப் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தம் நிலை திரியாமல், மிடற்றில் பிறந்த ஓசைக் காற்றால் ஒலிக்கும்.

> அவற்றுள் அ, ஆ இரண்டும் வாயை அங்காத்தலால் பிறக்கும்.

இ ஈ எ ஏ ஐ என ஒலிக்கும் ஐந்தும் முற்கூறியவை போல, வாயை அங்காத்தலால் தோன்றி, மேற்பல்லின் அடியை, நாவினது அடிவிளம்பு பொருந்தப் பிறக்கும்.

> உ ஊ ஒ ஓ ஒள என ஒலிக்கும் ஐந்தும் இதழ்குவித்துச் சொல்லப் பிறக்கும்.

இங்ஙனம் தொகுத்துச் சொல்லப்பட்டாலும் இவை ஒவ்வொன்றும் சிறுசிறு ஒலி வேறுபாடுடையனவாகும்.

### மெய்யெழுத்துக்களின் பிறப்பு முறை

> அண்ணம் என்னும் மேல்வாயின் அடியை நாவினது அடிபொருந்த க, ங இரண்டும் பிறக்கும்.

அண்ணத்தினது இடைப்பகுதியை நாவினது இடைப்பகுதி

பொருந்த ச, ஞ இரண்டும் பிறக்கும்.

அண்ணத்தினது நுனிப்பகுதியை நாவினது நுனிப்பகுதி பொருந்த ட, ண இரண்டும் பிறக்கும்.

குறிப்புகள்

முற்கூறிய ஆறெழுத்தும் இணைஇணையாக மூவகைப் பிறப்பிடங்களையுடையன. (ககாரம் முதல் நா, ஙகாரம் அண்ணம் என்பதுபோல் தனித்தனிப் பிறப்புடையன எனக் கருதி விடுதல் கூடாது என்பதாம்)

அண்ணத்திற்கு அருகேயுள்ள மேற்பல்லின் அடிப்பக்கத்தில், நாநுனி பரந்து, நன்கு அழுந்தப் பொருந்த த, ந இரண்டும் இனிதே பிறக்கும்.

நுனிநா அண்ணாந்து அண்ணத்தைச் சென்று ஒற்ற ற, ன ஆகிய இரண்டும் பிறக்கும்.

நுனிநா அண்ணாந்து அண்ணத்தை வருட ர, ழ இரண்டும் பிறக்கும்.

நாவினது விளிம்பு தடித்து, மேற்பல்லின் அடியைப் பொருந்துங்கால், அவ்விடத்தே அண்ணத்தை ஒற்ற ‘‘ல’’வும், வருட 'ள'வும் பிறக்கும்.

இதழிரண்டும் பொருந்த ப, ம இரண்டும் பிறக்கும்.

மேற்பல்லும் கீழுதடும் பொருந்த 'வ'கரம் பிறக்கும்.

மிடற்றிலிருந்து எழும் ஓசைக்காற்று, அண்ணத்தைச் சேர்ந்து அழுந்தப் பொருந்த ‘‘ய’’கரம் பிறக்கும்.

மெல்லெழுத்தாறும் முன் சொல்லிய இடங்களில் பொருந்திப் பிறக்குமாயினும், மூக்கின்வழி வெளிப்படும் வளியது ஓசையால் பொருத்தமுறப் பிறக்கும்.

## சார்பெழுத்துக்களின் பிறப்பு முறை

சொல்லைச் சார்ந்துவரினல்லாமல், தமக்கென்று தனி இயல்புடையவை அல்ல என ஆராய்ந்து வெளிப்படுத்திய பிற மூன்றெழுத்துக்களும் தத்தமக்குச் சார்பான முதலெழுத்துக்களின் பிறப்பிடமே தமக்குப் பிறப்பிடமாய்த் தோன்றும். ஒப்பிட்டுப்

பார்க்கும் நிலையில் தமக்குரிய தனியியல்புடனும் நடக்கும்.

எழுத்துக்களுக்கு மாத்திரை அளபிடும் முறை

குறிப்புகள்

எல்லா எழுத்துக்களையும் முன்சொல்லிய பிறப்பிடங்களிலிருந்து மேலெழும் ஓசைக்காற்றினால், வெளிப்படச் சொல்லும்போது, அவை பிறப்பெடுத்து வெளிவிடப்படும். அங்ஙனம் எழுத்துக்களைப் பிறப்பித்து, வெளியிடும்போது, உள்ளுறுப்பக்களில் தங்கிச்சுழன்று எழும் ஓசைக்காற்றும், குற்றமற ஆராய்ந்து மாத்திரை அளபு கொள்ளுதல் அந்தணர்தம் இலக்கண நூல்களில் கண்டதாகும். யான் அதனை இங்குக்கூறாது, வாயிலிருந்து புறத்தே வெளிப்பட்டொலிக்கும் வடிவு தெரிந்த வளியிசைக்கே மாத்திரையளவு கூறப்பட்டுள்ளது.

# தொகை மரபு

## உயிரீறு, மெய்யீற்றுப் பொதுப் புணர்ச்சிகள்

உயிரீறு, மெய்யீறாக நிற்கும் சொற்களுக்கு எதிரே க ச த ப எனும் வல்லெழுத்து முதன்மொழிகள் வருமிடத்து, அவற்றுக்கு முன்முறையே ங ஞ ந ம எனும் மெல்லெழுத்துக்கள் மிகும். இவ்வியல்புடைய சொற்களிலெல்லாம் இவ்வாறு திகழும்.

இருபத்து நான்கு இறுதி எழுத்துக்களையுமுடைய நின்ற சொல்முன், வருமொழியாக உயிரெழுத்து முதன்மொழிகளும் ஞ ந ம ய வ எனும் மெய் முதன்மொழிகளும் வருமாயின் அவையாவும் வேற்றுமை, அல்வழி இரண்டிடத்தும் இயல்பாக வரும்.

மேற்கூறியவற்றுள் ஞ ந ம எனும் மெல்லெழுத்து முதன்மொழிகள்

## இயல்பாதலேயன்றி, உறழ்ந்து

முடிதலுமுண்டு. ண ன ஈற்றுப் புணர்ச்சிகள்

ண, ன எனப் புள்ளி ஈறாக முடியும் சொற்களுடன் இணையும் யா, ஞா முதலாக வரும் வினைச்சொற்கள் ஒரு

தன்மையுடையனவாகும். அவை ஒன்றற்கொன்று போலியாக வருமென்பதாம்.

குறிப்புகள்

தமிழில் இருபத்து இரண்டு எழுத்துக்கள் முதலாகவரும் எனச் சொல்லப்பட்ட அனைத்துச் சொற்களும் வருமொழியாக நிற்க, நிலைமொழியீறாக நின்ற அவ்விரு மெய்களும் (ண், ன்) வேற்றுமையல்லாத அவ்வழியிடத்துத் திரியாமல் இயல்பாக நிற்கும்.

முற்கூறிய ண், ன் இரண்டும் வேற்றுமையிலும் வருமொழி முதல் வல்லெழுத்தல்லாதவிடத்து, மேற்சொல்லியபடி இயல்பாக வரும். வல்லெழுத்து வரின் திரியுமென்பதாம்.

## ல ன, ண ள ஈற்றுப் புணர்ச்சிகள்

ல புள்ளி முன் த, ந வரின் அவை முறையே ற, ன ஆகும். ன புள்ளி முன் த, ந வரின் அவையும் முறையே ற, ன வாகும்.

ண புள்ளி முன் த, ந வரின் அவை முறையே ட, ண வாகும். ள புள்ளிமுன் த, ந வரின் அவையும் முறையே ட, ண வாகும்.

## முன்னிலை வினைச் சொற் புணர்ச்சிகள்

உயிர் ஈறாகிய முன்னிலை வினைச்சொற்களும் மெய்யீறாகிய முன்னிலை வினைச்சொற்களும் வல்லெழுத்து முதன்மொழிவரின் இயல்பாகவும் உறழ்ந்தும் வரும்.

ஔ என முடியும் உயிரீற்று முன்னிலை வினைச்சொல்லும், ஞ ந ம வ என்னும் புள்ளி ஈற்று முன்னிலை வினைச்சொற்களும் குற்றியலுகர ஈற்று முன்னிலை வினைச்சொல்லும் முற்கூறிய இயல்பை முழுமையாகப் பெறாமல், வல்லெழுத்து மிக்கு முடியும்.

## இருதிணைப் பெயர்கள் நின்று புணருமாறு

உயிர் ஈறாக வரும் உயர்திணைப் பெயர்களும் மெய் ஈறாக வரும் உயர்திணைப் பெயர்களும் நிற்க, வருமொழியாய் உயிர் வலி மெலி இடை என நான்கு கணமும் வரும்போது,

அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் இயல்பாய் முடியும்.

அவற்றுள் இகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் மட்டும் இயல்பாகாமல் திரிந்து முடியும் இடங்களுமுண்டு.

குறிப்புகள்

அ.:றிணையாகவும் வரும் விரவுப்பெயர்கள் இயல்பாக முடிவ-னவுமுள.

## மெய்யீறு, உயிரீறுகளின் வேற்றுமைப் புணர்ச்சி

புள்ளியிறுதிச் சொல்லும் உயிரிறுதிச் சொல்லும் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும். எனினும் அவற்றின் முன் மூன்றாம் வேற்றுமைப் பொருளாகிய வினைமுதற் பொருளுடைய வினைச்சொற்கள் வருமாயின் இயல்பாதலும் உறழ்தலுமென இரண்டு முறைகளும் உளவாகும்.

## இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியின் தனித்தன்மைகள்

ஐகார வேற்றுமையில் மெல்லெழுத்து மிகுமென்றவிடத்து வல்லெழுத்துத் தோன்றும். வல்லெழுத்து மிகுமென்ற விடத்து மெல்லெழுத்துத் தோன்றும். இயல்பாகு மென்றவிடத்து எழுத்துமிகும். உயிர் மிகுமென்றவிடத்:து அது கெடும்.

சாரியை வருமென்றவிடத்து அது கெடும். சாரியை உளதாகுமிடத்து அதனுடன் வேற்றுமை உருபும் வரும். சாரியை பெறாதவிடத்து வருமொழி வல்லினம் உறழ்ந்து வரும். உயர்திணைப் பெயரிடத்து உருபு விரிந்தே வரும். அ.:றிணை விரவுப்பெயர்க்கும் அதே இயல்பு பொருந்தி வரும். மெய் திரிய வேண்டிய இடத்து இயல்பாக வரும். அத்தன்மையன பிறவும், தனக்குரிய இயல்பின்கண் அமைந்து வேற்றுமைப் பொருளை வேறுபடுத்திக் கூறும் தொடர்களின் கண்ணே, ஐ வேற்றுமைக்குப் பொருந்திய புணர்ச்சி வேறுபாடுகளாகும்.

## அல்வழியில் சில பெயர்ச்சொற்கள் புணருமாறு

அல்வழியில் இ, ஐ ஈற்றையுடைய பெயர்ச்சொற்கள் இயல்பு. வல்லெழுத்து மிகுதல், உறழ்தல் என மூவகைப் புணர்ச்சிகளையுடையனவாம்.

பழங்காலச் சுட்டு, வினாச்சொற் புணர்ச்சிகள்

குறிப்புகள்

அ, இ, உ எனும் சுட்டெழுத்தை முதலாகவுடைய இகர இறுதி

இடைச்சொற்களும் (அதோளி, இதோளி), எகர வினாவை முதலாகவுடைய இகர இறுதி

இடைச்சொல்லும் (எதோளி), சுட்டெழுத்து நீண்டு ஐ இறுதி பெற்ற சொல்லும் (ஆண்டை,ஈண்டை) முற்கூறிய புணர்ச்சி விதிப்படி வல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும் முடியுமிடங்கள் என்பர்.

## சில ஈரெழுத்து மொழிகளின் புணர்ச்சிகள்

ஈரெழுத்துச் சொற்களில் நெட்டெழுத்தின் முன் வரும் ஒற்று திரியும். குற்றெழுத்தின் முன் வரும் ஒற்று இரட்டிக்கும்.

நெட்டெழுத்துக் குறுகி, இறுதியில் அகரம் பெற்று நிற்கும் (தம, நம) சொற்களின் முன்னே அது எனும் ஆறாம் வேற்றுமை உருபும் கு எனும் நான்காம் வேற்றுமை உருபும் வருமிடத்து, முற்கூறிய குறிலொற்று இரட்டிப்பதில்லை.

நும் எனும் மகர இறுதியும் முற்கூறியவாறு அகரம் பெறுதல், குற்றொற்று

**இரட்டாமை எனும் அத்தன்மைகளினின்றும் மாறாது.**

உகரமொடு சேர்ந்து உரிஞஉ, பொருநு என வரும் புள்ளி இறுதிச்சொற்கள் (உரிஞ், பொருந்) வருமொழி முதலில் யகரமும் உயிரும் வருமிடத்து, அவ்வுகரம் பெறாது இயல்பாகும்.

## அளவைப் பெயர்கள் தம்முன்தாம் புணர்தல்

முகத்தலளவையையும் நிறுத்தலளவையையும் எண்ணலளவையையும் குறித்து, உயிரும் மெய்யும் ஈறாகவரும் சொற்கள் எத்தனையுண்டோ, அத்தனையும் தத்தமக்குக் கீழ்ப்பட்ட அளவைப் பெயர்கள். தம்முன்தாம் வரும் காலம் தோன்றுமானால் ஏ என் சாரியை இடையே வருவது பொருத்தமாகும். (ஒன்றேகால்)

"அரை"என வரும் பாதியைக் குறிக்கும், சொல்லுக்கு ஏ எனும் அச்சாரியை தோன்றுமியல்பு பொருந்துவதன்று. (ஒன்றரை)

'குறை' எனும் அளவுப்பெயர் வருமொழியாய் முன்னேவரின், அளவைப் பெயர்களினிறுதியில், வேற்றுமைப் புணர்ச்சிக்குக் கூறிய இயல்பு முழுவதும் பொருந்தி வரும். அதாவது ஒற்று மிகும் என்பதாம்.

குறிப்புகள்

குற்றியலுகர ஈற்று அளவுப்பெயர்களுடன்,"குறை"ச் சொல் வந்து புணரும்போது,

**இடையே இன் சாரியை இடம்பெறும்.**

கலம் எனும் முகத்தலவைப் பெயர் "குறை"யொடு புணருமிடத்தில், இடையே "அத்துச்" சாரியை வரும்.

'பனை' என்னும் முகத்தலளவைப் பெயரும் கா என்னும் நிறுத்தலளவைப் பெயரும் "குறை"ச் சொல்லோடு புணருமிடத்து, ஆராயுங்கால் 'இன்' சாரியை பொருந்தி வரும்.

முகத்தலளவை, நிறுத்தலளவை பெயர்கட்கு,மொழி முதல-ாக வரும் எழுத்துக்கள் எனப்படுவன ஒன்பது. அவை க ச த ப என்றும் ந ம வ என்றும் அகர உகர மெனவும் குறிக்கப்படுவனவாகும்.

**புறனடை**

ஈறும் முதலுமாய்ப் புணர்ந்து இயலுமிடங்கள், இவை எனவும் இவற்றியல்பு இதுவெனவும் இதுகாறும் கூறிய பல்வேறு நெறிமுறைகளனைத்தையும், உலகிடை இயல்பாகப் பொருந்தி நடக்கும் வழக்குகளோடு பொருத்திப் பார்த்து, இனியும் நடப்பனவற்றுக்கு ஒத்தனவற்றைக் கொள்ளுதல் வேண்டும்.

## சில மரூஉ மொழிப் புணர்ச்சிகள்

உயர்திணையில் பலரை வினவியறியும் சொல்முன் வரும் 'யாவா' என்பதன் இடை வகர் கெடுதலும; அ∴றிணையில் ஒன்றனை வினவியறியும் சொல்முன் வரும் யாது என்பதனிடையே உயிர் மெய் வகரம் வருதலும் உலகில் மருவி வழங்கும் வழக்காற்றில் பயின்று வருவனவாம். (அவர் யார், அது யாவது)

மருவி வழங்கும் வழக்காற்றில் பயின்று வருவனவாம். (அவர் யார், அது யாவது)

குறிப்புகள்

## புணரியல்

### எழுத்துக்கள் இணையும் புணர்ச்சி

தமிழ் எழுத்து முப்பத்துமூன்றில் மொழி முதலாக வரும் இருபத்து இரண்டு எழுத்துக்களும் ஈறாக வரும் இருபத்து நான்கு எழுத்துக்களுடனும், வழக்கின்கண் சொற்கள் சேருங்கால் ஒன்றுபொருந்தி நடக்கும். இப்புணர்ச்சியில், சொற்களனைத்திற்கும் மொழியிறுதி, மொழி முதலென்ப மெய் அல்லது உயிர் என அவ்விரண்டாகவே அமையும். அவற்றுள் மெய்யீறு என்பன எல்லாம் மொழியிறுதியில் புள்ளியுடன் நிலைபெற்றிருக்கும்.

> குற்றியலுகரமும் அவ்வியல்புப்படி மொழியிறுதியில் புள்ளி பெற்று நிற்கும்.

உயிர்மெய் இறுதியில் நிற்பின் அதுவும் உயிர் ஈற்றின் இயல்பை உடையதாகும்.

### எழுத்துக்கள் நின்று இணைதல்

சொற்கள் தம்முள் புணருமிடத்து உயிரில் முடியும் சொல்லுடன் உயிரை முதலாகவுடைய மொழியும் உயிரில் முடியும் சொல்லுடன் மெய்யை முதலாகவுடைய மொழியும் மெய்யில் முடியும் சொல்லுடன் உயிரை முதலாகவுடைய மொழியும் மெய்யில் முடியும் சொல்லுடன் மெய்யை முதலாகவுடைய மொழியும் என இவ்வாறு புணரும். இவற்றைத் தெளிவுபடக் கூறுமிடத்து நிறுத்த சொல், குறித்துவரு கிளவி என அவ்விருவகையில் வரும்.

### சொற்கள் நின்று இணைதல்

அவற்றுள் நிறுத்த சொல்லின் ஈற்றெழுத்துடன் குறித்து வருகிளவியின் முதலெழுத்துப் பொருந்துவதே புணர்ச்சியாகும். இது பெயர்ச்சொல்லுடன் பெயரையும் பெயர்ச்சொல்லுடன் வினையையும் வினைச்சொல்லுடன் பெயரையும் வினைச்சொல்லுடன் வினையயும் புணர்க்குமிடத்து நடப்பதாகும். அப்போது மொழிகள் புணரும்நிலை திரிவு மூன்றும் இயல்பு ஒன்றுமாக, நான்கு வகை-

கயாய் அமையும்.

குறிப்புகள்

### மூவகைத் திரிபுகள்

மெய் வேறாகத் திரிதல், புதிய எழுத்துத் தோன்றுதல், முன்னிருந்த எழுத்துக்கெடுதல் (மெய் பிறிதாதல், மிகுதல், கெடுதல்) என்பன மூன்றும் திரிபுகளாகும்.

### அடைமொழி சார்ந்தவை புணர்தல்

நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் தனித்து மட்டுமல்லாமல், அடைமொழிகளுடன் வரினும் இருமொழித் தன்மையவாய் முற்கூறிய புணர்ச்சி நிலைகட்கு உரியனவாகும்.

### மரூஉச்சொல் புணர்ச்சி

மரூஉ மொழிகளாய் மயங்கிக்கிடக்கும் சொற்களேயாயினும், நிறுத்தசொல் குறித்து வருகிளவியென நிறுத்திப் புணர்தற்குரிய சொற்களும் உள்ளன.

### பொருளடிப்படைப் புணர்ச்சி

வேற்றுமைப் பொருள் குறித்த புணர்மொழிகளும் வேற்றுமையல்லாத அல்வழிப் பொருள் குறித்த புணர்மொழிகளுமெனப் பொருள்வழிப் புணர்ச்சிகள் இரண்டு வகைப்படும். அப்பொருளுணர்ச்சிக்காக, எழுத்து மிகுதலும் சாரியை தோன்றுதலுமாகிய அவ்விரு பண்பினடிப்படையில் புணர்ச்சி நடக்குமிடத்துச் செறிவாக இணைத்துச் சொல்லப்படும்.

### வேற்றுமைப்புணர்ச்சி நெறிமுறைகள்

வேற்றுமைப் புணர்ச்சியில் இடம்பெறும் வேற்றுமை யுருபுகள் ஐ ஒடு கு இன் அது கண் என்னும் இவை ஆறுமாகும்.

கு, கண் என்ற வல்லெழுத்தை முதலாகவுடைய வேற்றுமை உருபிற்குப் பொருந்துமிடங்களில், இடையே ஒற்று மிகுதல் வேண்டும்.

மொழியிறுதியில் அகரம் நிற்குமிடத்து, அதற்கு எதிரே

வரும் 'அது' எனும் ஆறாம் வேற்றுமையுருபிலுள்ள 'அகர' எழுத்து கெடும்.

**குறிப்புகள்**

வேற்றுமை உருபுகள் பெயருடன் கூடுங்காலத்து, அப்பெயர்களின் பின்னர் வரும்.

அங்ஙனம் உருபேற்கும் பெயர்கள் உயர்திணைப் பெயர், அ/றிணைப் பெயரென்று இருவகையினவாகும்.

வேற்றுமைப் புணர்ச்சியில் சாரியைகள் இடம்பெறுதல்

அப்பெயர்களும் வேற்றுமை உருபுகளும் சேருங்கால் அவற்றினிடையே சாரியை

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்னும் சொல்லுடன் இடைச்சொற்களுட்பட இவை போல்வன பிறவும் அங்ஙனம் வரும் சாரியை மொழிகளாம்.

இன் சாரியையிலுள்ள முதல் 'இ'>'ஆ' என்னும் சொல்லுடன் சேரும்போது, கெட்டுப்போதலுமுண்டு கெடாது நிற்றலுமுண்டு.

அளவைக் குறிக்கும் உழக்கு முதலிய சொற்களின் முதலில்நிற்கும் உயிரெழுத்துக்கு முன்னதாக வரும் 'இன்' சாரியையது னகரம் றகரமாய்த் திரியும்.

'அவை' என்னும் சுட்டு முதலாகிய ஐ முன்னர், வற்று முதல் மெய்யாகிய ‘‘வ’’ கெட்டு அற்று ஆகி நிற்றல் அதனியல்பாகும்.

நான்கன் உருபாகிய ‘‘கு’’வருமிடத்து, இன்னிலுள்ள னகாரம் றகாரமாகும்.

பரணி என்ற நாள் முன்வரும் வல்லெழுத்தை முதலாகக் கொண்ட வினைச் சொல்லுக்கு, இடையே வரும் 'ஆன்' சாரியையது னகரமும் 'இ'ன்னினது னகரம்போல, றகரமாதற்குரித்து.

'அத்து'ச் சாரியையிலுள்ள முதல் 'அகரம்', அகர ஈற்றுச்சொல் முன் மறைந்துவிடும்.

'இ'க்குச் சாரியையிலுள்ள முதல் 'இகரமும்',

இகர ஈற்றுச் சொல்முன் அதுபோல் மறைந்துவிடும்.

ஐகார ஈற்றுச் சொல் முன்னரும் 'இக்கு'வில், இ மறைந்து மேற்சொன்ன அவ்வியல்பால் நிலைபெறும்.

குறிப்புகள்

எவ்வகைப்பட்ட பெயர் முன்னரும் வல்லெழுத்து முதல் மொழி வருமிடத்து,'அக்கு'ச் சாரியையிலுள்ள இறுதி மெய்யும் அதன் முன்னுள்ள மெய்யும்

இறுதி மெய்யூர்ந்த குற்றுகரமும் மறைந்து ‘‘அக்கு’’,‘‘அ’’ ஆகிவிடும்.

'அம்' சாரியையது இறுதி மெய், வருமொழி முதலில் கசத வருமிடத்துத் தன் வடிவம் திரிந்து முறையே ங ஞ ந என ஆகும்.

முற்கூறிய 'அம்' சாரியையது இறுதி மெய், மெல்லினமும் இடையினமும் வருமொழி முதலில் வரும்போது, கெட்டுப் போய்விடும்.

'இன்' எனும் ஐந்தாம் வேற்றுமை உருபிற்கு, இன் எனும் சாரியை வராது.

## சாரியையின் இயல்பு

பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும்தனித்து நிற்பன, தம்முள் இணைந்து, ஒருங்கிணைத்துச் சொல்லப்படுங்காலத்து வேற்றுமை உருபு வெளிப்பட்டுத் தோன்றி நிற்குமிடத்தும் வெளிப்படாது மறைந்து நிற்குமிடத்தும் அச்சொற்கள்

ஒன்றுடன் ஒன்று இணைவதற்குக் காரணமான வழக்கினிடத்து அவை செறிவுறப் பொருந்த இடையே வந்து அமைவதே சாாியையது இயற்கையாகும். சொற்களைப் பிரித்துக் காணுமிடத்து அவை தமக்கெனப் பொருள் எதுவும் தருவதில்லை. இவ்வாறு சாரியை பெறுதலாலும் பெறாமையாலும் பொருள் வேறுபடாமையை ஒடு உருபின் வழி அறியலாம். பிற உருபுகட்கும் இது பொருந்தும்.

அத்து, வற்றுச் சாரியைகள் வரும்போது, அவற்றுக்கு முன்னுள்ள மொழிகளின் இறுதியிலுள்ள ஒற்றுக்கெடுதல் உறுதி. சாரியைகட்குப் பின்வரும் வல்லெழுத்து மிகும்.

எழுத்துச் சாரியைகள்

குறிப்புகள்

எழுத்துக்களின் சாரியைகளாக காரம், கரம், கான் எனும் மூன்றும் பொருத்தமுறத் தோன்றும்.

அவற்றுள் கரம், கான் இரண்டும் நெட்டெழுத்துடன் இணைந்து வாரா. காரம் மட்டுமே வரும் என்பதாம்.

வரன்முறைப்படுத்தப்பட்ட காரம் கரம் ''கான்'' மூ ன்றும் குற்றெழுத்துக்களுக்குச் சாரியைகளாக வரும்.

ஐகார ஔகாரம் இரண்டும் கான் சாரியையொடும் பொருந்தும்.

புள்ளியீறும் உயிர் முதலும் பொதுப்புணர்ச்சி

> புள்ளி ஈற்றுச் சொல்முன் உயிர் முதன்மொழி வந்தால், உயிர் அங்கு தனித்துநில்லாது, மெய்யுடன் கூடி நிற்கும்.

அங்ஙனம் உயிர்மெய்யாய்க் கூடிநிற்கும் சொற்களைப் பிரிக்கும்போது மெய்யையவிட்டு உயிர் நீங்கினால், அது மீண்டும் தன் பழைய மெய் வடிவத்தைப் பெறும்.

**உயிரீறும் உயிர்முதலும் பொதுப்புணர்ச்சி**

எல்லாச் சொற்களுக்கும் உயிரீற்றுமுன் உயிர் முதன்மொழி வந்தால், அவ்வாறு வருமிடத்து உடம்படு மெய்யாக ஒரு வடிவு கொள்ளுதலை நீக்கமாட்டார்கள். சிலபோது உடம்படுத்தும் மெய் வாராமையும் உண்டு.

ஓசை அழுத்தத்தால் தொடர்கள் பொருள் வேறுபடுதல்

எழுத்துக்களெல்லாம் ஒரு தன்மையவாய், பொருள் விளங்கிநிற்கும் தொடர்மொழிகள், சொல்லுவானது சொல்லும் ஓசை வேற்றுமையால் பொருள் வேறுபடுதல் நிலைபெற்ற மொழிப்பண்பாகும்.

அவை புணர்ச்சி வழியாக இன்ன தன்மையவாயின என்று சொல்லும்படியான எழுத்து வேற்றுமையுடையனவல்ல: சொல்லானது குறிப்பினால் பொருளை யுணர வேண்டியனவாகும்.

# உருபியல்

## உயிரீற்றுச் சொற்கள் வேற்றுமை உருபேற்கும் போது சாரியை பெறுதல்

குறிப்புகள்

அ ஆ உ ஊ ஏ ஔ என்னும் ஆறனையும் றாகவுடைய சொற்களுக்கு முன்வரும் வேற்றுமையுருபுகளுக்கிடையே ''இன்'' சாரியை வரும்.

பல்ல, சில்ல எனப் பன்மை உணர்த்தும் அகர ஈற்றுப்பெயர்கள் வற்றுச் சாரியையோடு பொருந்துதல் தவறாது.

யா எனும் வினாவும் அவ்வியல் திரியாது. ''வற்று''ச் சாரியை பெறுமென்பதாம்.

சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுச்சொல்,''அன்'' சாரியையொடு பொருந்தி, தான் ஏறிய மெய் நிற்க உகரம் கெடும். (அதனை)

சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐ கார ஈற்றுச்சொல் வற்றுச்சாரியை பெற்று, அவ்விறுதி ஐகாரம் கெடாமல் நிற்றலும் உரித்து. கெட்டுப்போதலும் உண்டு. (அவையற்றை, அவற்றை)

யா என்னும் வினாவெழுத்தை முதலாகவுடைய ஐகார ஈற்றுச்சொல்லும் மேற்கூறிய இயல்பில் திரியாது. வற்றுச்சாரியை பெறுமென்பதாம். இங்கும் நிலைமொழி வகரம் ஐகாரத்தோடும் கெடும். (யாவற்றை)

நீ எனும் ஓரெழுத்து, முன்னிலைப் பெயரின், நெடில் குறுகும். அவ்விடத்தே னகர ஒற்று இடம் பெறும். (நின்னை)

ஓகார இறுதி பெற்ற பெயர்கள் ஒன் சாரியை பெறும்.

அ ஆ என்னும் ஈற்றையுடைய மரப்பெயர்ச் சொற்களுக்கு ஏழாம் உருபு சேரும்போது அத்துச் சாரியையும் வரும். முற் கூறிய ''இன்''னும் வரும்.

## மெய்யீறுகள் உருபேற்கும்போது சாரியை பெறுதல்

ஞ, ந என்னும் மெய்யீறு கட்கு

'இன்' சாரியையே வரும்.

## வ மெய்யீறுகள்

குறிப்புகள்

சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர ஈற்றுச் சொல் (அவ், இவ்),'யாவை' என்பதன் இறுதி ஐயும் அ.:.தேறிய மெய்யும் கெட்ட இயல்பில் திரியாது. அதுபோற் கெட்டு வற்றுப்பெற்று முடியும்.

ஏனைய வகர ஈற்றுச்சொல் (தெவ்) இன் சாரியையொடு பொருந்தும். (தெவ்வினை)

## ம் மெய்யீறுகள்

மகரமாகிய புள்ளி ஈற்றுச் சொல்முன்

அத்துச்சாரியை வரும். (மரத்தை) அவற்றுள்

'இன்' சாரியை பெறும் சொற்களும் உள.

(உருமினை)

'நும்' மிலுள்ள மகர ஈறு அத்தும் இன்னும் பெறாது இயல்பாய் முடியும். (நம்மை)

தாம் நாம் என்னும் மகர ஈறும் யாம் எனும் மகர இறுதியும் முற்கூறியது போல் அத்தும் இன்னும் பெறாது முடியும். யாம் என்ற மகர ஈற்றுச் சொல்லில், முதலிலுள்ள ஆ எ ஆகும். அதிலுள்ள யகரமெய்யும் கெடும். ஏனைய தாம் நாம் இரண்டும் முன்னுள்ள நெட்டெழுத்துக் குறுகித் தம் நம் என ஆகும். (தம்மை, நம்மை, எம்மை)

எல்லாம் என்னும் மகர ஈற்றுச்சொல் முன்னர், வற்றுச்சாரியை முடியத் தோன்றும். இறுதியில் உம் பொருந்தி நிற்கும். (எல்லாவற்றையும்)

எல்லாம் என்னும் விரவுப்பெயர் உயர்திணையைக் குறிக்குமிடத்து,'நம்' சாரியை, இடையில் வரும் (எல்லா நம்மையும்)

எல்லாரும் எனப் படர்க்கையைக் குறிக்கும் மகர இறுதியும்

வல்லீரும் என முன்னிலையைக் குறிக்கும் மகர இறுதியும், உருபு சேரும்போது,'தம' முன்னுள்ள உகரத்தோடும் கெடும். ரகரப்புள்ளி கெடாது நிற்கும். இறுதியில் உம் வந்து சேரும். படர்க்கையிடத்துத் தம் சாரியையும் முன்னிலைக்கு 'நும்' சாரியையும் இடையில் வந்தமையும், (எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும்)

குறிப்புகள்

## ன் மெய்யீறுகள்

தான் யான் எனும் அவ்விரண்டு னகர ஈற்றுச் சொற்களும் மேலே மகரவீற்றுச் சொல்லப்பட்ட மூன்று பெயர்களோடும் (தாம், நாம், யாம்-188) வேறுபாடின்றி அமையும், தான் என்பது நெடுமுதல் குறுகும். யான் என்பதில் ஆகாரம் எகரமாகி, முன்னுள்ள யகர மெய் கெட்டு முடியும். (தன்னை, என்னை)

அழன், புழன் இரண்டனுக்கு அத்துச்சாரியையும் இன் சாரியையும் உறழ்ந்து வரும்.

## முற்றுகர ஈறு சாரியை பெறுதல்

ஏழு என்னும் முற்றுகர ஈற்றுச் சொல்லுக்கு அன் சாரியை வந்து சேரும்.

## குற்றுகர ஈறு சாரியை பெறுதல்

குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு முன்பாக இன் சாரியை முடியத் தோன்றும். (படகினை)

நெட்டெழுத்துக் குற்றகரங்களில் உருபேற்குங்கால் ஒற்று இரட்டிக்கும் சொற்கள் உள. அவை டு, று ஈறுகள். (அவ்வகைப்பட்ட மொழிகளல்லாதவை கு, சு, து, பு ஈறுகள்) எனவே டு, று ஈறுகள் ஒற்று இரட்டித்தே உருபேற்கு மென்பதாம். ஆடு+ஐ=ஆட்டை. சோறு+கு=சோற்றுக்கு.

அவ்விரண்டு ஈறுகளும் இன் பெறாமல் இயற்கையாக நிற்கும் புணர்ச்சியையுடையன. பிற குற்றுகர ஈறுகள் இன் சாரியை பெறுமென்பதாம். காசினை, பாம்பினை. (இன்-வந்தது)

குறிப்புகள்

குற்றுகர எண்ணுப்பெயர்கள்

எண்ணுப் பெயர்களது குற்றுகர ஈறு அன் சாரியையோடு பொருந்தும். (ஒன்றினை, எட்டினை).

ஒன்று முதலாக எட்டு வரையுள்ள எண்ணுப்பெயர்களின் முன்னே, பத்து எனும் சொல் வரும்போது, உருபு வருங்கால் 'ஆன்' சாரியை இடையே வருவதில் தவறில்லை. ப.்.து என்பதில் அ.்.து கெட்டு பகரமெய் மட்டும் பிழைத்து நிற்கும்.

**குற்றுகர வினா, சுட்டுப் பெயர்கள்**

யாது என்னும் குற்றுகர ஈறும் சுட்டெழுத்தினை முதலாகவு-டைய ஆய்தத்தொடர்க் குற்றுகர ஈறும் (அ.்.து), அன் சாரியை-யொடு பொருந்தும். அவ்விடத்து ஆய்தம் கெடும். (யாதனை, அ.்.தூஅன்+ஐ=அதனை)

**குற்றுகரத் திசைப்பெயர்கள்**

ஏழாம் வேற்றுமையுருபு குற்றுகரத் திசைப்பெயர்களின் பின்னா் வரும்போது, இடையே முற்கூறிய 'இன்' சாரியை இன்றியும் வரும். அப்போது அத்திசைப்பெயா் இறுதிக் குற்றுகரம் மெய்யோடும் கெடும். (வடக்கண்)

**புறனடை**

புள்ளி ஈறு, உயிரீறு பெற்ற சொற்களுள், முன்பு விதி வகுத்தவை அல்லாத ஏனையவெல்லாம், ஆராயுங்காலத்து வேற்றுமை உருபுடன் பொருந்தும்போது சாரியை பெற்றே வரவேண்டுமெனும் என்றல்ல. பெறாமலும் வரும் என்பதாம்.

## குற்றியலுகரப் புணரியல் கருத்துக்களின் தொகுப்பு

1. 1. நெடில்முதலாகிய ஈரெழுத்து ஒரு மொழி — நாடு, காசு, ஏறு
   2. உயிர்த்தொடர்மொழி — வரகு, விழுது, உலகு
   3. இடைத்தொடர்மொழி — எய்து, நேர்பு, நல்கு
   4. ஆய்தத் தொடர்மொழி — எ.்.கு, க.்.சு, அ.்.து
   5. வன்தொடர் மொழி — சுக்கு, கச்சு, கட்டு

6. மென்தொடர் மொழி தெங்கு, பஞ்சு, கண்டு

குறுமை+உகரம்=குற்றுகரம், குற்றியலுகரம்-உ ஒரு மாத்திரைஅளவு, குற்றியலுகரம் அரை மாத்திரை அளவு.

குறிப்புகள்

குற்றியலுகரம் மொழியிறுதியிலேயே வரும்.

குற்றியலுகரம் கு, சு, டு, து, பு, று – என வல்லெழுத்தின்மேல் ஏறி-வரும். மெய்போலப் புணர்ச்சிபெறும்: உலகு+எல்லாம்=உலகெல்லாம்.

தமிழில் உகரத்தில் முடியும் எழுத்துக்கள் மிகுதி. அதிலும்குற்றுகரச்சொற்களே கூடுதல். குற்றியலுகத்திற்கு முன்பு வரும் எழுத்தைக் கொண்டு, அது வகைப்படுத்தப்படுகிறது. குற்றுகரத்தின் முன் நெடில் மட்டும் இருந்தால் அது நெடில் தொடர்க் குற்றியலுகரம்: உயிர்மெய் எழுத்து இருந்தால் அது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். இடையெழுத்திருந்தால் அது இடைத்தொடர்க் குற்றியலுகரம், ஆய்த எழுத்திருந்தால் அது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்: வல்லெழுத்திருந்தால் அது வன்தொடர்க் குற்றியலுகரம்: மெல்லெழுத்திருந்தால் அது மென் தொடர்க்கு குற்றியலுகரம்.

2. குற்றுகரத்தின் முன் இரண்டு மெய்யெழுத்துச் சேர்ந்து நிற்பது,'ஈரொற்றுடனிலை' எனப்படும். அவ்வாறு வந்தால் அவை வன்தொடர்க் குற்றுகரமாகவோ, மென்தொடர்க் குற்றுகரமாகவோதான் அமையும்.

சால்பு, பெய்து – ஓரொற்றுடனிலை, இது இடைத்தொடர்க் குற்றுகரம்.

காழ்ப்பு, மொய்ம்பு – வன்தொடரும் மென்தொடருமாகும்.

ஈரொற்று-இடைத்தொடராக வராது.

3. அல்வழயிலும் வேற்றுமையிலும் வேறுபாடின்றி, முன்பு கூறிய வல்லெழுத்து ஆறு (க ச ட த ப ற) இறுதியிலும் குற்றுகரம் இடம்பெறும்.

| வ. எ. | நிலைமொழி | வருமொழி முதல் | வேற்றுமைம/ | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 4. | வன்தொடர்க் | க ச த ப | அல்வழி வேற்றுமை | 'உ' கரம் குறுகும் | சுக்குச் சிறிது பட்டுத்துணி |
| 5. | குற்றியலுகரம் | யகர முதன்மொழி வரின் குற்றியலுகரம் குற்றியலிகரமாகும் | | 'உ'கரம்- இகரமாகும், இகரமும் குறுகி ஒலிக்கும் | நாடு+யாது=நாடியாது |
| 6. | நெடில் தொடர்க்குற்றுகரம் | க ச த ப | வேற்றுமை | இறுதி இன ஒற்று மிகும் எதிரே வல்லொற்று மிகும் | ஆடுகால் ஸ்ரீஆட்டுக்கால் வயிறு+பசி= வயிற்றுப்பசி |
| 7. | மேற்படி குற்றுகரங்க | க ச த ப | வேற்றுமை | இயல்பாகவும் முடியும் | பாகு சுவை, வரகு கதிர் |
| 8. | இடை ஒற்றுத்தொடர் | க ச த ப | வேற்றுமை | இயல்பு | சார்பு கணக்கு, எ/கு கம்பி |
| 9. | வன்தொடர் மென்தொடர் | க ச த ப | வேற்றுமை | வந்த வலி மிகும் மென் தொடரில் இடையில் இன வல்லொற்றாகும் | மிக்குத் தோன்றும் விலங்குப்படம் குரக்குக்கால் எண்கு+குட்டி= எட்குக்குட்டி |
| 10. | மென் தொடர் வன் தொடர் | க ச த ப | வேற்றுமை | அம்-சாரியை வரும் | வேம்பு+பு+= வேப்பம்பு+ தேக்குகிளை தேக்கங்கிளை |
| 11. | மரப்பெயர்கள் குருந்து, புன்கு | க ச த ப | வேற்றுமை | மெல்லொற்று வல்லொற்றாகாது | குருந்து+கிளை= குறுந்தங்கிளை புன்கு+பு+=புன்கம்பு+ |
| 12. | ஈரெழுத்து நெடில் தொடர் வன்தொடர் | க ச த ப | வேற்றுமை | அம்-சாரியை ஏற்புழிப் பெறும் | ஏறு+கோள் = ஏறங்கோள் புற்று +சோறு= புற்றஞ்சோறு |

| வ. எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை.ஃ. அலவழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 13. | மென்தொடர் | க ச த ப | வேற்றுமை | அக்கு-சாரியை பெறும் | குன்று+அக்கு +குடி = குன்றக்குடி |
| 14. | குற்றுகர எண்ணப் பெயர்கள் ஒன்று, இரண்டு | க ச த ப | வேற்றுமை | அன்-சாரியை பெறும் | ஒன்று+கூறு= ஒன்றன்கூறு. |
| 15. | வண்டு, பெண்டு | க ச த ப | வேற்றுமை | இன்-சாரியை பெறும் | வண்டின் கால் பெண்டின் தலை |
| 16. | பெண்டு | க ச த ப | வேற்றுமை | அன்-னும் வரும் | பெண்டன் தலை |
| 17. | யாது, அ.ஃ.து | க ச த ப | வேற்றுமை | அன்-சாரியை பெறும் | யாது+தொகுதி= யாதன்தொகுதி அ.ஃ.து+பொருள்= அதன்பொருள் |
| 18. | அ/து | உயிர் முதன்மொழி | அல்வழி | ஆய்தம் கெடாது | அ.ஃ.து+என்ன= அ.ஃ.தென்ன |
| 19. | அ.ஃ.து | உயிர் தவித்த ஏனையவை | அல்வழி | ஆய்தம் கெடும் | அ.ஃ.து+நன்று= அதுநன்று |
| 20. | குற்றுகர ஈறு எல்லாம் | க ச த ப | அல்வழி | இயல்பு | அழகு புதிது |
| 21. | வன்தொடர் | க ச த ப | அல்வழி | வல்லெழுத்து மிகும் | பட்டுச் சிறந்தது |
| 22. | ஆங்கு யாங்கு | க ச த ப | அல்வழி | வல்லெழுத்து மிகும் | ஆங்குச் சென்றான் யாங்குப் பார்த்தான் |
| 23. | யாங்கு | க ச த ப | அல்வழி | இயல்பாயும் முடியும் | யாங்கு சென்றாய்? |
| 24. | அங்கு | க ச த ப | அல்வழி | இயல்பாகும் | அங்கு பார்த்தான் இங்கு கிடந்தான் எங்கு சென்றான் |
| 25. | உண்டு (உண்மை) | க ச த ப | அல்வழி | டு கெடும், ண்-ள் ஆகும். இயல்பாதலும் உண்டு. | உள் பொருள் உண்டுபுகழ் |
| 26. | கிழக்கு, மேற்கு வடக்கு, தெற்கு | இருதிசை புணரின் | | ஏ-சாரியை இடையில் வரும் | வடக்கே கிழக்கு தெற்கே கிழக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27. | மேற்படி<br>கோணத்திசைகள் | | | ற்கு-கெடும்<br>க்கு-கெடும் | வட கிழக்கு<br>தென் மேற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தெற்கு தென் ஆகும் | |
| 28. | பத்து | ஒன்று<br>மூன்று<br>நான்கு<br>ஐந்து<br>ஆறு<br>ஏழு<br>எட்டு | | பத்து-வில் து கெடும்<br>பத் என நிற்கும்<br>இன் சாரியை வரும் | பதின்ஒன்று<br>பதின்மூன்று<br>பதின்நான்கு<br>பதின்ஐந்து<br>பதின்ஐந்து<br>பதின்ஆறு<br>பதின்ஏழு<br>பதின்எட்டு |
| 29. | பத்து | இரண்டு | | பத்து-த்து கெடும் ன்-தோன்றும் (பன்) அது இரட்டிக்கும் | பன்னிரண்டு |
| 30. | பத்து | ஆயிரம் | | ஈறு கெட்டு, இன் பெறும் | பதின்ஆயிரம்<br>பதினாயிரம் |
| 31. | பத்து | நிறுத்தலளவைப் பெயர் (கழஞ்சு) முகத்தலளவைப் பெயர் (கலம்) | | இன்-சாரியை வரும் | பதின்கழஞ்சு<br>பதின்கலம் |
| 32. | ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது | பத்து | அல்வழி | த்-கெட, பது ஆகும்<br>ஃ-இடையில் வரும்<br>ஆறு-தவிர்த்தவற்றில் ஈற்றுக் குற்றுகரம் மெய்யுடன் கெடும். | இருபஃது<br>முப்பஃது<br>அறுபஃது<br>இருபது, முப்பது எனலுமாம் |
| 33. | ஒன்று, இரண்டு | பத்து | | ஓர், இர், உ-சேரும் | ஒன்று-ஒன்-ஓர்-ஒரு |
| 34. | இரண்டு | பத்து | | டு-கெட்டது ர-ரு ஆகும் | இரண்டு-இரண்-இண்-இரு சுருக்கமாக இரண்டு-இரு என ஆகும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 35. | மூன்று, ஆறு | பத்து | | நெடு – முதல் குறுகும் | மூ-மு ஆகும், ஆ-அ ஆகும். இறுதி கெடுதல் பொதுவிதி |
| 36. | மூன்று | பத்து | | முன்-ன், ப் ஆகும் | முப்ப∴து |
| 37. | நான்கு | பத்து | | ன், ற் ஆகும் | நாற்ப∴து |
| 38. | ஐந்து | பத்து | | ந்-ம் ஆகும் | ஐம்ப∴து |
| 39. | எட்டு | பத்து | | ட்-ண் ஆகும் | எண்ப∴து |
| 40. | ஒன்ப∴து | பத்து | | | ஒன்ப∴து+ப∴து= (இரு தொண்ணூறு ஆய்வுக்குரியது) |
| 41. | ஒன்று முதல் ஒன்பது வரை பிற | முகத்தலளவைப் பெயர் நிறுத்தலளவைப் பெயர் | | முன்பு எண்ணப் பெயர்கட்குச் சொன்னபடி புணரும் | ஒருகலம் எண்கழஞ்சு |
| 42. | மூன்று | அளவைப் பெயர்கள் | | ன்-வருமொழி வல்லொற்றாகும் | முக்கலம் முப்புகழ் |
| 43. | ஐந்து | | | ந்-வருமொழிக்கு ஏற்ற மெல்லொற்றாகும் | ஐங்கலம் |
| 44. | மூன்றும் ஐந்தும் | க ச த ப – வந்தவிடத்து | | | முன்காட்டியவை |
| 45. | எட்டு எண் | ந ம வ – முதலில் பெற்ற அளவைப் பெயர்கள் | | இயல்பு | எண் நாழி, எண் மண்டை |
| 46. | ஐந்து மூன்று | ந, ம – முதன்மொழிகள் | | வந்த ஒற்றாகும் | முந்நாழி ஐம்மண்டை |
| 47. | மூன்று | வ-கர முதன்மொழி | | வந்த "வ்" ஆகும் | முவ்வட்டி |
| 48. | நான்கு | வ-கர முதன்மொழி | | ன்-ல் ஆகும் | நால்வட்டி |
| 49. | ஐந்து | வ-வரின் | | ந்-வ் ஆகிக்கெடும் | ஐவ்வட்டி, ஐவட்டி |
| 50. | ஒன்று, இரண்டு | உயிர் முதன்மொழி | | உ-கெடும் முதல் | ஓரகல்,ஈருழக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எழுத்துக்கள் நீளும் | |
| 51. | மூன்று<br>நான்கு<br>ஐந்து | அகல் | | முன்பு வ-கரம் வந்தது போல் ஆகும் | முவ்வகல்<br>நாலகல்<br>ஐயகல் |
| 52. | மூன்று | உழக்கு | | நீளும் | மூவுழக்கு |
| 53. | ஆறு (அறு) | உயிர் முதன்மொழி | | நீளும் | ஆறகல் |
| 54. | ஒன்பது | கலம் | | இன்-சாரியை வரும் | ஒன்பதின் கலம் |
| 55. | ஒன்று முதல் ஒன்பது வரை | நூறு | | பத்து-க்குக் கூறிய அதே விதிகள் | ஒருநூறு<br>இருநூறு |
| 56. | மூன்று | நூறு | | ன்-ந் ஆகும் | முந்நூறு |
| 57. | நான்கு, ஐந்து | நூறு | | இறுதிகெடல் பொது விதி ஒற்றுத்திரியாது | நானூறு<br>ஐந்நூறு |
| 58. | ஒன்பது | நூறு | | | தொள்ளாயிரம் |
| 59. | ஒன்று முதல் ஒன்பது வரை | ஆயிரம் | | முதல் இரண்டு எண்கள் பெற்றிருந்த உ கெடும் | ஓராயிரம்,<br>இராயிரம் |
| 60. | மேற்படி | ஆயிரம் | | முதனிலை நீளும் | ஓராயிரம்,<br>ஈராயிரம் |
| 61. | மூன்று | ஆயிரம் | | ன்-வ் ஆகும் | முவ்வாயிரம் |
| 62. | நான்கு | ஆயிரம் | | ன்-ல் ஆகும் | நாலாயிரம் |
| 63. | ஐந்து | ஆயிரம் | | ந்-ய் ஆகும் | ஐயாயிரம் |
| 64. | ஆறு | ஆயிரம் | | "உ" மட்டும் கெடும் | ஆறாயிரம் |
| 65. | ஒன்பது | | | இன்-சாரியை பெறும் | ஒன்பதினாயிரம் |
| 66. | ஒன்று<br>இரண்டு | நூறாயிரம் | | நூறு-என்பதற்குக் கூறிய விதியே | ஒரு நூறாயிரம்<br>இரு நூறாயிரம் |
| 67. | நூறு | ஒன்று முதல் ஒன்பது வரை | | ஐ-நிற்கும், ற்-மிகும் | நுற்றொன்று<br>நுற்றிரண்டு |
| 68. | நூறு | ஒன்று முதல் ஒன்பது | | ஈறு நிற்க இன ஒற்று மிகும் | நுற்றிருப∴து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வரையிலான பத்து | | | |
| 69. | நூறு | முத்தலளவை நிறுத்தலளவை | | இன ஒற்று மிகும் | நூற்றுக்கலம் நூற்றுக்கழஞ்சு |
| 70. | ஒன்று முதல் எட்டு-பத்து | ஒன்று முதல் ஒன்பது வரை | | ஆய்தம் கெட்டு, இன ஒற்று மிகும் | இருபத்தொன்று இருபத்திரண்டு |
| 71. | மேற்படி | ஆயிரம் | | இன்-இடையில் வரும் | ஒருபதினாயிரம் |
| 72. | முதல் ஒன்பது பத்து | முகத்தலளவை நிறுத்தலளவை | | ஆயிரத்திற்குரிய விதி | ஒருபதின் கலம் ஒருபதின் கழஞ்சு |
| 73. | ஒன்று | வல்லெழுத்து முதன்மொழி ஞநம-மெல்லெழுத்து முதன்மொழி, இடையெழுத்து முதன்மொழி | | முன்பு கூறிய விதிகள் | ஒருகல், இருகனி, இரண்டு மணி, ஒருயானை |
| 74. | ஒன்று | உயிர்முதன் மொழி யா முதன் மொழி | | ஒ-ஓ ஆகம் ரு-வில் உ கெடும் | ஓராடை, ஓர் யாண்டு |
| 75. | ஒன்று முதல் ஒன்பது வரை | மா (நீட்டலளவை) | | மருண்டை – போல் புணரும் | இருமா, இரண்டுமா |
| 76. | ல, ன புள்ளி ஈறு | | வேற்றுமை செய்யுள் | உம்,கெழு-சாரியை (வேற்றுமை உருபின் பொருள்) | மாநிதிக் கிழவனும் போன்ம்-கிழவனைப் போலும். கல்கெழு நாடன்-மலைநாடன் |

## புள்ளி மயங்கியல் கருத்துக்களின் தொகுப்பு

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 1. | ஞ்<br>உரிஞ் | க ச த ப | அல்வழி<br>வேற்றுமை | உகரம் பெற்று<br>அவ்வல்லெழுத்தே<br>மிகும் | உரிஞுஉக் கடிது<br>உரிஞுஉக் கடுமை |
| 2. | உரிஞ் | ஞ ந ம வ | அல்வழி | உகரம் பெற்று<br>இயல்பாகும் | உரிஞுஉ ஞான்றது |
| | | | | | |
| 1. | ந்<br>ஈற்றுப்பெயர் | மேற்படி | அல்வழி<br>பொருந் | மேற்படி | பொருநுக் கடிது<br>பெருநு வலிது |
| 2. | ந<br>பொருந் | க ச த ப | வேற்றுமை | உகரம் கெட்டு<br>அகரம் வரும் | பொருநக்கடுமை<br>பொருநச் சாதி |
| 3. | வெரிந் | க ச த ப | வேற்றுமை | ந்-கெடும்<br>மெலி மிகும் | வெரிங்குறை<br>(முதுகு) |
| 4. | வெரிந் | க ச த ப | வேற்றுமை | ந்-கெட்டு வலி<br>மிகுதலுமுண்டு | வரிக்குறை |
| | | | | | |
| 1. | ண்<br>ண்-<br>ஈற்றுப்பெயர் | க ச த ப | வேற்றுமை | ண-ட் ஆகும் | மண்+குடம்=<br>மட்குடம் |
| 2. | ஆண், பெண்<br>விரவுப்பெயர்<br>அ.ீ.றிணை, | க ச த ப | வேற்றுமை | இயல்பு | ஆண்கை<br>பெண் கழுத்து |
| 3. | ஆண் (மரம்) | க ச த ப | வேற்றுமை | 'அரை' மரம் அம்<br>பெற்றது போல்<br>முடியும் | ஆணங்கோடு |
| 4. | விண் | வினைச்சொல் | செய்யுள் | அத்துச்சாரியை<br>பெறுதலும<br>் உண்டு<br>பெறாமையும<br>் உண்டு | விண்ணத்துப்<br>பறக்கும் விண்<br>தொட்டுப்பறக்கும் |
| 5. | மண் (ணுதல்)<br>(கழுவுதல்) | வன்கணம்<br>மென்கணம்<br>இடைக்கணம் | அல்வழி<br>வேற்றுமை | ஞகார ஈறு<br>போலாகும்<br>வன்கணம் வரின்<br>வல்லெழுத்தும்<br>மென்கணத்தும்<br>இடைக்கணம் | மண்ணுச்சிறிது<br>மண்ணுக்கொடுமை<br>மண்ணு நிகழ்ந்தது<br>மண்ணு வன்மை |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| | | | | வகரத்தும் உகரமும் பெறும் | |
| 6. | கிளைப்பெயர் உமண், பாண் | க ச த ப | வேற்றுமை | இயல்பு | உமண்குடி, பாண்சேரி பாண் கடன் |
| 7. | எண் (எள்) | க ச த ப | அல்வழி | ண-ட் ஆகும் | எட்சிறிது, எண்சிறிது எனலுமாம் |
| 8. | முரண் | | அல்வழி வேற்றுமை | அல்வழியில · இயல்பு வேற்றுமையில் ட் | முரண் கடிது முரட்கடுமை |
| | | | | | |
| 1. | ம் மரக ஈற்றுப் பெயர்ச் சொற்கள் | | வேற்றுமை | மகரம் கெடும் வந்த வல்லெழுத்து மிகும் | மரம்+பெட்டகம்= மரப்பட்டகம் மரம்+வேர்=மரவேர் |
| 2. | மகர ஈற்றுச் சொற்கள் | அ, ஆ முதலாக வரும் சொற்கள் | வேற்றுமை | மகரம் கெட, நின்ற அகரம் நீளுதலு முண்டு | முரம்+அடி+மரா வடி, மரவடி |
| 3. | மகர ஈற்றுச் சொற்கள் | | வேற்றுமை | மெல்லெழுத்துப் பெறுதலுமுண்டு | குளங்கரை குளக்கரை |
| 4. | இல்லம் (மரம்) | | வேற்றுமை | இயல்பாய் முடியும் மெலி மிகும் | இல்லங்கட்டை இல்லம் ப+ |
| 5. | மகர ஈறு | க ச த ப | அல்வழி அனைத்தும் | மெல்லெழுத்தாக மாறும் | மரம்+தழைத்தது= மரந்தழைத்தது |
| 6. | அகம் | ஐக | | ’அ’ மட்டும் நிற்கும். இனமெல்லெழுத்து மிகும். | அகம்+கை = அங்கை |
| 7. | இலம் | படு | செய்யுள் | மகர ஈறு கெடாது நிற்றலுமுண்டு | இலம்பாடு (இலம்பாடு-வறுமை) |
| 8. | ஆயிரம் | ஆயிரத்திற்க்கு கீழே உள்ளவை | | ’அத்து’ச் சாரியை வரும் | ஆயிரத்து நூறு, ஆயிரத்து ஐந்நூறு |
| 9. | ஆயிரம் + அடையுடன் | ஆயிரத்துக் கீழே உள்ளவை | | ’அத்து’ச் சாரியை வரும் | நான்காயிரத்து முந்நூறு |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 10. | ஆயிரம் | முகத்தலளவை நிறுத்தலளவை பெயர்கள் | | மகரம் கெட்டு,வலி மிக்கு முடியும் | ஆயிரக் கலம்,ஆயிரக்கழஞ்சு |
| 11. | எல்லாரும் (படர்க்கை) எல்லீரும் (முன்னிலை) தாம் (தம்) நாம் (நம்) | | | 'உம்' ஈறுகெட்டு, இடையும் ஈறும் சாரியை பெறும் நெடுமுதல் குறுவன குறுக மெல்லெழுத்து மிகும். யாம் (எம்) | எல்லாரும்+தலை எல்லார்தந்தலையும் எல்லீ நுஞ் செவியும் தாம்+கை=தங்கை நாம்+செவி =நஞ்செவி யாம் +தலை =எந்தலை |
| 12. | மேற்படி | | அல்வழி | இயல்பாகும் | எல்லாரும் சான்றோர் எல்லீரும் தருக |
| 13. | எல்லாம் விரவுப்பெயர் | | | வற்றுச் சாரியை உம்முச் சாரியை பெறும் | எல்லாவற்றுத் தலையும் |
| 14. | மேற்படி | க ச த ப | | அல்வழியில் சாரியை வராது இனமெல்லெழுத்து மிகும் | எல்லாத்தலையிலும் எல்லாஞ் சிறப்பவும் |
| 15. | நும் | | | எல்லாம் (உயர்திணை) நம்-சாரியை வரும் | எல்லாநந் தலையும் |
| 16. | நும் | | | மெல்லெழுத்து மிகும் | நுங்கை, நுந்தலை |
| 17. | நும் | | அல்வழி | உ-கெடும் ந்+ஈ =நீ+இ ம்-கெட ர் | நீர் (அதாவது நும் நீர் ஆகி – நீயிர் செய்தீர் என வரும். |
| 18. | வெம் (மு) தும் (மு) | | அல்வழி வேற்றுமை | ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் போல-வன்கணம் 'உ' வும் வலியும் பெறும். இயல்புகணம் | வெம்முக்கடிது வெம்முக் கடுமை தும்முச் செறுப்ப வெம்மு நன்று வெம்மு நீர்மை |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 7. | னகர ஈற்று இனப்பெயர் எயின் | க ச த ப | வேற்றுமை | ணகர ஈற்று இனப்பெயர் போல் இயல்பாகும் | ஏயின்குடி |
| 8. | மீன் | க ச த ப | வேற்றுமை | இயல்பும், திரியும் | மீன்கண், மீற்கண் |
| 9. | தேன் | க ச த ப | வேற்றுமை | உறழ்ச்சி வலி மிகும் போது ன் கெடும் | தேன்குடம், தேற்குடம், தேக்குடம் |
| 10. | தேன் | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிகுதலும் உண்டு | தேங்குடம் |
| 11. | தேன் | மெல்லின முதன் மொழி | | 'ன்' கெடுதலும் கெடாமையும் உறழ்ந்து வரும் | தேன்மொழி தேங்குடம் |
| 12. | தேன் | இறாஅல் | | இயல்பு | தேன்+இறால் =தேனிறால் |
| 13. | தேன் | இறால் | | இரட்டித்த தகர ஒற்று வரும். | தேத்திறால் |
| 14. | மின், பின், பன், கன் | | வேற்றுமை அல்வழி | வன்கணம்வரின் உகரமும் வலியும் மென்கணமும் இடைக்கணமும் வரின் உ பெறும் | மின்னுக்கொடிது பன்னு நன்று |
| 15. | கன் | | | அ-பெற்று, வலியவரின் மிக்கும் ஏனைய வரின் இயல்பாயும் முடியும் | கன்னக்குடம் கன்ன நிலை |
| 16. | சாத்தன் கொற்றன் | தந்தை | | அந்தை, நிலை மொழிப்பெயர் | சாத்த+அந்தை= சாத்தந்தை |
| 17. | ஆதன், ப+தன் | தந்தை | | நிலைமொழி இறுதி 'அன்'னும் வருமொழி முதல் 'அ'வும் கெடும் | ஆதன்+தந்தை ஆத்+அந்தை= ஆந்தையார். ப+தன்+தந்தை=ப+ந்தை |
| 18. | ஆதன், ப+தன்- அடைமொழி களுடன் வருதல் | தந்தை | | இயல்பாகும் | பெருஞ்சாத்தன் தந்தை |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 19. | உருத்திரன் | மக்கள் (மகன் பெயர்) | | உருத்திர்+அம்+ | உருத்திரங்கண்ணன் |
| 20. | தான், பேன், கோன் | தந்தை, மக்களின் இயற்பெயர் | | இயல்பு | தான் தந்தை, கோன் கந்தன் |
| 21. | தான் விரவுப்பெயர் யான் | உருபு புணர்ச்சி போலும் | | நெடுமுதல் குறுகும் யான் | தன்கை என்தோள் என் ஆகும் |
| 22. | தான், யான் | | அல்வழி | இயல்பு | தான் சிறியன், யான் பெரியன் |
| 23. | அழன் | | | 'ன்' -கெட, வரும் வலிமிகும் | அழன்+குடம் =அழக்குடம் |
| 24. | (இல்) முன் | | | முன்+ற்+இல் | முன்றில் (பழம் மரபு) பொன்-பொலம் |
| 25. | பொன் | | | ன்-கெட, லம்-தோன்றும் | பொலந்தொடி |
| | | | | | |
| 1. | ய (யகர ஈறு) நாய் | க ச த ப | வேற்றுமை | வல்லெழுத்து மிகும் | நாய்க்குட்டி |
| 2. | தாய் | க ச த ப | வேற்றுமை | இயல்பாகும் | தாய் கை |
| 3. | தாய் | க ச த ப | வேற்றுமை | வலி மிகும் | தாய்ப்பால், தாய்ப்பண்பு |
| 4. | வேற் யகர வீற்றுச்சொற்கள் | க ச த ப | வேற்றுமை | வலி மெலி உறழ்ச்சியாக வரும் | வேய்ங்குறை வேய்க்குறை |
| 5. | மேற்படி | க ச த ப | வேற்றுமை | இயல்பாகும் | நாய் குரைக்கும் பாய் பெரிது |
| | | | | | |
| 1. | ர ரகர ஈற்றுப் பெயர்கள் | க ச த ப | வேற்றுமை | ஒற்று மிகும் | தேர்க்கால் |
| 2. | ஆர், வெதிர், சார், பீர் (மரப்பெயர்கள்) | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிகும் | வெதிர்ங்கோடு பீர்ங்கிளை |
| 3. | சார் | காழ் | | வலி மிகும் | சார்க்காழ் |
| 4. | பீர் | க ச த ப | | மெலி மிகும் அம் பெறும் | பீரந்தோல் |
| | | | | | |
| 1. | ல லகர ஈற்றுப்பெயர்கள் | க ச த ப | வேற்றுமை | ல்-ற் ஆகும் | கல்+சிறை=கற்சிறை |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 2. | லகர ஈறு | மென்கணம் வரின் | வேற்றுமை | ல்-ன் ஆகும் | கல்+முனை =கன்முனை பல் +மணிமாலை =பன்மணிமாலை |
| 3. | லகர ஈறு | மென்கனம் வரின் | அல்வழி | உறழ்ந்து முடியும் | கல்குறிது, கற்குறிது |
| 4. | லகர ஈறு | த-முதன் | அல்வழி | று-அன்றி ஆய்தமாகவும் முடியும் | கல்+தீது=க/றீது , கற்றீது |
| 5. | லகர ஈறு நெட்டெழுத்திறுதி | க ச த ப | அல்வழி | திரிதலும் இயல்பும் | காற்குறிது, கால்குறிது |
| 6. | நெல், செல், கொல், சொல்- பெயர்கள் | க ச த ப | அல்வழி | ல்-ற ஆகத்திரியும் | நெற்குவிந்தது, கொற்கடிது |
| 7. | இல் (இன்மை) | வேற்றுமை | | வலி மிகுதலும், ஐ இடையில் வருதலும் இயல்பாகும் ஆ மிகுதலும் | இல்லைப்பொருள் இல்பொருள் இல்லார்க்கொடுமை |
| 8. | வல் (சூதாடு கருவி) | | அல்வழி வேற்றுமை | உ – பெற்று, வலிவரின் மிக்கு, ஞநமவ வரின் இயல்பாதல் | வல்லுக்கொடிது, வல்லுத்தீமை |
| 9. | வல் | நாய், பலகை | | உ-கெடும், அ வரும் உ கெடாதும் நிற்கும் | வல்ல நாய், வல்லுப்பலகை |
| 10. | ப+ல், வேல், ஆல் | | | அம்-சாரியை வரும் | ப+லங்காடு, வேலங்குடி |
| 11. | கல்(லு) | | அல்வழி வேற்றுமை | வலிவரின் உகரமும் வல்லெழுத்தும் மென்கணமும் இடைக்கணமும் வரின் உ பெறும் | கல்லுக்கடிது, கல்லுக்கடுமை கல்லு நீண்டது |
| 12. | வெயில் | வினைச்சொல் | | அத்து-சாரியை இன்-சாரியை | வெயிலத்துப் போனான் வெயிலிற் போனான் |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 1. | வ வகர ஈறு அவ் | க ச த ப | வேற்றுமை | வற்றுச் சாரியை பெறும் | அவற்றுக் கிளை |
| 2. | அவ | க ச த ப | | வ்-ஃ ஆகும | அவ்+கடிய =அஃகடிய |
| 3. | அவ் | மென்கணம் | | மெல்லெழுத்தாய் திரியும | அவ்+ஞான்று= அஞ்ஞான்று |
| 4. | அவ் | இடைக்கணம் | உயிர்க் கணம் | இயல்பு | அவ்யாழ், இவ்வுயிர் |
| 5. | தெவ | வன்கணம் மென்கணம் | | உ-மட்டும் பெறும், உ-வுடன் வல்லொற்று பெறும், இயல்பு | தெவ்வுக்கடிது, தெவ்வு மீட்சி |
| | | | | | |
| 1. | ழ ழகர ஈறு | க ச த ப | வேற்றுமை | வல்லெழுத்து மிகும் | பு+ழ்க்கால் |
| 2. | தாழ் | கோல் | | வலி மிகும். அக்கும் பெறும | தாழ்க்கோல், தாழக்கோல் |
| 3. | தாழ் | | | வல்லொற்று மிகுதலேயன்றி அக்குச் சாரியை பெறும் | தமிழ்க்கூத்து தமிழக்கூத்து |
| 4. | குமிழ் (மரம்) | க ச த ப | | மெல்லெழுத்தும் அம்முச் சாரியையும் பெறும் | குமிழம் பழம் |
| 5. | பாழ் | க ச த ப | | வலி, மெலி உறழ்ந்து முடியும | பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு |
| 6. | ஏழ் | க ச த ப | | அன்-சாரியை பெறும | ஏழன்கணக்கு |
| 7. | ஏழ் (எழு) | முகத்தல் அளவை நிறுத்தல் அளவை எண்ணுப் பெயர் | | நெடில் குறுகும்- ழ்+உ சேரும் | எழு கலம் எழுகழஞ்சு எழுபடங்கள் |
| 8. | ஏழ் (எழு) | பத்து | | பத்து-இடை ஒற்றுக்கெடும் அங்கு ஆய்தம் வரும் | எழுபஃது |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 9. | ஏழ் (எழு) | ஆயிரம் | | உ-கெடும் | ஏழாயிரம |
| 10. | ஏழ் (எழு) | நூறாயிரம் | | நெடில் குறுகாது | ஏழ்நூறாயிரம் |
| 11. | ஏழ் | தாமரை, வெள்ளம், ஆம்பல் | | இயல்பாகும் | ஏழ் தாமரை, ஏழ் வெள்ளம் ஏழ் ஆம்பல் |
| 12. | ஏழ் | உயிர்க்கணம் | | இயல்பாகும் | ஏழகல், ஏழிரண்டு |
| 13. | கீழ் | க ச த ப | | உறழ்ச்சியாகும் | கீழ்குளம், கீழ்க்குளம் |
| | | | | | |
| 1. | ள ளகர ஈறு முள் | க ச த ப | வேற்றுமை | ள்-ட் ஆகும் | முட்செடி |
| 2. | ள் முள் | மெல்லினம் | வேற்றுமை | ள்-ண் ஆகும் | முள்+முனை= முண்முனை |
| 3. | ள் | க ச த ப | அல்வழி எல்லாம் | உறழ்ச்சியாகும | முள் கடிது, முட்கடிது, கள்கொடிது, கட்கொடிது |
| 4. | முள் | தகரமுதன் மொழி | அல்வழி | ட்ஆகாது, ஆய்தமாயும் வரும் | மு.·.டீது, முட்டீது |
| 5. | வாள் நாள் | | அல்வழி | இயல்பாகும் திரிபடையும் | வாள் கூரிது நாட் கடிது |
| 6. | துள் | வன்கணம் மென்கணம் | வேற்றுமை அல்வழி பெறும் | வலியும் உகரமும் பெறும் உகரம் | துள்ளுக்கடிது துள்ளு நன்மை |
| 7. | இருள் | வினைச்சொல் | அல்வழி | அத்தும் இன்னும் சாரியையாக வரும் இருளிற் போனான் | இருளத்துச் சென்றான் |
| 8. | புள், வள் | வன்கணம் மென்கணம் | அல்வழி | வலிவரின் உகரமும் வலியுவரும் இயல்புமாய் | புள்ளுக்கடிது வள்ளு நீண்டது |
| 9. | மக்கள் | மக்கள் | | வல்லொற்றாகும் ள்-ட் | மக்கட்பேறு மக்கள் மக்கள் பவர் |

## ஐ-உயிர் மயங்கியல் கருத்துக்களின் தொகுப்பு

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| 1. | அ (ஈற்றெழுத்து) | க ச த ப (வருமொழி முதலெழுத்து) | அல்வழி | கசதப ஒற்று மிகும் | விளக்குறிது, தவச்சிறிது தடஞ்செவி என்று மென்மையும் மிகும். |
| 2. | வினையெச்சச் சொல் உவமச்சொல் போல என அ (சுட்டு) ஆங்க | மேற்படி | அல்வழ | மேற்படி | படிக்கச் சென்றான் கடுகு போலச் சிறிது நன்றெனச் சொன்னான். அத்தசையில் எழுந்தாங்க |
| 3. | அ (சுட்டு) | ஞ ந ம | | அவ்வவற்றுக்கு பொருந்திய ஒற்று மிகும். | அஞ்ஞான்று அந்நிலத்தின்கண் அம்மாட்டைப் பிடி |
| 4. | அ (சுட்டு) | ய வ | | வகர ஒற்று மிகும் | அவ் யாழ், அவ் வீடு |
| 5. | அ (சுட்டு) | | | வகர ஒற்று மிகும் | அ+அணி=அவ்வணி அ+உடை=அவ்வுடை |
| 6. | அ (சுட்டு) | வன்கணம் | செய்யுளுள் மட்டும் | ஆ-என நீளும | ஆயிடை, ஆவயின் |
| 7. | சாவ | | | வகெடுதலுமுண்டு | சாக்குத்தினான், சாவக்குத்தினான் |
| 8. | அன்ன (உவமம்) அண்மை விளி 'செய்ம்மன' விளங்கோள் 'செய்த' 'செய்யிய' 'அம்ம' பல | க ச த ப | | இயல்பாகப் புணரும | குயிலன்ன குரல், அன்ப கேள், உண்மன கூழ் விரைக தேர் கொள்தின்ற குதிரை எண்ணிய செய்தான் அம்ம கேளிதை பல குரலிசை பல சொல் பேசுக. |
| 9. | வாழிய | | | கெடுதலும் இயல்பும | வாழி, வாழிய |
| 10. | அம்ம | | | 'ஆ'காரமாக நீளும் | அம்மா கேள் அம்ம கேள |
| 11. | பல | | செய்யுளுள் ஓசை கருதி | நீளலுமுண்டு | பலாஅம், சிலாஅம |
| 12. | பல, சில | பல, சில | | ல், ற் ஆகலுமுண்டு | பலபல, பற்பல சிலசில, சிற்சில |
| 13. | பல, சில | பல சில | | உறழ்ச்சி (இருவிதமும்) | பலபல, பலப்பல சிலசில, சிலச்சில |
| 14. | அ (ஈறு) | க ச த ப | வேற்றுமை | கசதபஒற்றுமிகும | விளக்குறை, விளமரம |
| 15. | விள | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிகும் | விளங்கோடு |
| 16. | மக | க ச த ப | வேற்றுமை | 'இன்' சாரியை வரும் | மகவின்கை |
| 17. | மக | க ச த ப | வேற்றுமை | 'அத்து'ம் வரும் | மக+அத்து+கை= மகத்துக்கை |
| 18. | பல | க ச த ப | வேற்றுமை | இடையே | பலவற்றுக்கிளை |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| | | | | வற்றுப்பெறும் | |
| 1. | ஆ (ஈறு) | க ச த ப | அல்வழி | க ச த ப வல்லொற்று மிகும் (அகர ஈற்றைப் போலப் புணரும்) | ஆலாப் பறந்தான், சுறாக்கடிது. |
| 2. | 'செய்யா' | க ச த ப | அல்வழ | க ச த ப வல்லொற்று மிகும் (அகர ஈற்றைப் போலப் புணரும்) | வாழாக் கிடந்தான், தவறாச் செய்தான |
| 3. | இரா+பகல் | உம்மைத்தொகை க | அல்வழி | இராவுடன் ஓர் 'அ' மிகும் | இராஅப் பகல |
| 4. | ஆ மா முருகா யா வாரா மியா உண்கா | க ச த ப | அல்வழி | இயல்பாகப் புணரும | ஆ கரிது, மா கொடிது முருகா பார், யா பெரிய, உண்கா தோழனே |
| 5. | 'ஆ'ஈற்றுப்பெயர்கள் | க ச த ப | வேற்றுமை | வல்லெழுத்து மிக்கு முடியும | புறாச்சிறகு, பலாப்பழம் |
| 6. | பலா, கா | | | இடையே அ தோன்றும் | பலாஅக் கிளை, காஅக் கூட்டம் |
| 7. | இரா | க ச த ப | வேற்றுமை | அகரம் - சேராது | இராக்கொண்டான |
| 8. | நிலா | க ச த ப | வேற்றுமை | அத்துச்சாரியை வரும் | நிலாத்துக் கொண்டான் |
| 9. | யா, பிடா, தளா (மரங்கள்) | க ச த ப | வேற்றுமை | மெல்லெழுத்து மிக்கு முடியும் | யாஅங்கிளை, பிடாஅந்தழை, தளாஅம்பு+ |
| 10. | யா, பிடா, தளா (மரங்கள்) | | | வல்லெழுத்தும் மிகலாம் | யாஅக்கிளை |
| 11. | மா(மரம்), ஆ, மா (விலங்கு) | க ச த ப | வேற்றுமை | ஆ, மா இரண்டும் அகரமின்றி, ன் பெறும | மாஅங்கினை, மாஅம்பு+, இது மாங்கிளை, மாம்பு+ என்றும் வரும். ஆன் கொம்பு, மான்கால். |
| 12. | ஆன் என்பதிலுள்ள ன் | க ச த ப | வேற்றுமை | அகரம் பெறுதலுமுண்டு | ஆன நெய் |
| 13. | ஆன் | பீ | வேற்றுமை | தன்ஒற்று மிகுந்து ஈ-ஐ ஆதலுமுண்டு | ஆப்பி |
| 14. | இரா, பலா, இறா, தடா, புறா | க ச த ப | வேற்றுமை | ஒரு மாத்திரை குறைந்தும் உகரம் பெற்றும் வரும் | இர, இரவு, பல, பலவு, இற, இறவு, தட, தடவு, புற, புறவு |
| | | | | | |
| 1. | இ இகர ஈற்றுப் | க ச த ப | வேற்றுமை | தமக்குப் பொருந்திய | கிளிக்கால், கிளிச்சிறகு, |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| | பெயர்கள் கிளி, குருவி, எலி | | | வல்லெழுத்து மிகும் | குருவித்தலை, எலிப்பொறி |
| | | | | | |
| 1. | இ இகர ஈற்றுப் பெயர்கள் கிளி, குருவி, எலி | க ச த ப | வேற்றுமை | தமக்குப் பொருந்திய வல்லெழுத்து மிகும | கிளிக்கால், கிளிச்சிறகு, குருவித்தலை, எலிப்பொறி |
| 2. | இனி (காலம்), அணி (இடம்) | க ச த ப | வேற்றுமை | மேற்படி | இனிப்பேசுக, அணிச்சென்றான், ஓடிப்போனான், |
| 3. | இன்றி வினையெச்சம | | செய்யுளுள் வரும் | 'இன்றி'யிலுள் இ - உகரமாதலுண்டு. | உப்பின்றி உண்க, உப்பின்று உண்க. நாளன்றி போகி – நாளன்று போகி. |
| 4. | இ (சுட்டு) | | | 'அ'-சுட்டுக்குக் கூறிய, அனைத்தும் இதற்கு வரும | மெல்லெழுத்து வரின் மிகும் -இஞ்ஞான்று இந்நிலம். 'இடை'யும் உயிரும் வரின் வ் மிகும். இவ்யாழ் ஈவயின் செய்யுளுள் ஈவயின். |
| 5. | தூணி | பதக்கு | வேற்றுமை | வல்லொற்று மிகும். | தூணிப்பதக்கு |
| 6. | நாழி | உரி | | நாழியில் 'ழி' கெடும் ட் ஒற்று வரும் + உரி சேரும | நாடுரி |
| 7. | பனி | க ச த ப | | அத்து இன் - சாரியை | பனியிற் கிடந்தான் |
| 8. | வளி | க ச த ப | | மேற்படி | வளியிற் பறந்தது, வளியத்துச் சென்றான் |
| 9. | உதி | க ச த ப | | இன மெல்லெழுத்து வரும் | உதிங்கோடு, உதிந்தோல், உதிஞ்செதின், உதிம்பட்டை |
| 10. | புளி (மரம்) | க ச த ப | | அம் - சாரியை வரும் | புளியங்காய் புளியம்பழம் |
| 11. | புளி (சுவை) | க ச த ப | | மெல்லெழுத்து மிகும் | புளியங்கூழ், புளியம்பட்டை |
| 12. | புளி (சுவை) | க ச த ப | | வல்லெழுத்து மிகலாம் | புளிக்கூழ், புளிச்சோறு |
| 13. | பரணி (நாள்) | வினைச்சொல் | | ஆன் - சாரியை வரும் | பரணியாற் கொண்டான் (திருமணம்) |
| 14. | ஆடி (திங்கள்) | வினைச்சொல் | | இக்கு – சாரியை வரும | ஆடிக்குப் போகலாம் |
| | | | | | |
| 1. | ஈ (ஈற்றெழுத்து) | க த ச ப | அல்வழி | அகர இயல்பிற்கு ஆ | ஈப் பறந்தது,ஈச்சிறிது |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| | | | | ஆகார இயல்பிற்று ஈ | |
| 2. | நீ, பீ, மீ (மேலே) | க த ச ப | அல்வழி | இயல்பாய் முடியும் | நீ பார், பீ கிடந்தது, மீ கண் |
| 3. | மீ (இடம்) | க த ச ப | | வல்லெழுத்து மிகும் | மீப்பல், மீக்கூடு, மீப்படுக்கை |
| 4. | ஈகார ஈறு | க த ச ப | வேற்றுமை | ஆகார ஈற்று அல்வழி போல் வல்லொற்று மிகும் | ஈக்கால்,ஈச்சிறகு, தீக்கொடுமை |
| 5. | ந | | வேற்றுமை | நெடுமுதல் குறுகி (நீ) ன் வரும் | நின் கை, நின் தான் |
| | | | | | |
| 1. | உ (உகர ஈறு) | க த ச ப | அல்வழி | அகர ஒற்றுக்குக் கூறியபடி ஒற்று மிக்கு முடியும் | பாட்டுச் சிறந்தது பட்டுப் பெரிது |
| 2. | உ (சுட்டு) | க த ச ப | அல்வழி | அகர ஈற்றுச் சுட்டிற்றுக் கூறியபடி வரும் | உக்கருவி, உப்படுக்கை |
| 3. | உ (சுட்டு) | பிற உயிர், மென், இடைக்கணங்கள் | | மேற்படி | உவ்வுடல், உஞ்ஞான்று |
| 4. | அது, இது | | அல்வழி | வல்லெழுதது மிகாது இயல்பாகும் | அது சிறிது இது பெரிது |
| 5. | அது | அன்று, ஐ | | அன்று, ஆன்று ஆகும் ஐ-வரின் உ கெடும் | அது+அன்று =அதான்று அது+ஐ=அதை |
| 6. | ‘உ’ஈற்றுப்பெயர் | | வேற்றுமை | அகர ஈற்று அல்வழி போல் வல்லெழுத்து மிகும். | பட்டுப்புழு, கட்டுச்சோறு |
| 7. | எரு, செரு | | அல்வழி | அம்-சேரும் ‘செரு’ வில் அம் என்பதன் ம் கெடும். வேற்றுமைப் புணர்ச்சி போலாது வேறுபடுதலுண்டு ஒற்று மிகும். | எருவங்குழி, எருக்குழி, செருக்களம் என்பதே பொதுவிதி. |
| 8. | உகர ஈற்றுமொழி | க த ச ப | செய்யுள் வழக்கு | ழு-ழூ ஆக நீளும் உகரம் வந்து சேரும் | பழூஉப்பல், எழூஉக்கதவு |
| 9. | ஒடு மரம் | | | உதி-மரச்சொல் போல் மெல்லெழுத்து மிகும் | ஒடுங்கிளை, ஒடும்பு+ |
| 10. | அது, இது | | | உரு | அது+அதன்+கிளை |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| | | | | புணர்ச்சியில் சொன்னபடி, அன் பெறும். உ-கெடும். ஒற்று மிகாது. | =அதன்கிளை |
| | | | | | |
| 1. | ஊ (ஊ கார ஈறு) | க ச த ப | அல்வழி | ஆகார ஈற்று – அல்வழி போல், ஒற்று மிகும். | கொண்மூப் பெரிது (மேகம்) |
| 2. | ஊ-ஈறு வினை எச்சச்சொல் முன்னிலை வினை | க ச த ப | | வல்லெழுத்து மிக்கு முடியும | நினையு+ச் செய்தான் தூக்கொற்றா (தூ-தூவுக) |
| 3. | மேற்படி | க ச த ப | வேற்றுமை | ஆகார ஈற்று அல்வழி போல் ஒற்று மிகும | கொண்மூக்கூட்டம் |
| 4. | உடு | | | இறுதியில் ‘உ’ தோன்றும் | உடூஉக்குறை, தூஉக்குறை (உடு-வான்மீன், தூ-வலிமை) |
| 5. | பு+ | | | உகரம் சேராது, சிறுபான்மை | பு+க்கொடி, பு+ங்கொடி |
| | | | | வலி மிகும். பெரும்பான்மை மெல்லெழுத்து மிகும். | |
| 6. | ஊ (தசை) | | | ‘ஆ’-எனும் பெயர் போல ‘ன்’ பெறும் | ஊன் குறை ஊன் புரை |
| 7. | ஊ | | | ன் -உடன் அக்குச் சாரியையும் பெறுதலுண்டு | ஊனக்குறை |
| 8. | ஆடூஉ, மகடூஉ | | | வல்லெழுத்து மிகுதலேயன்றி ‘இன்’ சாரியையும் வரும் | ஆடூஉவின்கை |
| | | | | | |
| 1. | எ, ஒ எகர ஒகரம் முன்னிலை வினை | க ச த ப | | பெயர்க்கீறு ஆகா. முன்னிலை மொழிகளில் வல்லொற்று மிகும். | ஏஎக்குயிலி! ஓஒக்குமரனே! |
| 2. | எ, ஒ (தேற்றம், சிறப்புப் பொருளில்) | க ச த ப | | வல்லொற்று மிகாது இயல்பாகும | அவனோ செய்தவன் அவனோ ஒ கொடையாளி! |
| 1. | ஏ (ஏகார இறுதி பெயர்கள்) | க ச த ப | அல்வழ | ஊகார ஈற்றுக்குக் கூறியபடி வரும் வல்லொற்று | சேக்கடிது (சே-வருது) பேக்கொடிது (பேய்) |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| | | | | மிகும் | |
| 2. | ஏ இடைச்சொல் எதிர்மறை, எச்சம், வினா, எண்ணுப்பெயா | க ச த ப | அல்வழி | இயல்பாகும் | யானே குடித்தேன்? (எதிர்மறை) நீயே கொடுத்தாய்? பண்ணே பண்திறனே. |
| 3. | ஏ-ஈறு | க ச த ப | வேற்றுமை | அல்வழி போல் வரும் | வேக்குடம் (வேதலையுடைய குடம்) |
| 4. | ஏ-இறுதி | | | அடுத்து 'எ' வரும் | ஏஎ, ஏஎப் புழை (ஏ-அம்பு) |
| 5. | சே (மரம்) | | | ஒடு-மர விதியைப் பெறும், மெல்லெழுத்து மிகும். | செங்கோட, சேம்பு+ |
| 6. | சே (பசு) | | | இன் - சாரியை பெறும் | சேவின் கொம்பு |
| 1. | ஐ ஐகார ஈறு | க ச த ப | வேற்றுமை | வல்லொற்று மிகும் | பானைச்சோறு யானைக்கொம்பு |
| 2. | அவை | | | உரு புணர்ச்சியில் கூறியபடி வரும் ஐ-கெட்டும் கெடாதும் வற்று சாரியைப் பெறும். | அவற்றுச்செவி, அவையற்றுச் செவி |
| 3. | விசை, ஞெமை, நமை (மரம்) | | | சே-மர – புணர்ச்சி போல மெல்லெழுத்து மிகும் | விசைங்கிளை, ஞெமைந்தோல், நமைஞ்செதின |
| 4. | பனை, அரை, ஆவிரை | | | அம்-சாரியை பெறும் பனை, ஆவிரையில் மெய் நிற்க ஐ கெடும | அரையங்காய், பனம்பு+, ஆவிரம்பு+ |
| 5. | பனை | அட்டு | | ஐ-கெடும், ஆசேரும் | பனாட்டு |
| 6. | பனை | கொடி | | ஐ-நிற்க வல்லொற்று | பனைக்கொடி |
| | | | | மிகும் | |
| 7. | சித்திரை,ஆதி ரை | வினைச்சொல | | முன்பு ஆடிமாதம் பரணி நாளுக்குக் கூறியது போல முறையே இக்கும் ஆனும் பெறும் | சித்திரைக்குச் செய்து கொண்டான் ஆதிரையாற் கொண்டாடினான |
| 8. | மழை | வினைச்சொல் | | வளிசொல் | மழையத்துப் |

| வ.எ. | நிலைமொழி ஈறு | வருமொழி முதல் | வேற்றுமை/ அல்வழி | புணர்ச்சி விதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|
| | | | | லுக்குரிய படி வரும | போனான் மழையிற் கிடந்தான |
| 9. | வேட்கை | அவா | செய்யுளில் | அத்தும் இன்னும் பெறும | வேட்கை+அவா வேட்+அவா, வேண்+அவா= வேணவா |
| | | | | | |
| 1. | ஒ ஒகார இறுதி | க ச த ப | அல்வழி | ‘ஏ’கார ஈற்றுப் பெயர்கள் போல் வல்லொற்று மிகும். | ஓச்சிறிது (மதகு நீர்ப்பலகை) |
| 2. | எதிர்மறை ‘ஓ’ வினா ‘ஓ’ ஐய ‘ஓ’ | க ச த ப | | இயல்பாகும் | யானோ திருடினேன்-எதிர்மறை நீயோ திருடியவன்-வினா நன்றோ? தீதோ? – ஐயம் |
| 3. | ஒழியிசை ஒ | க ச த ப | | இயல்பாகும | படிக்கவோ போனான |
| 4. | ஓ (பெயர்) | | வேற்றுமை | வல்லொற்று மிகும் ஒ சேரும் | ஓஒப் பெருமை |
| 5. | கோ | இல் | | ஒ-தோன்றாது | கோயில், கோவில |
| 6. | சில ‘ஓ’ஈற்றுச்சொற்கள் | | | உருபு புணர்ச்சிபோல் வரும். ஒன்-சாரியை பெற்று இயல்பாய் வரும் | கோஒன் கை |
| | | | | | |
| 1. | ஔ | க ச த ப | அல்வழி வேற்றுமை | வல்லெழுத்து மிகும் இறுதியில் ‘உ’ வருதல் சிறப்பு | கௌவுக் கடிது கௌவுக் கடுமை |

# வினா வங்கி

## பத்திவினாக்கள்

1. உகரம் குறுமிடங்கள் யாவை?
2. குற்றியலுகரம் புணர்மொழியுள் எவ்வாறு வரும்?
3. குற்றியலிகரம் புணர்மொழியுள் எவ்வாறு வரும்?
4. மரப்பெயர், திசைப்பெயர் புணர்ச்சிகளைச் சுட்டுக.
5. மூன்று என்னும் எண்ணுப்பெயர் எவ்வெவ்வாறு புணரும்? ஐந்து என்னும் எண்ணுப்பெயர் எவ்வெவ்வாறு புணரும்?
6. தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய சொற்களின் புணர்ச்சிகளை விளக்குக.
7. வருமொழியில் ஆயிரம் வந்தால் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள நிலைமொழிகளோடு எவ்வெவ்வாறு புணரும்?
8. 'அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் எல்லா இறுதியும் உகரம் நிலையும்' - விளக்குக.
9. நூறு என்ற எண்ணுப்பெயர், ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு எவ்வெவ்வாறூ புணரும்?
10. நூறு என்ற எண்ணுப்பெயரோடு அளவு, நிறைப்பெயர்கள் எவ்வாறு புணரும்?
11. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு பொருட்பெயர்கள் புணரும்வழி நிகழும் மாற்றங்களை வரையறுக்க.
12. ஒருபஃது முதலானவற்றோடு அளவு, நிறைப்பெயர்களின் புணர்ச்சி இயல்புகளை எழுதுக.
13. ல, ன என்னும் மெய்யீறுகளின் செய்யுள் முடிபு யாது?
14. இரண்டு முதலான எண்களோடு அளவு மா என்ற சொல் பெறும் புணர்ச்சி நிலை என்ன?
15. புள்ளிமயங்கியல் பெயர்க்காரணம் விளக்குக.
16. 'தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல' - விளக்குக.
17. ஈம், கம், உரும் என்னும் பெயர்கள் புணருமாற்றை விளக்குக.
18. தோல்காப்பிய காலத்திய அளவு, நிறைப்பெயர்களின் புணர்சிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
19. ஆந்தை, ப+ந்தை என்னும் சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
20. 'ய' கர ஈற்றுப் புணர்ச்சி குறித்து எழுதுக.
21. 'ர' கர ஈற்றுப் புணர்ச்சி குறித்து எழுதுக.
22. எல்லாரும், எல்லீரும், தாம், நாம்ய, யாம், நும் ஆகிய மகரவீற்றுப் பெயர்களுக்கு கூறப்பட்ட புணர்ச்சி விதிகளைக் கூறுக.
23. முகரவீற்று நாட்பெயர்கள் எவ்வாறு புணரும்?
24. குயின், எகின், வயின், மின், தேன் ஆகியவற்றிற்குரிய புணர்ச்சி விதிகள் யாவை?

25. உயிர்மயங்கியல் பெயர்க்காரணம் கூறுக.
26. 'நீட வருதல் செய்யுளுள்ள உரித்தே'' - விளக்குக.
27. இயல்பாக முடியும் அகர ஈற்றுச் சொற்கள் - விளக்குக.
28. தொல்காப்பியர் காலத்திய அளவு, காலப்பெயர்களின் புணர்ச்சிகளைச் சுட்டுக.
29. பனங்காய், பனாஅட்டு, பனைக்கொடி என்பனவற்றைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.
30. 'ஒகார இறுதி ஏகார இயற்றே'' விளக்குக.
31. உருபியல் பெயர்க்காரணம் தருக.
32. உருபு புணர்ச்சியில் பயன்படும் சாரியை யாவை?
33. சாரியைகளை வகுப்பதில் தொல்காப்பியர் கருத்து யாது?
34. உருபியலின் புறநடைச் செய்திகளை விவரிக்க.
35. தொகைமரபு-பெயர்க்காரணம் கூறுக.
36. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியின் தனித்தன்மைகள் யாவை?
37. இகர ஐகார ஈறுகள் அல்வழியில் எவ்வாறு முடியும்?
38. மூன்றாம் வேற்றுமைத் திரிபினைப் புலப்படுத்துக.
39. மரூஉச்சொல் குறித்து எழுதுக.
40. விரவுப்பெயர் எவ்வாறு முடியும்?
41. தொகைமரபில் நிலைமொழிக்கருவி, நிலைமொழிச் செய்கைகளாகக் கூறப்படுவனவற்றை எழுதுக.
42. எழுத்துப்பிறப்பின் பொது இலக்கணம் யாது?
43. நுனிநா அண்ணம் ஒற்றப் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?
44. உயிரெழுத்துக்கள் பிறக்குமாற்றை விளக்குக.
45. சார்பெழுத்துக்கள் எவ்வாறு பிறக்கும்?
46. எழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடையாக தொல்காப்பியர் உரைப்பன யாவை?
47. 'தத்தம் திரிபே சிறிய என்ப''– விளக்குக.
48. 'அவ் ஆறு எழுத்தும் மூவகைப் பிறப்பின''– விளக்குக.
49. புணரியல் பெயர்க்காரணம் கூறுக.
50. 'குற்றியலுகரமும் அற்று என மொழிப''– விளக்குக.
51. 'உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்றே''– விளக்குக.
52. இருமொழிப்புணர்ச்சி, எழுத்து வகையால் நான்காதல் எவ்வாறு? (அ) 'ஆயீா இயல –புணர்நிலைச் சுட்டே''– விளக்குக. (அ) புணர்ச்சியில் நிலைமொழி வருமொழிகள் எவ்வாறு வரும்?
53. புணர்ச்சியின் மூவகைத் திரிபுகள் யாவை?
54. 'எழுத்துச்சாரியை'' விளக்கம் தருக.
55. சாரியையின் இயல்பு குறித்து விளக்குக.
56. எழுத்துப்புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி – விளக்குக.
57. 'அடையொடு தோன்றினும், புணர்நிலைக்கு உரிய''– விளக்குக.
58. மொழிபுணர் இயல்பு எத்தனை வகைப்படும்? விளக்குக.
59. 'ஒல்வழி ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்''– விளக்குக.
60. உயிரெழுத்தின் புணர்ச்சி இயல்புகளைக் கூறுக.
61. புணர்ச்சியில் பொருள் வேறுபடும் இடத்தை ஆராய்க. (அ) 'எழுத்தோரன்ன

பொருள் தெரிபுணர்ச்சி'' என்றால் என்ன?

62. மொழிமரபு பெயர்க்காரணம் கூறுக.
63. குற்றியலுகரத்தின் வகைப்பாடு குறித்து எழுதுக.
64. குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும் யாவை?
65. ஆய்தம் மொழியில் பெறும் இடம் குறித்து எழுதுக.
66. மொழி எத்தனை வகைப்படும்? விளக்குக.
67. சார்பெழுத்தின் நிலைகளாகத் தொல்காப்பியர் மொழிமரபில் கூறுவன யாவை?
68. அளபெடையாமாற்றை விளக்குக. (அ) 'நீட்டம் வேண்டும் எழுத்துக்களின் வரிவடிவ நிலை யாது?
69. ஈரொற்றுடனிலையாக வருவன யாவை?
70. 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' இந்நூற்பாவின் பொருளை விளக்குக.
71. போலி எழுத்துக்களாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
72. நூன்மரபின் பெயர்க்காரணம் குறித்து ஆராய்க.
73. எழுத்துக்களின் வகைகளாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
74. எழுத்துக்களின் கால அளவு, மாத்திரை குறித்து எழுதுக.
75. சுட்டெழுத்து, வினாவெழுத்து விளக்குக.
76. சார்ந்துவரல் மரபின் மூன்றாவன யாவை?
77. 'முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன'' என்பதில் எழுத்தோரன்ன என்று கூறியதேன்?
78. எழுத்துக்களின் பிற மரபுகளாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

**கட்டுரை வினா**

1. மொழிமுதல் எழுத்துக்கள் பற்றித் தொல்காப்பயிர் கருத்துக்களைக் கூறுக.
2. மொழி இறுதி எழுத்துக்கள் பற்றித் தொல்காப்பியர் உரைப்பன யாவை?
3. எழுத்துக்களின் இயக்கம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுக்க.
4. புணர்ச்சியின் இயல்பு குறித்துத் தொல்காப்பியர் கூறியனவற்றைத் தொகுக்க.
5. வேற்றுமைப் புணர்ச்சியில் சாரியைகள் பற்றி தொல்காப்பியர் கருத்துக்களை கூறுக.
6. உருபு புணர்ச்சி குறித்து புணரியலில் கூறியவற்றைத் தொகுக்க.
7. சாரியைகள் மொழியில் இடம்பெறும் பாங்கினைப் புலப்படுத்துக.
8. மெய்யெழுத்துக்களின் பிறப்புப் பற்றி விவரிக்க.
9. ஒலி உறுப்புகளை விளக்கி, உயிரெழுத்துக்களுக்கும், மெய்யெழுத்துக்களுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்துக.
10. புணர்ச்சியின் இயல்பு குறித்துத் தொல்காப்பியர் கூறியனவற்றைத் தொகுக்க.
11. வேற்றுமைப் புணர்ச்சியில் சாரியைகள் பற்றி தொல்காப்பியர் கருத்துக்களை கூறுக.
12. உருபு புணர்ச்சி குறித்து புணரியலில் கூறியவற்றைத் தொகுக்க.
13. சாரியைகள் மொழியில் இடம்பெறும் பாங்கினைப் புலப்படுத்துக.
14. முன்னிலை வினைச்சொற்குரிய சிறப்புப் புணர்ச்சி விதிகளைக் கூறுக.
15. அளவைப் பெயர்கள் தம்முன் தாம் புணர்தல் - விளக்குக.

16. உயிரீறு மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சியை விவரி.
17. உயர்திணைப் பெயர்கள் நாற்கணத்திலும் எவ்வாறு புணரும்?
18. புணர்ச்சியில் ஐகார வேற்றுமை திரியும் இடங்களைக் கூறுக. (அ) ‘ஐகார வேற்றுமை திரிபென மொழிப’’– விளக்குக.
19. உருபு புணர்ச்சிக்காகத் தொல்காப்பியர் புணரியல், உருபியல் என இரு இயல்கள் அமைத்தன் நோக்கம் என்ன? விளக்குக.
20. உயிரீற்றுச் சொற்கள் உருபுகளோடு புணரும்போது பெறும் சாரியைகள் குறித்து எழுதுக.
21. மெய்யீறுகள் உருபகளோடு புணரும்போது பெறும் சாரியைகள் குறித்து எழுதுக.
22. மகரவீற்றுச் சொற்கள் உருபகளோடு புணரும் போது பெறும் சாரியைகளைக் கூறி விளக்குக.
23. முற்றுகர குற்றுகர ஈறுகள் உருபுகளோடு புணரும்போது பெறும் சாரியைகள் குறித்து எழுதுக.
24. ஐகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி பற்றித் தொல்காப்பியர் கருத்துக்களை விவரிக்க.
25. அல்வழியில் அகர ஈற்றுப்பெயர்ப் புணர்ச்சி – விளக்குக.
26. பல சில ஆகியவற்றுக்கு உரிய சிறப்புப் புணர்ச்சி விதிகள் யாவை?
27. அகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுத்து எழுதுக.
28. ஆகார ஈற்றுச் சொற்கள் அல்வழியில் புணருமாற்றைத் தொகுக்க.
29. ஆகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுக்க.
30. இகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுக்க.
31. ஈகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
32. உகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் புணருமாற்றைத் தொகுக்க.
33. உகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணருமாற்றைத் தொகுக்க.
34. ஊகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
35. ஏகாரவீற்றுச் சொற்களுக்குக் கூறப்பட்ட புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
36. ஐகார வீற்றுச் சொற்களுக்குக் கூறப்பட்ட புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
37. ஒகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
38. ஔகார வீறு அல்வழியிலும் வேற்றுமையிலும் எவ்வாறு முடியும்?
39. ‘ண’’கர ‘ன’’கர அல்லது ‘ல’’கர ‘ள’’கர ஈற்றுப் புணர்ச்சி குறித்து விளக்குக.
40. தேன் என்னும் சொல் புணரும் விதத்தை விளக்குக.
41. தொல்காப்பியர் புள்ளியீற்றுச் சொற்களின் புணர்ச்சிகளை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?
42. மகரவீற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணருமாற்றை விளக்குக.
43. மகரவீற்றுப் பெயர்கள் அல்வழியில் புணரும்போது உண்டாகும் மாற்றங்களைத் தொகுக்க.
44. மகரவீற்று உயர்திணை, விரவுப்பெயர்களுக்கும், தொழிற்பெயர்களுக்கும் கூறப்பட்ட சிறப்புப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
45. யகரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
46. லகாரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
47. வகரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
48. எண்ணுப்பெயர்கள் புணருமாற்றைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.

49. குற்றுகர ஈற்றுச் சொற்களுக்கான பொதுப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
50. குற்றுகர ஈற்றுச் சொற்களுக்கான சிறப்புப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
51. குற்றியலுகரப் புணரியல் என்னும் தனி இயல் வகுக்கப்பட வேண்டியதன் காரணங்களை ஆராய்க.
52. பத்து என்ற எண்ணோடு பிற எண்ணுப்பெயர்கள் புணரின் நிகழும் மாற்றங்களைத் தெளிவுபடுத்துக.
53. பத்து என்ற எண்ணோடு நிறை அளவுப் பெயர்கள் புணரின் உண்டாகும் நிலைகள் யாவை?
54. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு பத்து என்ற எண்ணுப்பெயர் புணரின் நிகழும் மாற்றங்களை விளக்குக.
55. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு அளவு நிறைப்பெயர் புணரின் நிகழும் மாற்றங்களை விளக்குக.
56. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு நூறு என்ற எண்ணுப்பெயரின் புணர்ச்சி விகற்பங்களை விவரிக்க.
57. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு

**DE–293**

**13**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2014.

இலக்கணம் I — தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணம்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மொழி முதல், இறுதி எழுத்துக்களை விவரிக்க.

2. மெய்ம்மயக்கம் என்றால் என்ன? விவரிக்க.

3. உயிரெழுத்துக்களின் பிறப்பினை விவரிக்க.

4. இகர, ஈகார வீற்றுப் புணர்ச்சியை விவரிக்க.

5. இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சியை விளக்குக.

6. அளவு, திசைப்பெயர் புணர்ச்சியை விவரிக்க.

7. லகர, ளகர வீற்றுப் புணர்ச்சியை விவரிக்க.

8. (அ) தேன் + இறால்
   (ஆ) சித்திரை + கொண்டான்
   (இ) பனை + அட்டு
   (ஈ) நாழி + உரி
   (உ) ஒன்று + பத்து

   ஆகியன புணரும் தன்மைகளை விவரிக்க.

பகுதி ஆ — (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

9. சார்பெழுத்துக்களின் வகைகளைக் கூறி விளக்குக.

10. மெய்யெழுத்துக்களின் பிறப்பினை விவரிக்க.

11. சாரியைப் புணர்ச்சியை விவரிக்க.

12. அகர ஆகார வீற்றுப் புணர்ச்சியை விளக்குக.

13. னகர, ணகர வீற்றுப் புணர்ச்சியை விவரிக்க.

14. எண்ணுப்பெயர் புணர்ச்சியை விளக்குக.

15. சேர்த்து எழுதுக :

(அ) தேக்கு + கோடு

(ஆ) குன்று + கூகை

(இ) கல் + தீது

(ஈ) உரிஞ் + கடிது

(உ) பரணி + கொண்டான்.

———————

**DE–1293**

**13**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2015

இலக்கணம் –I : தொல்காப்பியம் எழுத்து அதிகாரம் இளம்பூரணம்

Time : Three Hours Maximum : 100 Marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடைதருக.

1. சார்பெழுத்துக்கள் என்பன யாவை? விளக்குக.

2. உயிர்மெய்யெழுத்தின் இயல்புகளை வரையறுக்க.

3. அளபெடை குறித்துத் தொல்காப்பியர் உரைப்பன யாவை?

4. எழுத்துக்களின் பொது பிறப்பு முறை குறித்து வரைக.

5. புணர்ச்சியில் பொருள் வேறுபடும் இடம் யாது?

6. ஈகார ஈறுகள் குறித்து எழுதுக.

7. ஏழ்முன் அளவு முதலிய பெயர்கள் வருமாற்றை விவரிக்க.

8. வினாப்பெயர்களும் சுட்டுப் பெயர்களும் புணரும் முறை குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($4 \times 15 = 60$ மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கனுக்கு விரிவான விடை எழுதுக.

9. புணர்தலின் இயல்புகளை விவரிக்க.

10. முற்றுகர குற்றுகர ஈறுகள் குறித்து எழுதுக.

11. ஊகார ஈற்றுப்புணர்ச்சி குறித்து விளக்குக.

12. ஐகார ஈற்றுப்புணர்ச்சியை விவரிக்க.

13. குற்றுகரப் பொதுப்புணர்ச்சியைத் தெளிவுபடுத்துக.

14. பிறப்பியல் உணர்த்தும் செய்திகளை வகைப்படுத்துக.

15. ஒன்றுமுதல் ஒன்பதன் முன் வரை ஆயிரம் என்பது புணருமாற்றை விளக்குக.

———————

**DE–6979**

**13**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2013.

இலக்கணம் I — தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் – இளம்பூரணம்

Time : Three hours | Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. "சார்ந்துவரல் மூன்றலங் கடையே" – விளக்குக.

2. மாத்திரைக் குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?

3. உயிர் எழுத்துக்களில் பிறப்பு பற்றி விளக்குக.

4. சாரியை குறித்த தொல்காப்பியர் கருத்தினை விளக்குக.

5. திசைப் பெயர் புணர்ச்சி குறித்து விளக்குக.

6. ஈம், கம், உரும் சொற்களின் புணர்ச்சி விதி கூறுக.

7. புள், வள் சொற்களின் புணர்ச்சி விதி கூறுக.

8. மூவகைத் திரிபு குறித்து விளக்குக.

பகுதி ஆ — (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு விடை தருக.

9. மெய் மயக்கம் குறித்து விளக்குக.

10. மகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதி கூறி விளக்குக.

11. ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதி கூறி விளக்குக.

12. தேன்+குடம், தேன்+மொழி, மீன்+கண், மீன்+தோல், தாழ்+கோல் சொற்களின் புணர்ச்சி விதி கூறி விளக்குக.

13. எண்ணுப்பெயர் புணர்ச்சி குறித்து விளக்குக.

14. புணர்ச்சி என்றால் என்ன? இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி குறித்து விளக்குக.

15. எழுத்துக்களின் பிறப்பு பற்றி தொல்காப்பியர் கூறுவன யாவை?

# எம்.ஏ [தமிழ்]

# 319 13

# இலக்கணம்-1 - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்

முதற் பருவம்



## அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் கற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

**தொலைநிலைக்கல்வி இயக்ககம்**

ISBN 978-93-5338-205-6